மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு-34

A DESCRIPTIVE CATALOGUE
OF
TAMIL MANUSCRIPTS
IN

MAHĀMAHŌPĀDHYĀYA

Dr. V. SWĀMINĀTHAIYAR LIBRARY

[RELIGIONS, ARTS, SCIENCES, ETC.]

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையச்

சுவடிகளின் விளக்கம்

[சமயங்கள், கலைகள், அறிவியல் நூல்கள் முதலியன]

VOLUME IV

(Nos. 1827—2326)

Published by

MAHAMAHOPADHYAYA

Dr. V. SWAMINATHAIYAR LIBRARY,

ADYAR, MADRAS-20.

1962

[Price Rs. 10

Printed at the

KUMARAN PRESS

298, MINT STREET,

MADRAS - 1.

PREFACE

The first volume of this Catalogue, consisting of descriptions of 440 Mss. in the library on NIKAṈTU, GRAMMAR, CAṄKA ILAKKIYAM, KĀPPĪYAM and ITIKĀCAMS was published with the help of grants kindly given by the Government of Madras on 1—12—1956. (Copies of this volume are available for sale at the Madras Government Oriental Manuscripts Library, Chepauk, Madras-5).

The second volume consisting of descriptions of 692 Mss. in the library on PURĀṆAS, TALA-PURAṆAS and PIRAPANTĀS was published on 15—6—'61.

The third volume consisting of descriptions of 694 Mss. on RELIGION and PHILOSOPHY (SAIVAISM including VĪRA CAIVAISM) was published on 20—1—'62.

The present (fourth) volume consists of descriptions of 334 Mss. on RELIGIONS and PHILOSOPHIES (other than those of CAIVAISM) as VETĀNTAM, VAIṆAVAM, JAINISM and ISLAM; Poetical compositions of miscellaneous nature; STORIES, HISTORY, MUSIC, DANCE and DRAMA; LOGIC; MATHEMATICS, ASTRONOMY and ASTROLOGY; MEDICINE and of other MISCELLANEOUS works. and of 157 Mss. which were left out undescribed in the first 3 volumes as they were obtained late.

Thus the four volumes give descriptions of the entire collections of Mss. on cadjan leaves in the library.

The method of descriptions and arrangement of the indexes at the end of each volume are uniform.

The system of transliteration used is as noted below and it fairly follows that which is used in the Tamil Lexicon, published by the University of Madras except for ழ :—

அ	A	ஓ	Ō	ப	P
ஆ	Ā	ஔ	AU	ம	M
இ	I	க	K	ய	Y
ஈ	Ī	ங	Ṅ	ர	R
உ	U	ச	C	ல	L
ஊ	Ū	ஞ	Ñ	வ	V
எ	E	ட	Ṭ	ழ	L̤
ஏ	Ē	ண	Ṇ	ள	Ḷ
ஐ	AI	த	T	ற	Ṟ
ஒ	O	ந	N	ன	Ṉ

For editing and publishing the 2nd, 3rd and 4th volumes of this series, the library is indebted to the **Ministry of Scientific Research and Cultural Affairs, Government of India, New Delhi,** for their kind grants (calculted on the basis of 50% of the actual expenditure involved).

Thanks are also due to the Pandits in the library for having read the Mss. and prepared notes for these volumes and to the KUMARAN PRESS, MADRAS-1 for their prompt execution of this work in print.

20—12—'62.

A DESCRIPTIVE CATALOGUE
OF
TAMIL MANUSCRIPTS
IN
MAHĀMAHŌPĀDHYĀYA
Dr. V. SWĀMINĀTHAIYAR LIBRARY

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையச்
சுவடிகளின் விளக்கம்

VOLUME IV

[சமயம்—தொடர்ச்சி]
Section VI - VĒTĀNTAM
பகுதி 6 - வேதாந்தம்

No. 1827. AKA-P-PĒI CITTAR PĀṬAL—[TEXT]
அகப்பேய் சித்தர் பாடல்—[மூலம்[
[820-D]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 16. Lines, 7 on a page. Condition, Good. Appearance, New.

Note: This is a work, containing Vedāntic teachings, by one Akappēi Cittar. The Mss. contains many changes from the one available in print.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த சம்பந்தமானது. அகப்பேய்ச் சித்தர் பாடியது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதி பாட பேதங்களுடனும், புதிய பாடல்களுடனும் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

நஞ்சுண்ண வேண்டாமே—அகப்பேய்
நாயகன் ருள்பெறவே
நெஞ்ச மலையாதே—அகப்பேய்
நீயொன் றுஞ் சொல்லாதே. 1

* * * *

End:

வேத மோதாதே—அகப்பேய்
மெய்கண்டோ மென்னாதே
பாத நம்பாதே—அகப்பேய்
பாவித்துப் பாராதே. 89
தீர்த்த மாடினாலும்—அகப்பேய்
தீவினை போகாதே
ஊத்தை போனாலும்—அகப்பேய்
ஊழ்வினை போகாதே. 90

No. 1828. AṬUKKU NILAI PŌTAM

[TEXT AND ANNOTATIONS]

அடுக்குநிலை போதம்—[மூலமும் உரையும்]

[1033-A]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a translation with commentary of a Sanskrit work said to have been written by Sri Sankarācārya. The Mss. contains 12 stanzas of which 11 have notes.

Complete.

குறிப்பு: இது, சங்கராசாரிய சுவாமிகள் வேதாந்த சம்பந்தமாக இயற்றிய வடமொழி நூலின் கருத்தைத் தழுவி இயற்றப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. பதினொரு பாடல்வரை குறிப்புரைகள் உள்ளன. அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் 12 பாடல்களும் மேலும் சில குறிப்புக்களும் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning:

சொல்லிறந்த விடமெங்கே முப்பா ழெங்கே
துவாரபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்சங்கு நதியெங்கே வைகுந்த மெங்கே
நாரணனும் ஆலிலைமேல் துயின்ற தெங்கே
அல்லல்படுத் தும்பூத மொடுக்க மெங்கே
ஆறைந்து மிதழிரண்டும் முளைத்த தெங்கே
சொல்லவல்ல ருண்டாகி லவரை நாமுந்
தொழுதுகுரு வெனப்பணிந்து வணங்க லாமே.

என்பது:—சொல்லிறந்த விடமாவது - எல்லை வாசல் விட்ட விடத்தின் செயல் காலத்திலே யாடிய பாதம்; தூக்கிய பாதத்தின் நடு நரம்பைத்தாம் வாசல் சின்னவாசல் வழியாய் வந்து அறு கோணத்தில் தூக்கிய பாதத்தினிடமாய் வந்து ஆடிய பாதத்தினில் வெளிப்படுகிறது. முப்பாழாவது - அறுகோண வீட்டிலே ஆணவ காமிய மாய்கை இம்மூன்றுமற்ற விடம். துவார பாலகராவது; காதுத் துவாரம் - அகாரம், பரிசத்துவாரம் - உகாரம், கண் துவாரம் - சிகாரம், வாய்த் துவாரம் - மகாரம், நாசித் துவாரம் - நகாரம்; இந்த ஐந்து துவாரத்தில் ஐந்துபேரு மிருந்து சுழிமுனைக்கு அதிகாரஞ் செலுத்தும்படியினாலே துவாரபாலகர். முதற் பாழாவது - சுழிமுனையிலே நானென்ற சொல்லற்ற விடம். சங்கு நதியாவது - அறுகோண வீடு. வைகுண்டமாவது - விஷ்ணு பள்ளிகொண்டது. ஆடிய பாதம் மாலியல்பு - .... மொடுக்கஞ் சுழிமுனைக்கீழ் எல்லை வாசலிலே ஆறைந்து முப்பத்திரண்டு இதழும் ஆடிய பாதத்தைச் சுற்றிநிற்கிற அந்தமென்றறி என்றவாறு.

* * * *

End:

*துங்கநிறம் பூண்டகண நாத ருண்டு
துவாரபா லகருடைய வாசல் சென்றல்
சங்குநதி தோற்றுப்வை குந்தந் தோற்றும்
சாகரத்தில் பள்ளிகொண்ட மாலும் தோற்றும்
அங்கவரைத் தெரிசிக்கில் அயனுந் தோற்றும்
அப்புறமும் பரத்தினிட திசையுந் தோற்றும்
மங்கைபிரான் கயிலாய வாயில் கண்டால்
மாநிலத்தில் பிறவியொழித் திருப்பர் தாமே. 12

No. 1829. AṬUKKU NILAI PŌTAM

[TEXT AND ANNOTATIONS]

அடுக்குநிலை போதம்—[மூலமும் உரையும்]

[648]

Size, 5½″×1¾″. Pages, 10. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1828 but contains only 10 stanzas with annotations.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1828 பிரதி போன்றது. 10 பாடல்களும், அவற்றின் உரைகளுமே உள்ளன.

அபூர்த்தி.

No. 1830. APARŌKSHA ĀTMĀNUPAVA TĪPIKAI—[PROSE]

அபரோக்ஷ ஆத்மானுபவ தீபிகை—[உரைநடை]

[551-A]

Size, 11″×1½″. Pages, 34. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is prose work on the experiences of the soul as per Vēdāntic doctrines. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த சாத்திரத்தைச் சார்ந்தது. நூலறிவும், ஆத்மாவின் அநுபவமும் கூறுகின்றது; வசனத்தில் எழுதப்பட்டது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. நூல் முழுதும் உள்ளது.

பூர்த்தி.

Beginning:

சத்தியமாய் ஞானமா யானந்தமா யானந்தமான சொரூபமான சொயம்பிரகாசப்பிரமமே சத்தியம்; அப்பிரம மாகாரமாகும். அகில செகச்சாலமுஞ் சுப்பிரமாக விளங்குஞ் சுப்பிரமணிய பாதாரவிந்தத் துக்குத் தெண்டன்பண்ணி அபரோக்ஷ ஆத்மக் கடவு ளனுபவ தீபிகை யென்கிற சாஸ்திரங் கிரந்தத்தி லுண்டானதைத் தமிழி ஞற் பனுவலாகச் சொல்லுகிறே மதாவது—முதல் நாலுவேதத்தி லுண்டான நாலு மகாவாக்கிய சாரமும் பிரமலக்ஷணமாகவே பிறிதி வாக்கு தென்கிறத்தைச்(?) சொல்லுகிறோ மந்த வாக்கியமாவது பிரபஞ்ச சொரூபப் பிரமோகம் 1, எம்மே வாய்த்தோய்தல் (?) பிர மோகம் 2, பாவபாவா அதீதப் பிரமோகம் 3, சுவானுபவா அதீதப் பிரமோகம் 4.

* * * *

End:

இப்படிச் சஞ்சரித்துப்பூரணமாகவேயிரு; இதுவே நிலையென்று மோக்ஷமாகி........... யிவட மவ்விட மென்கிற தில்லை. கிரமாந் திரம் லோகாந்திரத்தி லில்லை. அக்ஞான முடிந்துபோன......... ......மோக்ஷமென்று சத்குரு சுவாமியானவர் திருவுளம்பற்ற இந்த வார்த்தையைக் கேட்டுத் திருப்தியடைந்து கிருகிருதார தஞன சங்கர........... ாரி சுவா........... ளால் சொல்லபபட்ட அபரோக்ஷ ஆத்மானுபவ தீபிகை யென்கிற கு.....மிக்கிரந்தத்தைத் தமிழி ஞல் ருஷ்...........பை. சுப்பிரமணிய ஞானியார் பாதாரவிந்தமே கெதி யுண்டாகவேணும். சற்குருவே நம. ....கிர........... ஜயபாமகு...........வே நம.

No. 1831. AVIRŌTA-V-UNTIYAR—[TEXT]

அவிரோத வுந்தியார்—[மூலம்]

[367-B]

Size, 15″×1¼″. Pages, 12. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a Vēdāntic work in verse by Cāntaliṅka Cwāmikaḷ of Tiru-T-Turaiyūr, with the refrain Untīpaṟa at the end of each stanza.

Complete.

குறிப்பு: இது, திருத்துறையூர், சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது. இந்நூல் உரையுடன் அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் மூலம்மட்டும் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தானென் றுந்தீபற
வவன்றா டொழுவோமென் றுந்தீபற

* * * *

End:

ஓங்கரு ளீசனோ டொன்றிய நின்றொரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீபற
எல்லா வுயிர்க்குமென் றுந்தீபற.

Colophon:

விரோதி௵ மாசிமீ 17உ சுக்கிரவாரம் சதுர்த்தி, ரேவதி நட்சத்திரம்............சுபதினத்தில் எழுதி நிறைந்தது.

No. 1832. AVIRŌTA-V-UNTIYĀR—[TEXT]

அவிரோத வுந்தியார்—[மூலம்]

[1203]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 40. Lines, 6 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1831.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1831 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1833. AḶA-T-TIRATTU—[TEXT]

அளத்திரட்டு—[மூலம்]

[640-D]

Size, $8\frac{1}{2}'' \times 1''$. Pages, 20. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work deals with Vēdāntic doctrines and also of composition of human body and is divided into several chapters. The name of the author is not known.

Incomplete.

குறிப்பு: *இது, வேதாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. உடம்பின் தத்துவத்தைக் கூறுகின்றது. இதில் சமயசாரம், பரமார்த்த தெரிசனம், சமயாசாரம், சித்தாந்த தீபிகை, நித்தியானந்த சரிதை முதலிய பிரிவுகள் உள்ளன. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை; இதில் 53 பாடல்கள் உள்ளன.*

அபூர்த்தி.

Beginning :

சமயசாரம்

பூக்கமழ் நாற்றங்கொண்டு பொருவளி போருமாப்போற்
றீக்கனல் இன்ற வேலோய் சீவனென் இன்ற சீரோ
ணுக்கையை யெய்தும் போது மதனைவிட் டேகும்போதும்
போக்கரி தாயவாறு புலன்களைக் கொண்டே போமால். 1

பீறிய போர்வையைப் பெயர்த்துப் பின்னரே
வேறொரு போர்வையை விரும்பு வாறென
ஊறிய வுடம்பினை யுதிர்த்த வண்மைதான்
மாறியோ ருடம்பினை மருவு மன்னனே.

* * * *

End :

கள்ளக் கோலக் கருங்குழல் மாதர்பால்
முள்ளித்தேனை முனிந்துயர் முற்றியாம்
வெள்ளத்தேனை விரும்பும் விட்டாயினுன்
எள்ளிற்போது மிதாது........லைதினுன். 53

No. 1834. ARIVĀṈANTA CITTIYĀR—[TEXT]

அறிவானந்த சித்தியார்—[மூலம்]

[878]

Size, 7½″ × 1″. Pages, 164. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a Vēdāntic work by one Arivāṉantar of Vlaṅkaimīkāmaṉ (Valaṅkimāṉ) near Kumpakōṇam. The work seems to contain 323 stanzas.

Complete.

குறிப்பு : *இது, அத்வைத மதத்தைச் சார்ந்தது. இறுதிச் செய்யுளினால் கும்பகோணத்தைச் சார்ந்த வலங்கை மீகாமன்* (வலங்கிமான்) *என்னும் ஊரிலிருந்த அறிவானந்த ரென்பவர்*

இதை இயற்றினரென்று தெரிகிறது. இந்தப் பிரதி முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

உற்ற முறைமை யொருநூலாற் செய்பவற்குக்
கற்பகத்தின் தாளிணையே காப்பென்றிங்—குற்றவர்கள்
பாதமலர் மேற்கொண்டு பாடவொருப் பாடுகுரு
நாதனிரு தாளென்று நா.

நிரவிய நின்மலன் நிற்குணன் நித்திய நிட்களன்மெய்ப்
பரவிய நித்தொந்தன் பற்றிலி சுத்தன் பரமானந்தன்
விரவிய பூரண னேகன் பேரின்ப வியாபகனென்
கரவுளங் கோயில் கொள்ளுவோ னெழில் போற்றுவார்
[காதலித்தே.

* * * *

End :

கானுந்து சோலை வலங்கைமீ காமன் கதிபெறவே
வானுந்து தேவர்க்கெட் டாவறிவா னந்தன் வண்மைகுன்ருத்
தேனுந்து செஞ்சொற் றமிழா லுரைக்கச் சிறந்தவறி
வானந்தச் சித்தி தனைத்தேர் பவர்பிறப் பற்றவரே.

வெண்பா

வெளியாகி வேதாந்த மெய்ப்பொருளு மாகி
ஒளியாகி நின்றபொரு ளொன்றைத்—தெளிவாக
வந்தபர மானந்த வாழ்வெல்லா மின்றெமக்குத்
தந்தபிரான் தாளே சரண். 323

Colophon :

சச்சிதானந்த சருவவேகியாத்திரிகிய தம்னு பெஷிதம்(?). சருவ வொன்னித சமா மோக்ஷசா சிம்மாசன பரிஸ்திதா. இப்படி சருவ வாத்திரியாமியாய சருவலோக குருவாய அகண்டாகார சுவரூபராய நித்தியபரிபூரணனந்தராய சிம்மாசனபதியாய் எழுந்தருளிய நல்ல சற்குரு சுவாமிகள் பாதாரவிந்தமே சதா என்சிர சாவகிக்கிறேன். ஆசாரிய சுவாமியுடைய திருவடிகளிலே சரணம்.

அகண்ட பரிபூரண சொரூபாகார சொரூபரான நிர்மலானந்த சுவரூபரான நிஷ்களானந்த சொரூபராய சச்சிதானந்த சொரூப பிரமமே நித்தியம் சத்தியம். ஸ்ரீமான் தேசிக சுவாமிகளுடைய பாதாரவிந்தமே நித்தியம்.

ஹரி ஓம். சற்குருவே நம: மாசிமீ 13உ துவாதசி தினமும் புனர்பூசமும் கூடின சுபதினத்தில் எழுதி நிறைவேறினது.

முற்றும்.

No. 1835. ARIVĀNANTA CITTIYĀR—[TEXT]

அறிவானந்த சித்தியார்—[*மூலம்*]

[700-B]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 84. Lines, 8 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1834.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் **1834** பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 247 செய்யுட்கள்மட்டு முள்ளன.*

அபூர்த்தி.

No. 1836. ARIVĀNANTA CITTIYĀR—[TEXT]

அறிவானந்த சித்தியார்—[*மூலம்*]

[1204]

Size, $9\frac{3}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 108. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as No. 1834.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1834 பிரதி போன்றது. ஆனால் அதனுள் கூறப்படும் காப்பு முதற்செய்யுள் இப்பிரதியில் இல்லை.

அபூர்த்தி.

No. 1837. ARIVANANTA CITTIYAR—[TEXT]

அறிவானந்த சித்தியார்—[மூலம்]

[1255]

Size, $9\frac{3}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 32. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1834 but contains only 167 stanzas.

Ihcomplete.

குறிப்பு: இது, முன் எண் 1834 பிரதி போன்றது. ஆயினும் இப்பிரதி 167 பாடல்வரை யுள்ளது.

அபூர்த்தி.

No. 1838. ARIVU MEIÑÑANA VILAKKAM [TEXT]

அறிவு மெய்ஞ்ஞான விளக்கம்—[மூலம்]

[331]

Size, $11\frac{1}{6}'' \times 1\frac{7}{8}''$. Pages, 10. Lines, 10 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This Mss. contains a few pages from a treatise on Vēdāntā. Particulars regarding authorship are not nown.

Incomplete.

குறிப்பு: இது, வேதாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. முதற் கண் 7 ஏடுகள் இல்லாமையால் இதனைப்பற்றி எவ்விவரங்களும் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

குருவினிருதாள் முடிமேலதாகக் கொண்டு
திருமெய்ஞ்ஞான வாசக மோங்க
அரவி னிளம்பிறை கொன்றை தும்பைகங்கை அணிந்து......
னுமை அபிராம்வல்லி பெற்றபால னறுமுகவ னீராறு
[தோளன்

உரமுடை விநாயகன்றனோங் கரத்தன் ஒற்றை மருப்புடை
யானைக் காப்பாதெ.............ழியொரு
அகண்ட பாதத் தனுக்கிரகத்தா லுதித்தசோதி
பரமதனிலுத்திட்ட தித்துச்சொல்லரிய சிவம்தனிலுதித்த
[சத்தி

நீதி பரையெனும் வகை........... ....

* * * *

End :

அவனறிவுக் கொத்த............ லுரைப்பா
அறிவு சிவமென்று கண்டு கொண்டார்
கொள்ள அறிவுதிருமெய்ஞ்ஞான விளக்கமாமே.

திருமெய்ஞ்ஞான விளக்கம் எழுதி முற்று.

தேவிசகாயம்.

தேவிசகாயம்,

தேவிசகாயம்.

No. 1839. AṈUKKŪR CWĀMI PĀṬAL—[TEXT]

அனுக்கூர் சுவாமி பாடல்—[மூலம்]

[877-A]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Page, 4. Lines, 12 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note : This is a small treatise on Vēdāntic dotrines in 10 stanzas. The Mss. is so much injured that it is not easy to decipher it.

Complete.

குறிப்பு : இது, வேதாந்த சம்பந்தமானது, அனுக்கூர் சுவாமிகள் என்ற பெரியாரால் பாடப்பெற்றது. இந்தப் பிரதி மிகுதியாக பூச்சியடித்துள்ளதால் படித்து அறிவது சிரமமாகவுள்ளது. 10 செய்யுட்களுள்ளன. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

எல்லாமா யல்லவுமா ....

....

சொல்லாமற் சொன்ன அசஞ்சுகத்தை யுற்றேன்

தொண்டருக்குள் தொண்டனென்று சொல்லிக் கொள்வேன்.

* * * *

End :

குருவைவணங் கிடில்முத்தி கொடுப்பா னென்றே

குறித்தார்கள் குறித்தபடி குருபோ தித்தால்

சொருபமுணர்ந் தனுபூதி பதிக்குச் சூட்டித்

தொண்டருக்குள் தொண்டனென்று செப்பிக் கொள் [வேன்

No. 1840. ASHTĀṄKA YŌKA VIVARAM

[PROSE]

அஷ்டாங்க யோக விவரம்—[உரைநடை]

[944-B]

Size, $16\frac{3}{4}'' \times 1''$. Pages, 26. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a prose work detailing the 8 methods of Yōga Practice. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, இயமம் நியமம் முதலாகிய யோக மார்க்கத்தை விவரிக்கின்றது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக் கூடவில்லை. நூல் முற்றும் உளது.

பூர்த்தி.

Beginning:

இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம, பிரித்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி ஆக. அ. இதுக்கு விவரம் சொல்லும் படி: நியமமாவன. அ. ஈங்கை, சத்தியம், ஆசெத்தியம், பிரம சரியம், தயை ஆர்சவம் க்ஷமை, திரித்தி, மிதாகாரம, சவுசம் ஆக இயமம் பத்து.

* * * *

End:

சிக்க அடித்துத் தோய்த்த வாசனையாகிற காற்றுப் பதிணு யிரம் வீசினாலும் அசையாத மலைபோலே நின்று சற்றுங் கலக்க மில்லாமல் அத்தோய்த்த நிலையே சாதாரணமாக நிலைப்பத்திடப் பட்டது ஆருட சமாதி யென்று சொல்லப்படும். ஆகச்சமாதி அஞ்சுஞ் சொல்லப்பட்து அட்டாங்க யோகம் முற்றும். பிரண வாகாரமே கெதி. சிவமயம்.

No. 1841 ĀTMA-ANĀTMA VIVĒKAM—[PROSE]

ஆத்மானத்ம விவேகம்—[உரைநடை]

[599-B]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 22. Lines, 12 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This is a prose work discussing the qualities of Self and Non-Self. The author of this work seems to by one, by name, Rāmanāthan.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த நூல்களைச் சார்ந்தது, ஆத்மா, ஆத்மா அல்லாதது இவற்றைக் குறித்து அறிவிப்பது. இராமநாதர் என்பவராலியற்றப்பட்டது. நூல் பூர்த்தியாயுள்ளது. சுவடியிலுள்ள ஏடுகள் முற்றும் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

ஓம்............என்பது. வடமொழி சுலோக மொன்றினடியை விவரிக்கின்றது. காணப்படா நிற்கிற சரு............ னுன்மா. காண்கின்றவன்றானே நிருவிகாரியாயிருக்கிற .... தானே? கிரந்த கோடிகளாலே சொல்லப்படா நிற்கிற ஆத்மானாத்ம விவேகமானது மோட்ச சாதகமாகையால் மோட்சத்திலிச்சையை யுடையவர்களுக்கு இந்தச் சாத்திரத்தினாலே ஆத்மானாத்ம ஸ்வரூப ....போதிக்கப்படுகையினாலே இந்தச் சாத்திரத்துக்கு ஆத்மானாத்ம விவேக மென்று நாமமிட்டு அதிலே யாத்மானாத்ம சொரூபமானது சங்கிரமாகச் சொல்லப்படா நிற்கிறது.

* * * *

End:

தானே யவைகளுக்கு மூலகாரண மாயுள்ள மாயையிலே லயத்தையடையும் போதவன் அகண்டாகாரச் சச்சிதானந்த பரமசிவனுடனே பாலுடன் பால் கூடினது போல சமான சாயிக்கத்தை யடையவன்.

Colophon:

சிதம்பர தேவாய நம. ராமநாதர் பண்ணின ஆத்மானாத்ம விவேக மெழுதி நிறைந்தது முற்றும். ஸ்ரீசச்சிதானந்த நித்திய பரிபூரண சங்கரபாத சேக சரணம் சரணம் சரணார்த்தி.

No. 1842. ATI-Y-ANTA VIḶAKKAM—[TEXT]

ஆதியந்த விளக்கம்—[மூலம்]

[331-A]

Size, $11\frac{1}{8}'' \times 1\frac{7}{8}''$. Pages, 28. Lines, 10 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: From a statement in the course of the text, it is stated that this is a translation of a work by Sri Saṅkarācārya and deals about the one great Soul which is the source and end of all.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த நூல்களைச் சார்ந்தது. மாணுக்கன் கேட்கும் வினுக்களுக்கு ஆசிரியர் கூறும் விடையாக இந்நூல் அமைந்துள்ளது. ஸ்ரீசங்கராசாரியர் அவர்கள் நூலொன்றின் மொழி பெயர்ப்பு எனத் தெரிகிறது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. நூல்முற்று முளது, ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

மூலமுத ....பபர மொருவரறி வொண்ணுத
 முச்சுடரை யரியசது முகவன் றன்னை
நீலமுக மான திருமாலை யுள்ளே
 நினைந்துருகி ருத்திரனை மயேசுரன் பாதத்தை
சிலமுக மானசதா சிவனைப் போற்றிச்
 சிவனுமையா ளறுமுகனைங் கரனைப் போற்றி
ஞாலமதி லாதியந்த விளக்கஞ் சொல்ல
 நற்கமல மாதுசர ஸ்வதி காப்பாம்.

பாசமன வழுக்கறுத்து அறிவு............ப்
 பற்றறவே பிறப்பறுக்கும் பரமெய்ஞ் ஞானந்
தேசிதிரு வம்பலத்தா ரடி............ரு சித்தர்
 திரு வம்பலத்தார் பாதம்போற்றிச் செய்யும்
வாசியெனும் பொருளுடைய பெருமை............
 வந்தசங்க ராசாரி உரைத்த நூலும்
காசினியில் விளங்க நெடு ....
 கணபதியு மறுமுகவன் காப்ப தாமே. 1

நீதியுரைத் திடுஞ்சரியை கிரியை யோகம்
 நிஷ்டைமுத லகற்றியமெய்ஞ் ஞானமூர்த்தி
சாதிவர ....ரு பர மாணுக்கன்
 சற்குருவைத் தொழுதுகரங் குவித்துநின்று

மேதினியி லனைவோரும் போற்றுகின்ற
 மெய்ப்பொருளின் வடிவான தேசிகாநீ
ஆதியந்த விளக்கமென உரைத்ததேது
 அடியேற்கிங் கருள்புரியு மெனப்பணிந்தான். 2

* * * *

End :

அ......... முரைத்திடுவ னப்பனேகே
 ளன்னைபிதா குருதெய்வம் நாலும் யாமே
ஏடத்தை யறிவித்ததனால் தாயுமானோம்
 தாயுயி .... தந்தை யாக
இடத்தில் மெய் .... யறிவிக்க வேண்டி
 மெய்க்குருவு மானபடி........... கண்டீரே
திடப்பட ஆண்பெண் ணென்றுய்க் கண்டகாட்சி
 .... தெய்வமானோம்.

ஆதியந்த விளக்கமதை, யடியைத் தொட்டுப்படிப்பவர்க்கு
நீதி மனுவுண்டானவகை நிலத்தில்வித் துண்டானவகை
சாதிநாலுண் டானவகை சந்திரசூரிய கிரணவகை
ஓதியுணர்ந்த .... உடலையறியற் றொழிந் திடுமே.

தேவிசகாயம்.

No. 1843. ĀṈMA-P-PIRAKĀCA VACAṈAM

[PROSE]

ஆன்மப்பிரகாச வசனம்—[உரைநடை]

[599-C]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 20. Lines, 20 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note : This Mss. deals about the ways to obtain Mōksha. The author seems to be a disciple of one Kuru Citampara Tēvar.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த நூல்களைச் சார்ந்தது. மோட்ச சாதகத்துக் குரிய விடயங்களைக் கூறுவது. இயற்றியவர் குரு சிதம்பரதேவர் 'என்ற ஒருவரின் சீடராயிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. நூல்முற்று முளது. சுவடியிலுள் ஏடுகள் முற்றும் சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

............வாதபித்த... ......மங்களால் வரப்பட்ட துக்கங் களிற் ....அதிகமா..........பசு பட்சி முதலானவைகளால் வரப்பட்ட துக்கங்களிற் பொறுமையுடையவனுதல்; ஆதிதெய்விக மாவது, இடி, மின், கடுங்காற்று, வெய்யில் முதலானவைகளால் வரப்பட்ட துக்கங்களிற் பொறுமையுடையவனுதல்; நித்தியா நித்திய விவேகமாவது, தன.........ம்மை தன் மனைவி தன் பிள்ளை தன் வீடு மாடு முதலானவைகளுந்தான் பண்ணின புண்ணியத்தா லடையப்பட்ட சொர்க்காதி லோகத்திலுள்ள சுகபோகங்களு மின்னைப்போலத் தோன்றி யழிகையினுலே யனித்திய மென்றும் மோட்சரூபமாகிய சிவம் நித்யமென்று மறிந்தவனுதல்; இகமுத்தி ரார்த்த பரபோக விராகமாவது தன்னுடைய உடம்பிலும் பண்ட பதார்த்தங்களிலும் சுவர்க்க முதலானவைகளினும் வாந்தி பண்ணின வன்னத்தின்மே லாசையற்றது போல வாசையற்ற வனுகி.........

*　　*　　*　　*

End :

நம்முடைய மதத்திலான்மாவுக்கு ஆனந்த சொரூபத்துவ மங்கீகரியா திருக்கையாலும் நித்திரையிலே யொன்று மறியே னென்று சகல விஷயஞான மிருக்கையா லப்போது சுகவிடைய ஞானம் பாவமாகையாலு மிது போலவே விதேக முத்தியிலேயும் ஆன்ம ....சிவானந்தத்தை யனுபவிப்பன். பிரமா முதலான வர்களும் சிவானந்தத்திலே சத்தையா...... ......னந்திகளாக இருக் கிறார்களென்று சுருதியிருக்கையாலும் ஸ்ரீகுரு சிதம்பர தேவர்...... ...... யவர்கள............னி வான்மப் பிரகாச மெழுதி நிறைந்தது முற்றும்... ..ஆஜகொ......சரணம் சரணம். சரணுர்த்தி. (இதற்கு மேல் வடமொழியில் இரண்டு வரிகள் உள).

No. 1844. UṬALAṞI VIḶAKKAM—[TEXT]

உடலறி விளக்கம்—[மூலம்]

[291-A]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 56. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This deals about the Vēdāntic doctrines and the functions of the human body as a vehicle for attaining the Goal.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த சாஸ்திரங்களைச் சார்ந்தது. உடலின் தத்துவ நிலைகளை மாணுக்கர்க்கு ஆசிரியர் அறிவிப்பதாகக் கூறுவது. முகவுரையோடுங் கூடியது. மூலம் மட்டும் உளது. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக் கூடவில்லை. நூல்முற்றும் உளது.

பூர்த்தி.

Beginning:

விடமருந்தி யமுர்தமுண்ட விமலநாதன்
விரிசடையன் மதிசூடி மழுமா னேந்தி
இடமருவு பரைபுதல்வ னறுமுகவ
னிளவலரி மருகனீ ராறுதோளன்
குடவயிற னற்கிளைய குமரன் கந்தன்
குகனைமற வாமல்நெஞ் சகமேபூண்டு
உடலறியும் விளக்கமென உரைத்தேன் பாவுக்
குதவியருள் புரியுமயன் றேவிகாப்பாம்

இக்குமனுப் புகழ்மறைசாஸ் திரங்கள்
சிறந்தசிதம் பரமேவு ஞானதேசி
பக்கமிரு புறமுமா ணுக்கர் சூழப்
பன்னிரண்டு சள...........த்துடப் பல்லோர் வந்து

தர்க்கமிடுங் கனகசபை யருளு டையான்
சங்கரா சாரியிரு தாள்ப ணிந்து
மிக்கருரு பரனேஐம் பூத மென்று
விளம்புவதே யடியேற்கு விதிக்க வென்ருன்.

* * * *

End :

பொன்னுலகி லிந்நூலைக் கற்ற பேர்க்குப்
பொறுமைதய வறிவுண்டாய்ப் போத மேலாய்
தன்னுடம்பைத் தானறிந்து கொள்வார் கேட்டோர்
தயவுபெற வாழ்வர்மறு பிறவி தன்னில்
பின்னுநலம் பெறுவர்பொரு ளாராய்ந் திட்டோர்
பிறப்பறுத்து மெய்ஞ்ஞானத் தலைவ ராகிப்
பன்னும்மறை காணுத பாதத்தோ டொத்துப்
பதம்பெறுவா ரெனக்குருவும் பகர்ந்தார் மு...றே.

ஸ்ரீபரம சற்குரு பாதார விந்தம் துணையுண்டாக வேணும்.

Colophon :

ஸ்ரீபரம பாகவத சிகாமணியான ஸ்ரீவேங்கிடேஸ்பர குரு சுவாமியள் அடியேன் தொண்டனுக்குத் தொண்டனை வயித்தியலிங்கத்துக்குத் திருவுளம் பற்றின உடலறி விளக்கம் எழுதின சம்பூரணம். பரமகுருபாதம் துணை.

No. 1845. UṬALAṞI VIḶAKKAM—[TEXT]

உடலறி விளக்கம்—[மூலம்]

[155-B]

Size, 12″ × 1¼″. Pages, 44. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : Same as No. 1844.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1844 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1846. UṬALAṞI VIḶAKKAM—[TEXT]

உடலறி விளக்கம்—[மூலம்]

[596-C]

Size, $9\frac{1}{4}'' \times 1''$. Pages, 51. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Complete.

Note: Same as No. 1844.

குறிப்பு: *இது, முன் எண் 1844 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1847. UṬALAṞI VIḶAKKAM—[TEXT]

உடலறி விளக்கம்—[மூலம்]

[638]

Size, $4\frac{3}{4}'' \times 1''$. Pages, 124. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1844.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1844 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1848. UṬALAṞI VIḶAKKAM—[TEXT]

உடலறி விளக்கம்—[மூலம்]

[975-A (1)]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 27. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1844.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1844 பிரதி போன்றது. நூல் முழுதும் உள்ளது. ஏடுகள் சிதிலம். சில விடங்களில் பாடபேதங் களுண்டு.

பூர்த்தி.

No. 1849. UPANIṬATAM

[TEXT AND ANNOTATIONS]

உபநிடதம்—[மூலமும் உரையும்]

[595-B]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 46. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a translation in Tamil Verse of a Sanskrit work named Sorūpāṉantam. Only 33 stanzas with their annotations are legible, the rest of the Mss. being very much injured.

Complete.

குறிப்பு: இது, வேதாந்தக் கருத்துக்களை விளக்குவது. சொரூபானந்தம் என்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பாகும். இந்தப் பிரதியில் 33 செய்யுட்கள் உரையுடனுள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளமையால் பிற்பாகம் அறிவது சிரமமாகவுள்ளது.

பூர்த்தி.

Beginning:

மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான் கருப்பூர
விளக்குப் போலென்
பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா னருளுடையான்
பொறியைந் தாலு

மையுடைய மனத்தாலு மயக்குடையார் மதங்களைத்தா
மதங்க ளாக்குங்
கையுடைய முகமுடையான் அகமுடையான் தனைக்கருத்தி
லிருத்தல் செய்வாம்.

இதன் பொருள் :—சத்தியத்தையுடைய அடியார் மேல் விருப்பத்தை யுடையவன். கருப்பூர தீபம் போல எனது பொய் யுடைந்து போக அருளிய போதக மாகிய பொருளை யுடையவன். அருளையுடையவன். பஞ்சேந்திரியங்களாலும் இருளையுடைய மனத்தாலும் மயக்குடையவர் மதங்களைத் தாம் கெடுதல் செய்விக் குங் கையை யுடைத்தாகிய முகத்தையுடையவன். எல்லாருள்ளத் தையுந் தனக்கிருப்பிட மாகவுடையவன் எனப்படுகின்ற கணே சனைக் கருத்தினிடத்தி லிருத்துவாம் என்றவாறு.

* * * *

End :

ஏற்றபிர பஞ்சமதே நித்த மென்றும்
பிரமமென்ப தில்லை யென்றும்
தோற்றமுட லுமென்றுந் துளங்குவதே
யஞ்ஞான துக்க மாகுஞ்
சாற்றுபிர பஞ்சமெலா மனித்தமென்றும்
பிரமத்... ......சே யென்றும்
வேற்றுடல்வேற் றுடலேஎன்றும் விரிந்துணரப்
பெறுமதுவே தாந்த ஞானம்.

அடியேனுடைய இருதயத்தின் மருட்சியகலும்படி அமுத்தித் தமிழென்று சொல்லப்பட்ட பாஷையில் பொருளை ஒருவழியாய் முப்பத்திரண்டு செய்யுளாக அருளானது உள்ளத்திலிருந்து சொல்லி(வை)த்த அதிசயமே அதிசய மல்லாமல் மற்றோரதிசயம் அறியேன் என்றவாறு.

Colophon :

சுபகிருதுஸு ஆடிமீ 28உ புதவாரம் பஞ்சமி அஸ்தம் . ... சுப்பிரமணியன் எழுதியது.

No. 1850. UPANIṬATAM

[TEXT AND ANNOTATIONS]

உபநிடதம்—[மூலமும் உரையும்]

[539-C]

Size, 11½″ × 1¼″. Pages, 44. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1849.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1849 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1851. UPANIṬATAM—[TEXT]

உபநிடதம்—[மூலம்]

[623-E]

Size, 7″ × 1¼″. Pages, 22. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1849 but contains only the text.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1849 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் மூலம்மட்டில் 36 செய்யுட்கள் உள்ளன.

பூர்த்தி.

No. 1852. URŌMARISHI PATIṈĀṞU—[TEXT]

உரோமரிஷி பதினாறு—[மூலம்]

[648-C (1)]

Size, 5⅜″ × 1½″. Pages, 8. Lines, 14 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work deals with Yoga practices and the authorship is attributed to Kāḻi Kāvaṟpaṇṭāram.

Complete.

குறிப்பு: இது வேதாந்த நூல்களைச் சார்ந்தது; யோகஞ் செய்யு முறையைக் கூறுகின்றது. காழிகாவற் பண்டாரம் என்பவராலி யற்றப்பெற்றதென்று தெரிகிறது. நூல் முற்று முண்டு.

பூர்த்தி.

Beginning :

தந்திமுகத் தந்தை சதங்கைத்தாள் காப்பு
சகலபொருளாய் நிறைந்த தாயார் காப்பு
முந்தியுரைத் தேன்முதனூ லன்பதுக்குள்
மூலமுதற் றிரிகோணம் வாசிவாதஞ்
சுந்தரம்போ லறிவுடைய மக்களுக்குத்
தொடுகுறியு மிருநிலமுந் தோணுந் தோணு
மிந்தவுரை பதினாறுஞ் சொன்னேன் ரோம
ரிஷிநூலுக் கெதிர்நூலொன் றில்லைதானே.

தானான மூலமுத லாறு வீடுஞ்
சாகரத்தின் கோட்டையிலே சார்ந்து நிற்கு
மூனான வளையமடா திரிகோ ணந்தா
னுற்றுப்பார் பவளநிறம் போலே தோணும்
வானான வீட்டினுள்ளே கணேசன் கந்தன்
வல்லபையும் வீற்றிருப்பாள் முளைப்போ லையா
நானென்று வவரையல்லோ பூசைபண்ணி
நலமான சிவயோக நலம்பெற் றேனே. ௨

* * * *

End :

ஆகாத வேலையிலே கண்ட சிப்பி
யாகாசு விந்துவல்வோ முத்தாய்ப் போச்சு
சாகாதோ யிங்கிரி லானைக் கல்லு
சத்தையுவர்ச் சூடனங்கே சத்தேபோடு

வேகாத இனமினமுஞ் சேர்ந்த தானல்
வெண்கிளிஞ்சி கெர்ப்பநீர் விட்டாற் கொல்லும்
போகாதோ குருமுடிக்கும் பாகந் தன்னைப்
பூட்டறிந்து பார்த்தவற்குப் பொருள் தான்முத்தே.

Colophon:

ரோமரிஷீ பதினாறுங் காழி காவற் பண்டார (அதற்கு மேல் வடமொழியில் ஒரு தொடர் உண்டு).

No. 1853. AUVAI KURAḶ—[TEXT]

ஔவை குறள்—[மூலம்]

[373]

Size, $13\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 64. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work, which is said to have written by Poetess Auvai in 310 Kuraḷ Veṇpās, deals about the metaphysics according to Vēdāntic Philosophy.

Complete.

குறிப்பு: இது, ஔவைப்பிராட்டியாரால் இயற்றப்பெற்றது; அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 310 குறட்பாக்களும் பூர்த்தியா யுள்ளன.

பூர்த்தி.

Beginning:

நல்லார் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லார் பிறர்குற்றம் காண்பரோ—வல்லாத
வென்போல்வா ரென்னை யிகழ்வரோ வென்கவிக்குப்
பின்பாரோ காண்பார் பிழை.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். 1

பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறிற் றோன்றும பிறப்பு. 2

* * * *

End:

திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்
குருவிருப் பாமென்று கொள். 9

கற்கிலுங் கேட்கிலும் ஞானக் கருத்துற
நிற்கிற் பரமவை வீடு. 10

முத்திக் கௌவைசொன் முந்நூற்றுப் பத்துமுன்
சித்தத்தில் வைத்துத் தெளி. 310

No. 1854. AUVAI KURAḶ—[TEXT]

ஔவை குறள்—[மூலம்]

[700-A]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 32. Lines, 9 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1853. This is called Ñana-K-Kuṟaḷ in the Mss. also.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1853 பிரதி போன்றது. ஞானக் குறள் பெயரும் இதற்கு எழுதப்பெற்றிருக்கிறது.*

பூர்த்தி.

No. 1855. KAYILĀCA-C-CATTAI MUNIYĀR ÑĀṈAM—[TEXT]

கயிலாசச்சட்டை முனியார் ஞானம்—[மூலம்]

[817-A]

Size, 9″×1″. Pages, 55. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, New.

Note : This is a work dealing with divine wisdom in 100 stanzas, according to Vedāntic Philosophy. Several spelling and grammatical errors are found in the stanzas.

Complete.

குறிப்பு : இது, வேதாந்தத்தைச் சார்ந்தது. ஞான நிலைமையைப்பற்றிக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. நூல் முற்றுமுளது.

பூர்த்தி.

Beginning :

கயிலாச பரம்பரத்தி லென்னை யாண்ட
கடவுளெனுந் தட்சணா மூர்த்தி பாதம்
கயிலாசத் தெனையீன்ற மா... பாதங்
கருணையுடன் போற்றிநித்தம் ஞானம் சொல்வேன்
கயிலாச நிற்குணமே நிர்மலமே தெலா
காட்டுகின்றீர் கேசரிலை......துன் மயமாய்க் கையாற்
கயிலாச பரம்பரையாய் வந்த பேர்க்குங்
கடைப்பின்னை ஞானத்தைப் பாடுறேனே. 1

* * * *

End :

மவுன மொன்றி யெனையாண்ட தட்சணாமூர்த்தி
மலர்பணிந்து ஞானமிது நூறுஞ் சொன்னேன்
மவுனமென்ற ஞாதாக்கள் பதத்தைப் போற்றி
வகைகயோமிட ரெண்டுகண்டம் வாதம் ....

.... ஞானம்போய் என்று சொல்லி
வாகான செகண்டி போட்டென் றூத்தில்
மவுன மென்றே சமரசந்தான மக்காள்மக்கா
ளவர்களை ஞானமுறைமுழுதுங் காணேன்.

சிவகிருபை தட்சணாமூர்த்தி பாதமே சரணம்.

சற்குரு பாதமே கெதி.

No. 1856. KUTAMPAI-C-CITTAR PĀṬAL

[TEXT]

குதம்பைச்சித்தர் பாடல்—[மூலம்]

[677]

Size, $10\frac{1}{2}'' \times \frac{7}{8}''$. Pages, 1. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 4 stanzas of the bigger work with the same name.

Incomplete.

குறிப்பு : இது, சித்தர் பாடல்களைச் சார்ந்தது. குதம்பைச் சித்தராற் பாடப்பட்டது. இதில் நான்கே கண்ணிகள் உள்ளன. அவையும் அச்சான பிரதியிற் காணப்படவில்லை. நூல் பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning:

சாதிகுலந் தள்ளித் தானவ னானபின்
னாரைநினைவ தடி குதம்பாய்
நித்திரை நீக்கி நினைவா யிருப்பார்க்குப்
பத்திர மேதுக்கடி குதம்பாய்

* * * *

End:

அருண்மஞ்சள் குளிக்கிற் ஆனந்தப் பெண்ணுக்கு
இருண்மஞ்ச ளேதுக்கடி குதம்பாய்
அவமஞ்சட் குறிக்கிற ஆனந்தப் பெண்ணுக்குஞ்
சிவமஞ்ச ளேதுக்கடி குதம்பாய்

No. 1857. KAIVALYA NAVANĪTAM

[TEXT AND ANNOTATION]

கைவல்ய நவநீதம்—[*மூலமும் உரையும்*]

[157]

Size, 12″×1¼″. Pages, 120. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Advaita Siddhanta by one Tāṇṭavarāya Mūrti, a disciple of Nannilam Nārayaṇa Cwāmikaḷ. The Mss. states that the Cwāmikaḷ himself dictated the work.

Complete.

குறிப்பு: *இது, அத்வைத சமயத்தைச் சார்ந்தது. இது நன்னிலம் நாராயண குருவின் மாணவரான தாண்டவராயமூர்த்தி என்பவரால் பாடப்பெற்றது. இந்தப் பிரதியில் நாராயண குருவே இயற்றியதாக வுள்ளது. அச்சுப் பிரதியில் இல்லாத செய்யுட்கள் சில இதில் காணப்படுகின்றன.*

பூர்த்தி.

Beginning:

ஆதியாய் வேத நான்கி னரும்பொரு ளுணர்வாய் நின்ற
சோதியே யருள தாகி தோன்றுங்கை வல்லியந் தன்னில்
ஓதிய ஞான நூலா முணர்வறி பிரம மொன்றே
சாதனை விவேக முற்றி சற்குரு கணேசர் காப்பாம். 1

இதன் பொருள்:—ஆதியாகிய வேத நான்கினுஞ் சொல்லப் பட்டது; ஆத்துமாவே பிரமமென்று சொன்ன வாக்கியப்படிக்கு அரும்பொரு ளென்று மறிவுக் குணர்வாயிருக்கப்பட்ட சோதியே யருளாக விளங்கியுங் கைவல்லிய பதமென்று ஆத்துமாவே பிரம மாய் விளங்கியும் ஓதப்பட்ட ஞான நூலாகவே உணர்வுக் குணர் வாய் பிரமசாக்ஷாத்காரத்தை யனுபோகத்தினாலே யொன்றாய்க் கலந்து இருக்கப்பட்ட பொருளை யாதாமொரு மும்முச்சித்துகள் சாதனை செய்து ஆத்தும......................பண்ணினால் சத்குரு கடாட்சத்தினாலே ஆத்துமா சாந்தியடையுமாறு விக்கினேசுவரர் அருளாகியுங் காப்பா ரென்றவாறு.

*   *   *   *

End:

இந்நி லந்தனிற் கைவல்லிய நவநீத மெனப்பே ரிட்டு
நன்னில மருவு நாரா யணன்சொன்ன ஞான நூலைப்
பன்னியா ராய்ந்து பார்ப்போர் பரமார்த்த சொரூப மாகி
லன்னிய ...றத்தம் பொய்யா யானந்த மெய்யாய் வாழ்வார்.

இதன் பொருள்:—இந்த பூமியின்கண் கைவல்லிய நவநீத மென்று நாமந்தரித்து, நன்னில மென்னுந்தலத்தி லெழுந்தருளி விளங்காநின்ற நாராயண சுவாமிகளாற் சொல்லாநின்ற விந்த மெய்ஞ்ஞான சாத்திரத்தைப் பகுத்தாய்ந்து பார்க்கின்ற பேர்களே யெதார்த்தசொரூப சைதன்னியத்தைப் பெற்று அன்னியமாய்ப் பொருந்திய சகல துக்கங்களு மித்தையாகத் தோன்றி யாத்மானந்த சொரூபமே சத்தியமாய் விளங்கி வாழ்வார்க ளென்றவாறு.

Colophon:

குரோதிஹு தைமீ 14உ சனிவாரம் துதிகை மகநட்சத்திரம்.

No. 1858. KAIVALYA NAVANITAM—[TEXT]

கைவல்ய நவநீதம்—[மூலம்]

[551-D]

Size, 11″ × 1½″. Page, 64. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1857.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1857 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 184 செய்யுட்களே காணப்படுகின்றன. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பலவிடங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.*

பூர்த்தி.

Beginning:

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. 1

* * * *

End:

வாதனு வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம்
ஏதினு லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்
போதமா மிராசன் றனுய்ப் புந்தியைம் புலன்க ளெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றுற் சகலமு மடங்குந் தானே. 184

No. 1859. KAIVALYA NAVANĪTAM

[TEXT AND ANNOTATIONS]

கைவல்ய நவநீதம்—[*மூலமும் உரையும்*]

[595]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 184. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1858.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1858 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 69 பாடல்கள்வரை உரையுடனுள்ளன.*

அபூர்த்தி.

No. 1860. KOṄKAṆA NĀYAṈAR AṞUPATU CŪTTIRAM TĪKSHĀ VITI—[TEXT]

கொங்கண நாயனுர் அறுபது சூத்திரம் தீட்சா விதி

[மூலம்]

[218]

Size, $15\frac{5}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 20. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This work in 61 stanzas deals about the methods of initiation of a prepared soul.

Incomplete.

குறிப்பு: இது, வேதாந்தத்தைச் சார்ந்தது. தீட்சை மார்க்கம் ஐந்து என்றும் அதன் விரிவும் அறுபது விருத்தங்களால் உணர்த்துகின்றது. ஆசிரியர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. கொங்கண நாயனராக இருக்கலாமென்று தோன்றுகிறது. நூல் முற்றுமுளது; அச்சானதாகத் தெரியவில்லை. ஏடுகள் சிதிலம். முதல் இரண்டு ஏடுகள் உடைந்து அரை ஏடுகளாக உள்ளன.

பூர்த்தி.

Beginning:

ஆதி யந்தங்கடந்து நின்ற பூரணந்தாள் போற்றி
அம்மனெடு மூலத்திற் கணேசன் காப்பு
பாதியி...... ....
....போகர் காப்பு
சோதியாய் நின்றதொரு பெரியோர் காப்பு
துரியவெளிக் குள்ளான ....
....மார்க்கம்
நெறியாக வுள்ளபடி நினைக்கின் றேனே. 1

* * * *

End:

கள்ளமென்று திரியாதே தீட்சை மார்க்கம்
கயிலாசத் தேகுடியா யிருக்கப் பண்ணும்
வெள்ளமென மனங்கண்டால் விள்வா ரன்பாய்
வெறுவீணர் பொறத்தி .... லேதுமில்லை
உள்ளபடி முப்பாழுக் கப்பால் நின்ற
ஓகோகோ சுருதிமுடிந் திட்டவாறு
வள்ளலே பூரணத்தின் தீட்சை சொன்னேன்
வளமான கனியொன்றாய்க் கனிந்த முத்தே. 61

Colophon:

கொங்கண நாயனாரவர்கள் அறுபது சூத்திரம் தீட்சாவிதி முற்றும்.

குருபாதமே கெதி.

No. 1861. KOṄKAṆAR KAṬA-KATTAM [TEXT]

கொங்கணர் கடகட்டம்—[மூலம்]

[640-F]

Size, $5\frac{3}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 16. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work, supposed to have been written by Koṅkaṇa Cittar deals about the impermanence of the material world.

Complete.

குறிப்பு: இது, வேதாந்தத்தைச் சார்ந்தது. நிலையாமை யைக் கூறுவது. கொங்கணர் என்பவரால் இயற்றப்பட்டிருத்தல் கூடுமெனக் கருதப்படுகிறது. நூல்முழுது முள்ளது. பிழைகள் மலிந்துள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை. வேறு எந்த விவரமும் அறிய வியலவில்லை.

பூர்த்தி.

Beginning :

திறங்கெட்டான் ெ...ன்கெட்டான் ஆங்காரத்தால்
சென்றறிந் தோராவர்மற் றிருந்தோரை செகத்தின்மீதே
அறங்கெட்டான் பிறங்கெட்டான் அருளும்கெட்டான்
அவர்கள்சொல் வார்........... தம்பிராங்களென்று
ஒறங்கெட்டான் மாய்கை மாய்கை யென்ற கடலின்மூழ்கி
உண்மை யுள்ளோன் தன்கருத்தை உகந்திடாமல்
எறங்கெட்டான் மெய்மன்மே ஞக்குத் தன்னே
யினிகெட்டாற் பண்பிசந்து பிணமாய் போச்சே.

* * * *

End :

தோலிலே கட்டியபா லாறுக்காகும்
தோலான சுணங்கினிட தோலும் வாலும்
காலிலே ஒட்டியதோர் நரகல் போலும்
கடைகெட்ட திரேகமது (தேகமது) நம்பவேண்டாம்
பாலிலே படர்ந்துநின்ற மேதை போலே
பறந்துநின்று ஆடுதப்பா ஆசைசொன்னேன்
கூலிலே ஊதுகின்ற காத்துப் போலே
கூடிற்று மனசிலே குறித்துப் பாரே. 22

திருச்சிற்றம்பலம்.

No. 1862. KOṄKAṆAR ÑĀṆAM—[TEXT]

கொங்கணர் ஞானம்—[மூலம்]

[331-D]

Size, $11\frac{1}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 11. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This work deals about the metaphysics, philosophy etc. on Vēdāntic lines.

Incomplete.

குறிப்பு : இதன்கண் சரியை முதலிய நாற்பாதங்களின் தன்மை, தத்துவங்கள், ஐம்பூதங்களின் தோற்ற முதலியவை கூறப்படு

கின்றன. இயற்றியவர் கொங்கண நாயனார். இது 107 பாடல்களைக் கொண்டது. இச்சுவடியில் 102 பாடல்களே யுள்ளன. அச்சுப்பிரதியில் முதற்கண் தோத்திரப்பா ஒன்றும் கூறப்படுகிறது. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் பாடபேதங்களுண்டு.

அபூர்த்தி.

Beginning :

அகண்டபரா பரமான மூலநாய
 னடிதொழுதுகா லாங்கி நாயர் பாதம்
புகண்டுநிறை போக... பதத்தைப் போற்றி
 புகழ்பெரிய வல்லோர்கள் பதத்தைப் போற்றி
......கண்டுநின்ற சரியையொடு கிரியை யோகம்
 தனிப்பெரிய ஞானமொடு நாலுஞ் சொல்வேன்
நிகண்டுநின்ற படிசொல்ல என்னுற் கூடா
 நேரான பூரணந்தான் நேர்ந்த காப்பே.

* * * *

End :

காணப்பா ஆனந்த வேதாந்த மார்க்கங்
 கைம்முறையாய் நூறையுநீ பாடம் பண்ணி
ஊணப்பா மனத்தி னுள்ளே கெட்டிய.........
 ....யர்த்தியுள்ள நாதாக்கள் கேட்டால் சொல்லு
தோணப்பா ஆறுபிள்ளை யென்று மெச்சில்
 துடிபடவே மூலவர்க்க மென்று சொல்லு
வீ........... திரியாதே வல்லோ ரேச
 வேதாந்த சாஸ்திரத்தில் விரைந்து கூடே. 102

No. 1863. KOLAI MARUTTAL—[TEXT]

கொலை மறுத்தல்—[மூலம்]

[367]

Size, 15″×1⅜″. Pages, 8. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work, by Tirutturaiyūr Cāntalinka Cwāmikal deals about non-killing.

Complete.

குறிப்பு: *இது, வேதாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. உடல் பொய்; என்றும் அழியக் கூடியது; அதனைப் பெருக்கச் செய்யும் பொருட்டு உயிர்களைக் கொல்லுதல் கூடாது என்று கூறுகின்றது. இயற்றியவர் திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள். அச்சாகியுள்ளது. இச்சுவடியிலும் நூல் முற்றுமுளது.*

பூர்த்தி.

Beginning:

இன்ப மாய தருதிடை யோங்கவுந்
துன்ப மாயது தூரத்து ணீங்கவு
முன்ப ராபரன் மொய்குழ லோடணைந்
தன்பி னீன்றவோ ரானையைப் போற்றுவாம்.

திருமலிபூ மகனுதி யைவருமா
மொருபரமிச் சிறிய னேற்குந்
தருமிருதா டலைமிசைக்கொண் டஞ்சினர்தீக்
கறங்கொலைமை தள்ளிச் சார்தற்
கருமறையா கம நெறிச்சொற் பொருளமைத்திக்
கொலைமறுத்த லறஞ்சொன் மாண்பா
னிருமுணர்வி லேனுரையு நலந்தருமென்
றுளந்துணிந்தீண் டியம்பா நின்றேன். 1

* * * *

End:

சார்வொழிகொம் மடியாதி தாவரத்தா
னுறழ்தருநாய்த் தன்மை யோரை
நேரலைநீ கேண்முடிவில் வரும்புரம்பொய்
வீணனா நீக்கேல் வாணாள்

பார்மிசைநீ புரியலைமெய்த் தவர்குழுவுற்
றறமவர்சொற் படிசெய் நாளுஞ்
சேருமனோ சுத்திபர ஞானமுற்று
னடைவைமுத்தித் திருநாடன்றே. 21

முற்றும்.

திருச்சிற்றம் பலம்.

No. 1864. KOLAI MAṞUTTAL

[TEXT AND ANNOTATIONS]

கொலை மறுத்தல்—[மூலமும் உரையும்]

[42]

Size, 19″×1¼″. Pages, 186. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1863 but with annotation.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1863 பிரதி போன்றது; ஆனால் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிய உரையுடன் உள்ளது.*

பூர்த்தி.

Beginning:

*இன்ப மாய தருதிடை யோங்கவுந்
துன்ப மாயது தூரத்து ணீங்கவு
முன்ப ராபரன் மொய்குழ லோடணைந்
தன்பி னின்றதோ ரானையைப் போற்றுவாம்.* 1

இன்பமாய தருதிடை யோங்கவும் என்பது யாதொரு மனோரதமான நன்மைகள் மேன்மேலு முண்டாகவும்; துன்பமாயது தூரத்து ணீங்கவும் என்பது, தாபத்திரயங்களினாலே வருமியாதொரு இடையூறுகளுந் தூரத்தின் கண்ணே நீங்கவும்; முன் பராபரன் மொய்குழ லோடணைந் தன்பி னின்றதோ ரானையைப்

போற்றுவாம் என்பது ; யாவர்க்கும் மேலான நன்மையினையுடைய சிவன் செறிந்து நெருங்கிய குழலினையுடைய வுமா பரமேசுவரியை யாதியிற் கூடிப் புணர்ந்தா தரவுட னீன்றருளியதொரு யானை முகத்தினையுடைய விக்கினேசுரனை வழிபடா நின்றேனென்றவாறு.

துன்பம் தூரத்து ணீங்க வென்றவதனாற் றம்முடைய மனோ வாக்குக் காயத்துக்குத் தோன்றும னீங்க வென்றதெனக் கொள்க.

இன்பமாய தோங்கவுந் துன்பமாயது நீங்கவு மென்ற வதனாலா னந்தப் பேறு மஞ்ஞானத் திழப்பு மென்றுமாம்.

இதன் கருத்து இந்நூல் செய்து முடிப்பளவும் விக்கின நிவர்த்தி யுண்டாகவும் அதன் பேலு முலகத்தின் கண்ணே குற்றந் தீர்ந்து விளங்கவும் வேண்டி விக்கின கர்த்தாவை வழிபட்டது.

* * * *

End :

இதன் கருத்து அசர பதார்த்தத்தினுள் நிடேத பதார்த்தங் களை விடவேணுமென்றும் மேல் யாதொரு காரியமும் நாதாக்களது திருவாக்கின் படியே நடக்கவேண்டு மென்றும் அப்படி நடக்கிற பாரம்பரியமாய முத்தி கைவல்லிய மாமென்று கூறியது. 22

No. 1865. KOLAI MAṞUTTAL

[TEXT AND ANNOTATIONS]

கொலை மறுத்தல்—[மூலமும் உரையும்]

[367-A]

Size, 15″×1⅜″. Page, 166. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1864.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1864 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1866. CACIVANNA PŌTAM—[TEXT]

சசிவன்ன போதம்—[மூலம்]

[700]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 18. Lines, 9 on a page. Condition, Good. Appearance, New.

Note: This is the story of a misled Brahmin who fell into evil ways and of his redemption at the end. It contains much philosophic teaching on Vēdāntic lines.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த விஷயமானது. ஒருவன், அந்தணர் குலத்திற் பிறந்து, கொலைகளவு முதலிய தீயசெயல் புரிந்து, வியாதியால் வருந்தி, தேவபக்தர் சொற்படி நந்திபாராயணரை அடைந்து அவரருளால் வியாதி நீங்கப்பெற்று மோட்சமடைந்தான் என்னும் கதையினை விளக்குவது. தத்துவராயர் இயற்றிய மோக வதைப் பரணியில் பேயிரங்கல் அதிகாரத்தில் இது சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதி பூர்த்தியா யிருக்கிறது.

பூர்த்தி.

Beginning:

அலகை யச்ச மறமக வான்களு
முலகின் முத்தி பெறும்பரி சோதுவாம் 1

புணர்ந்த பாவமெ லாம்பரி பூரணன்
முணர்ந்த ஞானி விழிபட வோடுமே. 2

* * * *

End:

தேவரு மணித்தரு மிவன் றெருழில்
வியந்துரை செயப் படுவதோ
மூவரும் வணங்கி முடியாவன
தேவல்செய முந்து வரே. 109

* * * *

End :

ஞானியை நரன்சுர னென்று தொழிக
ஞாபமுய நாதனரு ளான்
மேனியது கொண்டுதனை நல்கவரு
மென்றறையும் வேத முடிவே. 110

No. 1867. CATTAI MUṈI CŪTTIRAM—[TEXT]

சட்டைமுனி சூத்திரம்—[மூலம்]

[331-C]

Size, $11\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 26. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This work by a Citta, Kampiḷi-C-Cattai Kailāca Muṉi deals about the extraodinary results of Cittic actions. The work is called Cūttiram.

Complete.

குறிப்பு : இது, வேதாந்தத்தைச் சார்ந்தது. சில சித்துக்களைப்பற்றிக் கூறுகின்றது. ஆசிரியர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. சட்டைமுனி ஆசிரியராகலாம்; நூல் முற்றும் உளது. அச்சானதாகத் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning :

சூத்திர மோது முன்னே சொல்கின்றேன்
கணேசர் காப்பு
சாஸ்திரம் நிறைந்து பொங்கிச் சராசர
மெங்குந் தானாய்
தோத்திரப் பொருளுந் தானாய் சொல்வது
வும்... மற்றும்
போதத்திற் பிறப்புள்ளான் பூரணங்
காப்புத் தானே. 1

குருவான பூரணமே சின்மயமே அப்பா
குவட்டிலுள்ள சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
தருவான யென்னூலில் தீட்சை மார்க்குச்
சாதகமா யிருநூறு கிழித்தா ரய்யா
உருவான வாதத்தில் பத்து நூறு
உறவான நிகண்டிலே பனிரண்டு நூறு
கருவான கற்பத்தில் ஒன்று நூறு
கைவிட்ட ஞானத்தி ரண்டு நூறே.

* * * *

End :

தானான சூத்திரத்தை யெழுதி மக்காள்
சாதகமாய்ச் சாத்திரத்தை வகைக்கு ஒன்று
வானான கோசரத்தி லாடும் போது
வாராத தை......... சாஸ்திரமுஞ் சூத்திரமும்பேசு
கோனான சிமையத்தின் பிள்ளை நாங்கள்
குறியேது கயிலாச மூர்த்தி வர்க்கம்
வேனான சூத்திரத்தி லிருந்த தொன்று
வேதாந்தக் கோயிலினால் விளங்கு முத்தே. 101

கம்புளிச் சட்டை கயிலாச மூர்த்தி சூத்திரம் முற்றும்.

தேவிசகாயம்.

No. 1868. CATTA-P-PIRAKARAṆAM

[TEXT AND ANNOTATIONS]

சத்தப் பிரகரணம்—[மூலமும் உரையும்]

[815-A (1)]

Size, $10\frac{1}{4}'' \times 1''$. Pages, 82. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This work deals about Advaidic teachings in 7 chapters. This Mss. has only 4 chapters.

Incomplete.

குறிப்பு: இது, அத்வைத வேதாந்த விஷயமானது, 1 ராகத்துவேஷ பிரகரணம், 2 சாதன சதுட்டயப் பிரகரணம், 3. மகாவாக்கியப் பிரகரணம், 4. தூலப்பிரகரணம், 5. சூட்சுமப் பிரகரணம், 6. காரணப் பிரகரணம், 7. மகாகாரணப் பிரகரணம் என்ற ஏழு பெரும் பிரிவுகளாலாயது. அச்சிடப் பெற்றுள்ளது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் சில வேறுபாடுகள் உள்ளன. இந்தப் பிரதியில் தூலப்பிரகரணம் வரையுள்ளன.

அபூர்ந்தி.

Beginning:

பிரம்மானந்தம் பரமசுகர் தம்கேவலம் ஞான மூர்த்திம்
விசுவாசா தீதம் ககன சத்ரசம் ......யாதி லெட்சியம்
ஏகம் நித்தியம் விமலம் அசலம் சர்வதா சாட்சிபூதம்
பாவாதீதம் திரிகுண ரகிதம் சற்குரும் நமாமி
மூகாம்பிகா கடாட்சாது மோகவிகினம் கருதிசிட்சயம் ஏகார
[மகம்
சேடிகார ரீசம் அசேஷச வேதாந்த தேசிகம் வந்தே சற்குரு
[வேநம.

எந்த ராகத்து வேஷங்களினாலே திருவித கரணங்களும் திரிவித கர்மங்களும் செய்யப்படுகிறதோ அந்த ராகத்துவேஷங்களின் சொரூபத்தை நிரூபிக்கிறோம்.

இராகத்து வேஷங்களாவது ஏதென்னில்:—ராக மென்றும், துவேஷ மென்றும், காமமென்றும், மதமென்றும், குரோத மென்றும், லோப மென்றும், மோக மென்றும், மதமென்றும், மாச்சரிய மென்றும், ஈரிஷை என்றும், அசூயை யென்றும், டம்ப மென்றும், தர்ப்ப மென்றும், அகங்கார மென்றும், இச்சை யென்றும், பத்தி யென்றும், சிரத்தை யென்றும் பதினாறு விதம்.

* * * *

End:

சத்த தன்மாத்திரை தவிர ஆகாச மில்லை. சத்த பரிச தன்மாத்திரை தவிர வாயு வில்லை. சப்த, பரிச ரூப தன்மாத்திரை தவிர அக்கினி யில்லை. சப்த, பரிச, ரூப, ரச தன்மாத்திரை

தவிர சலமில்லை. சப்த. பரிச, ரூப, ரச, கந்த தன்மாத்திரை தவிர பிரிதிவி இல்லை. என்று ஆத்மா னாத்ம விவேகம் என்கிற கிரந்தத்திலே சங்கரா சாரிய சுவாமியார் நிரூபிச்சு யிருக் கிறதான படியினாலே இந்தப் பஞ்ச தன்மாத்திரையினிடத்திலே அத்தியாசமாய்த் தோணுகிற பஞ்சீகரண பஞ்ச மகாபூதங்களென் கிற தூலப்பிரபஞ்சமு மிந்தத் தூலப் பிரபஞ்சத்தைக் குறித்து வாபாசத்துவமு மச்ச விஷான வாரதியா புத்திர ககனாரவிந்த மித்தியா புருஷன் போலவே காலத்திரையத்திலேயும்............... என்கிறதுக்கு அதுவே பிரமாண சித்தம்.

தூல பிரகரணம் முற்றும்.

No. 1869. CĀTTIRA PĀṬARRIRATTU—[TEXT]

சாத்திர பாடற்றிரட்டு—[மூலம்]

[574-TT]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This Mss. contains selections of 6 stanzas from a few works on Vēdāntic teachings.

Incomplete.

குறிப்பு: இது, ஒழுவி லொடுக்கம், மகாபுராணம், தனிப்பாடல் கள் முதலியவற்றிலுள்ள சாத்திரக் கருத்துக்களை விளக்குவது, இந்தப் பிரதியில் ஆறு பாடல்களே யுள்ளன,

அபூர்த்தி.

Beginning:

அத்துவித வுண்மை யறியச் சிவசிவ
சத்தி யிரண்டையுமோர் சத்தியென்று—நித்தசிவ
சீவ னிரண்டைச் சிவமென்றுஞ் சத்தியுட
லாவிசிவ னென்றுமறைந் தார். 1

* * * *

End :

சிவனறிந் ததுவே சிவனறிந் ததுவாஞ்
சிவனறி யாததொன் றில்லை
யவனறிந் ததுவே யவனறிந் ததுவா
மவனறியாத தொன்றி யார்
புவனமுந் தனியும் பூதமும் போக்கும்
வரவுமெல்லா மிந்தப் பொருளே
கவனவெம் பரியாய்க் கதிரொளி முடியாய்க்
கருதலர்க் கசனியே றணியாய். 6

No. 1870. CĀTAṈA CAṬUSHTAYA-P-PIRAKARAṆAM—[PROSE]

சாதன சதுஷ்டயப் பிரகரணம்—[உரைநடை]

[551-K]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 28. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a prose explantion of chapter 2 described in No. 1869 above.

Incomplete.

குறிப்பு : *இது, வேதாந்தத்தைச் சார்ந்தது. குருவை யடைந்து ஞானோபதேசம் பெறும் சிஷ்யன் நல்ல பக்குவ நிலையை அடையவேண்டுமென்றும் அப்பக்குவ நிலையின் தன்மையைக் குறித்தும் விரித்துக் கூறும் நூல். முன் 1869 எண்ணின் ஒரு பகுதியே இது.*

அபூர்த்தி.

Beginning :

........யெந்த சாதன சதுஷ்டய சம்பத்தியினாலே முமுக்ஷுக் களாயிருக்கப்பட்ட பேர் மோக்ஷத்தை யுறுர்களென்று வேதாந்தங் களிலே சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தச் சதுஷ்டய சம்பத்தி

களைக் கிரமமாய்ச் சொல்லுகிறோம். அதெப்படி யென்றால் நித்தியா நித்திய வஸ்துவிவேகமென்றும், இகபர முத்திரார்த்த பலபோக விராக மென்றுஞ் சமாதி சஷ்க்க சம்பத்தி யென்றும் முமுக்ஷத்வம் மென்றும் நாலுவிதம்.

*　　*　　*　　*

End :

முமுக்ஷு த்வமாவது மோக்ஷ இச்சை. மோக்ஷ இச்சையாவது இம்............லே இருக்கிற பேர் ஆதியாத்துமிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்கிற தாபத்தி..........களினாலடிபட்டு இந்தச்...........மென்கிற ரௌர வாதி நாகத்தைக் காட்டிலு மதிக துக்கங்களாயிருக்கிற படியினாலே இப்படிப்பட்ட சமுசாரத்................ஷணமாத்திர பாகிலு மிருக்கலாகா தென்று மகாபயத்தை யடைஞ்ச வாளா யிந்தச் சமுசாரப் பிராந்தியை...... ......பெரியவாள் போக்கடிக்கிறார்களோ சற்குருவாயிருக்கப்பட்ட பேர் எங்கே இருக்கிறார்களோ என்று................துக்க சாதனங்களென்னென்ன வேணுமோ வென்றுந்தபிச்சுக் கொண்டு இருக்கிற சித்த விர்த்திக்கு மோக்ஷ இச்சை யென்று பேர். இப்படிப்பட்ட மோக்ஷ இச்சையில்லா விட்டாற் சமுசார பெந்தம் போக மாட்டாது. மோக்ஷ............ஆசாதன சதுஷ்டைய பிரகரணம் சம்பூரணம்.

அச்சுதானந்த குருமயம்.

No. 1871. CIVAMŪLAR CĀRAM—[TEXT]

சிவமூலர் சாரம்—[மூலம்]

[623]

Size, 7″ × $1\frac{1}{4}$″. Pages, 10. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This seems to be an extract in Tamil from the original Civamūlar and contains only a few stanzas.

Incomplete.

குறிப்பு: இது, வேதாந்த சம்பந்தமானது. சிவ மூலர் கூறியுள்ள சாஸ்திரத்தின் கருத்தாயிருத்தல் வேண்டும். இந்தப் பிரதியில் முதல் இரண்டு ஏடுகள் சிதைந்துள்ளமையால் இதனைப்பற்றி ஏதுவும் அறியக்கூடவில்லை. இறுதியில் 27-வது செய்யுள் பூர்த்தி பெருமலுள்ளது.

அபூர்த்தி.

Beginning:

தானே அசத்தல்ல வென் றறிந்தா லத்தரணியிலே
யேனே பிறந்திடுவர் ஏழைகாள்—தானே
கறவா ததுதா னிருக்க அருளில்
குறிப்பு: இது, காயசித்திக்கான மருந்து வகைகளும் யோக மார்க்கமும் கூறுவதாகும். இந்தப் பிரதியில் முன்னுள்ள ஏடுகள் சிதலமாயுள்ளமையால் ஏழு பாடல்கள் அறியக்கூடவில்லை. பின் பாடலிலும் வரி விடப்பட்டுள்ளது. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

வாங்கியே வேர்தனைப் பஞ்ச லோக
மகிமையாலத் தகட்டிலே பொதிந்து கொண்டு
தாங்கியந்தக் குளிசமதைக் கரத்தி லேந்தித்
தம்பனத்தால் நூற்றிருவத் தெட்டு மோதி
வோங்கியந்த குளிசமதைச் சிரசில் கட்ட
ஞோகோகோமுன் சொன்னதெல்லா முண்மை யாகும்
தேங்கியந்த மாதரெலாம் வசியமாகச்
செப்பினேன்மைய்ய தென்று தெரிந்து கொள்ளே. 8

தேர்ந்துகொள்ளுங் குளங்குட்டை தண்ணீர் பார்த்துத்
திறமாக அட்டையது பிடித்து வந்து
கூர்ந்துகொள் தாமரையின் நூலாற் சுற்றிக்
குறியாகத் திரியதனை விளக்கி லிட்டு
சார்ந்துநீ நெய்வார்த்துத் தீப மேற்றித்
தருவான சேர்சொட்டில் மையை வாங்கி
வேர்தந்து நீ புனுகுடனே சவாது சேர்த்து
உறவாக மோதினியைச் சேவிப்பாயே. 9

* * * *

End :

கொள்ளுவாய் பிள்ளையுட மனஞ்சோதித்துக்
கூறுதவ றுதபுத்தி யில்லா விட்டால்
தள்ளுவாய் அவனுடன்வாய் பேசவேண்டா
தவறுத புத்தியடர் நெறியில் நின்று
விள்ளுவாய் பட்சணியை யெடுத்துக் காட்டி
மேலான கருக்கிடையுஞ் சுருக்கிடையுஞ் சொல்லில்
துள்ளுவாய் சுண்ணும்பு மஞ்சள் தானுந்
தொடுகுறிபோல் சூட்சமமெல்லாஞ் சுட்டிச் சொல்லே.

சொல்லடா காயசித்தி யோக மார்க்கம்
....
....
...ளுவென்ன சவுக்கார மாறி ஆதி
அல்லடா பசுக்களுக்கு இந்நூல் ஈந்தால்
அந்தா இடிவிழிந்து தலைநெறிக்கு மண்டை
வெல்லடா நவகோடி சித்து மாகும்
வேதாந்த பட்சணி யதீத முற்றே. 108

No. 1916. VĒTĀNTA PARIPĀṬAI—[PROSE]

வேதாந்த பரிபாடை—[வசனம்]

[599-A]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 92. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This prose work gives the conventional terms used in Vēdānta literature and its translation into Tamil by one Ramanathan from a Sanskrit original with the same name by one Darmarāja Dikshitar. Several Sanskrit quotations are found interspersed in the work.

Complete.

குறிப்பு : இது வேதாந்தத்தைப்பற்றிய ஒருவகைச் சங்கேத மொழிகளை விளக்குவது. தருமராசதீக்கதராற் கூறப்பட்ட வட மொழியினின்றும் தமிழில் ராமநாதர் என்பவரால் எழுதப்பட்டது. நூல் முற்றுமுளது. ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

இவ்விடத்திலன்றோ தர்மார்த்தகாம மோட்சமென்ற பெயரை யுடைய சதுர்வித புருடார்த்தங்களில் மோட்சமே பரம புரு ஷார்த்தம்......... ..

* * * *

End :

அஃதிங்ஙனம் பிரம ஞானத்தானே முத்தி. முத்தியும் மஞ்ஞான நிவிர்த்தியும் நிரதிசய வானந்தப் பேறும்.

Colophon :

தருமராச தீக்கதராற் கூறப்பட்ட வடமொழி ராமநாதராற் றமிழ்ப் பனுவலாக்கப்பட்ட வேதாந்த பரிபாஷை முற்றும். சத்திய ஞானானந்தமய சங்கர பாதற்கே சரணம் சரணம் சரணார்த்தி திருச்சிற்றம்பலம்.

No. 1917. VAIRĀKKIYA CATAKAM—[TEXT]

வைராக்கிய சதகம்—[மூலம்]

[551-F]

Size, 11″×1½″. Pages, 18. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : This work in 100 stanzas, by Tirutturaiyūr Cāntalinga Cwāmikal, emphasises that renunciation of worldly pleasures alone will save the soul.

Complete.

குறிப்பு: இது வேதாந்தத்தைச் சார்ந்தது. வைராக்கிய ஞானத்தைப் பற்றிக் கூறுகின்றது. சாத்திரம், தோத்திரம் என இரு பகுதிகளையுடையது. 100 பாக்களையுடையது. திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. மூலம் மட்டும் உளது. நூல் முற்றும் அச்சாகியுள்ளது. அச்சுப் பிரதியிற் காணப்படும் கணபதி வணக்கம் முதலிய தோத்திரப் பாடல்கள் இப்பிரதியில் இல்லை. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது. ஏடுகளின் ஓரங்கள் ஒடிந்துள்ளன,

பூர்த்தி.

Beginning:

வாழி நெஞ்சமே சென்றிடே னின்றிதோர்
வார்த்தை யெற்குரை செய்வாய்
கீழி யாமியற் றுயர்தவத் திவ்வுடல்
கிடைத்த தன்றோ மற்றீ
தூழி காலமிங் கிருக்குமோ நீயுமோர்ந்
துளையெ னினுள போழ்தே
சூழு மேழ்பவந் துடைத்தல்செய் யாயிதென்
றெழுத ரன்றுணைத் தாளே. 1

* * * *

End:

எனக்கிந் தினியாண் டிடல்வேண் டுமெம் மீசனேமற்
றுனக்கே சரணம் சரணம் புலனொடு மென்றன்
மனக்கோ தனைத்து மிறந்தோங் கறிவாகி யாங்கே
பினைக்காண் பவன்காட் சியுமற் றவபேத வாழ்வே. 100

வைராக்கிய ஞான சதகம் முற்றும்.

No. 1918. VAIRĀKKIYA CATAKAM

[TEXT AND ANNOTATIONS]

வைராக்கிய சதகம்—[மூலமும் உரையும்]

[613-D]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 88. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same work as described in No. 1917 but with annotations by Tiruppōrūr Citampara Cwāmikaḷ. The Mss. in incomplete.

Incomplete.

குறிப்பு : *இது முன் எண் 1917 பிரதி போன்றதாயினும் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்த வுரையுடன் கூடியது. உரையுடன் நூல் முற்றும் அச்சாகியுள்ளது. இச்சுவடி 38 ஆவது செய்யுள் உரையோடு முடிவடைகிறது.*

அபூர்த்தி.

Beginning :

வாழி நெஞ்சமே............துணைத்தாளே. எ-து. பஞ்சபூத காரியமாகிய உடம்பினையும் ஞானேந்திரியங்கன்மேந்திரியுங்களையு ஙியதிகளைங் ததன்பின்னர் அந்தக் கரணங்களை ஙியதிகளையத் தொடங்கும்போது அவைகட்குப் பிரதானமான மனத்தையெதிரிட்டு நோக்கி நிற்குந்தோறும் மனமந்த விவேகத்திற்கு மிகவும் ....நீங்காது முன்னைப் பழக்கம் போல விவேகத்தைத் தன்வயப்படுத்தித் தனக்குப் பற்றுக்களா யுள்ளவற்றி லிழுத்துச் செல்ல இங்ஙன மிழுத்துச் செல்லுதலை விவேகமறிந்து தனது வலியினுல் எதிரிட்டு நின்று எழாநின்றமெதன்று நோக்கி அதுபற்றிய பற்றுக்கள் யாவையும் இவைஇவை யென்று அறிந்து அதற்கு அப்பற்றுக்களை யெல்லாம் விடுவித்ததனைத் தன்வயமாக்குதற் பொருட்டு மனத்தை முன்னிலை யாக்கி விவேகங் கூறிற்றென்று விவேகத்தின் மேல் இந்நூல் கூறுகின்ருர்........

* * * *

End :

தேக நித்திய மென்றறிந்தும் ம.....ளாலுண்டாகிய........... விரும்பினை யென்ருல் நெஞ்சமே மிகவும் பாவியாயினை யான் என்ன கூறினுங் கேட்டிலையாகலின் யான்செய்வதொ ருபாயமுமறியே னென்று விவேகங் கூறிற்று என்றவாறு.

எனை நூல் பலவோதினை யோதவ......

....

....

No. 1919. VAIRĀKKIYA CATAKAM

[ANNOTATIONS]

வைராக்கிய சதகம்—[உரை]

[1166-B]

Size, 12″ × $1\frac{1}{4}$″. Pages, 18. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as previous No. 1917 but containing only the annotations.

Incomplete.

குறிப்பு: *இது முன் எண் 1917 பிரதி போன்றது. ஆயினும் உரை மட்டும் உள்ளது. மூலச் செய்யுட்கள் இல்லை. முதற்கண் தோத்திரப் பாடல்கள் உள்ளன. 43-ஆவது செய்யுள் உரை வரையுமே யுள்ளது. ஏடுகள் மிகவும் சிதிலம்.*

அபூர்த்தி.

No. 1920. VAIRĀKKIYA CATAKAM

[ANNOTATIONS]

வைராக்கிய சதகம்—[உரை]

[1086-A]

Size, $10\frac{1}{8}$″ × $1\frac{1}{2}$″. Pages, 6. Lines, 12 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: Same as previous No. 1917 but contains annotations for only 2 stanzas.

Incomplete.

குறிப்பு: இது முன் எண் 1917 பிரதியைப் போன்றதாயினும் இரண்டு செய்யுட்களும் அவற்றின் உரையுமட்டுமே யுள்ளன. இரண்டாவது செய்யுளின் உரை முடியவில்லை. ஏடுகள் மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

No. 1921. VAIRĀKKIYA TĪPAM

[WITH ANNOTATIONS]

வைராக்கிய தீபம்—[உரையுடன்]

[142]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 134. Lines, 11 on a page. Condition, Good. Appearance, New.

Note: This work by Tirutturaiyūr Cāntaliṅka Cwamikal has been annotated by Tiru-P-Pōrūr Citampara Cwāmikal and deals with the necessity for renunciation. The Mss. contains the text and annotations.

Complete.

குறிப்பு: இது, வேதாந்த மதத்தைச் சார்ந்தது. திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகளியற்றியது. திருப்போரூர் சிதம்பர சுவாமிகளெழுதிய உரையுடன் கூடியது. யான் எனது என்னும் மயக்கமாகிய இருளைத் துறவாகிய ஒளியினால் நீக்கி, மனமாகிய வீட்டை விளக்கஞ் செய்தலினால் இந்நூல் வைராக்கிய தீபமெனலாயிற்று. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு
ளேயவன் சரணையே சும்க்க வென்றலை
வாய்துதி செயகர மலர்க டுய்த்தொழு
நேயமோ டனுதின நினைக நெஞ்சமே.

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன்
றிகழ்தரு முலகெலாந் தன்பான்
மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தான்
வந்தெழு கானனீராக
விருமையா மதிமாய்த் தறிஞராங் காந்தத்
திடையருட் சுடருமிழ்ந் திலங்கு
மொருசிவா தித்தன் றனைநம் திருள்போ
யொளிப்பநா டொறுமிறைஞ் சிடுவாம்.

எ - து. அழகு வளரா நின்ற தாமரை மலரின்கண்ணே யெழுந்தருளி யிருக்கின்ற பிரமாவினலே சிருஷ்டித்தல் செய்த விந்தப் பிருதிவிதத்துவ முதலாக நாததத்துவமீருய் விளங்கா நின்ற பிரபஞ்ச மெல்லாந் தன்னிடத்திற் பொருந்திய சிற் சத்தியாகிய கிரணத்தினலே வந்து தோன்றப்பட்ட கானற்சலமாக வறிஞரது துவிதபுத்தியாகிய சந்திரனை மறைத்தவர்களாகிய காந்தக் கல்லினிடத்துக் கிருபையாகிய அக்கினியைத் தோன்று வித்து விளங்கா நின்ற வொப்பற்ற சிவசூரியனை நமதஞ்ஞான மாகிய விருள் போய் நீங்கும்படி எக்காலமும் வணங்குவா மென்ற வாறு.

*　　*　　*　　*

End :

ஒருவனுக் கிருளற் றுரியசிற் சொரூப
முள்ளவா விளங்கினன் றருமிப்
பருவர லுருவப் பற்றுமற் றதுநேர்
படுமள விறைபுரி தருமைங்
கருமமெவ் விடத்துங் கண்டுதற் செயலைக்
கைவிடுத் தச்சமா றியவுண்
மருவுறு தகற்றித் தவஞ்செய வழக்கால்
வாழியெங் குரவனீ டூழி.

எ-து. ஒரு புருடனுக்கு அஞ்ஞான விருட்டு நீங்கித் தனக்குரிய ஞானசொரூப முள்ளபடியே விளங்குமாயி னிந்தத் துன்பஞ் செய்யாநின்ற தேகப்பற்றன்றைக்கு நீங்கு மந்தஞான சொரூபந் தனக்கு நேராய் வந்து லபிக்குமளவு மிறைவன் செய்யா நின்ற பஞ்சகிருத்தியங்களை யெவ்விடத்தினும் பார்த்துச் சீவச் செயலை விட்டு நீங்கிப்பய முதலிய துர்க்குணங்கள் மனத்தின்கட் பொருந்தாது மாற்றித் தவத்தினைச் செய்வதே முறையாமென்பது. ஞானசாரியர் நீடூழிகாலம் வாழக்கடவ தென்றவாறு.

No. 1922. VAIRĀKKIYA TĪPAM

[TEXT AND ANNOTATION]

வைராக்கிய தீபம்—[மூலமும் உரையும்]

[539-B]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 122. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1921.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1921 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1923. VAIRĀKKIYA TĪPAM

[TEXT AND ANNOTATIONS]

வைராக்கிய தீபம்—[மூலமும் உரையும்]

[307]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 50. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1921 but incomplete.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1921 பிரதி போன்றது. இந்நூல் பிரதியில் பதினேழு செய்யுட்கள் வரை உரையுடனுள்ளன.*

அபூர்த்தி.

No. 1924. VAIRĀKKIYA TĪPAM—[TEXT]

வைராக்கிய தீபம்—[மூலம்]

[638-A]

Size, $4\frac{3}{4}'' \times 1''$. Pages, 118. Lines, 7 on a page. Condition, Good. Appearance, Old.

Note: This Mss. contains only the text of the work described in No. 1921.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1921 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் மூலம் மட்டில் பூர்த்தியாயுள்ளது.*

பூர்த்தி.

Section VII - VAIṆAVAṂ

பகுதி 7 - வைணவம்

No. 1925. ARAṄKANĀTAR TŌTTIRAM

அரங்கநாதர் தோத்திரம்

[1037]

Size, 17″×1¼″. Pages, 10. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a prayer to Sri Raṅkanātar at Sriraṅkam. The Mss. contains 10 stanzas. Author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, ஸ்ரீரங்கம் பெருமாள் தோத்திரம். இந்தப் பிரதியில் 10 பதிகங்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

காவேரி சூழ்கின்ற கஸ்தூரி ரங்கனே
கண்ணனே வண்ணனேநீர்
கருடன்மீ தேறிவருங் காட்சிதனை யெல்லோரும்
கண்காண வருவதெப்போ
பார்மீதில் நின்று விளை யாடிடு மையனே
பரமனே சோதிமூர்த்தி
பரவாசு தேவனே பத்தியுட னாழ்வார்கள்
பணியபத மருளவில்லையோ
கார்கொண்ட மேனியா கமலைதிரு மார்பனே
கங்கைவளர் பொற்பாதனே
கமலலோ சனநீல விமலபங் கயபாத
கடுகிவந் தெனையாளுவாய்

நீர்கொண்ட பாதனே நீலமலை ரூபனே
நின்பெருமை யாரறிவர்காண்
நித்தியா னந்தனே ரங்கத்தில் வாழ்கின்ற
நிமலனே ஸ்ரீரங்கனே. 1

* * * *

End:

கோவர்த்ன கிரியனே கோபால கிருஷ்ணனே
கோவிந்த னெனுநாமனே
கோளரவ காளிங்கன் முடிமீதில் நடனமிடு
கோபாலர் கண்டுமகிழ
காவுத்த ஆவுதனை காத்துரட் சித்தஉன்
காட்சிதனை எவரறிவர்காண்
காருண்ய வாசனே கமலாச தேசனே
கையில்சங் காழியுடையோன்
சீர்பெற்ற காவேரி தென்னரங் கேசனே
திருலட்சுமி வளர்மார்பனே
தேவாதி தேவனே மூவர்க்கு முதல்வனே
செந்தமிழ்ப் புலவர்வாழ்த்த
காரொத்த மேனியா கங்கைவளர் பொற்பாத
கமலமென் முடியில்வைத்து
காத்தருள வேணுமெனை இன்பமுடன் ரங்கத்தில்
கருணைபுரி ஸ்ரீரங்கனே.

No. 1926. ARAṄKANĀYAKAR MĀLAI—[TEXT]

அரங்கநாயகர் மாலை—[மூலம்]

[426]

Size, 18″ × $1\frac{1}{2}$″. Pages, 10. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work in 50 stanzas on Sri Raṅkanātar at Tiru-Nīr-Malai, near Madras. The author seems to be

one Muttu-K-Kumāra Paṇṭāram. His patron was Tirū-Malai-Poopan.

Complete.

குறிப்பு: இது, சென்னைக்கு அருகிலுள்ள திருநீர்மலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாயகர்மீது பாடப்பட்ட மாலை. இதனைத் திருமலை பூபன் என்பார் வேண்டுகோளின்படி பாடினதாகத் தெரிகிறது. ஐம்பது செய்யுட்களை யுடையது. இதன் ஆசிரியர் முத்துக்குமாரப் பண்டாரம் என்று தோன்றுகிறது. அச்சிடப் பெற்றதா எனபதும் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் முழுவதும் உள்ளது. முதல் ஏடு ஒடிந்துள்ளது.

பூர்த்தி.

Beginning:

காமத்த யானை முகத்தா ஞெருகைக் கனியன்றை
பூமத்தஞ் சூடிய செல்வ விநாயகன் பொற்பதமே
யாமத்த னெங்கள் திருநீர் மலைய னந்தத்திரு
நாமத்த னிரங்க நாயக மாலை நவிலுதற்கே.

எழுத்தறி யேன்சொல் லிசையறி யேன்முன் னிலக்கியத்தை
வழுத்தறி யேன்முத் தமிழ்வாணர் கேள்வி வழக்கறியேன்
தொழுத்தகும் நீர்மலை வாழரங்க நாயக சாமிதிருப்
பழுத்தசொற் பேரெனக் கொள்வார்கள் குற்றம் பரிகரித்தே.

* * * *

நீடுந் திருப்பதி நூற்றெட் டுடன்வட நீழல்புவி
சூடு முரகப் பணமாக் குலம்பின் சுருதிபுகழ்
தேருந் திருமலை யுள்ளமவ் வேலைத் திரையிதெலாம்
நாடு மிருக்கய நீர்வலை வாழரங்க நாயகனே.

* * * *

End:

நற்றவர் போற்றுந் திருநீர் மலைரங்க நாயகர்மேல்
சொற்றநற் செந்தமிழ்ப் பாமாலை யைம்பதுஞ் சொன்னவர்கள்
கற்றவர் கேட்டவர் கையா லெழுதிக் கனம் படைத்தோர்
புத்திரர் செல்வம் புகழ்கொண்டு நாளும் பொருந்துவரே.

ஒருமலை யேந்தி நிரைபுரந் தோனன்பர் உள்ளமதில்
பொருமலை நீக்கிநல் மைந்தரெண் செல்வம் புகழ்தருஞ்சீர்
பெருமலை யாகுந் திருநீர் மலைரங்கர் பேரருளால்
திருமலை பூபன் திருமலை போலச் சிறந்திடவே.

Colophon :

முத்துக்குமரப் பண்டாரம் ஓதியருளியது.

No. 1927. ARAṄKAR VIRUTTAM—[TEXT]

அரங்கர் விருத்தம்—[மூலம்]

[811-A (2)]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a work on Sri Raṅkanāta at Sri Raṅkam. The Mss. has losit its beginning and last leaves. Particulars regarding authorship etc. are not available.

Incomplete.

குறிப்பு : இது, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் சம்பந்தமானது. இந்தப் பிரதியில் முதல் ஏடும் இறுதி ஏடும் ஒடிந்துவிட்டதால் அவற்றிலுள்ள 10 பாடல்களையும் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

திருவிளங் கியராம ரகுநாத கோவிந்த சிகதலட் சுமிவாசனே.

* * * *

End :

தயவாள தெரிசனங் கண்ணுடி பத்திரம்
தருமவே திய ஞானயுந்
தமிழோர் விளக்கமும் விசுவரூபங்களுந்
தருதெரி சனங்கள் சேவை

செயவான நூற்றெட்டு வண்ணத் திருப்பதியுஞ்
சிறந்தகொலு மேடை யழகு
தெய்வீக பூஷண அனந்தசய னங்களுஞ்
செயசெய வெனப் பணிவதும்
வயனமிகு படியேறு மகிமை யழகுமாய்
மாதர்துதி செய்யு மழகும்
மண்டலந் தன்னிலே அதிகதல மேயென்று
மறைநா லுரைப்ப துண்டு
நயமான ரதசேர்வை தெரிசனங்காணவே
நன்மையே வந்து சேரும்
ரங்கமே ஸ்ரீரங்கமே வைகுண்ட
ரங்க மேவிய ரங்கனே. 7

* * * *

ஸ்ரீரங்கமே வைகுண்டரங்க மேவிய ரங்கனே. 100

No. 1928. ARI NĀRĀYAṆA KAVACAM—[TEXT]

அரி நாராயண கவசம்—[மூலம்]

[657]

Size, $9\frac{1}{2}'' \times 1''$. Pages, 22. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a Kavaca prayer on Hari-Nārāyana.

Incomplete.

குறிப்பு: இது, விஷ்ணு சம்பந்தமான கவசம். பிற விவரங்கள் கிடைக்கவில்லை.

அபூர்த்தி.

Beginning:

ஆதி யனாதி ஆதி பரம்பரம்
ஆதி மூலத்தின் ஆதி பரப்பிரமம்

அரியெனு மந்திரம் அனுதினம் நினைப்பவர்
இருவினைக ளெல்லாம் எரிதனி வினி......
பரம குருபரம் பரம் உபதேசம்
அருமறை மொழியெலாம் அங்ஙனே உதித்து
உலகு பிறந்திடம் ஓங்கார மானும்
பலகலை தத்துவம் பலவுஞ்ச மனதிடம்
ஆதார மாருயிர் அப்பால் வெளியுமாய்
ஆதார மாறுக்கும் ஆதார மானதால்
உச்சிமேல் வட்டமாய் உதித்தருள் கோலமாய்
சச்சிதா னந்தமாய் சகலமுஞ் சமனமாய்

*　　*　　*　　*

End :

உடலுயிர் ராகவன் காக்க திடமுடன்
　　உருவம் ஸ்ரீதரத்துமன் காக்க
சுழிமுனை யதனில் முகுந்தன் காக்க
　　எரியலசர் வாங்கமும் பரமேஸ்வரன் காக்க
காக்கவேண் டியவர் கருத்தாயிருந்து
　　காக்கநித்தமும் காக்க காக்க.

No. 1929. ĀLVĀR TŌTTIRAM—[TEXT]

ஆழ்வார் தோத்திரம்—[மூலம்]

[809-E]

Size, 10″×1″. Pages, 10. Lines, 5 on a page. Condition, Good. Appearance, Old.

Note : This a prayer to Sri Nammalwar, one of Vaishnava Alwars in 10 Viruttams. The author's name is not known.

Incomplete.

குறிப்பு: இது, வகுளாபரணர் என்றும் நம்மாழ்வார் மீது இயற்றிய துதிக்கவி. பத்துச் செய்யுள்கள் கொண்டது. இந்தப் பிரதியில் ஒரு ஏடு இல்லாமையால், 5, 6 ஆகிய இரு பதிகங்கள் காணப்படவில்லை. இறுதியில் பிரதி ஏடு ஒன்றும் உள்ளது. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

அன்னை வயிற்றி லவதரித்த
அந்நாள் முதலா யிதுவரையும்
அலைவாய்த் துரும்பா யங்குமிங்கு
மலைந்து திரிந்து தடுமாறிப்
பொன்னை விரும்பிக் கலைவிரும்பிப்
புசிப்பை விரும்பி மெலிந்ததல்லால்
பொருனை நதியில் முழுகியொரு
பொழுதா கிலுமே தொழுதேனோ
உன்னை விரும்பி ஒருகவிதை
உள்ள முருக உரைத்தேனோ
உனது திருவாய் மொழிப்பொருளை
உரைப்போர்க் கடிமை புகுந்தேனோ
வன்ன மலர்ப்பங் கயப்பதமெவ்
வாறு தருவாய் மாறப்பெருமாளென்
வ......த வரிசைப் பெருமாள் குருகைநகர்
வகுளாபரணப் பெருமாளே. 1

* * * *

End:

நித்தங் கசடர்க் கிதமுரைத்து
நிலைதட் டழிந்து தடுமாறி
நின்று துயரப் படுவேனோ
நிமிஷத் தினில்நீ பிரியமாகச்
சித்தந் திரும்பிக் கிருபைபுரிந்து
சிறியேற் கிரங்கி யழியாத
செல்வம் பெறுத்து மதிகொடுத்துன்
சேவை கொடுத்தென் கலிதீராய்

கொத்துள் கமலத் தடங்கடொறுங்
குடைசங் கினங்கள் ஒருகோடி
குழுமித் திரண்டு வயிறுளைந்து
குளிர்வெண் மதியின் சுடர்கோல
முத்தங் கொழிக்குந் திரைப்பொருநை
முதுநீர் வழுதி வளநாடா
மோகா நலத்தை மறந்தகுழு
முதலே வகுளப் பெருமாளே.

No. 1930. IRĀMA CEYA-T-TIRUPPUKAḺ

[TEXT]

இராமசெயத் திருப்புகழ்—[மூலம்]

[1235]

Size, $6\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 346. Lines, 13 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a re-production of the story of Rāmāyaṇā in the Tiruppukaḻ Cantam. Its author is one Pāla Pārati. The Mss. runs up to 53 songs in Uttarakāṇṭam. This work is printed.

Incomplete.

குறிப்பு : *பாலபாரதியால் இயற்றப்பெற்றதும், இராமாயணத்தைத் திருப்புகழ்ச் சந்தத்தில் அமைத்ததுமாகும். இச்சுவடியில் உத்தரகாண்டம் 53-ஆவது செய்யுள் வரை உள்ளது.*

அபூர்த்தி.

Beginning :

பணிமேலே படுத்தவனைத்
தனுவேதா னெடுத்தவனைப்
பகைசேர்தா டகைக்குமுதற் கணையேவிப்

* * * *

தமிழோ ராயிரத்திலமைத்
திடுவோனே யெடுத்தபுகழ்ச்
சடகோபா திருக்குருகைப் பெருமாளே.

* * * *

End :

கரந்து கொண்டுவி டாததி யற்றியு
மிரந்து நின்றும்வி லாதன விற்றுமெய்
கடிந்து முன்பினு டாதது டுத்துநல் தலம்யாவும

கடந்து சென்றுமு ணுதுக ழிப்பவை
யயின்று மந்தணர் வாய்மை பிழைத்துமெய்
கலந்த நண்பரொ டேபகை பற்றியு மனைதாதை

வருந்தல் கண்டுமி டாதன விட்டுமுண்
மருந்து கொண்டிட லாழிக ழற்றியு
மகிழ்ந்த பெண்டிரை வேறுப டுத்தியும் மறுதேவர்

வரம்ப ழிந்திடு மாறுநி னைத்துமுன்
அரங்க முந்திய கோயில்தி ருப்பணி
மயங்க லன்றிவி டாது நடாத்துதல் கடனோமோ.

No. 1931. IRĀMA CEYA-T-TIRUPPUKAḶ

[TEXT AND ANNOTATIONS]

இராமசெயத் திருப்புகழ்—[மூலமும் உரையும்]

[1251]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 474. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is same as No. 1930 but with annotations. The Mss. runs up to 6 stanzs in Uttarkāṇṭam.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1930 போன்றது. உரையுடன் கூடியது. உத்தரகாண்டம் 6-ஆம் செய்யுள்வரை உள்ளது.

அபூர்த்தி.

Beginning :

பணிமேலே படுத்தவனை
தனுவேதா னெடுத்தவனை
பகைசேர்தா டைகக்குமுதற் கணையேவி

....

தமிழோ ராயிரத்திலமைத்
திடுவோனே யெடுத்தபுகழ்ச்
சடகோபா திருக்குருகைப் பெருமாளே.

(எ - து) இந்த ராம் செயம் பாடுவதற்கு ஆசாரியாரை வணங்கினது. என்னுடைய ஆத்துமாவுக்குத் துணையானவரே, பூமியிலேயுள்ள புலவருக்கு அரசரே, குளிர்ந்த கன்னியாகுமரி நதியை யுடையவரே, பரசமய கூட்டத்துக்கு யமனே, வணங்குகிறவர்களுடைய பாபமான மலையை நீருக்குகிற இடியேறே, மணக்கப்பட்ட மகிழம்பூ மாலைதரித்த காரிமாறனே ; சீனத்திருநாமமுடையவரே. ஆத்துமாவுடனே கூடியிருந்து ஆத்துமாவைக் கெடுக்கப்பட்ட காமக் குரோத லோப மோக மத மாச்சரியமென்று சொல்லப்பட்ட வுள்ளேயிருக்கிற பகையாறையுங் கெடுத்த மேலானவரே, துயரசமுத்திரத்தில் மூழ்கித் திரிகிறவரே பிரபஞ்ச மாயையைக் கடந்து தெளிந்து அறிவைக் கொடுக்கிறவரே. செழித்தவேதத்தினிட பொருளை யெல்லாஞ் சேர்த்துத் தமிழினலே ஆயிரந்திருவிருத்தத்தில் வைத்துப் பிரபந்தம் பாடினவரே, உலகமெங்கும் எடுத்துச் சொல்லப்பட்ட சடகோபரென்று திருநாமம் பெற்ற நம்மாழ்வாரே. திருக்குருகை யென்றும் சொல்லப்பட்ட திருப்பதியிலே திருவவதாரஞ் செய்து ஆசாரியரூபமாகிய பெருமானே ஒரு விண்ணப்பங் கேளும்.

* * * *

End :

துயரா மிருட்டுச் சூழல்
விளகா முழுக்கற் பாறை
சுடுநீள் புகைக்கொட் டார மழலூழல்

வரலாறு தெற்குப்போன

....

முனிகூறி மெச்சிக் காணும்
வரராம வெற்றித் தேவர் பெருமாளே.

(எ - து) அகத்தியர் சொல்லுகிற பிரமாவானவர் சிருஷ்டிக்க எத்தினம் பண்ணின முதல்நாள் பிறந்த பேர்களில் கோப உக்கிரமான பேர்களை ராட்சதராகக்கடவதென்று பிரமா சபிச்சதினாலே அந்த ராட்சதர் வரிசையாக அவர்களுக்குள்ளே அதிக திறமை கூடினவர்கள் இரண்டு பேராவர்கள். பேரென்னவென்றால் எதியென்றும் பிரகெதியென்றும் பெயர். அவர்களிலே பிரகெதி என்கிறவன் விவேகியாகிக் கல்யாணம் பண்ணுமலிருந்தான். பெலமுள்ள எதிஎன்கிறவன் துஷ்டனாகிப் பாபியாகி யமதர்மராசாவினிட பிறகு பெலமுண்டாய்ப் பிறந்த பயை யென்கிறவளைக் கலியாணம் பண்ணி யிருவருங்கூடி யிருக்கச்சே அந்தப் பயை என்கிற பெண்ணினிட வயிற்றுக்குள்ளேயிருந்து வித்துக்கேசனென்றொரு பிள்ளையுண்டாய்ப் பிறந்தானென்று இந்த வரலாறு வடக்கேயிருந்து தெற்கே பொதிய மலைக்குப்போன அகத்திய மகாமுனி அவர்கள் சொல்லித் தோத்திரம் பண்ணிக் காணப்பட்டவர்ப் பிரசாத தேவர்களுட பெருமானே ஒரு விண்ணப்பங்கேளும்; பெண்டுகளுட............

No. 1932. IRĀMAR TŌTTIRAM—[TEXT]

இராமர் தோத்திரம்—[மூலம்]

[233-A (3)]

Size, $15\frac{1}{2}'' \times \frac{7}{8}''$. Pages, 10. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a prayer to Sri Rāmā. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, இராமபிரான்மேல் பாடப்பட்ட தோத்திரம். இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

வாலியைக் கொன்ற வில்லும்
மங்கையை அணைத்த மார்புங்
காலியை மேய்த்த கோலுங்
கவந்தனைப் பிளந்த கையு
மேலெல்லாந் துளப மாலை
வேய்ந்திரு(?) நாமஞ் சாற்று
நீலமா மேனி யானே
நெடியவா போற்றி போற்றி.

* * * *

End :

எத்தையுமறியேன் ராமா யெவளவுந் தெரிந்து......த்திரங்
கதைதயு மதுமீதிற் கருத்துடனியல்பாய் யாவர்
துத்தியமாகச் சொன்ன தோத்திரம் பத்தையாருஞ்
சித்தமாய்த் துதித்தால் ராமாதெரிசனை கொடுத்தாள்வரே.

No. 1933. SRI RĀMAR TŌTTIRAM—[TEXT]

ஸ்ரீ ராமர் தோத்திரம்—[மூலம்]

[1277-B]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 5. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is another prayer to Sri Rāmā in 10 stanzas.

Complete.

குறிப்பு: *இது ஸ்ரீ ராமபிரானைப் பற்றியது. எண் 1932 இனின்று வேறுனது. 10 பாடல்களுள்ளன. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறிதற் கூடவில்லை. இப்பிரதி முற்றுமுள் ளது. பிழைகள் அதிகம்.*

பூர்த்தி.

Beginning :

ஹரிஓம்

நன்றாக குருவாழ்க. குருவே துணை.

அண்டரண் டங்களும் பிரமாண்ட கோளகையும்
ஆண்ட திரு வேங்கடவனே
ஆதிநாராயணா வைகுந்த வாசனே
ஆநந்த நரசிங்கனே
எண்டிசையு மீரேழு பதினாலு போகமும்
ஏகமாய் நின்றவடிவே
எண்பத்து நான்கு நூ றுயிரம் உயிர்க்கெலாம்
.... நிறைந்த பரனே.
வண்டணி துளபமணி மாலைமா ர்பையவே
மாதவர்கள் தாளுடவே
வஞ்சியர்க ளாடவே கின்னரர்கள் பாடவே
வானவர்கள் சூழ்ந்தாடவே
பண்டுமுன் னன்செய்த பாவங்களோடவே
பஞ்சபாதங்கள் விட்டோடவே
பரிவுடனே அடியேனை ரக்ஷிக்கவேணும்
பராபர ஸ்ரீராமனே.

* * * *

End :

பத்துக் கவியையும் நித்தம் துதித்தவர்க்குப்
பாக்கியம் தந்தருளுவாய்
வித்தைதரும் புத்திதரும் மெய்ஞ்ஞானம் குருவாகி
மேலாகச் செய்துவைப்பாய்
பெற்றதாயுதவவும் நித்தமுன் பாதமலர்
போற்றிசெய் வேன்கர்த்தனே
அர்த்தனே கர்த்தனே கல்யாண வாசனே
நாராயண கண்ணனே
நாள்தோறும் மறவாமல் என்றனைக் காத்தருளும்
ஐயனே மெய்யனே ஸ்ரீராம ஸ்ரீராம ரகுராமனே.

ஸ்ரீராம செயம்

முற்றிற்று.

No. 1934. RĀMĀYAṆA VIRUTTAM [ON SRI VARATA]—[TEXT]

இராமாயண விருத்தம் [வரதரைப்பற்றியது]—[மூலம்]

[811-A (4)]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: In this Mss. the Rāmāyaṇa Story is sung in 11 Viruttams, each stanza ending with the refraine 'Varta Vēṅkata Royaṉē'.

Complete.

குறிப்பு: *இது வரதவேங்கடராயர் பேரில் துதியாகப் பாடப் பட்டது. இதில் இராமாயணக் கதையைச் சுருக்கி ஒவ்வொரு பாடலிலும் வரதவேங்கட ராயனே என்னும் தொடரை மகுடமா யமைத்துப் பதினொரு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பாடியவர் முதலிய விவரமொன்றும் அறிதற்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. இடையில் ஒரு ஏடு ஒடிந்து பாதி பாகமட்டுமேயுள்ளது. ஏடுகள் எல்லாம் சிதிலம்.*

அபூர்த்தி.

Beginning:

பூமேவு வச்சிரமணி மகுடமும் தண்கதிர்
பொருந்துகஸ் தூரி யழகும்
புகலுமடி யவர்தழைத் திடவருங் கருணையே
பொழிகின்ற திருநயனமும்
பாமேவு மகரகுண் டலமுஞ் சிறந்தசெம்
பவளமுந் தரளநகையும்
பைந்துளப மாலையுஞ் சங்கமொடு நேமியும்
பதுமைவளர் மணிமார்பமும்
தேமேவு பிரமனைத் தந்த திருவுந்தியும்
திகழ் சொம்பொ னுடையுடையும்
சிலம்பொடு சதங்கைகள் புலம்புசரணத்தலே
செயவரந் தரவருகுவாய்

மாமேவி வளர்கின்ற சேஷகிரி வரதனே
மருவுமனு தினமுமுனையே
மனத்தினில் நினைத்தவர் தனக்கருள் மாயனே
வரதவேங் கடராயனே. 1

* * * *

End:

கண்டுகளி கொண்டிட வலம்புரி முழங்கிட
காங்கமுரசங்க......துரு துமியதிர்ந்திடவரும்
கவிகடன் றலைவனும் துதிசெய்
தண்டரிட நின்றபரி தம்புரிய கம்பயிர்த்......
களிசைய ....
சயம்பொடு புரந்தரனுடன் சிவன் மகிழ்ந்திட
வயங்குநிதி பஞ்சமதினில்
மண்டலம் விளங்க...புனையுநாதனே
மருவுமனுதினமு முனையே
மனத்தினில் நினைத்தவர் தனக்கருளு மாயனே
வரதவேங் கடராயனே. 11

No. 1935. IRUCAMAYA VIḶAKKAM—[TEXT]

இருசமய விளக்கம்—[மூலம்]

[585]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 400. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: The author of this work is Ari-Tātar. In this work, he compares Caivism and Vaishnavaism and establishes the superiority of the latter over the former.

Incomplete.

குறிப்பு: இந்நூல் சைவ வைணவ சமயங்களைப் பற்றி 2115 கவிகளிற் கூறி வைணவமே சிறந்ததெனத் தாபிப்பது. இதன் ஆசிரியர் அரிதாதர். இச்சுவடியிற் 2101 கவிகள் உள்ளன.

அபூர்த்தி.

Beginning :

1. கடவுள் படலம்

நீரேற்ற பாரில் உயர்ந்தது நீடுஞானம்
கூரேற்று சிந்தை எதிராசர் குலத்துளானைப்
போரேற்று நாயன்றனை வாழ்பெரும் பூதூரானைச்
சீரேற்ற செல்வக் குருராயனைச் சிந்தைசெய்வாம்.

அலையிட்ட நீரை யடக்கும்வட வானலம்போற்
தலையிட்டு வாது முயல்சாக்கியர் தம்மைவென்று
மலையிட்ட தீபமென மால்சம யத்தைமண்மேல்
நிலையிட்ட பூதூர் எதிராசனை நெஞ்சில்வைப்பாம். 2

* * * *

விரிதா தணியும் தொடைமேவிய வேந்தனுன
அரிதாத வினைத்தளலாம் முடித் தாண்டகோவை
தெரிதாதர் வேத சிரித்தடச் செங்கண்மாலை
பெரிதா தரிப்பார்க் கரிதோ பிறவாதபேறே. 7

* * * *

End :

2. நூற்பெயர் விளக்கப் படலம்

திரமாகிய ஆகமமே ஒருசெய்ய மாதும்
அருமாமறை மற்றொரு தோகையும் மாகநாட்டி
ஒருமாதுறை பாகனை மாலை யுகந்து போற்றும்
இருமாசம யத்து விளக்கம் தியம்ப லுற்றேன். 4

* * * *

8. திரிபுரசங்கார பரிச்சேதம்

சார்ங்கச் சிலைமா தவனப் படியே
பாங்குற்ற பராபர னேயெனிலத்
தீங்குற்ற சிவன்றனை யோர்விடையாய்த்
தாங்கப்ப ணியேது தலத்தெனலும்.

—அழகியமணவாளப் பெருமாள்.

No. 1936. IRUCAMAYA VIḶAKKAM—[TEXT]

இருசமய விளக்கம்—[மூலம்]

[446]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 168. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1935.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1935 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 1937. KALIYA PERUMĀḶ VIRUTTAM [TEXT]

கலியபெருமாள் விருத்தம்—[மூலம்]

[962-K]

Size, $9\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Page, 1. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains only one stanza (incomplete) on Sri Kaliya Perumāḷ (at Ariyalūr ?).

Incomplete.

குறிப்பு: *இது, கலிய பெருமான் சம்பந்தமானது. ஒரு ஏட்டின் ஒரு புறத்தில் கீழ்க்கண்ட வரிகளே காணப்படுகின்றன.*

அபூர்த்தி.

Beginning:

மாதவா கேசவா மனன சொரூபா
யேதுவே தாந்தனே வேதாந்த முதலே
ஆதிஅரி கருடவாகன மேறும் மாயா
பூதலம் புகழ்ந்த ....

No. 1938. KURUKAI MĀṞAṈ VARUKKA MAṆI MĀLAI—[TEXT]

குருகை மாறன் வருக்கமணி மாலை—[மூலம்]

[206]

Size, 16½″×1″. Pages, 48. Lines, 4 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Kurukai Māṟaṉ is another name for Nammāḻwār; This is a work on him, stanzas being arranged in alphabetical order beginnings.

Incomplete.

குறிப்பு : *இது, மாறன் சடகோபன் சம்பந்தமானது. இதனைப் பாடியவர் பத்மநாபன் என்பது பாயிரச் செய்யுளால் விளங்குகிறது. இந்தப் பிரதியில் 92 பாடல்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. சுவடி பிழைபட்டது.*

அபூர்த்தி.

Beginning :

திருக்குருகை மாறன் திருவடி கட்கு
வருக்கை மணிமாலை வழுத்த—முருக்கிதழ்சேர்
வெண்டா மரைக்கோயில் வீற்றிருக்கும் பாரதிதாள்
தண்டா மரையே சரண்.

தன்னூரி வஞ்சியந் தாம்படி ருன்சட கோபனுக்கு
பன்னூருஞ் சீர்பற்ப நாபனும் பாடிய பைந்தமிழாங்
கன்னூரு வருக்கை மணிமாலை யைநல்ல காப்புமொரு
தொண்ணூறு மாறும் படிப்போர்க்குத் தெய்வம் துணை
[செய்யுமே.

நூல்

அன்னையுந் தந்தையு மற்றுமுள் ளோருமகம்புறமும்
பின்னையுஞ் சொல்லுதற் குண்டணி .... பேதமைக்கு
முன்னையு மற்றன்றி யுண்டோ யுவமை யுலகில்மலர்
பொன்னையு மாலையும் பாடுமெஞ் ஞானப் புராதனனே.

ஆலையி லிட்ட கரும்பாய்ப் பசையற் றவும்ற்றும்
வேலையி லிட்ட வழக்கென்ன மோயென்றன் வெவ்வினையின்
நாலையி லிட்டதென் றுலும் பாலுன்னை நான்நம்பினேன்
மாலையிலிட்ட வகுளமென் றேவைத்த மாணிக்கமே. 3

*   *   *   *

End :

வேண்டா விலக்குப சாரஞ்சொல்
வார்புல்லர் மெய்யென்றெள்ளி
பூண்டாக் கிக்கு மெளியே
னுனைச்சர ணம்போற்றியே
தூண்டா விளக்கொளி போலே
மடங்கை தோன்றலே
நீண்டா யளிவிக்கு ளிருந்தாய்
மறைப்பொரு ளேமத்தகனே. 93

No. 1939. KŌVINTA MĀLAI—[TEXT]

கோவிந்த மாலை—[மூலம்]

[639-A]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 18. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work in 30 stanzas on Sri Kōvindā. The name of its author is not known.

Complete.

குறிப்பு: இது, திருமால் சம்பந்தமான 30 செய்யுட்களை யுடையது. செய்யுட்கள் சிறப்புடையனவல்ல, ஆசிரியர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

ஆலிலைமேற் பள்ளி கொள்ளும் அரிராமா கோவிந்தா
மாலை வழுத்தி வணங்கவே—வேலவனும்
வெண்டா மரையாளு மிக்கதிருக் காப்பாகக்
கொண்டேன் மனமகிழ்ந்து கூறு.

End :

கோவிந்த மாலை குறிப்பாக முப்பதுங் கூறிடவே
கோவிந்தன் பாதங் குடிகொள் வோரங் குவலயத்தில்
மாவிந்தஞ் சேந்து வைகுண்ட நாதன் மகிமையினால்
பாவந் தொலைத்துறு வாழியதாய் சித்தம் பாலிப்பரே.

No. 1940. CEṄKAMALAVALLI-Y-AMMAI VIRUTTAM—[TEXT]

செங்கமலவல்லி யம்மை விருத்தம்—[மூலம்]

[542-E]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains one stanza in praise of Goddess Ceṅkamalavalli, another name for Mahālakshmi. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு : இந்தப் பிரதியில் ஒரே பாடல் உள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை,

அபூர்த்தி.

Beginning :

ஆவிக்கு மெய்த்துணையுன் னிருபாத கமல
மல்லாம லொருவரெண்ணே
யஞ்சலென் பாரில்லை யென்செயலி னுலொன்று
மாவதெப் போதினுமிலை
சேவித்து மெய்வாழ்வு பெறவேணு மென்கிற
சிந்தையேயில்லை வேறோர்
திக்கில்லை யிடர்வெள்ளம் நிலையில்லை யுனையலாற்
றேறுதலை சொல்லி யென்னை

ஏவித் தடுத்தடிமை கொண்டா தரிப்பவரு
மில்லை யென்னேழை மதியா
லின்னமொரு தெய்வமுண் டென நினைந்தலமரிந்
தியாதொன்று மின்றியிழிவாய்
பூவித்த கடைநீல புல்வித்த கதையெனப்
புன்மைசெய் தேனுய்வனே
பூத்தபவண் கமலவல்லி வாய்த்தவிண் குலவுசெல்வி
போற்றுசெங் கமலவல்லியே. 1

No. 1941. TIRUPPATI VAṆṆA VIRUTTAM

[TEXT]

திருப்பதி வண்ண விருத்தம்—[மூலம்]

[222]

Size, $14\frac{1}{4}'' \times 1''$. Pages, 136. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains 108 stanzas on the 108 Vaishnava sacred places and 2 invocatory stanzas. Other particulars are not known.

Complete.

குறிப்பு: *இது, திருமால் எழுந்தருளியுள்ள 108 திருப்பதிகளையும் பற்றிய பாடல்களைப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

காப்பு

பொருப்பி னிற்பொலி வெண்ணு புயத்தார்
வணைக்குள் மெய்த்துயி லெண்ணு மெனத்தனர்
புனக்க டக்கரி சொன்ன விரைத்துழாய்—நெடுமாலை

திருப்ப திக்கொரு வண்ண விருத்தமே
விழுப்ப ரச்சொலு மென்ன வழுத்தவோர்
சிறப்பு டைத்தமிழ் என்னித யத்து நீ—யருள்வாயே

மருப்பு ளிப்படர் துன்னு நிழற்குளே
யிருக்கு மெய்ப்பொரு ளெண்ணு மனத்தவர்
மகிழ்த்தொடைக்கழ கென்ன வுதித்துவாழ்—குருகூரா

விருப்பு றக்கருதி யெம்மை யளித்தவா
செகத்தி னிற்புகழ் செம்மை செழித்தவா
விசைக்க ளிச்சிறை யன்ன நடத்துமோர் பெருமாளே.

* * * *

சோழமண்டலம்

ஸ்ரீரங்கம்

நிருதரங் கங்குடைந் தாவி சோர்தர
அலகைதேர்ந்தங் கினந் தோதியென
நிரவி நின்றங் கெழுந்தாட நீள்கணை—தொடுமா மால்

திருவரங் கப்பெருங் கோயில் வாழ்பவர்
ஒருபுயங் கம்படந் தேய வாடிய
திகழ் பரதந்தந் தழுங்......பவ—ரெனைமேவார்

பொருதரங் கம்பரந் தோதை யேதரு
மதனனம் புந்துரந் தேவு வானழல்
பொழியுமிந் துஞ்சுடுந் தாயு மோர்பகை—யிதுதானே

ஒருவரங் கன்பொடும் பேசு வாரிலை
வெளியரங் கஞ்சொலும் போதிலே சுவர்
உளமெலிந் தும்ப ரும்பாடி தாரொடு—புகல்வேனே. 4

* * * *

End :

திருவைகுந்தம்

கொடியிடை மங்கை மார்க்கு ளாகிய
கலவி விரும்பி யாற்றெரு ணமயல்
குடிகொளு நெஞ்சை மீட்டு வேறினி—நினையாதே

அடியிணை நின்று காட்டி மாய்வுறு
பிறவி யிடும்பை வீட்டி நீடிய
அகமகி முன்பு பூட்டி யேயெனை—யருள்வாயே

படிமுமு துண்ட பார்த்தி பாவொரு
திருமகள் கொங்கை சேர்த்த வாகரி
படுதுயர் கண்டு தீர்த்த வாயெமை—யுடையோனே

கடிகமழ் கொன்றை பூத்த வேணியன்
மலரய னும்பர் வாய்த்த மாமறை
கருதுவை குந்த வீட்டில் மேவிய—பெருமானே. 110

No. 1942. TIRUMĀL TUTI—[TEXT]

திருமால் துதி—[மூலம்]

[962-H]

Size, 9″×1″. Pages, 4. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 4 stanzas written in praise Sri Tirumāl in general. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது திருமால் விஷயமானது. செய்யுள் நடை சிறப்புடையதன்று. இந்தப் பிரதியில் நான்கு செய்யுட்கள் காணப் படுகின்றன. பிழைகள் மிகுதி.

பூர்த்தி.

Beginning:

சீர்கொண்ட செங்கமலா வைகுந்த வாசனே
சேனுபதித் தலைவனே
தேவாதி தேவர்க்கும் யாவர்க்கும் முதலான
தேவனே வாமரூபா
கார்கொண்ட வண்ணனே நேசர்க்கு மைந்தனே
காளிகள தனபாரனே
கண்ணனே வண்ணனே விண்ணவர் பணிந்திடும்
காலனே நீலவன்னு

நீர்கொண்ட அவதாரம் யார்கொண்டு பணிகுவர்
நின்பாதம் யானம்பினேன்
நீலாவி நோதனே மாலாவை குந்தனே
நித்தனே கெருட வாகனு
ஆர்கொண்ட தேவனே ஆதிநா ராயணு
அடியனுடை பிணிதீரவே
அச்சுதா னந்தனே பக்ஷவை குந்தனே
அச்சுதா னந்த அருளே.

* * * *

End :

உலகெலாம் ஓரடி அளந்திடும் மாயனே
உக்கிர நரசிம்மனே
ஏகமா நின்றமூர்த்தி எங்கள் குலதேவனே
ரங்கத்தில் வாசனே லக்ஷ்மி யிடப்பாகனே
அமரரிடம் தருவனே பாண்டவர்க் குபகாரனே
.........பொருளனே ஆதிவே தாந்தனே
அடியனுடை பிணி தீரவே
அச்சுதா னந்தனே பக்ஷவை குந்தனே
அச்சுதானந்த அருளே.

No. 1943. TIRU-VĀI MOḶI—[TEXT]

திருவாய்மொழி—[மூலம்]

[1150]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{7}{8}''$. Pages, 200. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This contains the entire work by Sri Nammālwār, the greatest of Āḻwārs.

Complete.

குறிப்பு : இது வைணவப் பிரபந்தம். நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் தலைமையாக விளங்குவது. இதனை இயற்றி

யருளியவர் நம்மாழ்வார் ஆவர். இப்பிரதியில் நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning :

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறும்......ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெ ழென் மனனே.

மனனக மலமற மலர்மிசை எழுதரு
மனனுணர் வளவிலன் பொறிவுணர் வவையிலன்
இனனுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினு
மினனில னெனனுயிர் மிகுநரை யிலனே

* * * *

End :

அவாவறச் சூழரியை யயனையரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சட கோபன்சொன்ன
அவாவிலந் தாதிகளாலிவை யாயிரமும் முடிந்த
அவாவி லந்தாதியிப் பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Colophon :

(வடமொழியில் ஒரு வாக்கியம்)

திருவழுதி நாடென்றுந் தென் குரு கூரென்றும்
மருவினிய வண்பொருந லென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தா னடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து. 1

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணு
மினத்தாரை யல்......சென்...—றனத்தா......
மேதுங் குறைவிலே னெந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று. 2

ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமா நுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றே—னாய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற. 3

வான்றிகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மே
லான்ற தமிழ்மறைக ளாயிரமு—மீன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
விதத்தா யிராமா னுசன்.

மிக்க விறைநிலையு மெய்யா முயிர்நிலையுந்
தக்க நெறியுந் தடையாகித்—தொக்கியலு
மூழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல். 5

ஆழ்வார் திருவடிகளே சரணம்

No. 1944. TIRU-VĀI MOḶI—[TEXT]

திருவாய்மொழி—[மூலம்]

[1029]

Size, 9½″×1¼″. Pages, 158. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1943 but incomplete.

Incomplete.

குறிப்பு: இது, முன் 1943 ஆம் பிரதியைப் போன்றது. இந்தப்பிரதியில் தொடக்கம் முதல் 10-ஆம் பத்துச் செய்யுள்கள் வரையுள்ளது.

அபூர்த்தி.

No. 1945. TIRUVEṄKAṬA MĀLAI—[TEXT]

திருவேங்கட மாலை—[மூலம்]

[738-C]

Size, $12\frac{1}{2}'' \times 1''$. Pages, 28. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work in 100 stanzas on Lord Venkātēcwara on the Tirupati Hills by Poet Pillai-p-perumāl Ayyangār.

Complete.

குறிப்பு: *இது, திருவேங்கட முடையான் விஷயமானது. பிள்ளைப் பெருமாளையங்காராற் செய்யப்பெற்ற 100 வெண்பாக்களை யுடையது. அஷ்டப்பிரபந்தங்களுள் ஒன்று; அச்சிடப் பெற் றுள்ளது. இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாக இருக்கிறது.*

பூர்த்தி.

Beginning:

திண்பார் புகழுந் திருவேங் கடமாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக்—கண்பாராய்
நாராய ணுவடியே னுடுந் தமிழ்வேத
பாராய ணசடகோ பா.

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபத நாட்டினன் பையரவின் சூட்டிற்
சிரமபத நாட்டினன் சேர்வு.

* * * *

End:

ஆதிவட வேங்கடமே ஆயிரம்பே ரானிடமென்
றோதிய வெண்பா வொருநூறுங்—கோதில்
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன்றன் வாக்கு.

No. 1946. TIRUVEṄKAṬA MĀLAI—[TEXT]

திருவேங்கட மாலை—[மூலம்]

[402-B]

Size, $16\frac{3}{4}'' \times 1''$. Pages, 22. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1945 but containing only a few stanzas from the work.

Incomplete.

குறிப்பு: *இது முன் எண் 1945 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் பின்வரும் செய்யுட்கள் மட்டில் காணப்படுகின்றன.*

25-வது பாடல் முதல் 28-வது பாடல் வரையில்
37-வது ,, 60-வது ,,
69-வது ,, 80-வது ,,
85-வது ,, 88-வது ,,

அபூர்த்தி.

No. 1947. TEIVANĀYAKAṈ TŌTTIRAM [TEXT]

தெய்வநாயகன் தோத்திரம்—[மூலம்]

[1037-A]

Size, $17'' \times 1\frac{1}{4}''$. Pages, 10. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a hymn in 10 stanzas on Sri Tēva Nāyakar at Tiruvayintirapuram. Its authorship and other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, திருவயீந்திரபுரம் தேவநாதன் துதி. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

சக்கர தரனே சதுர்மறைப் பொருளே
சதுர்முகன் உன்பதம் பணிந்தே
தாரணி தன்னைச் சமைத்திட வரம்பெற்
றகிலலோ கங்களு மமைத்தான்
பக்குவமாகப் பரமனே லோக பலபல
உயிர்ப் பெலாங் காக்கும்
பங்கயச் கண்ண ஞகிய உனது
பாதமெவ் வுயிர்களும் போற்றத்
திக்கெலம் புகழப் பாரதப் போரில்
சீர்கதி தேர்சக்கர மெடுத்து
செயமது வீர வேந்தர்க ளறிய
க்ஷணத்தினில் பொழுதைய மறைத்தாய்
மைக்கடல் வண்ண ஞகிய மூர்த்தி
மாதவர் தவமது புரிவாய்
மாபெரும் நதிரு மயீந்திர புரத்தி
லமர்ந்திடு தேவநா யகனே.

* * * *

End:

சோதியாய் நின்ற சுடரொளி பரனே
துய்யனே மெய்யனே யெனையாள்
சுருதியா னவனே திருவடிக் காளாய்
தொண்டனு யென்னையாண் டருள்வாய்
பாதக மான வினைகளை நீக்கப்
பலபல திருவிளை யாட்டாய்
பத்தவ தாரம் பார்தனி லெடுத்த
பங்கயக் கண்ணனே போற்றி
யாதவன் குலத்தி லவதரித் தெழுந்த
அரிரகு ராமனே போற்றி
அச்சுதா முக்கண் ணுகிய மூர்த்தி
அமலனே விமலனே போற்றி

மாதவ முனிவர் தேவர்கள் தவஞ்செய்
மாமலைச் சாரலி னருகே
மருவளர் நதிசூ ழயிந்திர புரத்தி
லமர்ந்திடு தேவநா யகனே. 10

No. 1948. NAMPI MALAI—[TEXT]

நம்பி மாலை—[மூலம்]

[161-QQ]

Size, 16½″×1″. Pages, 6. Lines, 7 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This Mss. consists of 26 stanzas on Lord Nampi, at Tirn-k-kuṟuñkudi and is supposed to have been composed by one Tiruvanantal Aḷwar. The Mss. is very much damaged.

Incomplete.

குறிப்பு: இது, 108 திருப்பதிகளில் ஒன்றாகிய திருக்குறுங் குடியில் எழுந்தருளி யிருக்கும். 'நம்பி' என்னும் பெருமாள் விஷய மானது. இந்தப் பிரதியில் 26 செய்யுட்கள் உள்ளன. ஏடுகள் மிகச் சிதிலமாகவும் ஒடிந்தும் காணப்படுகின்றன. இடையில் ஓர் ஓலை இல்லை. சிற்சில பாடல்களும் காணப்படவில்லை. இறுதிச் செய்யுளால் திருவனந்தலாழ்வான என்பவர் இதன் ஆசிரியர் எனத் தெரிகிறது.

அபூர்த்தி.

Beginning:

வையமெல்லாம் பாய்மடித்து வானோர் தனக்காக
மெய்யா யிரணியன்றன் வீரமுறும் நெஞ்சத்தாய்
பொய்யேன் துயரகலப் புன்கலியைத் திர்த்தருள்வாய்
ஐயனே தென்குறுகை ஆதிநம்பி நாயகனே. 3

* * * *

பண்பான பிச்சைக்குப் பரிவாக வாக்குறைத்து
பின்புவர மங்கைதனில் பெருமையுடனீயி(ருந்தே)
இன்பாக என்றனுடை விருவினையைத் தீர்த்(தென்னை)
அன்பாகக் காத்தருளும் ஆதிநம்பி நாயகனே. 9

தாதாவும் நீயெனக்குச் சகலகுரு தெய்வமும்நீ
மாதாவு முன்னை யல்லால் வையகத்தில் வேறுளதோ
பாதார விந்தநித்தம் பணியவருளெனக்கு
ஆதார மின்னொளியே யாதிநம்பி நாயகனே. 203

* * * *

End:

.... முருகருளா லித்தமிழை
.... ந்த லாழ்வானு மன்பாக
.... மிசைந்தநம்பி மாலைதன்னை
.... ரும் வைகுண்டஞ் சேர்வாரே. 206

No. 1949. NĀTĀNTA-T-TIṞAVUKŌL—[TEXT]

நாதாந்தத் திறவுகோல்—[மூலம்]

[291]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 21. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work guides the seeker to attain the goal of Vaishnavite system of philosophy. Its author's name is not known.

Complete.

குறிப்பு: இதன் ஆசிரியர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் 41 பாடல்கள் பூர்த்தியாயுள்ளன.

பூர்த்தி.

Beginning :

ஹரிஓம்ந மோவென்று நாராய ணவென் றனுதினமுந்
துரியாதீ தத்தினில் நாதாந்த சோதியைத் தூய்மையுடன்
பிரியாயா தரவுட னித்தலு நோக்கிய பேர்களெல்லாம்
பெரியா சனமென்று நாதாந்த முத்திப் பெறுகுவரே. 1

* * * *

End :

அண்டகோன் திருமுடியே யண்ட மாகி
அவரிருக்கு திருப்பாத......டமாகி
எண்டிசையு மவருடைய ரசமாய் நின்று
இருசுடரு மவருடைய நயனமாகி
கொண்டலிடி மின்னலெல்லாம் நயனந் தன்னில்
கூர்விழி யா......மையே கோபங்கொண்டு
சண்டவெளி தாரகையே ரோமமாகித்
தம்பிரா னின்றபடி சார்ந்து பாரே. 41

No. 1950. NĀTĀNTA-T-TIṞAVUKŌL—[TEXT]

நாதாந்தத் திறவுகோல்—[மூலம்]

[1253-B]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 21. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1949.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1949 போன்றது.

பூர்த்தி.

No. 1951. NŪṞṞEṬṬU-T-TIRUPPATI-Y-ANTĀTI—[TEXT]

நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி—[மூலம்]

[1030]

Size, $17\frac{1}{4}'' \times 1''$. Pages, 58. Lines, 4 on a page. Condition, Good. Appearance, New.

Note: This work details in Antati metre the names and importances of the 108 sacred places of Vaishnava worship in the land. The author is Tiru-Ninṟavūr, Tirumalayattañki, Tātācharyar. The work contains 110 stanzas.

Complete.

குறிப்பு: இது, வைணவ சமயத்தைச் சார்ந்த நூல். திருமால் எழுந்தருளியுள்ள 108 தலங்களை அமைத்து அந்தாதியாகப் பாடப் பெற்றுள்ளது. கட்டளைக் கலித்துறைகளாலாகியது. 110 பாடல்களையுடையது. இயற்றியவர் திருநின்றவூர் திருமலையத்தங்கி தாதாரியர் தொண்டன் என்பவர். இப்பிரதியில் நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

ஹரிஓம்

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

பேறுபெற் றோர்புட் கரணிவி மானம் பிராட்டிதிசை
வீறுயர்க் கோலந் திருமால் திருப்பதி மிக்கதொரு
நூறுட னெட்டு முறையே யிசைக்க நுவல்பொருளை
யாறுடை யான்குரு கூருடை யான்பொன் னடியரனே.

பரகாலன் பாசக் கயிற்றூர்ப் புணுதருள் பாரெனவும்
பரகால ஞன்றிரு மாலத னொங்கட் படாமையினிம்
பரகால னன்றி யவர்க்குரித் தாழுனைப் பற்றினஞ்சீர்ப்
பரகால ஞன்மறை யாறங்க மோதுமெய்ப் பாவலனே. 2

ஆழ்வார்கள் திருவடிகளிலே சரணம்

சீதர னேயயன் வீடணன் றன்மன் சிவன்பரவித்
தீதகல் புன்னைச் சசிவா விவேதச் சிருங்கந்திகழ்
ஓதரு மாதை தரங்கமின் னூடுதெற் கோர்ந்துதுயில்
மாதவ னேயறங் கத்தரங் காசொல் வானருளே.

*　　*　　*　　*

End:

வருமலை யத்தங் கிரிநேர் சனன மரணமெனும்
பொருமலை யத்தங் கிரகமில் சேயெனும் புன்மையச்சார்
செருமலை யத்தங் கிருடீர்த் தருளுந் திருநின்றவூர்த்
திருமலை யத்தங்கி தாதாரி யர்தொண்டன் செப்பியதே.

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி நிறைவேறியது.

ஸ்ரீரங்கநாயகர் துணை

No. 1952. VISHNU TŌTTIRAM—[TEXT]

விஷ்ணு தோத்திரம்—[மூலம்]

[1277-G]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 3. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This Mss. contains 7 stanzas in praise of Lord Visṇu. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது திருமாலைக்குறித்துப் பாடப்பட்ட தோத்திரமாகும். இதைக் குறித்த மற்ற விவரங்கள் தெரியவில்லை. பிரதி பூர்த்தியாயில்லை. 7 பாடல்கள் உள்ளன.

அபூர்த்தி.

Beginning :

ஸ்ரீ ஹரி ஓம்நமோ நாராயணு பரவாசுதேவா மூலாதாரா
பரபிரம்ம திரிகோனே அகார இகார உகார ஓங்கார
ஸ்ரீங்கார வீரசூர புஜபெல பராக்கிரம் கெம்பீரா
துஷ்ட சம்மாரா ஸ்ரீவர்த்தன தயாள ரக்ஷகா. 1

* * * *

End :

அண்டாண்ட பிரம்மாண்ட உத்தண்ட
ரண்டமிண்ட சண்டப்பிரசண்ட நவகண்ட
ஸ்ரீராவணு மார்த்தாண்ட மண்டலீ சர்கொண்ட
புண்டரீகா புருஷோத்தமா. 7

No. 1953. VEṄKAṬĀCALA-P-PAṬṬU—[TEXT]

வேங்கடாசலப் பத்து—[மூலம்]

[826-A]

Size, 9½″×1″. Pages, 4. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This Mss. contains 6 stanzas in praise of Sri Vēnkatācala at Tiruppati.

Incomplete.

குறிப்பு : *இது, திருப்பதி வேங்கடாசலபதி சம்பந்தமானது. இந்தப் பிரதியில் ஆறு செய்யுட்களுள்ளன. மற்றைய விவரம் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning :

பூதரம் காத்த தோளான் புவிதனை யளந்த தாளா
வேதநாராயண மூர்த்தி வித்தகா விண்ணோர் போற்றும்
சீதர முகந்த கண்ணு திருப்பதி மலைமேல் வாழும்
மாதவா வேங்கடேசா வந்தென்னை ரட்சிப்பாயே. 1

* * * *

End:

அடியவர்க் கன்பனுகி அன்றிரணியன் உடல்பிளந்தாய்
வடிவுள பிரகலாதனனுக்கு வாழ்வே யுதவி செய்தாயிப்
படிதனி லுன்றன் பாதம் பணிபவர்க் கருள்பு ரிந்தாய்
வடிவனே வேங்கடேசா வந்தென்னை ரட்சிப்பாயே. 6

No. 1954. VEṄKAṬĀCALAPATI VIRUTTAM

[TEXT]

வேங்கடாசலபதி விருத்தம்—[மூலம்]

[542-A]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. consists of 5 Viruttams on the Lord at Tirumalai and is different from the previous No. 1953. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இந்தப் பிரதியில் 5 செய்யுள்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

சீராரு மாதவா செம்முளரி லோசனு
திவ்யமங் களசொ ரூபா
சீதார விசெய்தா மோதரா பரவாசு
தேவகோ பால சீலா
நாராய ணுவரி முகந்தகோ விந்தசெக
ரட்சகா வென்று நிதமும்
நாத்தழும் பேறவுனை வாழ்த்துமடி யார்க்கடிமை
நான்செய்வ தெந்தநாளோ

போராடு கனல்விழித் தாடகை வென்றுமுனி
புரிவேள்வி முற்று வித்துப்
பூவையக லிகைகொண்ட சாபமு மகற்றிப்
புராரிசா பமுமுறித்த
வீராம காசெயா விருதுவன கேதனு
வெகுவித வினோத மாயா
விண்டமா தவர்க்கிடர்க ளண்டிடா தருட்செய்வட
வேங்கடா சலக் கடவுளே. 1

* * * *

End:

அய்யனே யுன்பாத கமலத்தை யிடைவிடா
தன்பொடு வணங்கவேணும்
அருமைபெறு கல்வியுஞ் செல்வமும் வேணும்நல்
லறிவாள ருறவும்வேணும்
பொய்யரோ ருறவைவிட் டிடவேணு மொழியாத
பொருசின மடங்கவேணும்
புவியிலனை வர்க்குமுப காரமே செய்திடப்
புந்திதனி லன்புவேணும்
நையவே தனைசெய்யும் பிணிநல்கு ரவுமெனை
நாடா திருக்கவேணும்
நானென தெனுஞ்சனி துலைஞ்சகல வேணுமெய்ஞ்
ஞானநெறி சேரவேணும்
வெய்ய பாதகவினைகள் தீர்த்தருள வேணுமெனை
வேண்டியாட் கொள்ளவேணும்
விண்டமா தவர்க்கிடர்க ளண்டிடா தருட் செய்வட
வேங்கடா சலக்கடவுளே. 5

No. 1955. VEṄKAṬĒCA-P-PERUMĀḶ TŌTTIRAM—[TEXT]

வேங்கடேசப் பெருமான் தோத்திரம்—[மூலம்]

[1037-E]

Size, 17″ × 1¼″. Pages, 6. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 10 stanzas in praise of Lord Venkatācwara at Tirupati. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, திருமலை வேங்கடேசப் பெருமாள் மீது துதி. இந்தப் பிரதியில் 10 செய்யுட்கள் உள்ளன. மற்றை விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

அத்தனே மாலே வண்ணு அமரருக் கரசாய் நின்ற
கர்த்தனே உனது நாமம் கருத்தினில் தியானமாகப்
பத்தியா யுனைப்பணிந்து பாதத்தி லடைவ தெப்போ
சித்தம்வைத் தென்னை யாள்வாய் தேவனே வேங்கடேசா. 1

*　　*　　*　　*

End:

ஐயனே மாலே போற்றி யருமறைப் பொருளே போற்றி
வையகம் புகழுந் தெய்வ வடமலை யானே போற்றி
செய்யவுன் னடியார் கூட்டத் திரளுடன் வைப்பாய் போற்றி
பையற வானே குன்றப் பர்வதத் தடைந்தாய் போற்றி. 10

No. 1956. VEṄKATĒCAR VIRUTTAM

வேங்கடேசர் விருத்தம்

[811-D]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This is also a hymn in 10 stanzas on the Lord at the Tirumalai Hills. Its authorship etc. are not known.

Complete.

குறிப்பு: இது, திருமலை வேங்கடேசர் விஷயமானது. இந்தப் பிரதியில் முதல் ஏடு ஒடிந்துவிட்டதால் அறியக் கூடவில்லை. 10 பதிகங்கள் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

அச்சுதா னந்தநீ பரவாசு தேவநீ ஆதிமூலக் கடவுள்நீ. 1

* * * *

End:

மீனின்வடி வானநீ கூர்மாவ தாரநீ வீ...... மான வனுநீ
வெற்றிநர சிங்கனீ யுத்தகுற ளாயநீ மெய்ப்பரசு ராமனவனீ
மானி...... காகவில் லிறுத்தரகு ராமனீ வசுதேவ மகனுனநீ
வண்மைபல தேவநீ உண்மையாகிய கற்கி வடிவாகி
[வந்தவனுநீ
தானதவ மேயுடைய தந்தைதா யானநீ சகலகலை யறிவித்தநீ
சற்குருவு மானநீ மெய்... விபூஷணன் தயவறிந் தருள்புரிவநீ
மானுபி மானனீ யடியருக் கருள்ஞான வரமே யளிப்பவனுநீ
வாரிதியில் வாசனே சீரடியர் நேசனே வடவேங்க டத்தீசனே.

No. 1957. VAIKUNTA AMMAṈ VIRUTTAM [TEXT]

வைகுந்த அம்மான் விருத்தம்—[மூலம்]

[1220-A]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 88. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work in 195 stanzas deals with the story of Pandavas going to Vaikunta with their wife Drowpadi.

Complete.

குறிப்பு: இது, பஞ்சபாண்டவர் வைகுந்தமடைந்த வரலாற்றை விளக்குவது இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது. மற்ற விபரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

ஓங்குரு வாழ்க வென்று உலகெல்லா மகல நீக்கி
பாங்குட னஞ்சு பேரும் பத்தினி துரோப தையும்
ஈங்குள்ள கரும மெல்லாம் எள்ளள வாசை யற்று
தீங்கிது சதமென் றெண்ணித் தெருவிலே நடந்தார் ஞாயம்.

*　　*　　*　　*

End :

அரிகரி ராமா வென்று லநேகமாஞ் செல்வஞ் சேரும்
அரிகரி ராமா வென்று லறங்களு மிகுந்து வாழும்
அரிகரி ராமா வென்று லகன்றிடுங் கோடி பாவம்
அரிகரி ராமா வென்று லவர்வையங் காணி யாவார். 195

No. 1958. VAISHṆAVA KURUPARAMPARAI

[TEXT AND PROSE]

வைஷ்ணவ குருபரம்பரை—[*மூலமும் பூர்வார்த்த வசனமும்*]

[99]

Size, 17″ × 1⅜″. Pages, 338. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work purports to arrange the Vaishnava Gurus in their order. The author of this work is Parānkuca Tācar. This Mss. has an index and a prose rendering of the work.

Complete.

குறிப்பு : *இது, வைணவ ஆசாரியார்கள் பரம்பரையைப்பற்றிக் கூறுவது. இதற்குச்* சார்வார்த்த சங்கிரகசார விளக்கம் *என்று மற்றொரு பெயருமுண்டு. இதில் முதற்கண்* குருபரம்பரை அட்டவணை *என்று குறிப்பிடப்பட்ட ஏடுகள் 22 இருக்கின்றன. ஏனையவை சர்வார்த்த சங்கிரகசார விளக்கம் ஆகும். இயற்றியவர்* பராங்குச

தாசர் என்பவர். இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. முதற்கண் இரண்டேடுகளில் வடமொழிச் சுலோகங்கள் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning :

குரு பரம்பரை அட்டவணை

பூமாது வாழ்மார்ப னடியார் குழாங்களினிப்
புவிதனி லுகந்து காணப்
புனிதமா மிக்குரு பரம்பரையை யனைவரும்
போதவே யெளிதி லறியத்
தேமாலை சூழ்கின்ற சிறுகரும் பூரெனும்
திருப்பதியின் மேவி வாழ்வோன்
சீர்பெறு மயோத்தியி ராமகோத் திரமதிற்
திங்களென வந்து தித்தோன்
காமாதி யவர்க்கம் பூ......... வைகளைக்
கடந்தகல் வியாண நீதியாங்
கச்சிக டாம்பிவே தாந்ததேசிக னினிய
கருணைக் குகந்த பாத்திரன்.
பாமாலை யன்றியே திருவாச கப்பதினெண்
ணுயிரப் படியதாக
பகர்வித்த னன்பரசி ராமனு கியபராங்
குசதாச பாகவதனே.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

பூர்வார்த்தம்.

சர்வார்த்தசங்கிரகசார விளக்கம்.

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணன் சுவயம் பரப்பிரமமாகியும், ஆதிமத்தியாந்த ரகிதனுமாகியும் சர்வ சேவதயாபரனுகியும் கலியாண சொரூபனுகியும் கலியாணங்களுக்கு ஆதாரமாகியும் தம்மைப் பார்க்கிலுமயேதரமாகிய அறிவுள்ள வத்துக்களுக்கும் சுவாமியாகியும் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி முதலான திவ்விய மகிஷிகளுடனே எப்போதும் பிரதாகித்துக்கொண்டு அனந்த கெருட விஷ்வச்சேனுதி முதலான நித்திய சூரிகளால் இடை

விடாமல் சுருதி சொல்லப்படுகிற கமலங்கள்போல விளங்குகிற திருவடிகளை யுடையனுகியும் பிராகிருத சம்பந்தமில்லாமல் ஆகாசம்போல விஸ்தாரமாகிய திவ்விய நகரத்தில் நிலையாகி நின்றும், சிருஷ்டிதிதி சங்காரமென்றுஞ் சொல்லப்படுகிற லீலைகளைத் திருவுளம்பற்றிப்பரமதயாளு வாசையால் வாசுதேவனென்றும் ....

* * * *

End :

இந்த தமிழாக விபரம்பண்ணி பிராமணுள் முதல் சகல வர்ணத்தாரையும் உன்னிஷ்டப்படி உன்......................ரக்ஷிக்கிறேனென்று பெரிய பிராட்டியாருக்கு அபையஸ்தங் கொடுத்தருளினர். பின்பு பெரியபிராட்டியார் சேனை முதலியாரைக் கடாக்ஷித்துத் திருமந்திர மநுவயம் சரமசுலோகம் உபதேசித்து இதுகளை நம்மாழ்வாருக்கு உபதேசிக்கும்படி நியமித்தருளினன்.

ஸ்ரீயப்பதி திருவடிகளே சரணம்.

பூர்வார்த்தம் முற்றும்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

No. 1959. VAISHṆAVA KURUPARAMPARAI

[TEXT]

வைஷ்ணவ குருபரம்பரை—[மூலம்]

[100]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 592. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work on Guru-Parampara and this work is by one Aḷakiya Nampi Tācar.

Complete.

குறிப்பு: இது, வைணவத்தைப்பற்றியது. வைணவ ஆசாரியர்களது பரம்பரையைப்பற்றிக் கூறுவது. இயற்றியவர் அழகிய நம்பிதாஸர். இப்பிரதி நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

அஞ்சு பொருளு மளித்தென்னை யாண்ட .... னமுகப்ப
னெஞ்சி லிருக்கவே றென்றை நினைத்து...மோ நிணிலத்—
துஞ்சலின்றி
யாரியரைத் துதித்து......து போக் கதுவே
தஞ்சமுத்திக் கெனவுரைத்தா னலிதனைச் சாற்றுதுமே. 1

அனைத்தையுந் தனது ளாக்கி யதனிடத்தான பின்ன......
நினைத்தவென் னினைவினுள்ளே நின்று நாளெடுநாட் செய்த
வினைத்தொகை யறுத்தாட் கொண்டு வீட்டின்பங் காட்டிப்
[பின்னும்
தனைத்தரு மிராமன் செய்யத் தாளிணைத் தலைமேல் வைப்பாம்.

* * * *

குருபரம்பரை முதற் காண்டம்

கடவுள் வாழ்த்து

திருமகள் கொழுன னாகிச் செண்பக மாறனாகி
யருமறை தமிழாய்ப் பாடு மாரமு திடையா......
......ரு செ......கொண்ட காரணன் வரையிலுள்ள
குருபரம் பரையிற் றோன்றுங் குரவரை வணக்கஞ் செய்வாம்.

* * * *

End:

மருவா நின்ற வனைவர்களு மாசிலாத செழுஞ்சோதிக்
கருமா முகிலுங் கமலையுங்கண் டுகந்து கண்கள் களிகூர
விருமா நிலத்தோ ருயிர்காத்த வெ...... நாயகவென்
[றெடுத்தேத்தித்
திருமா மணிமண் டபஞ்சேர்ந்தான் சென்றுற் குடையா
[மெனுஞ்சீமான்

Colophon:

எம்பெருமானார் பிரபந்த முற்றும். குருபரம்பரை முற்றும். ஆழ்வார் திருவடிகளே சரணம் சதாவாசாரியர் திருவடிகளே சரணம் ஆககாண்டமிரண்டுக்குக் கவி (2965) விகாரி-ஸு ஆனி-மீ முதல் தேதி சோமவாரம் திரியோதசி ரோகணி நக்ஷத்திரமும் பெற்ற சுபதினத்தில் ஆழ்வார் திருநகரியில் எழுதிவி...... தவிர ஸ்ரீ விஷ்ணு புராணமும் ஆறங்கிசையும் எழுதி நிறை வேறிச்சு. இதுகள் திருநெல்வேலியில் தளவாய் திருமலை

யப்ப முதலியாராண்டைக்கு சென்... பட்டணம் துபாசி பொன்னப் பிள்ளை பணத்துக்குத் தாசிலாக ஸ்ரீநிவாசனை அனுப்பிவிச்சிருந்த போது எழுதிவிச்சது. இந்தப் பிரதியைப் பார்த்துச் சென்னப் பட்டணத்தில் பெத்துநாயகன் பேட்டையில் லக்ஷ்மணப் பிள்ளை வீட்டில் அவருடைய அம்மான் குமரப் பிள்ளை குரோதி வருஷத்தில் ஒரு பிரதி எழுதியிருக்கிறார். விரோதி வருஷம் பட்டணத்தில் அய்யாசாமி பிள்ளை தம்பி எழுதினார். ஸ்ரீ விஷ்ணு புராணம் காஞ்சிபுரம் மளிகை ரங்கப்ப செட்டியார் ஒரு பிரதியும் நவாபு துபாசி முத்துக்கிருஷ்ண முதலியார் ஒரு பிரதியும் எழுதிவிச்சிருக்கிறார்கள் பிற்பாதி சிந்தாதிரிப்பேட்டை சின்னத் தம்பி பிள்ளை ஒரு...........பட்டணு விக்கிரமாதித்த பிள்ளை(கு) காஞ்சிபுரம் திருமலை பிள்ளை மணமேடு நாராயண முதலியார்க்கு இ.........ணு அரப்.........

பாயிரம்......
திருநாட்டுச் சிறப்பு 36
திருவருள் 58
முதலாழ்வார்கள் 27
பெரியாழ்வார் 36
திருமங்கை 174
திருமழிசை 109
தொண்டரடிப்பொடி 68
குலசேகராழ்வார் 41
நம்மாழ்வார் 308
மதுரகவியாழ்வார் 5
நாச்சியார் 486
ஆக முதல் காண்டம் 1578
ஆசாரியார்கள்.........
எம்பெருமானுர் 1118
ஆக 1383
ஆககாண்டம் 2க்குப் பாசுரம் 2961

Section VIII - JAINISM

பகுதி 8 - சைனம்

No. 1960. ARUṄKALA-C-CEPPU

[TEXT AND ANNOTATIONS]

அருங்கலச் செப்பு—[மூலமும் உரையும்]

[360]

Size, 15″ × 1¼″. Pages, 64. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a Jain work on Morals. The Mss. has annotations in Mani Pravala style and the work is complete.

Complete.

குறிப்பு: *இது ஜைனமத நீதியை விளக்குவது. ரத்தனையன் எழுதினன் எனக் குறிப்பிட்டுள்ளது. உரையில் வடமொழி மிகுதியும் கலந்து மணிப்பிரவாள நடையாக வுள்ளது, இந்தப் பிரதியில் நூல் முழுவது முள்ளது.*

பூர்த்தி.

Beginning:

முற்ற வுணர்ந்தானை யேத்தி மொழிகுவன்
குற்றமொன் றில்லா அறம்.

எ - து. முற்றுணர்ந்தானை ஏத்தி - லோகஸ்வரூபமான ஸமஸ்த ஜீவாதி பதார்த்தங்களினையும் போற்றி ஸ்தோத்திரம் பண்ணி, மொழிகுவன் - சொல்லுவன், குற்றமொன்றில்லாவறம் - ஒரு குற்றமுமில்லாத தர்ம ஸ்வரூபம் ; நினையென்றவாறு.

* * *

End :

தீரா வினைதீரும் சித்திபத முண்டாகும்
பாரா யருங்கலச் செப்பு.

எ - து. தீரா வினை தீரும்—தீராத வினையெல்லாந் தீரும், சித்திபத முண்டாகும்—முத்திபத முண்டாம், பாராயருங்கலச் செப்பு—அருங்கலச் செப்பைப் பார் என்பதாம்.

நித்த மருகன் மலரடியைச் சித்தந் தன்னில் மகிழ்ந்தேத்தி
குற்றமில்லா விந்நூலை ரத்தனைய னெழுதினனே.

முற்றும்.

Colophon :

பார்த்திப ஸ்ரீ மாசிமீ 27உ காலமே 10 மணிக்கு எழுதி முடிந்தது. காஞ்சிபுரம் கிலவை அய்யாசாமி நயினார் கையெழுத்து.

No. 1961. ARUṄKALA-C-CEPPU

[TEXT AND ANNOTATIONS]

அருங்கலச் செப்பு—[மூலமும் உரையும்]

\461]

Size, $16\frac{3}{4}'' \times 1''$. Pages, 98. Lines, 4 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1960.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1960 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் நூல் முழுவது முள்ளது. முன்னர், சில ஏடுகள் மிகவும் சிதலமாக வுள்ளன.*

பூர்த்தி.

No. 1962. KARM SWARŪPAM—[PROSE]

கர்மஸ்வரூபம்—[வசனம்]

[831]

Size, $18\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 65. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a treatise on Karma according to Jaina philosophy and is in Grantha characters and in Maṇipravāla style.

Incomplete.

குறிப்பு: இது, ஜைன சமயத்தின் தத்துவங்களைக் கூறுகின்றது. மணிப்பிரவாளத்தில் கிரந்தலிபியிலுள்ளது. எழுதியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

வ்யஞ்சநா வக்ரஹம். அத்யாவக்ரகம். 2. வ்யஞ்சன வக்ரகமானது. மனோ இந்த்ரியம். நேத்ரேந்த்ரியம் தவிர வ்யஞ்சன வக்ரஹம் நாலு. இந்த்ரியம் அத்யாவக்ரஹம் ஆறு. இந்த்ரியம் ஆகப் பத்து..........

லோகம் த்விவிதம் நிச்சயலோகம் வ்யவகாரா லோகம் என தத்ர நிச்சய லோகமென்பது ஷட்த்ரவ..........பரிபூரணமாகும். வ்யவகார லோகமென்பது அநந்தாகாஸம்.............

* * * *

End:

நான்கு கஷாயமும் ஸ்த்ரீ கதையும் ராஷ்ட்ர கதையும் அவனிபால கதையும் பண்டகதையை யென்னும் நாலுவகைக் கதையிலும் பஞ்சேந்த்ரியத்திலும்..........மோகமென்றும், ப்ரணயத் வயத்திலும் ஆக இச் சொன்ன பதினைந்து ப்ரமாத முதலான சில முப்பத..........

No. 1963. JĪVA-CAMPŌTAṈAI

[TEXT AND ANNOTATIONS]

ஜீவசம்போதனை—[மூலமும் உரையும்]

[31]

Size, 17″ × $1\frac{3}{4}$″. Pages, 446. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a spiritual work of Jaina faith. The Mss. contains the text in Tamil and commentary in Sanskrit.

Complete.

குறிப்பு : *இது சைன சமயத்தைச் சார்ந்தது. சேணிகன் என்னும் அரசனுக்குக் கணதரர் என்பவர் சொன்னதாகக் கூறப் படுகிறது. இயற்றியவர் தேவந்திர முனிவர் என்று தெரிகிறது. வடமொழிக் கிரந்த எழுத்துக்களுடன் கலந்து எழுதப்பட்டுள்ளது. இப்பிரதி முற்றும் உரையுடன் உள்ளது. உரை (வியாக்கியானம்) வடமொழியிலுள்ளது.*

பூர்த்தி.

Beginning :

மூவுலகும் வந்திறைஞ்ச மூவர் முதலாக
மூவுலகுந் தானே முழுதுணர்ந்தோன்—மூவுலகி
னுட்பொருளா யோங்கி யுயர்பொருளாய் நிற்கின்ற
வப்பொருளா மெங்கட் கறன்.

என்பது வடமொழியில்...........

* * * *

End :

சீரார் முடிமன்னன் சேணிகன்றான் கேட்பவே
சீரார் கணதரருஞ் செப்பினார்—பாராரும்
பாவசம் போதனையைப் பற்றுக்குப் பவ்வியற்குச்
சீவசம் போதனையைத் தேர்ந்து.

(வியாக்கியானம்—வடமொழியில்),

No. 1964. JAINA NĀMĀVAḶI—[TEXT]

ஜைந நாமாவளி—[மூலம்]

[739]

Size, 17″ × 1¼″. Pages, 38. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an important work wherein the proper names occurring in Jaina philoshphy and metaphysics are indexed and arranged in groups. The style is Manipravala written in Grantha and Tamil characters.

Complete.

குறிப்பு: *இது ஜைன மதத்தைச் சார்ந்தது. வடமொழிக் கிரந்த எழுத்துக்களாலாகியது. இதைப்பற்றி மற்ற விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை,*

பூர்த்தி.

Beginning:

ஓம். ஜீவ் மஜீவ் தம்வ் ஜ் ந வர வஸ ஹே ண ஜே. ண.

ஙிம் ஹிம்:

தேவீ: தபீ தவ் மம்பித் த் வ்ம் தேத் ஸம் வதாவிரஸா (ஸ்ரீ) ஸ்ரீரஸ்து ஆகம பேர்வழி ஸ்ரீ:

ஜீவத்ரவயம்
அஜீவத்ரவயம்
தர்மத் திரவ்யம்
அதர்மத் திரவ்யம்

* * * *

End:

............ஹரிணம். ஹஜ். தகரம். கும்பம். குவலயம். சங்கம். சபாபம். ஸம்ஹ. ஐஞ்சதுஷ்டம். சதிதி க்ல காரலந்தம். நம். 24.

Colophon:

கும்பகோணத்திலிருக்கும் குப்பண்ணு செட்டியாருடைய தூதிய வீரு ஞாங்வதி படிக்கின்ற

1. ஆகம பேர்வழி
2. கணதா பேர்வழி
3. தீர்த்தங்கர பேர்வழி
4. நாட்டுப் பேர்வழி

No. 1965. TARMA PARIKSHAI—[TEXT]

தர்மபரீக்ஷை—[மூலம்]

(மணிப்பிரவாளம்)

[33]

Size, 17″ × 1¼″. Pages, 182. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is a work dealing with Jaina philosophy written in Maṇipravāla style.

Complete.

குறிப்பு: இது ஜைனமத சம்பந்தமானது. வடமொழிக் கிரந்தமுந் தமிழுங் கலந்த மணிப்பிரவாள நடையிலுள்ளது.

பூர்த்தி.

No. 1966. TIRAVIYA CAṄKIRAKAM

திரவிய சங்கிரகம்

[960]

Size, 18½″ × 1¼″. Page, 14. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work deals with the principles of Jaina philosophy and is written in Grantha characters.

Complete.

குறிப்பு: *இது சைனத் தத்துவங்களைக் கூறுவது. வடமொழியில் கிரந்த வெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.*

பூர்த்தி.

No. 1967. NAVAPATĀRTA VYĀKYĀṈAM

[TEXT AND ANNOTATION]

நவபதார்த்த வியாக்கியானம்—[*மூலமும் உரையும்*]

[522-A]

Size, 16″ × 1¼″. Pages, 78. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Jain philosophy. The Mss. contains the text and its commentary. Other particulars are not available.

Complete.

குறிப்பு: *இது, ஜைன சமயத்தைச் சார்ந்தது. அச்சமயத்துக்குரிய தத்துவங்களைக் கூறுகின்றது. இயற்றியவர் முதலிய குறிப்புகள் அறியக் கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது. இடையில் வடமொழி எழுத்துக்களும் கலந்து வருகின்றன.*

பூர்த்தி.

Beginning:

குற்றங்க ளில்லான் குணத்தால் நிறைந்தான் குணத்தால்
மற்றிந்த வைய மளந்தான் வையநின்ற பெற்றி
முற்று முரைத்தான் உரையீரொன்பதாய தொன்றுன்
செற்றங்க டீர்ப்பான் விமலன் சரண்சென்னி

வைய வைத்தேன், 1

பூமாலை முதலாய புண்ணியாக திருமூர்த்தி
காமாதி வென்றுயர்ந்த கடவு ளென்றறையுமே
காமாதி வென்றுயர்ந்த கடவுளென் றறைந்தாலும்
கோமான் திருவுருவங் கொண்டு வப்ப ராரியரே. 2

* * * *

(எ - து) ஜீவநு...... (வடமொழியில்)..........மென்னுந்தத்து வங்களை ஸச் க்ஷேவத்திஞுந்துக்கங்களை கெடுக்கப்பட்ட............ வழியை சொல்லுதூ மயக்கமில்லாத.................யான ஈாசனே. ஸாவ யாநமாகக் கேளாய் அறிவு காட்சியதானயந்து மூன்றுமாம் பொறியொடுட் கரணத்துயிர் பாயுவினி நெறியின் வாழும் பொருளது சீவனுமறிவு விட்டது மாறிற்று............

* * * *

End :

உரைத்தவிப் பொருளின் மெய்ம்மை யுணர்வது நல்ல ஞான மென்பது. சொல்லப்பட்ட ஜீவாதி பதார்த்தங்களின் மெய்(ம்) மையையறிவது. (..........) ஞானமா மென்றவாறு. புரைப்பற தெளிதல் காட்சி யென்பது குற்றமற வறிந்தபடியே நி............ பண்ணுதல் ஸ...........நமென்றவாறு பொருந்திய விரண்டு மொன்றிற்றரித்தல் நல்லொழுக்க மாகுமென்பது. சொல்லப்பட்ட ஸ...........நத்தையுமஸ்............நத்தையும் விள்ளாமல் ...ரித்த லாகிய ஸமயா...........ஞயஸ...........மென்றவாறு. சாற்றிய மூன்று மொன்றில் விரைப்பொலி தாரோய் வீபஷன் மெய்(ந்) நெறி யாவதாமென்பது சொல்லப்பட்ட ஸ...........மூன்றுங் கூடி னல்......(மோ)க்ஷத்துக்கு மெய்யாகிய அறநெறியா மென்றவாறு.

Section IX - ISLAM

பகுதி 9 - இஸ்லாம்

No. 1968. TURUKKAR CATTIRAM—[TEXT]

துருக்கர் சாத்திரம்—[மூலம்]

[609-A]

Size, 11″ × $1\frac{1}{8}$″. Pages, 38. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This work seems to be a Tamil translation of the Succession Law of the Muslims from a Law Book in Arabic.

Complete.

குறிப்பு: *இது இஸ்லாம் மதத்தினராகிய துருக்கரது சாஸ்திரத்தைப் பற்றிக் கூறுகின்றது. சொத்துரிமைகளைப் பற்றிக் கூறுவதாகக் காண்கிறது. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமுள்ளது. ஏடுகள் சிதிலம். இறுதியில் 6 ஏடுகள் ஒடிந்து போயுள்ளன.*

பூர்த்தி.

Beginning:

விசுமில்லா

கிற்ற குமானிற்றகிம்

(இர்ரஹ்மானிர்ரஹிம்)

நன்ருக குருவாழ்க.

தக்க சுறூரத்தின் சலாத்தில் தக்கனோ
மிக்க தமிழ் நூலால் விளம்ப—வெ..........
............கஃகாக வந்தும்பு
றுக்கா னுரையை யோத வெளியேண் மனதில்
நீதியுற வருள்வாய் நீ

அமானம் அல்தா

ஆலந்தனை வெ............ல்லாம் படைத்தா மகின்ற
அல்லாதன்கெ......லாப்பு கட்சியுமா யாலாகவிக்கு
மவர் கிளைக்கு மவாதன் ருேழு மாரன்பெருக்கு

......ால நவியு மமத்தாவைற்கு
அல்லாகி று(ரு) பையுண்டாகவுமே
சாலநவி தம்மைமிகப் போற்றியே
......லாலறுக்காணைச் சாற்றுவேனே. 1

* * * *

End :

....
அவனுமில்லாவிட்டால் உடன்பிறந்தோன் மகன்
அந்த...........புட்டால்
தகப்பனென் றாகிய உ...பிறந்தான் மகன்வழி
அந்தவழியு மில்லாவிட்டால் தகப்பன்கூடப் பிறந்தவன்
அவனுமில்லாவிட்டால் தகப்பனென்றாகிய தகப்பன்
[கூடப் பிறந்தவன்
அவனுமில்லாவிட்டால் ....
....

பலவகைப் பாடல்கள்

1. நீதிகள்

No. 1969. ARANERI-C-CĀRAM—[TEXT]

அறநெறிச்சாரம்—[மூலம்]

[350]

Size, 18″×2″. Pages, 36. Lines, 8 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This work contains 226 stanzas on the path of Virtue. Its author is one Munai-p-pāṭiyar—a Jaina.

Complete.

குறிப்பு: *இது நீதிநூல் சம்பந்தப்பட்டது. இதனை யியற்றியவர் சைன சமையத்தவரான முனைப்பாடியார் என்பவர். 226 வெண்பாக்களையுடையது. இப்பிரதி முற்றுமுள்ளது. அச்சான பிரதியொன்றில் 116 பாக்களே யிருக்கின்றன. ஏடுகள் ஓரங்களில் முறிந்தும் தொளைகள் விழுப்பெற்றும் உள்ளன.*

பூர்த்தி.

Beginning:

............நறிச்சார............

சுப்பிராயசெ............

......றி யெப்பொருளு கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை—நாவிற்
துதித்தீண் டறநெறிச்............
விரிப்பன் சுருக்காய் விரைந்து.

மறையுளாயுங் காமத் துறையு மயங்கிப்
பிறவுரையு மல்கிய ஞாலத்—தறவுரை
கே............ யாரே பிறவியை
நீக்குந் திருவுடை யார்.

உரைப்பவன் கேட்பா னுரைக்கப் படுவ
துரைத்தது லாய பயனும்—புரை......
............போலியை நீக்கி யவைநட்டல்
வான்மையின் மிக்கார் வழக்கு.

* * * *

End:

முனைப்பாடி யானைச்சூர் முக்குடைச் செல்வன்
தனைப்பாடி வந்தோர்க்குத் ....
.... கட்டழித்து வீட்டின்ப நல்கி
நினைப்பாடி வந்தோர்க்கு நீமிக வென்றான்
நிறைவிளக்குப்போ லிருந்து.

அறநெறிச் சார முற்றிற்று,

No. 1970. ARANERI-C-CARAM—[TEXT]

அறநெறிச்சாரம்—[மூலம்]

[1048-H]

Size, 12½″×1¼″. Pages, 4. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1969 but contains only 15 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1969 ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. ஆயினும் 15 பாடல்களே யுள்ளன, பிரதியின்

தலைப்பில், 'இஃதற நெறிச்சாரம் சயினப்பாடல்' என்று குறிக்கப் பெற்றுள்ளது.

அபூர்த்தி.

No. 1971. RAJAGOPALA MALAI

இராஜ கோபால மாலை

[402-C]

Size, 16″ × 1¼″. Pages, 18. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work consists of 52 stanzas each of which contains a proverb and its explanation and addressed to one Rajagopala Māl. Some stanzas in the work are missing.

Incomplete.

குறிப்பு: இது, 52 செய்யுட்களால், பழமொழிகளை ஆதாரமாகக் கொண்டு நீதிகளை விளக்குவது. இராசகோபால மால் என்பவர் மீது இயற்றப் பெற்றது. நடை சாமானியமானது. ஆசிரியர் இன்னாரென விளங்கவில்லை. இந்தப் பிரதியில் முதல் நான்கு செய்யுட்களும் 9-வது செய்யுள் முதல் 28-வது செய்யுள் வரை 20 செய்யுட்களும் இல்லை. இறுதியில் இரு ஏடுகள் பிரதியாகவுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

கூட்டுதல் குறைந்து போகுங் குறைந்தது நிறைந்தது
[போகும்
ஆட்டிய விதியின் கூறு அறிந்திடா திருந்த மாந்தர்
தாட்டிகம் பேசி யில்லா(ர்) தங்களைப் பழிப்ப தெல்லாம்
ராட்டினிற் சுற்றோ டொக்கு மிராசகோ பால மாலே. 5

வல்லசெந் தேனி னோடே வாகுடன் வேப்பஞ் சாற்றை
அல்லது கலந்திட் டாலு மானநற் கசப்ப றுது
புல்லறி வாளற் கின்பம் புத்தியைப் போதித் தாலும்
நல்லவ ராகா ரய்யா இராசகோ பால மாலே. 6

* * * *

தானென நின்ற புத்தர் சமணர்கள் மதத்தைத் தானே
மானிடந் தரித்தோன் மைந்தன் வான்கழு வேற்றி விட்டான்
மானிலம் புவியைத் தாங்க வல்லமை யானு லுந்தான்
நானென வாண்மை யாமோ ராசகோ பால மாலே.

* * * *

End :

நீடிய விதியில் லாமல் நிறைந்துயிர் போக்க வென்று
ஆடிய விழுதிற் றாங்க அயன்விதிக் கஞ்சு வோர்தான்
மோடிசெய் தொளித்தான் மாண்டான் பொன்றிட நின்றான் [மீண்டான்
நாடிய விதிவி டாது ராசகோ பால மாலே.

முற்றும்.

No. 1972. NAL VALI—[TEXT]

நல்வழி—[மூலம்]

[68-C]

Size, 17″×1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a didactic poem by Poetess Auvaiyār. The Mss. shows differences in arrangement of stanzas from printed editions.

Complete.

குறிப்பு : *இது, ஔவையார் என்னும் புலவராற் இயற்றப் பெற்றது. நாற்பது வெண்பாக்களை யுடையது, அச்சிடப்பெற் றுள்ளது. அச்சிட்ட பிரதிக்கும் இதற்கும் சில செய்யுள் வேறு பாடுகளும், செய்யுள்களுக்குப் பிரதியாக வேறு செய்யுள்களு முள்ளன. இந்தப் பிரதியில் நூல் முழுவது முள்ளது. இடையில் இரு ஏடுகள் ஒடிந்துள்ளன,*

பூர்த்தி.

Beginning:

ஆறிரண்டு சென்னி யறுமுகவா அண்டருடன்
மாறுகொள்வார் தங்கண் மணவாளா—கூறுகின்ற
பாற்பெரி யவ்வை பரிந்துரைத்த நல்வழி நூல்
நாற்பது மென்மனத்தே நல்கு.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். 1

* * * *

வந்தபடி கண்டிருந்தும் வருந்தா திருப்பார்
சிந்தைநோய் தீர்த்துச் சிவனடியார்—தந்தமக்
கில்லாது வேணுமென் றிச்சிப்பார் எந்நாளும்
பொல்லா நரகுழல்வார் போய்.

* * * *

End:

தேவர் குறளுந் திருநான் மறைமொழியும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமந் திரமு
மொருவா சகமென் றுணர்.

No. 1973. NAL-VALI—[TEXT]

நல்வழி—[மூலம்]

[161-B]

Size, $16\frac{1}{2}'' \times 1''$. Pages, 12. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1972 but contains only 37 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1972 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 37 செய்யுட்கள் வரை யுள்ளன.

அபூர்த்தி.

No. 1974. NALVAḶI-P-PŌṞṞIMĀLAI

[TEXT]

நல்வழிப் போற்றிமாலை—[மூலம்]

[68-II F]

Size, $13\frac{1}{2}'' \times 1''$. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a didactic work, in the form of teaching by a Guru to his disciple. The authorship is attributed to Poetess Auvaiyār.

Complete.

குறிப்பு: இதனில், சிடனுக்குக் குரு உபதேசிப்பதுபோன்று சில நீதிகள் கூறப்பெற்றுள்ளன. நடை சாமான்யமாக உள்ளது. இறுதியில் ஔவையாரருளிச்செய்ததெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றைய விவரங்கள அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் நூல் முழுவது முள்ளது.

பூர்த்தி.

Beginning :

உற்ற தொருமொழிகள் உரைகள் தெரிந்தேத்தச்
சற்று மறியேன் .... மெத்தவே
கற்றதொரு ஆனைக் களிற்றின் முகத்தோனை
சித்தமுடன் வந்தெனக்குச் செப்பு.

போற்றி போற்றி குருநாதா புத்தி யெனக்குத் தருவாயே
தோற்றும் வினையா லெழுபிறப்பும் தோற்றுங் கருவி
[லழுந்தாமல்

உலகி லடியேன் பிறந்திறந்து உழலாவண்ண மருள்வாயே
இரவும் பகலு முனதடிமை ஏத்தி வணங்கி யிருப்பேற்கு
அவனி தன்னில் நெறிமுறைமை அடியேனின்று செய்கருமம்
தவறுங் கரும மிதுவென்று சாற்றுஞ் சகல குருநாதா.

நல்லபுத்தி நீகேளாய் நாத
னருள் வெண் ணீறணிந்து
தொல்லை உலகில் முறைமைசொல்லித்
தொழுது வணங்கி நீகேளாய்
ஈச னுமையாள் தானொழிய
இல்லை தெய்வம் கண்டாயே
வாச மாகப் பலருடனே
மாறுட்டங்கள் பேசாதே
குறளி யாருடன் கூடாதே
கூடிப் பாவங்கள் செய்யாதே
குடிக்குள் பிழைபட நடவாதே
குலத்துக் கொவ்வாக் கன்னியற்குக்
கூலிச் சேவகஞ் செய்யாதே
கூச்சப் பட்டுத் திரியாதே
ஆணை மீறி நடவாதே
திருநா ளுள்ள நகரியிலே
செருப்புத் தொட்டு நடவாதே
ஒருநா ளும்பொய் சொல்லாதே.

* * * *

End :

ஓதுங் கூலி பிடியாதே
உபதேசத்தை மறவாதே
மாதாக் கூலி பிதாக்கூலி
மருத்துக் கூலி பிடியாதே
வாழ்வை நம்பி யிறுமாந்து
வார்த்தை யிரண்டு பேசாதே
மேழிச் செல்வந் தவிராதே
விடிந்தா லுறங்கச் செய்யாதே
வேதம் ஒருநாள் மறவாதே
வேசைய ராசை விரும்பாதே.

Colophon :

அவ்வையாரருளிச் செய்த நல்வழிப் போற்றிமாலை முற்றுப் பெற்றது.

No. 1975. NALVAḶI-P-PORRIMĀLAI

நல்வழிப் போற்றிமாலை

[161-F]

Size, 17¾″×1″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1974.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1974 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1976. NANNERI—[TEXT]

நன்னெறி—[மூலம்]

[229-E]

Size, 8½″×1″. Pages, 14. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a didactic work in 40 stanzas by Civa-p-pirakāca Munivar, (17th century).

Complete.

குறிப்பு : *இது 40 வெண்பாக்களையுடைய ஒரு நீதி நூல். இதன் ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். அச்சிடப்பெற்றுள்ளது. காப்புச் செய்யுள் அச்சுப் புத்தகத்திலுள்ளது*

இங்குக் காணப்படவில்லை பிரதியாக, இந்நூலாசிரியரியற்றிய திருக்கூவப் புராணத்திலுள்ள காப்புச்செய்யுள் காணப்படுகிறது. இந்தப் பிரதி முழுதுமுள்ளது. முதல் ஏடு ஒடிந்துள்ளது.

பூர்த்தி.

Beginning :

குவளைத் தந்தக் குளிர்விண் வளைத்துறக்
கவளத் தந்தக் கரண மிருத்திய
பவளத் தந்தப் படிவ நிகர்த்தொளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம்.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழுமோ
நாவிற் குதவு நயந்து.

* * * *

End :

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணிப்
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

No. 1977. NĪTI-CĀTTIRAM

[TEXT AND ANNOTATIONS]

நீதி சாத்திரம்—[மூலமும் உரையும்]

[382]

Size, 13″ × 1″. Pages, 100. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note : This is a didactic work in 93 stanzas in Viruttam metre with examples from Purāṇas for each teaching. The

name of the author is not known. The Mss. contains annotations for the stanzas also.

Complete.

குறிப்பு: இஃது ஒரு நீதிசாஸ்திர நூல். விருத்தப்பாக்களாலாகியது. இயற்றியவர் முதலிய குறிப்புக்கள் அறியக்கூடவில்லை. இது பல பழைய புராணக் கதைப்பகுதிகளை உவமானமாகக் கொண்டு தருமங்களை விளக்கிக் கூறுகின்றது. இப் பிரதி முற்றும் உள்ளது.

பூர்த்தி.

Beginning:

சுபமஸ்து

திருவுளம்.

பருதி மதியிலகு பார்மிசையோர்க் கெல்லாம்
தருமநெறி நீதிதனைச் சாற்றக்—கருதியிடுந்
துங்கவெழுத் தைந்துபொருள் சுந்தர பொற் செஞ்சடையின்
கங்கைசுதன் தந்திமுகன் காப்பு.

நன்ருக.

சீர்பெறுந் தருமஞ் செய்கை
தெரிந்ததின் வழியே சென்று
பார்பெறப் பு......... ண்ணில்
தனக்கது பலித்திடா......
ஏர்...... கரும மெல்லா
மியாவர்க்கு மாகாதென்று
தேர்வுற வடுத்த றத்தை
யொல்லையிற் செய்வதாமே.

எ-து. தர்மமானது எல்லாங் கேட்கக் கடவனுமாய் கேட்ட பொருளைப் புத்திபண்ண வல்லவனுமாய் இது தனக்காகாத காரியம் பிறருக்கு மாகாதென்று புத்திபண்ணிக் ... .தர்மங்களைப் பண்ணுவா னென்றவாறு(?).

பாட்டு 1

* * * *

End :

எடுத்திடும் விசைய னம்பு ஏகமா யெடுத்தே யொன்றைத்
தொடுத்திடிற் பத்துமாகில் விடுக்கில் தானூறுமாகி
லெடுத்தகை விட்டவாறே ஆயிரமாகி லேற்கில்
மடுத்திடுங் கொடி யாம்போல் மறைவல்லோர்க் கீயுந்தானம்.

ஏ-து. அர்ச்சுனன் கையம்பானது ஒன்றை யெடுத்துத் தொடுக்கும்போது பத்தாய் வளரும்; விடுக்கில் நூறுயிரமாகும்; ஏற்கிறபேர் கையில் கோடான கோடியாகும்போல உத்தமவானுக்குக் கொடுக்கிற தானம் அப்படிப்போல வர்த்திக்கு மென்றவாறு.

Colophon :

விளம்பி ௵ அற்பசி ௴ 4 ௨ குருவாரம் அமாவாசை சித்திரை நக்ஷத்திரம் இந்தச் சுபதினத்தில் நீதி சாத்திரம் எழுதி முடிந்தது. இந்த நீதி சாத்திரம் எழுதினது, புத்தேரித் தெரு வாத்தியார் ருத்திரகோடி பண்டாரங் கையெழுத்து.

No. 1978. NĪTI CĀTTIRAM

[TEXT AND ANNOTATIONS]

நீதி சாத்திரம்—[மூலமும் உரையும்]

[721]

Size, $13\frac{1}{2}'' \times 1''$. Pages, 12. Lines, 6 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is another didactic work. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு : இது, நீதி சம்பந்தமானது. இயற்றியவர் பெயர் முதலிய குறிப்புக்கள் தெரியவில்லை. உரையுடன் உள்ளது. 8 முதல் 92:பாடல்கள்வரை உள்ளது. நூல் முற்றுமில்லை. ஏடுகள் தலைப்பில் ஒடிந்து எழுத்துக்கள் மறைந்துபோயுள்ளன. சிதிலம். இப்பிரதி

மிகவும் பிழையுடன் கூடியது. இது முன் 1977-ஆம் பிரதியின் வேருனது.

அபூர்த்தி.

Beginning :

கங்குலே மதிவிளங்கும் கதித்திடும் பகல்கா லத்தில்
செங்கதிர் விளங்கு மன்றிச் சிறந்திடு மூலகமூன்றும்
பொங்கிய தரும வாஞய்ப் பொலிந்...... மென்று
வங்கிஷம் விளங்கும் நல்ல மகவினுற் ருனு மென்றே.

எ-து. ராத்திரி காலமானது சந்திர பகவானுலே விளங்கும் பகல் கா.........பகவானுலே விளங்கும். சொர்க்க மத்திய பாதாள மூன்று லோகமும் தர்மவானுலே விளங்கும். வங்கிஷமானது நல்ல சற்ப...............மென்றவாறு. 8

* * * *

End :

மாலையில் வெய்யில் காய்ந்து ....துடனேம் தூபம்
ம.. ......வே படவும் செய்து தனக்கிளை யான பின்னைக்
கோலமாய்க் கூடி ராவில் குலவிய குளிர்ச்சி யாயும்
பாலவாத் துண்ணி லாயுண் வ...திக்கும் பொருந்தா னென்று

எ-து. மாலே வெய்யில் காயுறதும் ஓமத்தினிடைப் புகைப்படுகுறது மதன் க... ..ளைய ஸ்ரீகளுடனே அனுபோகிக்குறதும் சுத்த சலம் சாப்புடுகுறதும் ராத்திரி காலந்தன்னிலே பால் வாத்துக் கொள்ளுகிறதும் யிதுவெல்லாம் ஆயிசு வர்த்தி.........

No. 1979. NITI CASTRAM (SANSKRIT)—[TEXT]

நீதி சாஸ்திரம் வடமொழி—[மூலம்]

[1036]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 50. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is an Anthology of Moral sayings from various sources as Manunīti, Bhāratam etc. for learning by the young. The Mss. is in Sanskrit.

Incomplete.

குறிப்பு: மநுநீதி, பாரதம் போன்ற மூல நூல்களினின்று திரட்டி எடுக்கப்பெற்ற நீதிமொழிகளைக் கொண்ட வடமொழித் திரட்டு நூல்.

பூர்த்தி.

No. 1980. NĪTI CĀṞAM

[TEXT AND ANNOTATIONS]

நீதி சாரம்—[மூலமும் உரையும்]

[968]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{6}''$. Pages, 49. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a didactic work in Sanskrit comprising selections of moral sayings from different sources. The Mss. contains the Sanskrit Text and their annotations in Tamil. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு. இது நீதிகளைச் சுருக்கிக் கூறும் நூல். மூலம் வடமொழியாயும் உரை தமிழாயும் உள்ளது. ஏனைய விவரங்கள் ஒன்றும் அறிதற் கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. ஓலைகள் பெரும்பாலும் ஓரங்களில் ஒடிந்து போயுள்ளன. இடையில் சில ஏடுகள் இல்லை என்று தெரிகிறது. பிழைகளுண்டு.

அபூர்த்தி.

Beginning:

ஹரி ஓம்:

நீதி சாரங்கள்

மூலம் (கஜாநநம் பூதகணாதி சேவிதம்...... என்று தொடங்கும் வடமொழி சுலோகம்).

எ - து. ஆனை முகத்தையுடையவருமாய் பூதகணங்களினால்.........க்கப்பட்டிரு ....வருமாய் விளங்கனி நாவல்கனி இதுகளுடைய சாரத்தை ஹஞ்ஜி......... வருமாய் உமையவளுடைய திருவடித் தாமரைகளை நமஸ்கரிக்கிறேனென்றவாறு.

*   *   *   *

End :

சுலோகம் வடமொழியில்

நல்ல லக்ஷணமுள்ள..............கிட..........திலேயும் பசுவினிடத்திலேயும் சூ......... தத்துவமுள்ளவனிடத்திலேயும்............ வந்தவிடத்திலேயும் லக்ஷணமுள்ள... ..... ஹத்திலேயு......... ... னுடைய மார்பிலேயு......... பண்ணுவானென்றவாறு. (புள்ளி வைக்கப்பட்ட விடங்களிலுள்ள பதங்கள் வடமொழியிலுள்ளவை.

No. 1981. NĪTI-NEṞI VIḶAKKAM—[TEXT]

நீதிநெறி விளக்கம்—[மூலம்]

[587-B]

Size, $16\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 36. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This contains the text alone of the work to be described in No. 1982.

Complete.

குறிப்பு : இது பின்வரும் எண் 1982 இல் விவரிக்கப்பெறும் நூலின் மூலம் மட்டும் கொண்டது.

பூர்த்தி.

No. 1982. NĪTI-NEṞĪ-VIḶAKKAM

[TEXT AND ANNOTATIONS]

நீதிநெறி விளக்கம்—[மூலமும் உரையும்]

[718]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 106. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a didactic work by Sri-La-Sri Kumara-kuru-parar. The Mss. contains the text and its annotations.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1981 சுவடிப் பிரதி போன்றது. ஆயினும் உரையுடன் கூடியுள்ளது. இதன் முதலேட்டின் தலைப்பில் 'தியாகராச செட்டியாரவர்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரதி முற்றுமுள்ளது. இடையில் ஒரு பாடல் மட்டுமில்லை. ஏடுகள் செல்லரிக்கப்பட்டுத் தொளை விழுந்துள்ளன.*

பூர்த்தி.

Beginning:

திருச்சிற்றம்பலம்

நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்

இந்நூலென்ன பெயர்த்தோ வெனின் நீதிநெறி விளக்கம் என்னும் பெயர்த்து. இப்பெயர் தரற்குக் காரணம் யாதெனில் அறம் பொருள் இன்பம் வீடென்னு முறுதிப் பொருள் நான்கினையு மடைதற்குரிய மாந்தர்க் கவற்றை யடைதற்கா நன்னெறியை விளக்கலினென வுணர்க. அவற்று ளறம் பொருளின்ப மென்னும் மூன்று மில்லறத்தினும் வீடு துறவறத்தினு மடங்கு மாகலா னிவ்வா சிரிய ரில்லறப்பால், துறவறப்பாலென்னு மிருபாலாக வகுத்துக் கூறுவான் றொடங்கி யிந்நூலினிது முடிதற் பொருட்டு முதற் கடவுள் வணக்கம் கூறுகின்றார்.

திருச்சிற்றம்பலம்

நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

(இ - ள்.) புனற்கட்டோன்றுங் குமிழியே போலுமிளமை யதன் கட்டோன்றி மறித்தெழுந்து வருமிக்கவலையே போலுஞ் செல்வ மதன்கட் டெட்டு மெழுத்தே போலும் யாக்கையுமா மிவ்வாறிள மையுஞ் செல்வமும் யாக்கையு நிலையாவாய் நீங்கு மென்பவற்றை யுணர்ந்தநம் மினத்தராகிய நீவிரே யாது துணிவு கொண்டெமது கடவுள் வாழும் பொன்னம்பலத்தைத் துதித்தலுஞ் செய்யாது நாட் கழிக்கின்றீர்—எ - று.............................

* * * *

End :

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருந்திப்—பற்றுவதே
பற்றிப் பணியற நின்றொன் றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றோர்.

(இ - ள்) கற்கவேண்டு நூல்களைக் கற்றதனுண்மைப் பொருளை யுணர்ந்துணர்ந்த வழி யடங்கித் தீங்கினை யகன்று நன்கினைச் செய்து கிடைத்தன கொண்டு மநமகிழ்ந்து பற்ற வேண்டுவன வற்றையே பற்றி யாதொரு தொழிலும் பற்றாது நின்று முத்தி யொன்றனையுமே நாடி நிற்பாரே நீண்ட துறவினெறிச் சென்றவ ராவார் எ - று.

கற்கவேண்டு நூல்கள் ஞாநநூல்கள். அடங்கல் செருக்கின்றி யமைதல். தீங்கினை யகறல் ஐம்பொறி வழிச்செல்லு மவாவினை யறுத்தல். நன்...........யதல் ஞாநநூலைக் கேட்டல் சிந்தித்தல் யோகம் பயிறல் முதலியன. பெற்றது கொண்டு மநந்திருத்தல் உடனிற்றற் பொருட்டுச் சுவைவெ .....வருந்தாது கிடைத்த வுண வினைப் புசித்து மகிழ்தல். பற்ற வேண்டுவனவற்றைப் பற்றல் வீட்டு நெறியையே பற்றல். "பற்றுக பற்றற்றான் பற்றினை யப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்பதனானு முணர்க.

No. 1983. MUTUMOḶI MĒL VAIPPU—[TEXT]

முதுமொழிமேல் வைப்பு—[மூலம்]

[587]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{8}{4}''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a work in 196 stanzas based on an equal number of Tiru-k-kuraḷs. This has been printed.

Incomplete.

குறிப்பு: *இது நீதி நூலின் பாற்படும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் வீட்டின்பால் என நான்கு பகுதிகளை யுடையது. இயற்றியருளியவர்* வெள்ளியம்பலவாண முனிவர். *முதல் மூன்று பாலிலுமுள்ள வெண்பாக்களின் பின்னிரண்டடியில் திருக்குறள்களையும், வீட்டின்பாலிலுள்ள வெண்பாக்களில் உமாபதி சிவாசாரியார் செய்த திருவருட்பயன் செய்யுட்களையு மமைத்துக் கூறப்பெற்றுள்ளன. நூல் முழுதும் அச்சாகியுள்ளது. இப் பிரதியில் முதலில் சில ஏடுகளில்லை. ஆதலாலிப் பிரதி பூர்த்தி யாயில்லை. சில ஏடுகள் ஓரம் ஒடிந்து போயுள்ளன. சிதிலம்.*

அபூர்த்தி.

Beginning:

செ...............

செய்ந்நன்றி யறிதல்.

எள்ளளவு காணு தெலிசெய்த நன்றிக்கா
வள்ள லுலகாள வைத்தருளு—நல்ல
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

* * * *

End:

அடைந்தோர் தன்மை.

சிதம்பரஞ் சிந்தித்தார் சிவலோக மன்றி
விதந்தறியா ரொன்றும் விரும்பிப் பயந்தவிர
எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா லறியா ரற.

Colophon :

வீட்டின்பால் முற்றும்.

பதிகதையாறு வொழி வெண்பாட்டிரு நூருக
முதுமொழி மேல்வைப்பு மொழிந்தான்—மதுமலர்க்கா
வும்ப ருலகளவு மோங்குகம......வெள்ளி
யம்பல வாணமுனி வன்.

முதுமொழிமேல் வைப்பு முற்றும்.

அறத்துப்பால்	—	63
பொருட்பால்	—	96
காமத்துப்பால்	—	27
வீட்டின்பால்	—	10
ஆக வெண்பா		196

ஞானசம்பந்த குருபாதம் நீடூழி வாழ்க.

சிவஞான சம்பந்தன்.

No. 1984. MŪTURAI [VĀKKUṆṬĀM]—[TEXT]

மூதுரை [வாக்குண்டாம்]—[மூலம்]

[587-D]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 5. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a didactic work attributed to Auvaiyar.

Complete.

குறிப்பு : இது நீதிநூலாகும். இது பிற்காலத்தில் 'வாக்குண்டாம்' என்னும் பெயரால் வழங்கலாயிற்று. இதனை யியற்றியவர் ஔவையார் என்பர். பெரிய நூல்களின் சாரமாக வுள்ள நீதிகளும், கருத்துக்களும் இந்நூலிற் தெளிவுற அமைந்து விளங்குகின்றன. இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. அச்சான புத்தகத்திலும் இதனிலும் பாடல் முறையும் சில பாடல்களும் மாறியுள்ளன. கடைசிப் பாடல் நல்வழிப் பாடலாக அமைந்துள்ளது.

பூர்த்தி.

Beginning:

மூதுரை

ஆதிரை யானை அடிபணிந் தேத்த
மூதிரை யானது முப்பதும் வருமே.

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

*　　*　　*　　*

End:

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்கைப் படானாகிற்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகி விடும். 30

No. 1985. VIVĒKA CINTĀMAṆI—[TEXT]

விவேக சிந்தாமணி—[மூலம்]

[738]

Size, 12½″ × 1″. Pages, 33. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is an Anthology of easy stanzas on *M*orals and good conduct. The compiler's name and the sources are not known.

Complete.

குறிப்பு : இது, பல புலவர்களால் பாடப் பெற்றது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 101 பாடல்களுள்ளன. சில பாட பேதங்களும், புதிய பாடல்களும் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning :

வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி லுடங்காது—பூக்கொண்டு
துப்பா(ர்) திருமேனி தும்பிக்கை யான்பாதந்
தப்பாமல் சார்வார் தமக்கு.

* * * *

மங்குல்மாபதி னுயிர யோசனை மயில்கண்டு நடமாடு(ம்)
தங்கு பானுநா றுயிர யோசனை தாமரை முகிழ் விள்ளும்
திங்க ளிரண்டுநூ றுயிர யோசனை செழித்திடு மரக்காம்பல்
எங்கை யாகிலு மன்பரா யிருப்பவர் இருதயம் அகலாரே. 1

* * * *

End :

யோகசந் நியாசி யார்க்கு மொன்றுதல் விரதை யார்க்கும்
காகமாம் பிரம்மச் சாரி ....டு துர்கத்துக்கும்
ஏகமாம் புரத்தில் வாழு மேந்திழை யாட்டு மன்று
போகமே யதிக மல்லாற் புத்திவே றில்லை தானே.

No. 1986. VIVEKA CINTĀMANI—[TEXT]

விவேக சிந்தாமணி—[மூலம்]

[809-D]

Size, 10″ × 1¼″. Pages, 30. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note : Same as No. 1985. This Mss. contains only 70 stanzas.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1985 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் அச்சுப் பிரதியில் காணப்படாத பாடல்கள் பல காணப் படுகின்றன.

அபூர்த்தி.

No. 1987. VIVĒKA CINTĀMAṆI

விவேக சிந்தாமணி

[1220]

Size, 9″×1″. Pages, 154. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1985.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1985 பிரதி போன்றது. இதற்குச் சிந்தாமணி என்று மட்டில் பெயர் காணப்படுகிறது. பாடல்கள் முறை பிறழ்ந்துள்ளன. இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. பிழைகளோடு கூடியது. 134 பாடல்களுள்ளன.*

பூர்த்தி.

No. 1988. VIVĒKA-CINTĀMAṆI—[TEXT]

விவேக சிந்தாமணி—[மூலம்]

[402-A]

Size, 15″×1⅛″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1985 but contains only 15 stanzas.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1985 பிரதி போன்றது. ஆயினும் பாடல்கள் 15 தாம் இதில் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1989. VEṞṞIVĒṞKAI—[TEXT]

வெற்றி வேற்கை—[மூலம்]

[161-H]

Size, 16½"×1". Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work by Ativīra-Rāma-Pāṇṭiyar is also called Naṟuntokai and contains 126 pithy didactic sayings.

Complete.

குறிப்பு: *இது, அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது. இதற்கு 'நறுந்தொகை' யென்றும் பெயருண்டு. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாகவும் அதற்கு மேலும் வேறுன பாடல்களும் உள்ளன. ஏடு ஒடிந்துள்ளன.*

பூர்த்தி.

Beginning:

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்
கல்விக் கழகு கசடற மொழிதல்.

* * * *

End:

திருமகள் மருவிள சேறையர் கோமான்
மருவலர் கேசரி மணிமுடி வேந்தன்
தென்னவன் மணிமுடி திகழ்திரு மேனியன்
......ரன மேலே யினைவனை யெறிந்தோன்
......குலபதி தரணி யாண்டவன்
......பாண்டியன் செந்தமிழ்க் காரிகை
......யதுகை நூற் றிருபத் தாறும்
......ப் பகர்வோர் புண்ணிய ராவர்.

No. 1990. PALA PĀṬALKAL—[TEXT]

பல பாடல்கள்—[மூலம்]

[140]

Size, $13\frac{3}{4}'' \times 1''$. Pages, 440. Lines, 6 on a page. Condition, Good. Appearance, Old.

Note: This Mss. contains 20 stanzas selected—perhaps for personal study from different sources.

Incomplete.

குறிப்பு: இது, ஒரு கைக்குறிப்புப் பிரதி. இந்தப் பிரதியில் இராமாயணம் முதல் பல தனிப் பாடல்கள் சிற்சிலவே யுள்ளன. 20-க்கு மேற்பட்டதான பாகுபாடுடைய பாடல்கள் இதன் கணுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

பத்து நாலென வடுக்கிய வுலகங்கள் பலவின்
மெத்தி யோனிக ளேறினும் வெளியிட மிருமால்
முத்த ரானவ ரிதனிலே மொழிகுவ தல்லால்
இத்தரா தலத் தியம்புதற் குரியவர் யாரே.

* * * *

End:

கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
 கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின்
 மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்
 புகழுமாந் துணையு மாகு
மிப்பொருள் எய்தி நின்றீ
 ரிரங்குவ தென்ன வென்றான்.

Colophon:

1. இராமாயணம்
2. கல்லாடம்
3. குறவஞ்சி
4. தாயுமானவர் பாடல்

5. ஆனந்தநாயகி துதி
6. சிதம்பரபுராணம்
7. குமேரசசதகம்
8. பரங்குன்ற பெருமாள் துதி
9. சுப்பிரமணியர் துதி
10. திருவேங்கடசதகம்
11. சீட்டுக்கவிகள்
12. விநாயகர் துதி
13. விடுகதைகள்
14. வேலாயுதர் துதி
15. முத்தப்ப ரகுராமன் பேரின் மடக்குப் படலம்
16. பல தனிப் பாடல்கள்

No. 1991. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[152]

Size, 15″ × 1″. Pages, 204. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is also a collection of Thani-p-pāṭals.

Complete.

குறிப்பு: இதில் பல புலவர்களாற் பாடப்பெற்ற தனிக் கவிகளும் துதிகளும் சிலேடைகளும் உள்ளன. அச்சிடப்பெறுத பல பாடல்களும் கீர்த்தனங்களு முள்ளன.

பூர்த்தி.

Beginning:

குடைச்சிவந் தான்முல்லைப் பல்ல வார்மணிச்சிற்
றிடைச்சிவந் தாளென்ன கொண்டுவந் தாளெனி லயனுயிரை
யடைச்சிவந் தாள்தனச் செப்புக்குள் ளேயது வன்றியிலே
விடைச்சிவந் தானறி வான்கண்க ளாற்பட்ட வில்லங்களே.

* * * *

மாலோதி நித்தந் தமியேன் வருந்தி வருடப் பெற்ற
காலோ நடந்தன கண்ணே திரும்பின கற்றவர்க்குப்
பூலோக முந்தரு மாவலி வாணன் பொருப்பிடத்தே
மேலோ ரிரங்குவர் மோரெந் நாளும் விரோதிப்பரே.

வீணே விரகங்கொண் டேனேயிந் நேரம் விரும்பிவரக்
காணேன் மதனம்பு பாயுதை யோவொரு வாய்கவளம்
ஊணே சிறுத்து முடலே மெலிந்திருந்த வொட்டுத்திண்ணைத்
தூணே யுனக்குரைத் தேனே யென்னெஞ்சிற் றுயரங்களே.

*　　*　　*　　*

தாமரைக்கும் கண்ணுடிக்கும் சிலேடை

பாவிரதஞ் சேருகையாற் பாணியிலே யுற்றிடலால்
மாவிலையை சேருகின்ற மாட்சியால்—பூவிலுயர்
சேமமிகுங் குன்றைநகர்ச் சேந்தன்வரை தன்னில்மணத்
தாமரையே தர்ப்பணம் தாம்.

*　　*　　*　　*

பொருளைப் பற்றி

என்பொருள் என் பொருளென்று சீவன்விடு
　　மனமேயொன் றியம்பக் கேளாய்
உன்பொருளா னுலதன்மே லுன்னுமம்
　　வரைந்துளதோ வுன்றனேடு
முன்பிறந்து வளர்ந்ததோ வினியுன்னைவிட்
　　டகலாதோ முதிர்ந்து நீதான்
பின்பிறக்கும் போததுவுங் கூடப்பிறந்
　　திடுங்கொல்லோ பேசுவாயே.

*　　*　　*　　*

காளமேகம்

சோற்றை யரிசிலைமேற் றாவி வழுதலங்காய்க்
கீற்றை யதன்மேற் கிடத்தியே—ஆற்றியுண்ணு
அப்பச்சி யென்பா ளருமையரா சேயென்பாள்
குப்பச்சி யாயி குணம்.

*　　*　　*　　*

இறைக்கச் சுரக்கு மணற்கேணி
　　ஈயச் சுரக்கும் பெருஞ்செல்வம்
அறுக்கச் சுரக்கு மிழும்பானை
　　யணுகச் சுரக்குங் காமப்பால்

கறக்கச் சுரக்கு மாவின்பால்
கற்கச் சுரக்கு மெய்ஞ்ஞானம்
இறக்கச் சுரக்குந் தீபவொளி
சிவத்துட் சுரக்கும் பரவெளியே.

No. 1992. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[153-A]

Size, 18″×1″. Pages, 160. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is also a collection of Thani-p-pāṭals,

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1988 பிரதி போன்றது. இதில் கனகநற்சபை வாசனே என்று முடியும் 9 பாடல்களும், மீனாட்சி சுந்தர நாவலரைப்பற்றிய பாடல்களும், அஷ்டநாக பந்தம், கமல பந்தம், இரத பந்தம், இடமணித் தென்றல், நிலவு வெளியிடப்பட வருந்தல், தலைவன் கருத்தைத் தலைவிக் குரைத்தல் வினவுத்தரம், திருவிடைக்கழி முருகேசர் நோட்டு, திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் பேரில் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் செய்த நோட்டு முதலியவைகளுள்ளன. இன்னும் தலைப்பில்லாத பல கவிகளிருக்கின்றன.

பூர்த்தி.

No. 1993. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[161-S]

Size, 16″×1″. Page, 14. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old,

Note : This is another collection of Thani-p-pāṭals.

Incomplete.

குறிப்பு : இதில் சிற்சில பாடல்களின் குறிப்புக்கள் காணப்படு கின்றன. முறைமையாகவும் தெளிவாகவும் இல்லை.

பூர்த்தி.

Beginning :

> எழுதரிது முன்ன மெழுதிய தொன்றைப்
> பழுதறவே வாசிக் கரிதுபண்பாய்—முழுதுமதை
> கற்கரிது நற்பொருளைக் காணரிது கற்றபடி
> நிற்கரிது நின்ற நிலை.

* * * *

End :

> மின்னார் தடவயல்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகாற்
> சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
> கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
> வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

No. 1994 THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[242-A]

Size, 10″×1″. Pages, 16. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is yet another collection of Thani-p-pāṭals.

Complete.

குறிப்பு : கோவை போன்ற சில பாடல்கள் இதிற் காணப்படு கின்றன. அவை தெளிவுறவும் இருக்கவில்லை.

பூர்த்தி.

Beginning :

மலரைப் பொருவடி மானுந் தமியள்மன் னறெருவன்
பலரைப் பொருதென் றிழிந்துகின் ருள்பள்ளி காமனெய்த
வலரைப் பொருதென் றழல்விழித் தோனம்ப லம்வணங்காக்
கலரைப் பொருச்சிறி யாளென்னை கொல்லோ கருதியதே.

* * * *

End :

தேவியங் கண்டிகழ் மேனியன் சிற்றம் பலத்தெழுது
மோவியங் கண்டன்ன வொண்ணுத லாள்தனக் கோகை
[யுய்ப்பான்
மேவியங் கண்டனை யோவந் தனனென வெய்துயிர்த்துக்
காவியங் கண்கழு நீர்செவ்வி வவ்வுதல் காரணமே.

No. 1995. PALAVAKAI-P-PĀTALKAL—[TEXT]

பலவகைப் பாடல்கள்—[மூலம்]

[269]

Size, 16½″ × 1″. Pages, 102. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains a few stanzas selected from various sources.

Incomplete.

குறிப்பு: இது, பலவகையாகவுள்ள நூல்களிலிருந்து பிரதி செய்யப்பட்டுள்ள பிரதி. சதகம், பிள்ளைத் தமிழ் முதலியவற்றி லுள்ள பாடல்களும் இந்தப் பிரதியிலுள்ளன. குடபினியார் சட்டம், பலதுறைக் காரிகைகள் இவையும் இப்பிரதிக்கண் ணுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

மன்னுமா மகுடமுஞ் சிந்தூரப் பொட்டழகும்
வயிடூரி யச்சுட்டியும்
வாகுசெறி பொற்பட்ட முந்தங்க ஒட்டியாணமும்
மாணிக்க மணிமாலையும்
பொன்னுத்தி ராட்சமும் வெண்முத்து மாலையும்
பூஷணங் கண்டசரமும்
பொட்டொடு பதக்கமும் நட்சத்திர மாலையும்
பூமருவு செங்கடம்பும்
கன்னிவயி டூரிய செஞ்......... கனக
துண்டையும் வேலுமயிலும்
கனவள்ளி தெய்வானை பாதார விந்தமுங்
கண்காண......
......ணமாய் நிற்கின்ற பரமசிவன் மடிமீதில்
துள்ளி விளையாடுகின்றதுங்
குமார் மதகட ....யானைக்கிளையசிவ
சுப்பிரமணி யக்கடவுளே.

அடியிணையுங் கண்மூன்று மாலமுண்ட கந்தரமும்
சடைமதியு மான்மழுவுந் தரித்த புலியுடையுங்
கொடியொருபால் வைத்த மணக் கோலமுநான் காண்பேனே
வடிதமிழ்தேர் கன்னிவனம் வாழுஞ் சிவக்கொழுந்தே.

*　　*　　*　　*

End :

பூநக்கி யாறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநிலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்.

No. 1996. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[276]

Size, 17″×1″. Pages, 74. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is another collection of Thani-p-pāṭals.

Complete.

Beginning:

திருப்பதி வேங்கடசலபதி பேரில் பேதவிலாசம்
துறவோர்க்கும் மலைக்கும் சிலேடை.

நடக்குங் கலைகள் தாமறியு
நன்னீ ரோடு ......தருமுந்
நாகங் களியுஞ் சுகங்கூட்டி—
நன்கா மறையு மேற்செல்லும்
அடக்கந் துதிக்கை மாவிலங்கு
மணிமாதவத்தோ னெனத் தோன்றி
யரவிந்த கமலக் கண்ணனையே
யகலா வகவேங்கட மலைவாய்
கடக்குஞ் சரமே நிருதர் பகைக்
குஞ்சரமே விடுத் தோனே
காணீர் சுகமேயென்ற கிள்ளை
காணீர் சுகமே தாரீரோ
தலைக்குன் றமருங் கந்தரமே
சாற்றுங் களனே கந்தரமே
தருவாய் வளருங் கானகமே
தளர்ந்து தேய்ந்த கானகமே.

No. 1997. CILLARAI-P-PATTU—[SELECTIONS]

சில்லறைப் பாட்டு—[திரட்டு]

[323]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 6 stray stanzas and riddles.

Incomplete.

குறிப்பு : இது, சிறுவர்கள் படிக்க எழுதி வைத்துள்ள சில செய்யுள்கள். ஆறு பாடல்கள் இந்தப் பிரதியில் உள்ளன. எழுத்துப் பிழைகள் மிகுதியாக வுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

ஒருநான்கு மிரரையு மொன்றே கேளாய்
உண்மையா யையரையு மரையுங் கேட்டேன்
இருநான்கு மிரண்டுமொரு இரண்டுஞ் சொன்னோன்
இம்மொழிக்குப் பதிலாமை யீந்தா யானால்
பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே
பின்னையோர் மொழியுரைக்க வேண்டா மிப்போ
சருநான்கும் பத்துமொரு பதினைந்தாலே
சஇக்கமுடி யாதிலிச் சொல்லாய் மானே.

*　　*　　*　　*

End :

பல்லுயிர்க ளாய்மனுப் பிறந்து மென்று பாரிலே
சொல்லும் வேத மோது கின்ற துஷ்டர்கா ளதிலிர்
வல்ல தோர்சுரை வித்திட மாறி...... லாகுமோ
இல்லையே யிந்தப பிலிப்பிறப்பு இல்லையே.

No. 1998. PALAVAKAI-P-PĀṬALKAL

பலவகைப் பாடல்கள்

[343]

Size, $17\frac{1}{2}'' \times 1''$. Pages, 240. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. contains several Tamil stray stanzas and Kirtanas—the sources of which are not known.

Complete.

குறிப்பு: இது, சில தனிப் பாடல்களும் கீர்த்தனங்களும் நிரம்பியுள்ள பிரதி. அச்சிடப் பெற்றதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் பல கீர்த்தனங்கள் உள்ளன.

பூர்த்தி.

Beginning :

வருவோரைக் கண்டு தடுமாறி யுள்ள மலைந்து நித்தம்
வெருவூரைப் பாடிற் பலனிலை காண்வைய மேற்புகழை
மருவூர்கங் காகுலர் வாழ்கின்ற வூர்மணி மாளிகைசூழ்
திருவூரைப் பாடிற் புலவீர் மிடிப்பிணி தீர்ந்திடுமே.

* * * *

End :

இன்னந் தயவுவர வில்லையோ நீதா
னென்மேற் கருணைபுரிந் திலையோ (இன்)
அன்னமே குன்றையில்வாழ் மாயே சுவர
ரகத்துக் கிசைபெண்ணி நல்லா ளேயென் ருயே யுனக்
(இன்னந்)

—அமிர்தகவியன் சொன்னது

No. 1999 THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[355]

Size, 15″ × 1½″. Pages, 26. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a collection of Thani-p-pāṭals.

Complete.

குறிப்பு இதில் பிரபுக்கள் மீது பாடிய பல கவிதைகள் உள்ளன. ஏடுகள் ஒடிந்துள்ளமையால் படிக்கக் கூடவில்லை. இதன் இறுதியில் ஸ்ரீஐயரவர்களைப் பற்றிய பாடலொன்றுங் காணப்படுகின்றது.

பூர்த்தி.

Beginning:

காலோட்ட மேலாரும் கண்டவர்தம் பால்விடுத்தால்
வாலாட்டங் கொண்டு வருமேபார்—மேலேகண்
ணேறுபட்ட மாமதன்பே ரென்றகதை கூறுபுகழ்
நீறுதுரை ராமசுவாமி.

* * * *

End:

முக்குல மேத்து முதற்குலமாகி
மொழியுநான் மறைப்படி முத்தி
மிக்குல விடச்செய் வேங்கடசுப்ப
விப்பிர குலசிரோ மணிசேய்
எக்குவ லயத்துஞ் சீர்த்திசால்சாமி
நாதசற் குருவிலக் கணத்தால்
புக்கவென் னுளத்திற் புகட்டினதற்றோர்
புட்களே புரிந்ததொப்பாமே.

No. 2000. THANI-P-PĀṬAL THIRATTU
தனிப்பாடல் திரட்டு

356]

Size, 14″ × 1½″. Pages, 54. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another collection of Thani-p-pāṭals.

Complete.

குறிப்பு: இது, பல பாடல்கள் நிரம்பிய தொகுதியாகக் காணப்படுகிறது. தொடக்கத்தில் பெரிய புராணத்திற்கும் திருக்குறளுக்கும ஒற்றுமை நயங்காட்டிச் சில செய்யுட்களும், பின்னர் சில நாயன்மார்கட்குச் சில குறள் பொருத்தங்களும் கூறப்பெற்றுள்ளன. வள்ளுவர் உடன்பிறந்தார் பாடிய கவிகளுமுள்ளன. அம்பிகை மீதும், மதுரை சொக்கநாதர் பேரிலும் சில செய்யுட்கள் உள்ளன. இறுதியாக முத்துராகுநாத சேதுபதி மீது பல பாடல்களுமுள்ளன.

பூர்த்தி.

Beginning :

பெரிய புராணத்திற்கும் தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனார் குறளுக்குஞ் சரிக்கட்டின உண்மை.

உலக முழுது முணர்தற் கரிய
வுலகி லொளியுடைய வண்ணல்—நிலவும்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. 1

* * * *

பூமா துறைந்து பொலியுந் திருவாரூர்
கோமான் பெருமையெவர் கூறுவார்—சேம
விறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டா செயின். 4

பூதமோ ரைந்துங் கலங்கிடினும் புற்றிடங்கொள்
நாதர் கழல்மறவா நாயன்மார்—ஏதமும்
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். 5

* * * *

திருநீலகண்ட நாயனார்—

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 70

சடையனார் நாயனார்—

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 71

சில தனிப் பாடல்

வேல்கொடுத் தாய்திருச் செந்தூர்க் கம்பியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயன்னை யேயெனக் கேதுங் கொடுத்திலையே.

* * * *

பொடிபட்ட பிட்டுக்கு மண்சுமந்து பின்பொற் பிரம்பா
லடிபட் டழுதலுமல் லால்வேட னறுசுதமாங்
கடிபட்ட மான்கறி யெண்ணுமற் றின்னுங் கருத்துனக்குப்
பிடிபட்ட தெப்படிச் சொக்கே கருணைப் பெருவெள்ளமே.

அகப் பொருள் துறைப் பாட்டு

ஒருகோட்டி னிற்கு மிருகனி போல வுயர்ந்த கொங்கை
யிருகோட் டிருவரு மிங்கிருந் தார்முத் தெடுத்து மள்ளர்
குருகோட்டுந் தண்வயல் ஆரூர் தியாகர் குளிர்சிலம்பிற்
றருகோட்டிங் கார்வமெல் லாமிவர் பாற்சென்று சாற்றுதுமே.

(அவ்வகை வினுதல்)

தலைவந்த பங்கயத் தாள்படத் தன்பின் றனிநடந்து
சிலைவந்த முத்து ரகுநாதன் விஞ்சையிற் சிலம்பினின்மேல்
முலைவந்த மாத......முன்றுகொம்பின்
கலைவந்த தோழுங்கள் வாய்வந்த வொன்றைக் கழறுமின்றே.

No. 2001. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[365]

Size, $15\frac{1}{2}'' \times \frac{3}{4}''$. Pages, 96. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is another collection of Thani-p-pāṭals.

Complete.

குறிப்பு: இதில் தொண்டைமான், திருமலை ராசன் பேரில், பல புலவர்கள் பாடிய தனிக்கவிகளும், துதிகவிகளுமுள்ளன. பிரதி தெளிவாகவுள்ளது.

பூர்த்தி.

Beginning :

என்னைப்போ லாயிரம்பே ருன்கீர்த்தி
சொல்லவல்லா ரெங்கு முண்டு
உன்னைப்போ லருமையிட்டு எனையழைக்குந்
துரைகளையா னுலகிற் காணேன்
பொன்னைப்போ லக்கீர்த்தி தா.........
னச்செய்யும் பூபா ......ன்றன்
றன்னைப்போ லவதரித்த திருமலை
ராயர் கொடி தளர்த்தினனே.

* * * *

கேசவா வென்று கிலேசிப்பாள் சந்தனத்தைப்
பூசவா வென்று புலம்புவாள்—நேச
அரிகரி யென்பாள்மார னம்புபட்ட புண்ணைப்
பரிகரியென் பாள்தாயைப் பார்த்து.

* * * *

சமுக விருத்தம்

சீர்கொண்ட தென்கயிலை ராசராசேசுவரி செயந்தர
வளர்ந்த சமுகம்
தெட்சண மூர்த்தியிரு பரமபா தத்தியான
சேவைபெற மீறு சமுகம்
ஊர்கொண்ட குமரகுரு பரமுருக தெண்டா
யுதத்துறுதி விளங்கு சமுகம்
உயர்விசைய லட்சுமி சௌபாக்கிய லட்சுமி
யுயர்ந்தர சிருந்த சமுகம்
தார்கொண்ட கற்பகப் பரிமள சுகந்தவா
சனைகள்யோ சனைசெய் சமுகம்
தருராச பாதர்துரை ரெகுநாத நீதத்துரை
தனதுகொலு வளரு சமுகம்
தூர்கொண்ட யிந்திரகுல ராசர்பதி னெண்மர்புகல்
துதிநிதி மிகுந்த சமுகம்
துரைராச விசையதிரு மலைராய பாதருத்
தொண்டைமான் துரைச முகமே.

* * * *

பெரியநாயகி அம்மன் பேரில் கலித்துறை

விண்ணே முதற்பஞ்ச பூதமும் வேதத்தின் மெய்ப்பொருளும்
எண்ணே முதலெழுத் தாதியுக மூவர்க் கிடமு மருட்
கண்ணே புரிகண் காட்சியு நீயக் கவுரியன் சொல்
பெண்ணே யுனையன்றி யுண்டோ கபிலைப் பெரியவளே.

No. 2002. TAṈI-K-KAVIKAḶ—[TEXT]

தனிக்கவிகள்—[மூலம்]

[386]

Size, $13\frac{7}{8}'' \times 1''$. Pages, 44. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains occasional compositions by several poets.

Complete.

குறிப்பு: இதில் தனித்தனிப் புலவர்களால் பாடப்பட்ட பல செய்யுட்கள் வந்துள்ளன. அவை பலவிதமான பொருள்களடங்கியவை. இதில் ரங்கநாதன் பாடிய விருத்தம் சீட்டுக்கவி முதலியனவும், கம்பன், ஒட்டக்கூத்தன், காளமேகம், குமணன், அந்தகக்கவிவீரராகவர், படிக்காசர், சம்பந்தர், திருமங்கை மன்னன் முதலியோருடைய பாடல்களுமுள்ளன. பிழைகள மிகுதியாயுள்ளன.

அபூர்த்தி

Beginning:

ரங்கநாதன்

அந்தமாம் புவியிலொரு மரத்தின் பேரும்
அலைகடலில் வாழுமொரு சீவன் பேரும்
விந்தைநெறிப் பட்டணப்பேர் வெகுகாலம் பேர்
விளங்குமொரு பிள்ளைப்பேர் மெல்லியாள் பேர்

சந்ததமும் இவ்வகைதன் னுறுங் கூட்டித்
தமிழினல் நடுவெழுத்தா ராய்ந்து பார்த்தால்
சுந்தரஞ்சேர் வைகுந்தந் தன்னில் வாழுந்
துய்யரங்க நாதரென்றுஞ் செப்ப லாமே.

* * * *

End :

காட்டுப் புளிக்குப் புளிப்பில்லை காடி கடைந்தால் வெண்ணை
காணலாம் குன்றுமே
லேற்றிய விளக்குத் தெரியாது பாம்புக்குக் கால்நாலு
யானைக்குக் கொம்பெட்டு.

No. 2003. THANI-P-PAṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[392]

Size, $9\frac{1}{2}'' \times 1''$. Pages, 40. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another collection of occasional poems by poets.

Complete.

குறிப்பு : இதில் பல புலவர்கள் பாடலும், சம்பந்தர் திருவெழு கூற்றிருக்கை முதலியனவுமுள்ளன. ஏடுகள் தெளிவாக இல்லை. ஓரம் முறிபட்டுள்ளன.

பூர்த்தி

Beginning :

செந்தமி ழுடைகாய் நீறு சிவிகைபொன் னாரமாலை
சுந்தர வனிதை மாது சுகந்த (மாகுமெ) ட்டும்
வந்திடும் வேளை தன்னில் ......ங்கலட் சுமியுண் டாகு
மிந்தநாளகா .... தேங்குவள் முகடி தானே.

* * * *

நீணிலத்தை நீண்டோனும் நீணிலத்தைக் கீண்டோனும்
காணவொப்பொன் றில்லாக் கழலிணைகள்—வேணுபுரம்
ஞானசம் பந்தனுரை நாடோறு மோதிடுவா
ருனசம் பந்த முறார்.

* * * *

End :

மண்ணென்ன விண்ணென்ன மாண்டிறந்து போனபின்பு
கண்ணென்ன ......காடேறி மேய்ந்த பின்பு
கொண்ணென்ன தன்னென்ன கொலைக்காரனை பின்பு
ஒண்ணென்ன வொன்பதென்ன ஒற்றியூ ரப்பனுக்கே.

No. 2004. PALA KAVIKAL—[TEXT]

பல கவிகள்—[மூலம்]

[392-A]

Size, $9\frac{3}{4}'' \times 1''$. Pages, 36. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. contains selections from several books and some Thani-p-pāṭals.

Incomplete.

குறிப்பு : *இது பல நூல்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டனவும், தனிப்பாடல்களும் கொண்டதாகும். இதனைப்பற்றி வேறு எந்த விவரமும் அறியக்கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை. ஏடுகள் சிதிலம்.*

அபூர்த்தி.

Beginning :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க.

பலகவி

செந்தமிழ் முடைக்காய் நீறு சிவிகைபொன் ஞானமாலை
சுந்தர வனிதை மாது சுகந்த......ட்டும்
வந்திடும் வேளை தன்னில் ......கலட் சுமியுண்டாகும்
மிந்தநா ளாக...ெ......ங்குவள் முகடி தானே.

* * * *

End :

மும்மணிக் கோவையில் அகவல்

வாழ்ந்தன மென்று தாழ்ந்தனர்க் குதவா
வுண்டிப் பொருட்டா...........வோர்க்குச்
சுவைபகர்ந் தொழுகியும்
ஆராவுண்டி அயின்றனை ளுகித்......தும்பாரனை
....
விழுப்பமுங் குலமும் ஒழுக்கமுங் கல்வியும்
......நல்லதொன் றுண்டோ......பிறிதே.

No. 2005. THANI-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[417]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 12. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This contains some musical notes and some Thani-p-pāṭals.

Incomplete.

குறிப்பு : இதில் தொடக்கத்தில் சுரங்களும் பின்னர் சில பாடல்களுமுள்ளன. அவை தெளிவாகவும் பிழையின் றியு மில்லை.

அபூர்த்தி.

Beginning :

சரிகம பமகரி சரிகம பதநிச சநிதப மபதநி
சரிதப மகரிச.

*　　*　　*　　*

சீராா்மா ளிகைத்தேவர் கருவூர்த் தேவர்
　திகழ் நம்பி கடாகண்டரா தித்ததேவர்
பாராளும் வேணாட்டுத் திருவடிகள் முதுவாளி
　பரவும்புரு டோத்தமர் பண்பில்சேதி ராயர்

ஏராரு மிளம்பெருமா னடிகள் சேர்ந்தார்
எண்ணிலதி ராவடிக ளிவர்க ளோடும்
பாராருங் கல்லாடர் பட்டணத்துப் பிள்ளை
பரவுந்திரு விசைப்பாவைப் பாடி னாரே.

* * * *

End:

மால்கொண்ட மன்னரை வதைத்தற்கோ
வாளரவி னுன்மாண்ட மகிழ்ந னுக்கோ
விட்டு வந்திடும் குருந்தினுக்கோ
சேல்கொண்ட வுபராத்திரி பட்டணத்திற் குள்ளே
தேடியே யுண்பதற்கோ சிறுவனென் றறியாமல்
பணையமிட வாளினுல் சிவனை யிழுந்ததற்கோ
கால்கொண்ட அக்கினியில் விழுவே மாரியால்
கனலறிந்திடுவதற்கோ நதிதனி லிழுத்துப் போய்
கரைதனி லொதுக்கு வதற்கோ
பால்கொண்டு வருகின்ற விடையனைக் கண்டெனை
பாரி...... .... பானைமே ருக்கோ.

No. 2006. PALAVAKAI-P-PĀTALKAL—[TEXT]

பலவகைப் பாடல்கள்—[மூலம்]

[404]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 176. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. contains several stray and occasional songs by poets—several of them already in print, and a few not printed.

Incomplete.

குறிப்பு: இது, பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களை யுடையது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் பல பாடல்

கள் முற்றுப்பெருமலேயும், பாட பேதத்துடனும் வரையப்பெற்றுள்ளன, சில புதிய பாடல்களுமுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவை கங்காளன் செம்மற்—கரிமுகவன்
கல்லியாண வோலைக் கடிதெழுத வாராணேற்
றன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

—ஔவை

*   *   *   *

பெண்பிள்ளைப் பிறைநோக்கும் கரும்பிள்ளைக்
    குறிபார்க்கும் வேதா வென்ன
மண்பிள்ளைத் திறந்தரற்றும் வளர்பிள்ளை
    யீனுரைக்கும் மடவார்க் கெல்லா
மெண்பிள்ளை யெனக்கவளோ வொருபிள்ளை
    சிறுபிள்ளை யெழிலா இன்ற
பெண்பிள்ளை படுந்துயரம் பெரியபிள்ளைக்
    காரறியப் பேசு வாரே.

—இராமச்சந்திர கவிராயர்

*   *   *   *

குளக்காவி மலர்த் தொடையான் சிவந்தெழுந்த
    பல்லவனைக் கூடா நாளி
லிளக்கார மோபிரிந்த வாறு கண்டோ
    நானேழை என்று தானோ
வுளக்காத றூண்டுதலாய் பணிசெய்யா
    யுலையாமல் யான்றூங்கு மூசலுந்தூங்கும்
விளக்காக வெனைத்திரியா விடியும்போது
    மெரித்தனையே விடாமலே வெண்ணிலாவே.

—பலபட்டை சொக்கநாதப் புலவர்

*   *   *   *

துயிலையி லேதுயர் துன்னையி லேமன்னர் சூழவந்து
பயிலையி லேயிருட் பாதியி லேபசி யாலனத்தை
யயிலை லேவய தாகையி லேநமக் கானதுணை
மயிலையி லேவளர் சிங்காரவேலர் மயிலையிலே.

—சொக்கநாதப் புலவர்

*   *   *   *

End :

தித்தானுன் கையிலே தித்தானுன் கண்ணிலே
தித்தானு முன்றன் சிரிப்பிலே—தித்தானுன்
மெய்யெல்லாம் புள்ளிருக்கும் வேளூரா நின்னிடத்திற்
றையலவ ளெப்படிசேர்ந் தாள்.

—காளமேகப் புலவர்

No. 2007. THANI-P-PATAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[456]

Size, 9″ × 1¼″. Pages, 92. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss, contains several kinds of poetical compositions.

Incomplete.

குறிப்பு : *இதில் தொடக்கத்திலும், இறுதியிலும் பிள்ளைப் பெருமாளய்யங்கார் கவிகள் காணப்படுகின்றன. முதல் 4 ஏடுகள் இல்லை. 5—20 வரை கரிகாலனைப்பற்றிய பாடல்கள். 21—41 மதுரைத் தியாகேசர்மீது தாழிசை 50 பாடல்கள். 42—44 ஆசிரிய விருத்தம். 45, 46 அருணகிரிநாதர் மீது வண்ணம். 47, 48 ரங்க நாதர் வண்ணம். 49, 50 திருவரங்கக் கலம்பகம் ஆகிய கவிகள் உள்ளன. ஒவ்வொரு ஏட்டிலும் இறுதிப்பாகங்கள் ஒடிந்துள்ளன. இச்செய்யுட்களில் பாட பேதங்களும் காணப்படுகின்றன.*

அபூர்த்தி.

Beginning:

துளவ துளவவெனச் சொல்லுஞ்சொற் போச்சே
அளவில் நெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சிட்ட
திரங்கா யரங்கே சனே,

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

* * * *

ஒருவர்க் கிடமா யுகந்ததிருப் பாயல்
இருவர்க் கிடமாய தென்னே—மருவலரைக்
கன்னாட்ட வின்னாட்டுங் கண்டன் கரிகாலன்
தன்னாட் டிதுபுதுமை தான்.

—சொக்கநாதப் புலவர்

* * * *

End:

பேசவந்த தூதசெல் லரித்தவோலை செல்லுமோ
பெருவரங்கள் தருமரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா
வாசலுக்கி டும்படல்க வித்துவந்த கவிகை நீள்
மகுடகோடி திணையளக்க வைத்தகாலு நாழியும்
வீசுசாம ரங்கொடித் தொகுத்த கற்றை சுற்றெலாம்
வேலியிட்ட தவர்கள்தொட்ட வேலும் வாளும் வில்லுமே,

—திருவரங்கக் கலம்பகம்

No. 2008. TIRUVAḶḶUVAR TAṈĪ-P-PĀṬALKAḶ

திருவள்ளுவர் தனிப்பாடல்கள்

[623-C (1)]

Size, 7″ × $1\frac{1}{4}$″. Pages, 2. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. contains 6 stanzas said to have been sung by Tiru-Valluvar.

Complete.

குறிப்பு: இது, திருவள்ளுவர் பாடினதாகக் கூறப்பெறும் தனிப் பாடல்கள். அச்சிடப்பெற்றுள்ளன. இந்தப் பிரதியில் கீழ்க்கண்ட ஆறு செய்யுட்களும் பாடபேதங்களுடன் உள்ளன.

பூர்த்தி.

Beginning:

எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளிர்
அந்தவூர்ச் செய்தி யறியீரோ—வந்தவூர்
முப்பாலும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பாழென் றறி. 1

ஐயரென் றுரைத்தீ ரென்னை அடுக்குமோ யருளில் லாற்கு
மெய்யினில் பூத மைந்தை விளக்கமில் லாமல் வெட்டி
பொய்யொடு களவு மற்றுப் புலன்களை யிறுக்கிக்கொண்டு
வெய்யவன் மதியும் போல விரகுவ ரைய ராமே. 2

இருமிரு மென்று சொன்னீ ரேற்குமோ யேழையேற்கு
மருவிரு வினையு மாற்று மாசிலா வுண்மை ஞானந்
தருபொரு ளுணர்ந்து சைவத்தகைமையு மழிந்து நீங்கிப்
பெரியவ ரிருப்பார் பின்பு பெருதவிருப்ப ரோதான். 3

நில்லுமென் றுரைத்தீ ரென்னை நேசபா சமுங்கடந்து
புல்லறி வெளவலுகப் பொறிபுன லொடுக்கிக் கொண்டு
சொல்லுதற் கரியஞான சுடரொளி பரமா னந்தத்
தொல்லையுங் கடந்து மப்பா லேகமா யவர்கள் நிற்பார். 4

போமெனா வுரைத்தீ ரென்னைப் பொறியொடு புலன்க டாவி
ஆமெனா அசவையோட்டி அங்கனே யொடுங்கப் பார்த்து
ஏமமுஞ் சாமமற்று யிரவொடு பகலு மற்றுச்
சோமஞர் பதியும்விட்டுத் துரியமுங் கடந்து போவார். 5

ஞானவா னென்றீ ரெம்மை நாதவிந் துவுங்க டந்து
கானிலைய வரையுஞ் சுட்டுக் கருவொளி பரமானந்தந்
தானெனா இதுகளரண்டுந் தவிர்ந்துதன் மயமுங் கெட்டு
மோனமுங் கெட்டு மோனமுங்கடந்து மப்பால் முடிந்தவர்
ஞானியாவார். 6

No. 2009. THANĪ-P-PĀṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[649-A]

Size, 6″×1″. Pages, 14. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This contains 7 stanzas said to have been sung by Tiru-Valluvar and his brothers in line.

Complete.

குறிப்பு: இதில் வள்ளுவரும், அவருடன் பிறந்தவர்களும் பிறந்தபொழுதே பாடினதாகக் கூறும் 7 வெண்பாக்கள் சிறு மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning:

கருவிற்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விரும்பி யமுதளிக்கும் மெய்யன்—உருப்பித்து
ஊட்டி வளர்வானே ஓகெடுவாய் யன்னே
வாட்ட முனக்கேன் மகிழ்.

—திருவள்ளுவர்

* * * *

End:

இன்னானை யின்னாளில் இன்னபடி யென்றெழுதி
முன்னால் எழுதினவன் மூடனோ—அன்னேகேள்
பேறிளமை யின்பம் பிணிமூப்புச் சாக்காடு (இந்த)
ஆறும் கருவி லமைப்பு.

—வள்ளி

No. 2010. THANI-P-PAṬAL THIRATTU

தனிப்பாடல் திரட்டு

[655]

Size, 11″×1″. Pages, 26. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This contains some stanzas which are said to have been sung by Lord Civa and others.

Complete.

குறிப்பு : *இதில் சிவபெருமான் பாடிய பாடல் முதல் பல புலவர்கள் பாடிய 40 செய்யுட்கள் உள்ளன. 7ஆவது ஓலை இல்லை.*

பூர்த்தி.

Beginning :

நேய ராலை மருதின ராயசீ
காய மோமணி யாலிக நேயமா
மாய நேகலி யாணி மனேயகா
சீய ரான திருமலை ராயனே.

மதுரை சொக்க நாயகர் சொன்ன இயற்கைவாசனை யகவல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே. 2

வறுமை மதுரையில் வந்தபோது சங்கத்தார் போயிருந்தபோது
வறுமை தீர்த்தவனைப் பாடிய அகவல்.

காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையும் குளமும் வெடிபடச் சுவறித்
தந்தைதாய் மக்கள் முகம்பா ராமல்
வெந்த சாகம் வெவ்வே றருந்திக்

குணமொரு நான்குங் கொடுத்துற வாடுங்
கணவனை மகளிர் கண்பா ராமல்
விழித்த விழியெல்லாம் வேற்று விழியாகி
மொழிந்த மொழியெல்லா மூளி மொழியாகி
உறைமறைந் தொழிந்த வூழிகா லத்தில்
அறமொழி யன்றி மறுமொழி பெருகி
இந்த ஞாலத் திடுக்கண் தீர
வந்து தோன்றினன் மானிடக் கிழவன்
ஆலஞ் சேரி அயி ரந்தண னென்போன்
நீலன் சேரின் நெடுமால் போல்வன்
தாயில் லவர்க்குத் தாயே யாகியுந்
தந்தையில் லவர்க்குத் தந்தை யாகியுந்
தன்குறை சொல்லான் பிறர்கெட நினையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
வருந்த வேண்டா வென்றனன் வழுதி
யிருந்தன மவன்பா லிடர்கெடுத் தனனே. 3

* * * *

End :

கையாரவுன் மார்பைப்பெறு திருமேனி வளைத்தாய்
கண்ணென்பது வழியைத்தரு கன்னிக்கிட மானாள்
பெய்யாமிரு வகைநண்பையு மெண்ணாதுகை வளையும்
விழிமையு மொழிந்தாளிது மென்மைக் கியல்பரூர்
செய்யார மெறிக்குந்திரு நென்மைப்பதி தனிலே
தென்னூலுணர் வாரும்வட திசைநாலுணர் வாரும்
துய்யாருமி வன்கல்வியில் மலையத்தவ னெனவே
சொல்லப்பெரு மாள்நல்கிய செல்வப்பெரு மாளே.

No. 2011. CILLAṞAI-P-PĀṬALKAL—[TEXT]

சில்லரைப் பாடல்கள்—[மூலம்]

[667]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 14. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This Mss. contains 22 stray stanzas.

Complete.

குறிப்பு : இது, சிற்சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து எழுதி வைத்துள்ள பிரதி. இந்தப் பிரதியில் 23 பாடல்களுள்ளன. மற்ற விவரம் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

வல்லகாம் போதியொடு சா வேரிகலியாணி
மாஞ்சிநவ ரோசு கவுள
மத்தியமா வதிநாட்டை யாரபி யருளியாம்
வயிரவி முகாரி காபி
சொல்லுசவு ராஷ்டகஞ் சாரங்க மாகிரி
தோடிவே கடைகு றிஞ்சி
சுருட்டிகம் பாலதி பிலாரி பூரிவியிசை
துசாவந்தி வாள மளவி
யொல்லுநீ லாம்புரி சங்கரா பரணமுட
னுதயரா கம் மோகன
முசாரிமலை கிரிலகிரிசை பருசுதெட் டாசியுட
ஞசைபெறு மே காஞ்சி
நல்லஸ்ரீ ராகமொடு கவுரிகன் டாராகம்
நயமிகுந் துரையட் டாண
நாடுகுண் டக்கிரிகை மங்கள சேயம்பெரிய
ராகம்முப் பத்தி ரண்டே.

* * * *

End :

திருக்கோகர்ணச் சிவமேனன் மட்டுஞ் சித்தஞ் சத்த
உருக்கோ கருணைக் குறித்தல்லவோ எனதாழ் வினையின்
பெருக்கோ கருணைப் பெரியாயிசித்தமும் பேதித்தகம்
பருக்கோ கருணைப் பயோததி யாடும் பருவமுமே,

No. 2012. THANI-P-PĀṬAL ṬHIRATTU
தனிப்பாடல் திரட்டு
[696]

Size, 7¼″×1″. Pages, 20. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another selection of occasional stanzas by poets.

Incomplete.

குறிப்பு: இதில் மேற்காட்டியுள்ளது போன்ற சில செய்யுட்களை காணப்படுகின்றன.

அபூர்த்தி.

Beginning:

சினவாளை யான்சொன்னசெய்திதப் பாளென செய்யகல்வி
முனைவாளைக் கங்குல் விடி(யா) தளவு முகத்தின்முகம்
புனைவாளை யன்பர்க்குப் புத்திசொல் வாளையென் புத்திக்
[கொத்த
நினையாளை யெப்படி யோபிரிந் தாற்றுமென் னெஞ்சகமே. 1

தேன்காத் திருக்குந் திரிகூட நாதர் செழுங் கிரிமேல்
மீன்காத் திருக்குங் குருகினங்காள் விண்மழைத் துளிக் காய்
வான்காத் திருக்குஞ் சகோரப்புட் போல மயங்கிநிதம்
நான்காத் திருப்பதெல் லாஞ்சொல்லு வீரெங்க ளையகர்க்கே.

No. 2013. THANI-P-PĀṬAL THIRATTU
தனிப்பாடல் திரட்டு
[713]

Size, 11″×1¼″. Pages, 166. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is another selection of accasional songs.

Incomplete.

குறிப்பு : இதில் பல புலவர்கள் பாடிய செய்யுட்களும், ஒழுக்க முறைகளை விளக்கும் செய்யுட்களும், மகளிர் வர்ணனைகளும் அறிவுரைகளும் கலந்துள்ளன. 239 செய்யுட்கள் தொடர்பாகவும் உள்ளன. அதற்கு மேலும் பல உள்ளன.

அபூர்த்தி.

Beginning :

அம்மனே மாதாவே தாயே தேவி
அண்டமே பிண்டமே ஆதியான
அம்மனே உமையவளே பார்ப்பதியே கவுரி
ஆரணங்கே பூரணியே ஆசைமீறும்
அம்மனே அந்தரியே அருள்மெய்ஞ் ஞான
அற்புதமே நிர்க்குணமே அளவில்லாத
அம்மனே திரோதினி நீலி சூலி
யகளங்கி மாயியிந்திர சாலத்தாயே.

* * * *

சுத்தமாய்ப் பரமா யிருந்துள சுருதி
துணிந்தாற் பரம்பொருள் தன்னை
வித்தக மாகக் கேட்டுமப் பொருளை
விரித்தினி துரைத்துமெய் யாக
வத்திறந் தமக்கே யனுபவ மாகாப்
பரிசென் னென்றுணர் கிலாய்போல்
கத்துதல் பொருளாய்க் காகளம் போலக்
கதறியே விடுவரி தென்னே.

* * * *

விண்பிள்ளை மதிநோக்குங் கரும்பிள்ளை
குறிபார்க்கும் வேதா வென்ன
மண்பிள்ளை திறந்தாற்றுங் கிளிப்பிள்ளை
மொழிப்பற்றும் மடவார்க் கெல்லாம்
எண்பிள்ளை யெமதுகுடிக் கொருபிள்ளை
சிறுபிள்ளை யெளியேன் பெற்ற
பெண்பிள்ளை படுந்துயரம் பெரியபிள்ளைக்
கெவரறியப் பேசு வாரே.

* * * *

End:

தேங்குபுகழ் நாங்கூர் சிவனேவில் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறு கண்ட மூளியார் சொல்.

No. 2014. TANIPPAṬAL TIRATTU

தனிப்பாடல் திரட்டு

[773]

Size, $9\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 48. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as previous Mss. with different selections.

Incomplete.

குறிப்பு: *பல புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களிலிருந்து சிற்சில பாடல்கள் இந்தப் பிரதியுள் காணப்பெறுகின்றன.*

அபூர்த்தி.

Beginning:

தன்னைப் புகழ்வானுஞ் சாக்ஷிசொல்லி நிற்பானும்
பொன்னைப் புதைத்துவைத்துப் போவானும்—ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானு நாணமில்லா நிற்பானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்.

—ஔவை

மோட்டெருமை வாவிபுக முட்டவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—யோட்டி
யடையா பெருங்கதவு மஞ்சலென்ற வாயு
முடையான் சடையப்ப னூர்.

—கம்பர்

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று முலைமாத ரிடைச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

—காளமேகம்

நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்றொரு பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிடுதே.

—படிக்காசுத்தம்பிரான்

அரச னகளங்க னச்சுதன் முற்றத்
தரசா வவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்.

—ஏகம்பவாணன்

இடங்க ரடிக்கடியுண் டென்றோசிற் றூற்றி
னிடங்க ரடிக்கடியுண் டென்றே—தடங்குலவு
நாராய் திருமின்றை நாகரிகன் சேனைவிவ்வூர்
வாராத தென்னோ வழுத்து,

— தாச்சி - அருணாசல முதலியார்

*　　*　　*　　*

End :

வற்றாத வைகையிலும் வாள்விசையன் றன்கையிலும்
பற்றாம லண்ணலடி பட்டனர்கா ணம்மானை
பற்றாம லண்ணலடி பட்டனரே யாமாகிற்
செற்றார் புரமெரித்த சேவகமே தம்மானை
சேவகத்தைக் கேட்கச் சிரிப்பலவோ வம்மானை.

—மூவரம்மானை

No. 2015. TAṈI-K-KAVIKAḶ—[TEXT]

தனிக் கவிகள்—[மூலம்]

[809-B]

Size, 10″×1¼″. Pages, 50. Lines, 7 on a page. Condition, Good. Appearance, Old.

Note: Same as previous Mss. but with different selections.

Incomplete.

குறிப்பு: இதனிலுள்ள பாடல்கள் பல நூல்களிலிருந்து தனித்தனியாகச் சேர்த்து எழுதப்பட்டதாகும். ஆசிரியர் பலராவர்.

Beginning:

ஆண்டொன்று நின்ற நாளு மதினுடன் வாரங் கூட்டி
மீண்டதைத் தொகையினூடு விளம்பியோ ராசிகூட்டிக்
கூண்டதோர் தொகையினூடு கொல்லத்தி னுண்டு கூட்டி
மீண்டதைச் சகாப்த மென்று நிச்சயஞ் செப்பலாமே.

முன்னமு மன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்தி
கன்னமுங் கிள்ளிய நாளல்ல வேயெனைக் காப்பதற்கு
அன்னமும் மஞ்சையு(ம் போனு) மிரண்டு பெண்கொண்ட
[ஆண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் தானோ செந்தூரி லிருப்பவனே.

* * * *

End:

ஆராயுஞ் செந்தமிழ் ஆத்தூரிற் சோமி யழகுகண்டு
நாரா யணன்நெடு மாலாயி னுன்மற்ற நான்முகனும்
ஓரா யிரமட லேறினன் மாரனு முருவழிந்தான்
பேரான வாசவர் கோனுங்கண் ணுயிரம் பெற்றனனே.

No. 2016. PALAVAKAI-P-PĀṬALKAḶ

பலவகைப் பாடல்கள்

[939-A]

Size, $17\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 120. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as previous Mss.

Incomplete.

குறிப்பு: இதில் பலவிதப் பாக்களால், பல தோத்திரங்களும், பல கருத்துக்களும், மக்கள் வாழ்க்கையில் கொள்ளும் அனுட்டானங்களும், நீதிகளும் உணர்த்தப்படுகின்றன. இவையாவும் தனிப்பாடற்றிரட்டிலுள்ளவைகளே. இயற்றியவர், கம்பர், ஔவையார், ஒட்டக்கூத்தர் முதலாகிய பல புலவர்களாவர். இப் பிரதி முற்றுமில்லை. இதிலுள்ள பாடல்கள் பெரும்பாலும் அச்சிடப் பட்டவையாம்.

பூர்த்தி.

Beginning:

ஹரி ஓம். நன்றாக குரு வாழ்க குருவே துணை

பழமொழி பலவெண்பா

கொம்பொன்று காலிரண்டு கோலவரிக் கண்மூன்று
அம்பவள நால்வாயொ டைந்துகரன்—கும்பக்
குறமெடறட வரமுருவி குடவயிறு நெறுநெறென
வறடுறுடு நெறுடுவயி றன்.

*   *   *   *

வேறு

ஆடை சுற்றி அழகாய்த் திரியினும்
வாடை பூசி வளர்மனை புக்கினும்
ஓடை யேந்தி யுழன்று திரியினும்
பாடையேறினும் ஏடதுகைவிடேல்.

*   *   *   *

புல்லுக்கட்டும் விறகுஞ் சுமந்த பேர்
  பூர்வகாலத்துப் புண்ணிய வசத்தினால்
நெல்லுக் கட்டும் பணக்கட்டுங் கண்டபின்
  நீலக் கல்லுங் கடுக்கனும் போடுவார்
சொல்லுக் கட்டும் புலவரைக் கண்டக்கால்
  சீறிப் பாய்ந்து கதவை யடைத்திட்டு
மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ
  மலையச் சாரலில் வாழ்பெரி யம்மையே.

* * * *

End :

திருமங்கை மன்னன்

வருக்கைநறுங் கொலைசிதறிச் செந்தேன் பொங்கி
  வழிக்கரையிற் குழிக்கரையின் மதகிற் றேக்கி
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
  பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேண்மோ
வருட்குலவு மயிலைதனி னெருப்பால் வெந்த
  வங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருப்பதுமக் கியல்பல்ல நிலவால் வெந்த
  விவளையும் பெண்ணாக்கவுமக் கியல்பு தானே.

No. 2017. PALA PĀṬALKAḶ—[TEXT]

பல பாடல்கள்—[மூலம்]

[1027]

Size, 18″×1″. Pages, 54. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another selection containing 169 stra stanzas.

Incomplete.

குறிப்பு: இது, பின் அட்டவணையில் கண்டபடி அச்சிடப் பெற்றனவும், அச்சிடப்பெறுதனவுமான நூல்களிலிருந்து 169 பாடல்கள் இந்தப் பிரதியில் காணப்படுகின்றன.

அபூர்த்தி.

Beginning :

சாதுரிய ராளுலுந் தன்கையிற் புத்தகத்தை
மாதிரியா யீய வழக்குண்டோ—சாதுரியா
டார்த்தெழுத வெண்டுமென்றால் பத்தேடு மெட்டேடுங்
கோர்த்தெழுதிக் கொள்க கொடும்.

ஆடை சுற்றி யழகாய்த் திரியினும்
வாடை வீச வளர்மனை புக்கினும்
ஓடை ஏந்தி உழன்று திரியினும்
பாடை ஏறினும் ஏடது கைவிடேல்.

ஏழ்கடல்தீ வேழ்குன்ற மெட்டொருசெம் பொன்மேரு
சூழ்தருநே மிக்குன்றஞ் சொல்லிலோ ருலகமாகுந்
தாழ்தரு வுலகமீரேழ் சாற்றிலோ ரண்டமாகும்
வாழுமா யிரத்தெட் டண்டம் வகுக்கிலோர் புவனமாமே

*   *   *   *

நாற்சாமத்து ஞானம்

தந்தைதாய் மக்கள் சகோதரருந் தாஞ்சிறந்த
விந்துவும்பொய் யென்றறியா வீணரே—விந்தை
வெறும்பாழ தாக்கி மெய்யனைப் பார்த்தாங்
குறங்கா துறங்கா திரு. 1

ஆலஞ் சரீர மனித்தியமன் றேநாலு
காலந் தனிற்றிரிவர் காலனூர்—காலங்
கறங்காத வீசன் கருணையினோர் பார்த்தங்
குறங்கா துறங்கா திரு. 2

வானமளித் தேகமனத் தறுவ ராம்வேடர்
ஞானமணி யைத்திருட நண்ணினூர்—ஞானம்
நறுங்காத வீசன் நன்மலரைப் பார்த்திங்
குறங்கா துறங்கா திரு. 3

ஆசையெனும் பாசத் தளவிறந்த கன்மத்தா
லாசைநா டப்போவ தறிகிலீ—ராசை
யறுங்கால மல்லவே யாளடியைப் போற்றி
யுறங்கா துறங்கா திரு. 4

* * * *

நீதி நூல்.

எழுதருமை முந்தி யெழுதியதை நன்ருய்ப்
பழுதறவா சிப்பதரு மைபண்பாய்—முழுதுமவை
கற்கருமை நற்பொருளைக் காண்கருமை கண்டாலு
நிற்கருமை யந்த நிலை.

* * * *

பாடல் கிடக்கு முறைமை.

பாடுமுறை தொடர்ச்செய்யுட் டெரிக்க வல்ல
பாவலனற் குணங்குல...... ரொழுக்க மென்மை
நீடழகு சமையநூல் பிறநூல் மற்று
நிகழ்த்தியநூ லிலக்கியனுற் கவியு ளானுய்
நாடுறுப்பு குறையிலனுய் நோயி லாய
நாற்பொருளுந் தெரிந்துகற் றுணர்ந்து முப்பான்
கூடுவய திகழ்ந்தெழுபான் வயதி லேருக்
குறியுடையோ ஞகிலவன் கவிதை கொள்ளே.

பல் பாடற் றுறை.

வாக்கும் நலமு முடையானென் ஞர்கள் மணிமுடிநீ
ராக்குஞ் சதுரன் இருங்கோளன் வெற்பி வயன்நடுக்கம்.
போக்கும் புனிதனுங் கந்தனு மாலும் புரந்தரனும்
நாக்குங் கழுத்துந் தலையுமில் லான்பகை நானல்லவே. 1

* * * *

மாலாக்கி யென்னை வறுமைய தாக்கியென் மார்பின்முலைப்
பாலாக்கி யங்கம் பசுநரம் பாக்கியப் பாவையரை
மேலாக்கிச் சிக்கில் விளக்கெண்ணெ யாக்கியென் [மேனியெல்லாம்
தோலாக்க வோமக னேபிள்ளை யாய்வந்து தோன்றினையே. 28

அட்டவணை.

1.	நூல்	...	2
2.	உலகபிரமாணம் வசனம்	...	3
3.	ஔவை பாடல்	...	8
4.	நாற்சாமத்து ஞானம்	...	4
5.	ஆதிபகவன் மக்கள்	...	7
6.	திருவள்ளுவர் பாடல்	...	10
7.	ஔவை நாற்சாமப் பாடல்	...	4
8.	நீதிநூல்	...	40
9.	கலித்துறை	...	16
10.	நால்வர் சிறப்பு	...	4
11.	விருத்தம்	...	29
12.	பாடல் இடக்குமுறை	...	14
13.	பல பாடல் துறை	...	28
		ஆகமொத்தம்.	169

No. 2018. ORU TAṈIPPĀṬAL

ஓர் தனிப்பாடல்

[1048-F]

Size, 12½″ × 1¼″. Page, 1. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an one page Mss. containing one Tiru-p-pāṭal.

Incomplete.

குறிப்பு: இது ஒரு தனிச் செய்யுள் கொண்டுள்ளது.

பூர்த்தி.

Beginning & End :

ஈரெட்டு மூன்வந்து புறமுட்டுற்றுற்றவு மீற்றுவண்ணம்
தேரொட்டு மூன்று முட்டலொடு தேற்றவுஞ் சிந்தைசெய்து
சீரிட் டுரைப்பற் றிலொன்றிலா தவர் தேர்ந்தவற்றைப்
பாரிட்ட மாகப் பெரியோர் தமதுரைப் பாத்தறியே.

No. 2019. TANIP PĀṬALKAḶ—[TEXT]

தனிப் பாடல்கள்—[மூலம்]

[1048-Z]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 3. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 9 Tiru-p-pāṭals only and the 9th incomplete.

Incomplete.

குறிப்பு: இது 9 பாடல்களையுடையது. 9 ஆவது பாட்டு பூர்த்தியாயில்லை. இப்பாடல்களிற் சில, இடக்கர்ச் சொற்களை அமைத்துப் பாடப்பட்டுள்ளன. 8 ஆவது செய்யுள் மட்டும் காளமேகப் புலவர் பாடியதாகத் தெரிகிறது. அதுவும் பிழையாகக் காணப்படுகின்றது. ஏனைய விவரம் ஒன்றும் தெரியவில்லை. இதிலுள்ள செய்யுட்களின் பொருள் ஆராய்தற்குரியது.

அபூர்த்தி.

Beginning :

ஏரையூர் மகாஜன ......காபெண்டுக ளெல்லாங் கூடி
ஊரைப் பாளா(மா)க் குருள ஒக்குருள—நேரே ....
பிளந்து விட்ட பம்பரம் போல் ....
அளந்து விட்டார் சோமாகி யார்.

*　　*　　*　　*

End :

பாளை மணங் கமழ்வீசு
கயத்தாற்றுப் பெருமாளே பழிகாரா
வேளை யென்றால் அவ்வேளை
பதினாறு நாழிகைக்கு மேலேயாச்சு
தோளையுந்தா னெனை முறித் தாயுனைச்
சுமக்க நம்பி யானையுங்கூடச் சிமக்க வைத்தாய்
நாளையுந்தா னுனைச்சுமக்க வருவோமே
களைந்துக் கொண்டு நாங்கள் தாமே.

No. 2020. PALA PĀṬALKAḶ

பல பாடல்கள்

[1190-A]

Size, 14″ × 1½″. Pages, 40. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. contains selections from Tevāram and other known books as also occasional songs by poets.

Incomplete.

குறிப்பு : இதில் தேவாரப் பாடல்கள், வினாவுத்தரம், நடு வெழுத் தலங்காரம் முதலிய தனிப்பாடல்கள், வேங்கடேசுரரெட் டேந்திரன் மேல் பாடிய பாடல்கள், திருமால்மேல் பாடிய யமகப் பாட்டுக்கள், இவைகள் பிறவும் உள்ளன. யமகப்பாட்டிற்கு உரை எழுதப்பட்டுள்ளது. மற்றை விபரங்கள் எதுவும் அறியக் கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning :

திருக்கொள்ளம்பூதூர் ஓரடிவைப்பு.

காந்தார பஞ்சமம்.

கொட்ட மேகமும் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்லவுந்துக சிந்தையார் தோழ
நல்கு மாற்று ணம்பனே. 1

கொட்டக் கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்டகத்துறை நம்பனை யுள்கச்
செல்லவுந்துக சிந்தையார் தொழ
நல்கு மாற்று ணம்பனே. 2

* * * *

End:

தாரு மான தயா நிதா
தாநி யாய கஞ மதா
தாம ஞன குலா ருதா
தாரு லாவிய மாருதா.

No. 2021. TAṈIPPĀṬAṞ TIRAṬṬU—[TEXT]

தனிப்பாடற் றிரட்டு—[மூலம்]

[1222]

Size, 17″ × 1″. Pages, 266. Lines, 4 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This Mss. contains occasional songs by well known poets like Kampar and others.

Incomplete.

குறிப்பு: இதனிலுள்ள பாடல்கள் தனித்தனிப் புலவர்களாற் பாடப்பட்டவை. பாடியவர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவையார், காளமேகப் புலவர், படிக்காசுப் புலவர் முதலிய பலராவர். இதனை இரண்டு பாகமாக்கி அச்சிட்டுள்ளனர். அச்சுப் பிரதிகட்கும் இதற்கும் பாடல் முறையால் வேறுபாடுண்டு. இப் பிரதி முற்றுமுள்ளதாகத் தெரியவில்லை. இதில் ஏடுகள் எல்லாம்

முதல் ஓரத்திலும், இறுதி ஓரத்திலும் ஒடிந்திருப்பதனால் முதலும் இறுதியும் அறிய முடியவில்லை. பிழைகளும் உள்ளன.

அபூர்ந்தி.

Beginning :

கலை—விடியற் காலத்தோர் மாத்திரை வீய்ந்தது
கரி—மடிவினைஞ் கொன்று மாய்ந்தது மொன்றுமாய்
மலை—கடிகொ ளந்தியிற் காமரு தங்களொன்
பறை—ருெடியு நீளறை யார்ப்பொ ருலம்புமால்

தன்வயத்தனன் றூய உடம்பினன்
ருனியற்கை யுணர்வின ஞகுதல்
பன்னு முற்று முணர்த லியல்பினுற்
பாச நீங்குதல் பேரரு ளாகுதன்
மன்னு மீறில வாற்ற லுடைமையு
வரம்பி லின்பமு மாகிய வெண்குண
மென்ன தாகச்சை வாகம மோதுமெம்
மீசன் ருளையெப் போது மிறைஞ்சுவாம்.

* * * *

End :

நாலுகுதிக் கும்புகழ் தேமா நறுங்கனி நைந்துபசுந்
தேலுகுதிக் கும்வய லாரூர்த் தியாகர் செழுங்கிரியில்
கானுகுதிக் குங்குழ லீரெல தாசைக் கடலில்விழி
மீனுகுதிக் குங்கொ லெல்ஙேரு புதைத்திரும் மென்னைக்
[கொண்டே.

No. 2022. PALAVAKAI-P-PĀṬALKAḶ—[TEXT]

பலவகைப் பாடல்கள்—[மூலம்]

[1223]

Size, 5″×1″. Pages, 74. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: The leaves of this Mss. are not of one size showing that they were not written at one time. It contains several extracts from bigger works as also many occasional songs by poets.

Incomplete.

குறிப்பு: இதில் பலவகைப் பாடல்கள் வந்துள்ளன. பாய்ச்சலூர்ப் பதிகம், சீர்க்கருணீக புராணம், சில தெலுங்கு பத்யங்களெழுதிய ஏடுகள், சோதிட வைத்தியம், தேவாரத்தில் கோளறு பதிகம், பஞ்ச பாண்டவ வம்சத்தில் பரிக்ஷித்துவின் சந்ததி. திருப்பாண்டிக்கொடுமுடிப் பதிகம் முதலியவை இதில் கலந்துள்ளன. ஏடுகள் பிறழ்ந்திருக்கின்றன. பக்க எண்கள் இல்லாததனால் முறைப்படுத்தி யமைக்க முடியவில்லை, ஏடுகள் சில நீண்டும், சில குறைந்தும், சில அகன்றும், சில குறுகியுமிருக்கின்றன. இப்பிரதி முடிந்தது என்று சொல்ல வியலாது. முதலில் சில ஏடுகள் சிதலம்.

அபூர்த்தி.

Beginning:

உறக்கமோ வூனமுள்ளம்
உள்ளமோ புறம்போ சீவன்
இறப்பது முன்னோ பின்னோ
ஈன்றது பெண்ணோ வாணோ
கறப்பது முலையோ பாலோ
காண்பது மனமோ கண்ணோ
பறப்பது இறகோ காலோ
பாய்ச்சலூர் கிராமத்தாரே. 1

* * * *

End:

பரிக்ஷித்து	—	500.
ஜனமேஜயன்	—	500
நரேந்திரன்	—	298
சாரங்கதரன்	—	85
விக்கிரமாதித்தன்	—	2000
சாலிவாகனன்	—	349

......மதநூல்	—	85-4-27
ரூசன்	—	9
போசன்	—	300
துலுக்கன்	—	755
வெள்ளை	—	81

ருஜா—2க்கு 4-912
4-327

ஆன இருபத்திரண்டும் அன்பதுடன் பெருக்கி
போன வருஷத்துடன் சே......இத்து மானிலத்தில்
மூன்னூற்று நாற்பதையும் மும்மூன்றையுங் கூட்ட
அன்று சாலிவாகனமென வறிவது—
கண்ட......காபத்துகையும் கண்டமொரு நூறும்
வண்டிமிழ் சேர்திலவி மறையோரும்—ஒண்டிஊர்
ஒன்பது கைதனையும் ஒரெழுவ கையுங்கூட்ட
அன்றுகலி யுகாப்தமென் றறிவது.

சாலி வன்ன...... தெரிய 225 60-க்கு	1320
பிறப்ப ஷு...	11
	340
	9
ஆகமொத்தம்.	1680

Colophon:

தாது ஹூ பங்குனிமீ 23உ சோமவாரம் பட்டி நீளாருருக்குடி 24 புதவாரம் காலையில்...........

—திருக்கழுக்குன்றம் கணக்குப் பிள்ளை

No. 2023. PALAVAKAI-P-PĀṬALKAḶ—[TEXT]

பலவகைப் பாடல்கள்—[மூலம்]

[1224]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 104. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This contains stanzas in praise of Gods and persons.

Incomplete.

குறிப்பு: இதில் பலவகைப் பாடல்களும், சத்தி, முருகக் கடவுள் இவர்கள் மேல்பாடிய தோத்திரங்களும், திருவிளையாடற் புராணத் தோற்றமும், தேவாரப் பாடல்களும் குருதோத்திரமும் வந்துள்ளன. இப்பிரதி பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning:

காரணபுண் டரீகமலர்க் கடவுள் முத
லவர்பதங் கடந்து யோக
தாரணையாஞ் சோபான மிசையேறி
யருள்வழிபோய்த் தனித்தஞான
பூரணசு காதீதப் பெருவாழ்விற்
கலந்தசிவ போக நாதர்
சீரணவுந் திருவடிக்கீழ் மாதிருமா
ளிகைத்தேவ தேவர் கோவே. 1

* * * *

End:

பங்கயற்க ணரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவ மாகி
யிங்கயற்கணகனுலக மெண்ணிறந்த
சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூத்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற் ணிதன்னோடும் அமர்ந்த
வாலவா யாவது மிதுவே.

(அங்கையற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்துள் வைப்பாம்—என்பது ஈற்றடி. இதற்கு மாறாக வேறுபாட்டின் அடி இங்கு எழுதப்பட்டுள்ளது.)

Colophon:

தய்யல் பாகம்பிள்ளை பொஸ்தகம் எடுத்த பேர் கொடுக்கவும்,

No. 2024. PALAR PĀTTUKKAḶ—[TEXT]

பலர் பாட்டுக்கள்—[மூலம்]

[1225]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 16. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains selections from occasional songs by Poets like Pukaḻēnti etc.

Incomplete.

குறிப்பு : *இதில் புகழேந்தி, ஒட்டக்கூத்தர், கம்பன், ஔவையார் முதலியவர் பாடிய பாடல்கள் காண்கின்றன. ஏனை விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. ஏடுகள் ஓரங்களில் முறிந்துள்ளன. முதலில் 4 ஏடுகள் இல்லை. பிழையுடைய சுவடி.*

அபூர்த்தி

Beginning :

இரண்டாவது புகழேந்தி புலவர் வாக்கு.

வெள்ளத் தடங்காப் பருவாளை
வேலிக் கமுகின் மீதேறி
துள்ளி முகில்கள் கிளித்து மழைத்
துளியோ டிறங்குஞ் சோழநாடா
கள்ள மறவர் குறும்ப டர்க்குங்
கண்டா கண்டா கோபாலா
பிள்ளை மதியா லென்பேதை
பெரிய மதியை இழந்தாளே.

* * * *

End :

காணக்கண் கூசுதே கைகி......... ஞஞுதே
ஒ,ஞுக்கு வாய்திறக்க வொட்டிலையே—...........
என்புகட் டுடம்பெல்லா மெரியுதே ....
அன்பிலா தாரிட்ட அமுது.

இது ஒரு வித்துவான் வாக்கு.

ஒருபாதி மால்கொண்டு மற்றொருபாதி உமையவள்கொண்
டிருபாதி யாலு மிறந்தான் புராரி இருநிதியோ
பெருவாரிதியிற் சேடன்பிலத் திற்பிறை விசும்பிற்
றருவாரும்போலு...க் கொடைவுன்கை ஒடென்கைத்
[தந்தனனே.

No. 2025. PALAVAKAI-P-PĀṬALKAḶ

பலவகைப் பாடல்கள்

[1228]

Size, 15″×1⅜″. Pages, 180. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains selected poems from works like Kantapurāṇam etc.

Incomplete.

குறிப்பு: இதில், கந்த புராணம், பாரதம், பெரிய புராணம், சிவாலய தரிசன விதி முதலிய நூல்களிலிருந்து சிற்சில பகுதிச் செய்யுள்கள் எழுதப்பட்டுள்ளன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை. இப்பிரதி முடிந்ததாகவும் தெரியவில்லை. ஏடுகள் சில சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

ஆயிர மெ...ண்ணமென மின்னுருடன் சூர்கையநீ
யாயிரங் குண......கட்......ருசண்ணை......ப......க்கோர்
ஆயிரம் பொன்னருள் சொற்(ர்)னத் தியாக ரருளினம்பொன்
னுயிர நல்கிலுல கொள்ளா முதுவிலை......வெமரே.

....
....

ஈசன்றனது மலர்ந்தாளை யிறைஞ்சி யாற்ற
நேசங்கொடு போற்றலர் தம்மொடு நோதலொவ்வாப்
பாசந்தனில் வீழ்கொடியா யுனைப்பார்த்தி யாங்கள்
பேசும்படியுந் தக்கவோ பவப்பெற் றியன்றோ.

*　　*　　*　　*

End :

முன்னைவனூர் கோயிற் பூசைக்கண் ....ன்
மன்னற்குத் திங்களை வாரிவளங் குன்றுங்
கன்னங் களவு மிருத்திடுங் காசினி
யென்னாரு ளாந்தி யெடுத்துரைத் தானே.

*　　*　　*　　*

பரமன் றிருமுன் னமுன்முன் றும் பரம குரவன் றிருமுன்னு
மொருமை யுறவே வெறுமையினு முதவா தவருஞ் சிறிதேது
மரிது பொருடான் பச்சிலையு மரிதே வஃதுமரிதாயிற்
றிருண மதனைத் திருமுன்னே மாற்றலரிதோ செயலாலே.

*　　*　　*　　*

இரணங்கல்கு விருப்பை மிருமபசியும் ரோக
மரணுறும் பயங்கி லேசங் கேதம் மிருத்து
மரணவேதனை யிவையெலாம் கற்றேன் வணங்காப்
புராணநாதனைப் பிரதோடத்திற் போற்றிடத் தருமால்.

No. 2026. PALAR PĀṬAL—[TEXT]

பலர் பாடல்—[மூலம்]

[1231]

Size, $6\frac{3}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 120. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. contains stanzas selected from several works and from occasional stanzas by poets.

Incomplete.

குறிப்பு: இது பல புலவர்களால் பாடப்பட்ட பல நூல்களிலிருந்து பாடல்களைப் பொறுக்கி எடுத்துத் தொகுக்கப்பட்டதாகும். பிரதி பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning:

சும்மா இருக்கவைத்த சூத்திரத்தைப் பாரா
விம்மாகத் தத்துவத்தும் வேலைகளும்—தம்மறிவின்
நீட்டிக் கிடைத்திவத்த தி......டைக ளெல்லா ஞானிக்கி......
காட்டும் பரியாசங் காண்.

* * * *

End:

அறிவெனும் பாயைக்கட்டி அன்பெனுஞ் சுக்காளுேட்டி
யிரவெனுங் கடல்கடந்து ஏகமாய் நின்றபோது
துறவெனுந் தொண்ணூற்றுருல் தூக்கியே பாதம் வைத்து
கரவெனும் வின்பத்துன்பங் கடந்தவர் காட்சிசொல்வார்.

* * * *

நல்லவெள்ளி நாலுமா நயந்தசெம்பு ....
குண்ணுநாகம் ஒண்ணுமா குலாவுதங்கம் அவ்விடை
வீசிளுைசை மூசை(யி)லிட்டு (?)விளங்கவேத......திருல்
யி(க)ல்லை யில்லை என்றபேர்க்கு எட்டு மாத்து காணுமே.

No. 2027. CAṄKA-C-CEYYUḶ TIRATTU

சங்கச் செய்யுள் திரட்டு

[654]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 20. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 14 selected stanzas from Cankam and later works and prose renderings for a few of

them. This seems to be the work of a Tamil student for his own personal use.

Incomplete.

குறிப்பு: இது, ஒரு புலவர் சங்கச் செய்யுள்களிலிருந்து சில பாடல்களையும் அவற்றின் உரைநடையையும் தம் கைக்குறிப்பாக எழுதிவைத்துள்ளதுபோலக் காணப்படுகிறது. இந்தப் பிரதியில் 14 செய்யுட்களுள்ளன. இறுதி ஓலையில் இலக்கணக் குறிப்புக்கள் உள்ளன.

அபூர்த்தி.

Beginning:

ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தோ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணெம்
மனையோ ளெவ்வ நோக்கி நினை இ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
....
....
....

வாரும் பாவலீர் ....னுரை கேண்மின் சீர்மை பூமியாவுங் கைநெகிழ் வாளையானுங் காளை மடைந்தனன். பாவின் புணர்ப் பின் பகுதி யறிந்திங்கி யோசனை யாய்ந்ததி லுறுதியொன்றுண் டெயில் குராங்கர் வாயிற் கிளி நான்குள்ளன வென்றன் பதியில் தம்பி நிமண னொன்றலை தருவார்க்கீயும் பரிசெனச் சிந்தை மகிழ்ந்து செ...பான் றூக்கினன் யானென் றலைதரத் தம்பி விலை தரவாங்கிக் கொடுபோய் வறுமை நோய் தவிரே.

தண்டா மரையி னுடன் பிறந்தே
தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடைப் பிறந்தும்
வந்தே கமல மதுவுண்ணும்

பண்டே பழகி யிருந்தாலு
　　மறியார் புல்லர் நல்லோரைச்
கண்டு களித்தங் குறவாடிக்
　　கலந்தே யிருப்பர் கற்றோரே.

*　　*　　*　　*

End:

கூற்ற மஞ்சுங் கொன்னுனை யெஃகி னிளையானும்
மாற்ற மஞ்சும் மன்னிய கற்பின் மடவாளும்
போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத் துப்பிற் சீவக னென்றே பெயரிட்டார். 14.

(சிந்தாமணி 361)

No. 2028. CAṄAKA-C-CEYYUḶ—[TEXT]

சங்கச் செய்யுள்—[மூலம்]

[1048]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 5. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains about 20 stanzas selected from Pura-Nāṉūṟu (a Caṅkam Anthology).

Incomplete.

குறிப்பு: இதில் புறநானூறு என்னும் சங்கவிலக்கிய நூலிலிருந்து 20 செய்யுட்கள் திரட்டி எடுத்து எழுதப்பட்டுள்ளன. இதனைப்பற்றிய மற்றைய குறிப்புக்களொன்றும் தெரியவில்லை. முகப்பேட்டில் மீனாட்சி என்னும் பெயர் எழுதப்பெற்றிருக்கின்றது.

அபூர்த்தி.

Beginning :

சங்கச் செய்யுள்

நன்றாக.

மீனாட்சி.

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
....
....
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோர்க்கே.

*　　　*　　　*　　　*

End :

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
....
....
யானை புக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

No. 2029. PALANŪL TIRATTU—[TEXT]

பலநூல் திரட்டு—[மூலம்]

[726]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 28. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Anthology consists of selections from several early Tamil works.

Incomplete.

குறிப்பு : நான்மணிக்கடிகை, பரிபாடல் உறுப்பு, இரும்பல் காஞ்சி, நாரத சரிதை, அறநெறிச் சாரம், ஒட்டக்கூத்தர் விசாரணை,

இன்னா நாற்பது, சிறுபஞ்ச மூலம், களவழி நாற்பது, இனியது நாற்பது, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது ஆகிய நூல்களிலிருந்து சிற்சில பாடல்கள் இந்தப் பிரதியில் கொடுக்கப்பெற்றுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

(நான்மணிக் கடிகை)

மதிமன்னும் மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரேய்க்கும் நிறம்.

(பூவை—காயா, ஏய்த்தல்—ஒத்தல்)

* * * *

வடுச்சொல் நயமிலார் வாய்த்தோன்றுங் கற்றார்

* * * *

End :

ஐந்திணை யைம்பது.

கடிதோடு வெண்டேரை நீராமென் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்
தொடியோடி வீழத் துறந்து.

(எ - து) (பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.)

தோழியர் போலத் துறைமுன் றிலாகுங்கால்
வீழ்பவன் போலத் தளருங்கால்—தாழாது
கல்லத ரத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை.

No. 2030. CEYYUḶ TIRATTU—[TEXT]

பல நூல் திரட்டு—[மூலம்]

[589]

Size, 14½″ × 2″. Pages, 32. Lines, 17 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is an Anthology of verses selected from several works ancient and later.

Incomplete.

குறிப்பு: இது, பல நூல்களிலிருந்து திரட்டி எழுதப்பட்ட நினைவுக் குறிப்பாகத் தெரிகிறது. இதனில் பெரும்பாலும் பதினெண்கீழ்க் கணக்கிலுள்ள செய்யுட்கள் காணப்படுகின்றன. சில செய்யுட்கள் எந்நூல்களிலிருந்து எடுக்கப்பட்டனவென அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே. 1

(மூவ)ரத் தமிழ்பயந்த நன்னூல் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லருளபயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகின் வாழி மழை.

* * * *

இன்னா நாற்பது.

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வன் அழகின்னா
அந்தணர் இல்லிருந்து ஊணின்னா ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

* * * *

End :

கைந் நிலை (நெய்தல் 6).

என்னையர் தந்த விறவுணங்கல் யாங்கடிந்து
புன்னையங் கான லிருந்தேமால் பொய்த்தெம்மைச்
சொன்னவர் கூறி நலனுண்ட சேர்ப்பனை
யென்னைகொல் யாங்காணு மாறு.

No. 2031. PURA-T-TIRATTU—[TEXT]

புறத் திரட்டு—[மூலம்]

[587-G (1)]

Size, 16½″×1½″. Pages, 114. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Pura-T-Tirattu is a fairly well known Anthology in Tamil containing selections from various works on Puram—matter arranged under proper headings. The work is printed. This Mss. has a portion of this Anthology.

Incomplete.

குறிப்பு: புறப்பொருள் பற்றி விரிவாக வரைந்துள்ள பல நூல்களின்றும், திருக்குறள், நாலடியார் போன்ற பாகுபாடுகளமைத்துத் திரட்டி அமைக்கப்பெற்ற நூல் இதுவாகும். இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில், அச்சிட்ட நூலிலுள்ள பாடல்களே இருப்பினும் அவை முன்பின்னாக வுள்ளன. அன்றியும் நூல் முழுவதுமின்றி 'நாடு' அதிகாரத்துடன் முற்றுப் பெற்றுள்ளது.

அபூர்த்தி.

Beginning :

மன்னிய நாண்மீன் மதிகனலி ..யன்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையா னென்றே யறையுமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

(முத்தொள்ளாயிரம்)

நீலநெடுங் கொண்மூ நெற்றி நிழறுநிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—கோல
மணித்தொங்கை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் மரண்.

(இரும்பல் காஞ்சி)

* * * *

End :

வானிலங் கருவிய வரையு முல்லைவாய்த்
தேனிலங் கருவிய திணையுந் தேறல்சேர்
பானலங் கழனியுங் கடலும் பாங்கணி
நானிலங் கலந்துபொன் னரலு நாடதே.

(சூளா—நாட். 25)

Colophon :

நாடு முற்றும். அதிகாரம் 74.

No. 2032. PUṞA-T-TIRATTU

புறத் திரட்டு

[699-A]

Size, 10″ × 1¼″. Pages, 172. Lines, 8 on a page. Condition, Good. Appearance, Old.

Note: Same as No. 2031 but containing a different set of stanzas.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 2031 பிரதி போன்றது. ஆனல் வேறு செய்யுட்கள் கொண்டது.

அபூர்த்தி

Beginning :

நீடாழி வட்ட நிலத்துக்கெல் லாமுதன்மை
வாடாத நீதிரும லைக்கொழுந்தே—பீடார்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

* * * *

End :

ஆர்த்தபெருங் காம மதுகுறிப்பாய்க் கூறினள்
வார்த்தையிற்சொல் லாள்திரும லைக்கொழுந்தே—கூர்த்த
முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

No. 2033. PUṞA-T-TIRATTU

புறத் திரட்டு

[708]

Size, $10\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 170. Lines, 8 on a page. Condition, More injured. Appearance, Old.

Note: Same as No. 2031 but contains another portion of the same Anthology.

Incomplete.

குறிப்பு: முன் எண் 2031 போன்றது. இந்தப் பிரதியில், பொருட் பாலில் இரங்கல் என்ற அதிகாரத்துள் சில பாடல்களோடு முற்றுப் பெறுகிறது. ஏடுகள் மிகச் சிதிலமாக வுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

எண்ணிய வெண்ணியாங் கெய்துவ கண்ணுதல்
பவள மால்வரை ......ந்த
கவள யானையின் கழல்புணி வோரே.

நீலமேனி வாலிழை பாகத் தொருவன்
இருதா ளிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே.

* * * *

End :

(இரங்கல்)

இரவலர் வம்மி னெனவிசைத்த லின்றிப்
புரவலன் மாய்ந்துழியும் பொங்கும்—உரையழுங்க
வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்கா
தோற்கண்ண போலுந் துடி.

(தகடூர்)

No. 2034. PURA-T-TIRATTU-C-CURUKKAM

[TEXT]

புறத் திரட்டுச் சுருக்கம்—[மூலம்]

[1229]

Size, $12\frac{3}{4}'' \times \frac{1}{2}''$. Pages, 144. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a summarised edition of Purattirattu described in No. 2031.

Complete.

குறிப்பு : இது 2031-இல் விளக்கப்பெற்ற தொகுப்பின் சுருக்கம்போல் காண்கிறது. தொகுத்தவர் பெயர் முதலியன அறிதற்கூடவில்லை ; இப்பிரதி முற்றுமுள்ளது. 753 செய்யுள்களையுடையது. முதலில் 5 ஏடுகள் முதல் இறுதி ஓரங்கள் ஒடிந்துபோய் உள்ளன.

பூர்த்தி.

Beginning :

மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா னாதி......... யானென் றயருமா
லூர்திரைநீர் வேலி யுலகு.........

(முத்தொள்ளாயிரம் 1)

மதிமன்னு மாயவன் வாண்முக.........குங்
கதிர்சேர்ந்த ஞாய(யி)று சக்கர மொக்கும்
முழுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னெதிர்மலர்மற் றவன்கண்டு............பூவைப்
புதுமல ரேய்க்கும் நிறம்.

* * * *

End :

ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும். 25

Colophon :

ஆக, காமத்துப்பால் (90) ஆக அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் வகை (3)-க்கு வெண்பா விருத்தம் பஃறொடை. ஆசிரியர் அகவற்பா (753) புறத்திரட்டுச் சுருக்கம் முற்றும். சிவகடா(க்ஷ)ம் உண்டாகும். 1048-௵ ஸ்ரீமுக-௵ சித்திரை-௴ 21-௳ திருநெல்வேலியிலெழுதி முடிந்தது. நீடூழிகாலம் வாழ்க நன்றாக.

Section X - KATHAIKAL

பகுதி 10 - கதைகள்

No. 2035. KATĀ CINTĀMAṆI—[PROSE]

கதா சிந்தாமணி [வசனம்]

[1034]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 96. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This prose work contains 32 stories; (Mariyadai Raman's 22, and Royar Appaji's 11) generally going by the name Tenali Rāman's stories.

Complete.

குறிப்பு: *இது, தெனாலிராமன் என்னும் மரியாதை ராமன் கதை. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் இரண்டு பாகமாகவும், முதல் பாகத்தில் மரியாதைராமன் கதை இருபத்தொன்றும், இரண்டாம் பாகத்தில் இராயர் அப்பாஜி கதை பதினொன்றுமாக 32 கதைகள் உள்ளன.*

பூர்த்தி.

Beginning:

மரியாதைராமன் கதை

திருடர்கள் நால்வருள் ஒருவன் மற்றவரை மோசஞ் செய்தது.

நாலு பேர் திருடர்கள் ஒருபட்டணத்தில் ஒரு கிழவி வீட்டிலே இறங்கித் தாங்கள் திருடிப்போனதுவில் வைத்திருந்த உடைமைகளையும், பணங்களையும் ஒரு தவலையிலே போட்டு மேல் முத்திரையிட்டு நாங்கள் நாலு பேருமாக வந்து கேட்கும்போது இதைகொடு. அதுவரையில் பத்திரமாகப் புதைத்து வையென்று கொடுத்துச் சில நாள் அவள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

*   *   *   *

End:

பாச்சாவானவன் அப்பாஜி துணையாயிருக்கிற வரையில் இராயரைச் சண்டைபண்ணி வெல்லக்கூடாது, ஆகையால் மோசஞ்செய்து வெல்ல வேண்டுமென்று நினைத்து விரைவானவைகளாக ஆயிரம் குதிரைகளுடன் ஆயிரம் சேவகர்களை ஆயுதங்களை மறைத்துக்கொண்டு அக்குதிரை விற்பவரைப்போலப் போய் மோசஞ்செய்து இராயரைப் பிடித்துக்கொண்டு வரும்படி அனுப்பினன். அவர்களும் குதிரைகளைக் கொண்டுபோய் இராயர் பட்டணத்திற்கு.........

No. 2036. KAPILAI-K-KATAI—[TEXT]

கபிலைக் கதை—[மூலம்]

[230]

Size, $15\frac{3}{4}'' \times 1''$. Pages, 98. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a story in verse of a Cow which maintained its promise to a Tiger and offered itself as the other's food. This Mss. is incomplete. The author seems to have been a court poet of a chieftain in Kongu Nāṭu.

Incomplete.

குறிப்பு: இது, சத்தியம் தவறலாகாது என்ற நீதியைப் போதிப்பது. ஒரு கபிலை தன்னையுண்ண வந்த புலியை நோக்கிக் கன்றுக்கு பால்கொடுத்து வருகிறேனென்று சொல்லி மீண்டு வந்தது. அதுகண்ட புலி அதனையுண்ண மாட்டேனென்ன, பசுவாதாட அதனை நாரதர் ஈசுவரனிடம் சொல்ல அவர் அவற்றிற்கு நற்கதியளித்தனரென்பது. இந்தப் பிரதி 'தக்கைப்பாட்டு' செய்யுள் நன்றாக இல்லை. பிழைபடவுமுள்ளது. பூர்த்திபெறவில்லை. 99 செய்யுட்கள் உள்ளன. அச்சிடப்பெற்றதுமன்று.

அபூர்த்தி.

Beginning :

சீர்சிறந்த கபிலைகதை தெரிந்துதக்கை தனிலுரைக்க
பார்சிறந்து கேட்கும்வண்ணம் பனுவலுடன் பாடுதற்கு
சீர்தளையு மென்தொடையுஞ் சிதறாமற் செம்மையுடன்
கார்சிறந்த மேனி கணபதியே காத்தருள்வாய். 1

*   *   *   *

குவலையமேன் காவேரி சூழ்கொங்கு நன்னாடன்
சிவநெறி சேர் பில்லகுலன் சேம்பனிட திருப்பேரன்
மவுலிபுனை வேங்கைபேர்கோன் வரையெனுமா மதிப்புலவன்
கவ்வெபிலை கதை பாடினதை காசினியோர் கேளுமெல்லாம்.

*   *   *   *

வந்த கபிலை தன் முகம்பார்த்து
    வண்ணப் புலிவேந்த னேதுசொல்லும்
எந்தப் பசுக்களு மென்னைக்கண்டால்
    ஏங்கிவாய் விட்டுக் கதறி நிற்கும்
முந்த மொழிந்தது தப்பாமல்
    முன்னை யென்னைத்தின் னென்று சொல்லி
சிந்தை தெளிந்து முகம் பார்த்துத்
    திடமாய் நின்றாயே காரர்வே. 901

*   *   *   *

End :

நடுபவ முனிக்கோர் வார்த்தை சொல்லி
    நாடு நகரியும் பறிகொடுத்து
வடவ னாகியே காசியிலே
    மனைவியும் பிள்ளையும் மாறிவிட்டு
புடவி காவலன் அரிச்சந்திரன்
    புலையன் வீட்டி லடிமைபட்டு
சுடலை நிலந்தன்னைக் காத்ததுவுமஞ்
    சொர்க்கம் பெற்றதுவுங் கேளாயோ. 909

No. 2037. CĪVALAMARAṈ KAṬAI—[TEXT]

சீவலமாரன் கதை—[மூலம்]

[1112]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 188. hLines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Cīvala Māran was a Pandya chieftain and his several exploits and gifts to his land are sung in this work of 918 stanzas by one Citampara Nātan son of Mailērum Perumal. The work is not printed. There are several gaps in the work which has to be filled up.

Incomplete.

குறிப்பு: இது, பாண்டியவரசர்களில் ஒருவனுடைய கதை; செய்யுளாக எழுதப்பட்டுள்ளது. இயற்றியவர் சிதம்பரநாதக் கவிஞர் இப்பிரதி முற்றுமுள்ளது. இது அச்சானதாக தெரியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

ஆறுமுகம் துணை.

ஹர:

சீவல்மாரன் கதை

மன்னவர் மன்னவர் வேந்தன்
வழுதி பராந்தக னவர்குமரரன்
தென்னவர் தங்குல தீபன்
சீவல மாரன்கதையைத் திருந்தச் செய்தான்
மன்னவர்தம் பெருவாழ்வு மயிலேறும்
பெருமாள் .... பாலன்
கன்னவிலுந் தடம் புயவேல்
சிதம்பரநாதன் கவிதைக் கருணையாலே.

ஆறுமுகன் துணை]

சீவலமாறன் கதை நகர்ப்படலம்

ஓதநீருலக மொருகுடை நீழ.........
பொதுக்கடிந்து துலை......... புரந்து
சீதமா மதியின் குலமெல்லாம்
விளக்குஞ் சீவலமார னென்றுரைக்குங்
காதல்கூ ரரசர்க் கரசனாண்ட ளிக்குங்
கன்னிநாட் டுயிரெனக் கவினு
நீதியு நிறையு மறிவெனப் பொறையு
நிகழ்திரு நெல்லைமா நகரம். 1

* * * *

End :

செய்ய வார்புகழ்ச் சீவலமார னற்சரிதை
வைய மீதினிற் கற்பவர் கேட்பவர் மகிழ்வோர்
துய்ய போகங்கள் யாவையு முறைமுறை துய்த்துத்
தையல் பாகன்றன் றுமனைத் தாளிணை சார்வார். 89

திருக்கயிலாயப் படலம் முற்றும்.

ஆறுமுகம் துணை.

சீவலமாரன் கதை முற்றும்.

Colophon :

ஆக விருத்தம்........... 918-க்கு துந்துபி-ஸு சித்திரை-மீ 28-உ (28)ல் எழுதி முடிந்தது. இந்தக் கதையில் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், திருவவதாரப் படலம் முதலானதும் இதல்லாமல் சிறிது படலத்திலே நடு நடுவே சிறிது ஏடும் மேற்பாடத்திலே விழுந்திருந்ததினாலே எழுதுபடவில்லை. இதற்கு வெள்ளேடும்........ ஏட்டடவிலே போட்டிருக்குது. மேற்பாடம் விசாரித்து வாங்கி யிவ்வளவும் எழுதிச் சேர்த்தவர்கள் புண்ணியமும் புகழும் அடைவார்கள். இந்தப் பொத்தகத்திலிந்தத் தொண்ணூற்று நாலாமேட்டிற் பின்புறத்தில் முதல்வரி முதலெழுத்தும் இரண்டாம்

வரியில் மூன்றெழுத்தும் மூன்றும் வரி முதல் அஞ்சாம் வரி வரை முதலெழுத் தொவ்வொன்றும் கூட்டிப்பார்த்தால் இந்த ஏடெழுதி னவன் பேர் துலங்கும்.

No. 2038. PAÑCA TANTIRAM—[PROSE]

பஞ்ச தந்திரம்—[வசனம்]

[1246]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 194. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains the Tamil prose version of the famous Sanskrit work Pañca Tantra. The translator is one Vidwan Tañtavarōya Mudaliar. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு: இது, நீதி சாஸ்திரக்களைச் சுருக்கி மித்திர பேதம், சுகிர் லாபம், சந்திவிக்கிரகம், லப்தஹானி அசம்பிரேக்ஷிய காரித் துவம் என்று ஐந்து தந்திரங்களாக்கிக் கதைகள் மூலம் கூறுவது. பாடலிபுர மென்னும் அரசன் சுதரிசன னென்பான் புதல்வர்களுள் கல்வியில்லாத மூடர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொருட்டுச் சோம சன்மா என்பவன் கூறியதாகக் கூறுவர். இதனை வசனமாக எழுதி யவர் வித்வான் தாண்டவராய முதலியார் என்று அச்சுப் பிரதியால் தெரிகிறது. இப்பிரதி முற்றுமில்லை. முதலில் 7 ஏடுகளில்லை.

அபூர்த்தி.

Beginning:

..........மந்திரிமார்களே நீங்கள் நம்முடைய மந்திரிகளா யிருந்து இத்தனை காலம் என்னுடைய சமுகத்துக்கு வாரா்த்தை போன்றும்..........கேட்கத் தமரகன் பின்னையும் கும்பிட்டு சுவாமி நீர் ராசாவானதின் பிறகு காட்டி லிருக்கிற மிருகங்களெல்லாம். உமக்கு மந்திரியானது க . ...ண்டு நாங்கள் வாராமல் இருந்தோம் இப்போ காரியமுண்டான படியினாலே வந்தோமென்று சொல்லி நீங்கள் ஆற்றிலே தண்ணீர் குடிக்க வராமல் ஏதனாலேயிருந்தீர்கள்

அச்செய்தி எங்களுக்குத் தெரியச்சொல்ல வேணுமென்று கேட்க ராசாவான சிங்கம் மந்திரிமார்களைப் பார்த்து நாம் ராசாவாயிந்தக் காட்டிலே இத்தனை காலமிருந்தோம்………………

No. 2039. PUṈṈAI-VAṈA-P-PŪPĀLAṈUKKU UPATĒCA-K-KATAIKAḶ—[TEXT]

புன்னைவனப் பூபாலனுக்கு உபதேசக் கதைகள்—[மூலம்]

[414-A]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 8. Lines, 4 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: The Mss. contains only a few pages of a bigger work which contains in verse moral and ethical teachings based on the stories in Purāṇas and Itihācas. The stanzas are addressed to the king of Puṉṉai Vaṉam.

Incomplete.

குறிப்பு: இது புன்னைவனப் பூபாலன் என்னும் அரசனுக்கு நீதி கற்பிக்கும் பொருட்டுத் தேவேந்திரன் கதை, தானவர் கதை, கம்பன் கதை, அருச்சுனன் கதை, முதலிய கதைகளைக் கொண்டு பாடலாக எழுதப் பெற்றது. எழுதியவர் பெயர் முதலிய குறிப்புக் கள் கிடைக்கவில்லை. இப்பிரதி முற்றுமில்லை, ஏடுகள் சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

தேவேந்திரன் கதை

தூயோர் மனைப்பகையாற் றுன்பன்றுத் தஞ்சமென்ற......
கேயினையுந் தேவேந் திரனிகழ்ந்தே—ஞாயம்பார்
மாதுங்கா புன்னைவன மன்னவா அஃதறிந்து.....
தேதுன்பத் துக்கிடங்கொ டேல்.

*　　*　　*　　*

End:

...........மன்கதை
வாலிகெட ராமனொரு வாளிதொட்ட வெம்பழியை
மேலோர்சென் மத்திலன்றோ மீண்டுகொன்றான்—ஞாலமதில்
வல்லவனே புன்னைவன நாதா யாரெனினும்
ஒல்லை கெடுப்ப தொழி.

No. 2040. VIKKIRAMĀTITTAṈ KATAI—[TEXT]

விக்கிரமாதித்தன் கதை—[மூலம்]

[244]

Size, 14″×1″. Pages, 78. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is a Tamil version in metre of the famous story of Vikramāditya. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு: இது விக்கிரமாதித்தன் கதை செய்யுளால் செய்யப்பட்டதாகும். இயற்றியவர் முதலிய விவரங்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை. இப்பிரதி முற்றியுள்ளதாகத் தெரிகின்றது. ஆயினும் ஏடுகள் எல்லாம் ஓரங்கள் ஒடிந்தும், புள்ளி விழுந்தும் கையில் தொட வியலாததாகவும் உள்ளன. எழுத்துக்களும் மறைந்துள்ளன. தொடக்கம் இன்னது என்று காணவுமியலவில்லை.

அபூர்த்தி.

Beginning:

இரண்டாவது மந்திர......பதிகதை
வீரதத் துவமெனு மாமயிலு மிக... . யிருக்குடஞ்
சேரு நற்கொடி சிலம்புவிரண்டெனு மோர்திருமுகத்தழகு
[பெரு... ..

ஆரொருத்தர் தினம் அ...... பகலும் அதிவிதத்தினொரு
[துதிசெய்தா
சூரணத் துரை செய்கையும் வெலுமெதிர் தோற்றுமே
[வினையை மாற்றுமே.

* * * *

End :

ஏத்தி மன்னவனை நோக்கி இதமயல்பேசி நின்று
தீர்த்தயாத்திரையாய் நான்தான் சென்றுமீண் டருள்வேன்
......தையுந்தான் மகளிட வருகேவைத்துக்
காத்துநீர் கொள்க வென்று காட்டியே கொடுத்துப் போனான்.

No. 2041. VĪRA MĀRAṈ KATAI—[PROSE]

வீர மாரன் கதை—[உரைநடை]

[1038]

Size, 18″×1″. Pages, 106. Lines, 4 on a page. Condition, Good. Appearance, Old.

Note: This is a story in prose of a king called VIra Māran king of Vijayanagar. It is interpersed with riddles, lIt bits, etc. and ends with the crowning of 2 princes as the kings of Cantra-giri.

Complete.

குறிப்பு: இது, ஒரு அரசன் கதை. நந்தன் சாம்பானுக்கு ஆட்சி யளித்ததாக இறுதியில் கூறப்படுகிறது. இடையிடையே விடுகதைகளும், விடைகளும் செய்யுள் வடிவிலுள்ளன. வசனத்திலுள்ள வாக்கியங்கள் பிழைபடக் காணப்படுகின்றன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

அர்ப்பணியுஞ் செஞ்சுடையா ரரிவை பாகத்
தமர்ந்தருளும் ஐங்கரன்ற னருள்தன் ஞலே
செப்பரிய விசையநகர் வீர மாறன்
செயமான கதையை யிந்த செகத்திற் சொல்ல
கற்புடைய கலைமடந்தை யுபய பாதக்
கமலமலர் சிந்தையினிற் கருதி நன்ருய்
சொற்புலவர் பெரியோர்கள் பாதம் போற்றி
துதிபரவு மிக்கதையைச் சொல்கின்றேனே.

விசையநகர மென்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்துக்கு வீரதுரந்தர னென்றொரு ராசாவுண்டு. அந்த ராசாவுக்குத் தத்துவப் பிரகாச னென்றொரு மந்திரி யுண்டு. அந்தப் பட்டணத்திற்கு இரும்பினலே கோட்டையும், பாதாளகெசமாகிய அகழியும், கோட்டைக்கு நாலு வாசலும் வாசலுக்கு நூறு நூறு கிங்கிலியரைக் காவல் வைத்து, மகம் மேருவுக்கு ஒப்பாகிய உப்பரிகையும் வாசலுக்கு வாசல் பராக்கிரமமுள்ள வீரர்களைக் காவல் வைத்து இருக்கும் கொலுமண்டபத்துள்ளே, இருக்கிற சம்பிரமம் என்னவென்ருல்,

* * * *

End :

தான் பிறந்து சமர்த்தனுய் ராசராசாக்களைச் செயித்து அவையார் வந்து துணையிருந்து காப்பாற்றினதும், இதுகளெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லச்சே ராசாவுங்கேட்டு அதிசயப்பட்டு, நந்தி சாம்பானுக்கு வேண்டிய வரிசையும் பட்டுபட்டாவளியுங் கொடுத்து ஆதீனத்தை உண்டாக்கி நிலை நிறுத்தி வைத்தாயே வீரமாறன் வேறு நீ வேறல்ல. நீங்கள் இரண்டு பேரும் நமக்குப் பிள்ளைகள். இந்திர பதவியாய் இருங்கோளென்று வாக்கிட்டு, நந்தி சாம்பானுக்கு சந்திரகிரி பட்டணம் பட்டங்கட்டி அதிகாரங் கொடுத்து அனுப்பிவைத்தா ரென்றவாறு.

மன்னவர் வாழி வாழி வையகத் தோர்கள் வாழி
சந்நிதி முன்னே நின்ற சங்கீதக் காரர் வாழி
முன்னதா மறைக ளோது முதறி வாளர் வாழி
சொன்னசெந் தமிழ்பு கன்ற துதிபெறு வாணர் வாழி
மன்னனும் வீர மார மன்னனும் வாழி வாழி.

மங்கள வீர மாரன் வளர்ந்திடு கதையைக் கேட்டோர்
திங்களைத் தரித்த நாதன் திருவருள் மிகவுண் டாகும்
பங்கய மாதும் சேர்வள் பாக்கியம் பெருக உண்டாம்
தங்கமாஞ் சிவிகை யேறித் தரணியை யாள்வர் தாமே.

Colophon :

விரோதிஹு ஐப்பசிமீ ஆதிவாரம் உத்தர நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் எழுதி முடிந்தது.

No. 2042. VĒTĀḶA-K-KATAI—[TEXT]

வேதாளக் கதை—[*மூலம்*]

[183]

Size, $13\frac{7}{8}'' \times 1\frac{1}{8}''$. Page, 226. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note : This Mss. contains the story of Vētāḷa who helped and served. The king Vikramādity. The work has been printed. The Mss. is very much injured and is also not complete.

Incomplete.

குறிப்பு : *இது விக்கிரமாதித்தன் கதையில், வேதாளம் விக்கிரமாதித்தனுக்குக் கூறும் 24 கதைகள் என்று தெரிகின்றது. செய்யுளாக இயற்றியவர் மதுராதிபன் என்னும் புலவர். இப்பிரதி முழுதுமில்லை. எழுத்துக்கள் தெளிவாயில்லை. ஏடுகள் சிதிலம்.*

அபூர்த்தி.

Beginning :

சீரிதாக வித்தை ஒத்திற் றிங்கண்முன்மாரி
போ............மறைகள் விளங்கவே
............வரங்க டழைத்திட
பாரி லிக்கதை பாட லுற் றுமரோ.

பெருக்க மாகியதோர் பெரும்பேற்றி னோருக்கே
வாய்கொடு ஊறிவா போலவே
தடுக்க நாவலர் சன்னதி தன்னில்யான்
பொருக்கெனச் சொல்லும் புன்சொலும் தானரோ. 2

*   *   *   *

End :

நன்னுத லதுதான் கேட்டே நன்றிதே கருமமென்றாள்
மன்னனுந் தேவிதானும் மகளு மூவருந்தான்
அன்னிய தேசனோக்கி யடவியி லெய்துங்காலை
துன்னியே சோரர் வந்து சுற்றிலும் வளைந்து கொண்டார்.

———

Section XI - HISTORY

பகுதி 11 - சரித்திரம்

VILĀCAM—விலாசங்கள்

No 2043. RATTIṈAKARA VILĀCAM

இரத்தினகர விலாசம்

[159]

Size, 14½″×1¼″. Pages, 54. Lines, 8 on a page. Condition, Good. Appearance, New.

Note: This is a quasi—historical work on Vaṭakarai Periacwāmi Maharaja by Tirumalai Vēlu-p-piḷḷai.

Complete.

குறிப்பு: இது, வடகரை பெரிய சுவாமி மகாராசன் மீது ஷைடியூர் திருமலை வேலுப்பிள்ளை இயற்றியது. அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முழுவதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

மண்டலா திபர்கொண் டாடு மன்னவன் பெரிய சுவாமி
கொண்டல்போற் கனக மாரி கொடுத்தருள் முகுந்தன் மீதே
யெண்டிசை புகழுங் கீர்த்தி யிரத்தின கரவிலாசம்
தண்டமிழ்க் கொருகோட் டுச்சித் தந்தியைச் சிந்தை
[செய்வாம்.

கார்பொ ருந்திய சீர்சி றந்தசி
யாக யோக தயா பரன்
கமல மண்டப மயில்வி ரும்பிய
மருமணம்புய பூதரன்

ஏர்பொ ருந்திய கோடி மன்மத
    ரூப சாருவ பூமனீ
ளெண்டி சைக்குளுயர் மண்ட லத்தரசர்
    கண்டுதெண்டனிடு கொலுவினுன்
ருர்பொ ருந்திய வீர ராகவ
    ராம சோமகிரு பாகரன்
றந்தி யென்றுமினி யஞ்ச லஞ்சலென
    வந்து வந்தருள் செய் செம்புலிப்
பேர்பொ ருந்திவள சின்ன ஊஞ்சபெரு
    மாள்மகிபதி வரோதயன்
பெரிய சுவாமியிரு பத்தி யான துரை
    பெரிய சுவாமிமக ராசனே.

மாலைக் கனவு தவருமல்
    மாலைத் தவளப் புயனெனது
மாலைத் தவிர்க்கப் புலரியினில்
    மாலை போல வெவர்மனமுஞ்
சாலக் கண்ணுங் குளிர்ந்திடவென்
    சாமி தனையே தெரிசித்தேன்
தவமெய்ந் திதயா தருமந்தனிச்
    செங்கோ லுதரமா வென்றி
சீலத் தினையு மிகப் புகழுந்தென்
    றிறற்செம் புலிசின் னணஞ்சேந்திரன்
செல்வன் பெரிய சுவாமிரண
    சிங்கஞ் செங்கை யாலெனது
மேலைத் தடவி நவநிதியம்
    வேண்டும் வரிசை கொடுத்திரதி
வில்வேள் போலக் கலந்திருந்தான்
    விளங்கு மிரத்தி னகரமே.

வாழி திறற்செம் புலிப்பட்டம் வாழி கிழவை வடகரையும்
    வாழி துரைச்சின் னணஞ்சேந்திரன் மைந்தன் பெரிய
        [சுவாமி யெங்கோன்
வாழி யவன்கைக் கட்டாரி வாழி துளைச்சங் கரலிங்கம்
    வாழி ராம சாமிமுகில் வாழி முத்து சாமி நிதி

வாழி திரும லைப்பெருமாள் வாழி புகழ்ச்சங் கரலிங்கம்
மால்முத் திருளப் பன்பெருமூ வாளிமந்தி ரத்தலைவர்
வாழி கிளைதன் மக்கள்மரு மக்கள் சேனை பரிவாரம்
வாழி தரும நீதிசெங்கோல் வாழி யிரத்தி னுகரமே.

Colophon :

வடகரை பிரதானி பொன்னம்பலம் பிள்ளை பௌத்திரராகிய திருமலை வேலுப் பிள்ளை பாடிய இரத்தினுகர விலாசம்.

No. 2044. IRATTINĀKARA VILĀCAM—[TEXT]

இரத்தினுகர விலாசம்—[மூலம்]

[969-G]

Size, $14\frac{3}{4}'' \times 1''$. Pages, 36. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a different work from the one described in the previous No. 2043 with the same name and is on the God at Kuṟṟālam.

Incomplete.

குறிப்பு : இது, குற்றாலலிங்கர்மீது இயற்றப்பெற்ற அமுதசஞ்சீவினிய இரத்தினுகர விலாசம் எனத் தெரிகிறது. 14 செய்யுட்கள் இந்தப் பிரதியில் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

அரும்பியிர்செண் பகவனைக்குற் றாலலிங்கர் மீதில்
லமுதசஞ்சீ வினியரத் னுகரவிலாசப்
பெரும்புகழ்ப்பிர பந்தம்ரசக் கரும்புநுனி யரும்பு
பேரமுத மெனப்பெரியோர் பேசவாக் கருள்வான்

குரும்பைமுலைக் குறத்திமணங் கூட்டிவைப்பத் திலஞ்சிக்
குமரனுளங் கவித்திறைஞ்சக் கோட்டுவா ரணமாய்த்
திரும்பவுமவ் வுருமுகமுங் கருணைபொழிந் திலங்கத்
திரிகூடத் தினிதுறைசெண் பகவிநா யகனே. 1

* * * *

End:

கோப்புக் கவட்டுத்தளிரிலைப் பூச்சேர்
கோதை யடம்பு தாழை புன்னை
கூர்முட் சுருக்குப் பனைமடற் கள்.........
.... புளினம்
பார்ப்பி னங்குரு கேயன்றில்தாரா
வளங்காக் கையறு காலிற்குவளைக்
கொட்டி சேதாம்பல் நெய்தல் தாமரையே
துப்பு முள்ளே போது தாது
குக்கு மிதளே யரும்புகளே
சுரையே வரையே கரையேசெந்
துகளே திசையே வந்துகளே
உப்பளவரே பாத்தியரே யுதவு
மகவேந் தன.........
யுயர்குற் றால நாதர்வரை
யுத்தி யேசந் துரையாயே. 44

No. 2045. CAMUTTIRA VILĀCAM—[TEXT]

சமுத்திர விலாசம்—[மூலம்]

[474]

Size, $15\frac{1}{8}'' \times 1''$. Pages, 60. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is a work on the greatness of the heart of Vēnkatēcwara Ettēntiram, the Raja of Civa-Kañka. The Mss. is very much injured.

Complete.

குறிப்பு: இது, வெங்கடேசரெட்டேந்திரன் என்னும் ஓர் பிரபுவின் மீது அவனுடைய கீர்த்தியை வைத்துப் பாடப்பட்டதாகும். 100 ஆசிரிய விருத்தங்களாலாகியது. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறிதற்கூடவில்லை. இப்பிரதி முற்றுமுள்ளது. எல்லா ஏடுகளும் முதற் பாகத்தில் செல்லரித்து விட்டதனால் செய்யுள்களின் முழு உருவம் அறிய முடியவில்லை.

பூர்த்தி.

Beginning :

.........குஞ்சரணன் வேங்கடேசுரெட் டேந்திரன் மீதில்
ஒருதிட புருடன் கீர்த்தி யுயர்சமுத் திரவிலாசம்
.........முந்தமிழாற் சொன்னேன் கயமுகத்தானை வீழப்
பொருதிடக் கலையதாக்கும் புகர்முகக்களிறு காப்பாம்.

.........ந்திய மேன்மை தங்கிய பார திண்புயமுதான
பங்கயாசன மங்கை மேவிய சங்கபாணி நிகர்த்தவன்
.........ாருந்திய வேலெடுத்த குமராயெ(எ)ட்டன் வரத்தினால்
குவலயத்த ரசுசெய முளைத்தநயகுண விதட்சண
[விவேகவான்
......ரருந்திய கொடையி னுைமுரு கண்டுமாதர்மட லெழுதவே
காமனைப் பொருது சோமனைக் குடைக விந்த
[ராசதுரந்தரன்
.........ருந்தியதாரு வின்புடை மேவு மிந்திர னுகவே
வெங்க ராசல தந்தி லேறிய வேங்கடேசுர எட்டனே. 1

* * * *

End :

கண்ட கனவுந் தப்பாமற்
காமன்கணை யுந் தப் பாமல்ற
கண்ணே விழிக்குமுன் னவனைக்
கண்டே னிளசை மன்னவனைக்
கொண்ட லெனவே தெரிசித்தே
கொண்டே னதுவுந் தெரிசித்தேன்

கோமான் வேங்க டேசுர ரெட்டன்
கொடையைப் புகழ்ந்தே னெனைப்புரக்கு
மண்டலீ கன்வாழி யவன்மகவான செகவீ......
யமைந்தான் வாழி வாழியெங் கோனணிந்த
[வாழி வாழியதே. 10

சமுத்திர விலாசம் முகிந்தது.

முற்றும்.

No. 2046. CIVAKAṄKAI-T-TIRUMUKA VILĀCAM—[TEXT]

சிவகங்கைத் திருமுக விலாசம்—[மூலம்]

[397]

Size, $15\frac{3}{4}'' \times 1''$. Pages, 64. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is an account of the Kings of Civa Kaṅka. The author is Tonti Liṅka-K-Koḷantai Nāvāṇar.

Complete.

குறிப்பு: இது, சிவகங்கை சமஸ்தானத்தைப்பற்றியது. முற்றுங் கலிவெண்பாவால் கூறப்படுகின்றது. முதற்கண் முருகக் கடவுளது திருவவதாரச் சிறப்பும் அவரது மற்றைப் பிரதாபங்களும் கூறப்பட்டுள்ளன. பின்னர் இச்சமஸ்தானாதிகதிகளைப் புகழ்ந்து கூறுகின்றது. இயற்றியவர் தொந்திலிங்கக் குழந்தை நாவாணர். இப்பிரதி நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

கார்பூத்த மாதவனுங் கஞ்சமலர் வேதியனுஞ்
சீர்பூத்த வாய்மையுடன் தேடவே—பேர்பூத்த
சங்கரனு மாதிபரா சத்தியும் வெள்ளிவெற்பி
லங்கமிரண் டொன்று யமைந்தருளி—யிங்கிதமாங்

தேவரியலாற் றிருக்கலியா ணந்தொடங்கித்
தாவரிய யி(இ)ன்பந் திளைக்குநாட்—காவலெயில்
வீரமா(ம) யேந்திரபுர மீது தவத்தா.........
ஈரமா வென்றோர் திறலரக்கன்—போரடர்த்து
இந்திரனை யுஞ்சிறையிட் டெல்லாரை யும்மடக்கித்
தந்திரமே பேசுஞ் சமர்க்கஞ்சி—அந்தரத்தோர்

*   *   *   *

End :

.........................பூதலத்தில்
தோற்றியத லைப்பாகுந் துப்பட்டா வும்புயத்தில்
சாற்றிய சாலுவையுஞ் சாதிரையுஞ்—தோற்றி...ற்றின
கண்டிகையும் வச்சிரக்க டுக்கனு மோதிரமுந்
தண்டிகையும் பாய்மாவுந் த......யொன்றுங்—பண்டிசைந்த
உப்பளமுஞ் செந்நெல்விளை யூரு முயர்குடையும்
சம்பளமுங் கம்பளமுந் தான்கொடுத்து—அம்புவியில்
உன்மீது மென்மீது முற்றபு கழைமிகு
சொன்மீது கொண்ட .... —மென்மேல்
திசைபெற்ற பூவுலகில் தேவேந் திரன்போ
லிசைபெற்று நீவாழ்ந் திரு.

.........வடித்த தாமரைவாழி மறையோர் வாழி
கார்வாழி போதகுருசாமி வீரக் காண்டீபன் செலுத்து
[செங்கோல்
.........வாழி, தமிழ்ப் புலவோர் பிற......... வாழி
பெருகிய வானினினம் வாழி பயிர்கள் வாழி கா.........
கங்கை சமுத்திரமாம் பூதலத்தில் மிகவாழி யென்றுந்
[தழைக்கத்தானே.

திருமுக விலாசம் முற்றும்.

சிவ கிருபை குமரேசர் பாதமே கதி.

No. 2047. MARUTŪR NĀTA CWĀMI PĒRIL PŪKOḶA VILĀCAM

மருதூர் நாத சுவாமிபேரில் பூகோள விலாசம்

[1000]

Size, $10\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 82. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work is on Lord Nāta Cwāmi at Marudūr. Here information regarding the Geography of the universe and allied matters are given. The work is incomplete. The author's name etc. are not known.

Incomplete.

குறிப்பு: *இது, மருதூர்நாதஸ்வாமி பேரில் பாடப்பட்டது. இதில் பண்டைய உலகப் பகுதிகளாகிய அதல, விதல முதலாகிய பாதாள உலகம், மகாமேரு பிரமாணம், சம்புத்தீவு முதலிய ஏழு தீவுகள் சிவதலங்கள விண்டுதலங்கள், கயிலை நவகோள்கள் நக்ஷத்திரங்கள், கந்தபுரம், அம்பிகாபுரம், மகாசிவலோகம் இவைகளைப் பற்றிய விவரங்கள் கூறப்பெறுகின்றன. செய்யுட்கள் முற்றும் கலிவெண்பாவாலானவை. ஆசிரியர் பெயர் முதலியவை அறிதற் கூடவில்லை. இப்பிரதி முற்றுப்பெறவில்லை. ஏடுகள் சில சிதிலம். இறுதி ஏடுகள் இல்லை. வேறு ஏடுகள் 2 உள்ளன. அவற்றிலுள்ள நூல் இன்னவென விளங்கவில்லை.*

அபூர்த்தி.

Beginning:

திருச்சிற்றம்பலம்.

அத்தி முகவன் கழல் வணங்கி
நாகலிங்கக் கடவுள் திருவடிபோற்றி
யுத்தமியா மழகிய நாயகி
பாதந் தொழு......... தியுலகிலாறு
வத்திரன்றன் சரண்பணிந்து சற்குரு
வினிணை மலர்த்தாண் மனத்துள்.........
வித்தக வாணியி னருளாற்
பூகோள விலாசமதை விளம்பலுற்றும்.

நாகலி...... பாதார விந்தமே துணை.

அழகியநாயகியம்மன் துணை.

திருச்சிற்றம்பலம்.

மருதூர்நாதஸ்வாமி பேரிற் பூகோள விலாசம்

பூரணமா யெங்கும் பு......ந்துநின்ற ரு......ளா
ஞரணங்க ளாலு மறிவர்யான்—நாரணனும்
அன்ன முயர்த்தோனுங் காணு வடிமுடியான்
பன்னற் கரிய பசுபதியான்—பொன்னின்
மலைவில்லா னொர்...... யான் மாதவரைக் காக்க
மலைவில்லான் வெள்ளி மலையான்—மெலியதிருக்
கண்டங் கறுத்தான் கருதுமடி யார்வினையைக்
கண்டங் கறுக்குங் கருணையான்—துண்டமதிக்

* * *

End :

....
பத்துக் கரமும் பதினைந்து நேத்திரமுஞ்
சுத்தமலர்த் தாளிணை யுந்தோன்றப்—பத்த
ருளத்திருக்குஞ் சோதி யொருபதுமப் பீடத்
தளத்திருக்கு மிந்தத் தரையோர்—உளத்தில்
ஒருகணமு நீங்காது யோகுநிலை யுற்றோர்
மருவு சிவரூபர் வடிவாகி—உருவிருவான்
சாரு......சிவலோகந்தனிலே தானமர்ந்து
சீராரு முத்தியினிற் சேர்ந்திடுவார்—நேரிதன்மேல்
............ங்கிண் மேலண்ட மொன்றின்
றென்னுயரங் கொண்டிருக்கும் யோசனையைக் கூறக்கேள்
[—விண்டிடுங்கிட்.

No. 2048. ORU PATTAYAM—[TEXT]

ஒரு பட்டயம்—[மூலம்]

[1241]

Size, $14\frac{1}{4}'' \times \frac{7}{8}''$. Pages, 12. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a grant of some properties to Sri Cokkanāta Cwami Temple at Kurichi at the time of Muttu Vīrappan. The document is not complete.

Incomplete.

குறிப்பு: இது, சரித்திர சம்பந்தமானது. மணியம்குறிச்சி சொக்கநாத சுவாமியார் கோயில் சாசனத்தைப்பற்றிக் கூறுவது. முத்துவீரப்பன் காலத்தது. மற்ற விவரம் ஒன்றும் அறியக் கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. எல்லா ஏடுகளும் ஓரத்தில் ஒடிந்துள்ளன.

அபூர்த்தி.

Beginning:

ஸ்வஸ்திஸ்ரீ மணயகாமண்டலேசுவரன் அறிய தளவிபாடன் பசைக்கு தப்பு வூராத கண்டன மூவரைய கண்டன் கடைஞு......... கொண்ட ஞடு குடாதானபூவதெக்ஷண உத்திரபக்ஷமி சந்த முத்திராதி யீனமும் கம்பளமுப்பலாப் பானமும் பட்டணமு......க் கேச வேட்டை கொண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுரன் ராமாற்(ர்)த் தாண்டன் ராச கெம்பீரன் ராசமனோப............ராசா கன தம்பிரான் உபைய குல அற்றன் உபயகுல வங்கிஷ(ஸ) உத்தமன் உத்தண்ட மண்டலாதி சுபன்.

* * * *

End:

யி(இ)து முதலான தெஸாம சோற(ர)ணஞதாயும் ஆருயிரம் பொன்.........ஆருயிரங்கல நெல்லும் நமகே வரி அங்கயற் கண்ணு ணுக்குச் சுவாதீனமாகக் கு(கொ)டுத் தோம் கோபந்தணிந்து நம்மு ......ய வாமபாகத்துக்கு வரவும் யி(இ)ந்த (தற்(ர்)ம பரிபாலி(ல)ன மாக நடத்தி வற(ர).

ஆல் போல தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கி......... போலச் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்கள்.

மீனாட்சி சுந்தரேசுவரர் துணையாக வேண்டியது.

No. 2049. [CIVAKIRI VARAKUṆA PĀṆṬIYA VAṈṈIYAR] TIK-VIJAYAM—[TEXT]

[சிவகிரி வரகுணபாண்டிய வன்னியர்] திக்கு விஜயம்

[மூலம்]

[425-B]

Size, $11\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 58. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work eulogising the Victories of king Varakuṇa Pāṇṭya of Civakiri. Other particulars are not traceable.

Complete.

குறிப்பு : இது, சிவகிரி வரகுணபாண்டிய வன்னியன் என்னும் அரசனது வெற்றியைக் கூறுவது. இயற்றியவர் முதலிய குறிப்புக்கள் அறியக் கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. ஏடுகளில் [illegible] விழுந்துள்ளதனால் எழுத்துக்கள் தெளிவாய் விளங்கவில்லை.

பூர்த்தி.

Beginning :

திக்கு விஜயப்பிரபந்தம்.

கடவுள் வணக்கம்

வரவுதிவர யுடுத்ததிக்கு விசயவிலா சம்புரிந்து
மேவா ரெல்லாம்
பரவுவர குணராம பாண்டியவன் னியன்புகழைப்
பரிந்து கூற
வுரககண பணமௌலி யொடுமதிய மடுசடில
வுமையான் மேவு
சரசவித மிகுசுகசுந் தரா'ம லிங்கர்பதந்
தலைக்கொண் டேனே.

* * * *

End :

வாழ்த்துதற் சிறப்பு

ஆசிரிய விருத்தம்

மருவுசில கிரிவாழி வரகுணரா மேந்திரனும்.........ழி கீர்த்திப்
பெருமைவட கிரிவாழி பெரியசுவாமியும் வாழிபெரியோர் வாழி
தருவனைய தென்னாட்டில் வாழ்.........தப்பன்மிகத் தழைத்துவாழி
யிருநிலத்து நான்மறையு மந்தணரு மெந்நாளும் வாழி வாழி.

திக்குவிசய முற்றுப் பெற்றது.

No. 2050. PŪNTUṞAI NĀTTAṈ KOṬUTTA MĒLŌLAI

பூந்துறை நாட்டான் கொடுத்த மேலோலை

[674]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 3. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This seems to be a confirmatory order on the grants of some lands to a temple.

Complete.

குறிப்பு : *இஃது ஒரு சாசனத்தைப் பற்றிக் கூறுகின்றது. இதனைப்பற்றி ஏனை விவரமொன்றுந் தெரியவில்லை. இப்பிரதி முற்று முள்ளது.*

பூர்த்தி.

Beginning :

பூந்துறை நாட்டான் கொடுத்த மேலோலை.

சுவஸ்திஸ்ஸ்ரீ மணாமகா மண்டலேசுரன் அரியாய விபாடன பரசைக்குத் தப்புவராய கண்டன கண்டனாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் மூவரிராய கண்டன கட்டாரீச் சாளுவ மீசுர

கண்டன துட்ட நிற்கிற (நிக்கிரக) சிட்ட பரிபாலன ஏமமண்டலமும் யி(இ)னமும் யி(இ)லங்காபுரியும் திறை கொண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தண்ட விராச வல்லவன் ராச புங்கவன் ராசகேசரி ராச நவரத்தின நாராயணன் துலுக்கர் தளவிபாடன துலுக்கர் மொகந்தாவி முத்தாயிரனது பராமன் துஷ்ட நெட்டூர கொட்டார கொலாசலன மதியாத மன்னர் மகுடஞ் சிதாப்பதி சூரை கொள்ளும் பரசூராமன் யுதபதி கேசபதி நரபதி நவகோடி நாராயணன்...............கலிங்கர்.

* * * *

End :

...........விசைய மங்கலம் வடமலைக் கவுண்டர், திங்களூர் சிதம்பர கவுண்டர் புங்குலிக்க நாடு வெளராசி அவுஞசிக் கவுண்டர் கண்மயங் கோவில் துடையானை தண்டா ஆறுநாடு மக்காவுண்டா சோழியாக் கண்ட கவுண்டர் சத்திமங்கலங் தளஞ்சண நல்லூர ரங்கப்ப ஞய்க்கர் தலதாரில் எல்லாரி மாரத்தா தளவாய் திருமலை நாயக்கர் சாட்ஷி(சி) இந்த மேலோலை தலத்துச் சம்பிறுதி திருவா ளிப்பிள்ளையன் கையெழுத்து. பெரியோர்கள் பொறுத்தருளவும். அளப்பிச்சான் முதலி பிரப்பஞன் சின்னையான் பட்டாபி பொட்டன் தீததரன், சரக்கணன் செங்கோடன்.

No. 2051. MAṬURAI-T-TALA VARALĀṞU

[PROSE]

மதுரைத் தல வரலாறு—[வசனம்]

[894]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 66. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This Mss. gives an account of the city of Mathurai from the earliest times to Caka 1722 when the city came under the rule of the East India Company.

Complete.

குறிப்பு : இது மதுரையைப் பற்றிய சரிதத்தை விளக்குவது. இந்தப் பிரதியில் ஆங்கில அரசாங்கம் ஏற்பட்ட வரையில் உள்ளது.

பூர்த்தி.

Beginning :

ஸ்ரீமது சகல லோக சிருஷ்டி திதி சங்கார காரணஞ யிருக்கிற ஸ்ரீபரமேசுவரனுடைய கருணையினாலே சகல சீவாத்து மாக்களையும் பிறப்பி விக்கிற நிமித்தியம் பிரம்ம தேவரை உண்டு பண்ணினார்.

அந்தப் பிரம தேவருக்கு வயசு எவ்வளவு என்றால், மனுஷர் கள் கண் சிமிட்டுகிற நேரம் ஒரு நிமிஷ மென்று பேர். அந்த நிமிஷம் பதினஞ்சு கொண்டது ஒரு காட்டை யென்று பேர். காட்டை முப்பது கொண்டது ஒரு கலை என்று பேர். கலை 30 கொண்டது முகூர்த்த மென்று பேர். இந்த முகூர்த்தம் 30 கொண்டது ஒரு நாள் ஒரு நாள் 35 கொண்டது பட்சம் 1 இந்தப் பட்சம் 2-க்கு மாசம் 1. இந்த மாசம் 2-க்கு இருது 1. இந்த இருது 3-க்கு அயனம் 1. இந்த அயனம் இரண்டு வருஷம் 1. இப்படி மனுஷ வருஷம் 390 கொண்டது தேவர்களுக்கு வருஷம் 1.

* * * *

End :

தாரணஞு புரட்டாசிமீ வரைக்கும் ஆளும் வரையில் சென்னைப்பட்டணம் வெள்ளைக் காரரில் மேஸ்தா கர்னல் பிரஷ்னும் சிறு செனங்களும் நவாபு சாயபு அவர்களும் மாபோ கானவர் களும் சேதுபதி உடையார்த் தேவன் தொண்டைமான் பின்னும் பாளையப்பட்டு ஜெனங்களும் வந்து மதுரைக் கோட்டையை வளைத் துக் கொண்டு சண்டை பண்ணி கான்சாயபுவைப் பிடித்துத் தூக்கிலே போட்டு மதுரைச் சீமைக்கு அவரால் கான்சாயபு அவர் களுக்கு வெகுமதி பண்ணி, கோவில் சம்புரோட்சணைக்கு ஐந்நூறு ரூபாயும் கொடுத்து நித்திய பூசை உச்சவாதிகளும் சிறப்பாக மாமூல்படிக்கு நடப்பிவிச்சார்கள். அது முதல் சகாப்தம் 1722-க்கு மேல் செல்லா நின்ற ரௌத்திரிஞு ஆனிமீ வரைக்கும் நவாபு சாயபு அவர்கள் ராச்சியம் ஆண்டார்கள். துன்மதிஞு முதல் மகா ராசமான்னிய ராசஸ்ரீ கும்பினியாரவர்கள் சீமை ஆச்சுது.

No. 2052. KUMARAKURUPARA CWĀMIKAḶ CARITTIRAM—[TEXT]

குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்—[மூலம்]

[837]

Size, 20⅞" × 1¼". Pages, 76. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Incomplete.

குறிப்பு: இது, திருப்பனந்தாள் மடாதிபதிகளில் முதன்மை யானவராகிய குமரகுருபர சுவாமிகளைப்பற்றிய வரலாறாகும். இயற்றியவர் மீனாட்சிசுந்தர நாவலர். இப்பிரதி முழுதுமில்லை. தொடக்கத்தில் 51 செய்யுட்களும், இடையில் 93 முதல் 113 வரையுள்ள 14 செய்யுட்களும் இல்லை. அவை சேர 316 செய்யுட்கள் இப்பிரதியில் உள்ளன. இடை இடை ஓலைகள் ஓரத்தே ஒடிந்துபோயுள்ளன.

பூர்த்தி.

Beginning:

வீங்குவன மாதர்முலை விளங்குவ மேனியொளி
யோங்குவன துடிமருங்கு லிரங்குவன காற்சிலம்பு
தூங்குவன குழல்வண்டு சுழலுவன கருநெடுங்கண்
நீங்குவன மிடியா ....குன திருவாதிய.

*   *   *   *

End:

சிதம்பர நாத தேவர் கொளத்திரு வுரிமை நல்கிக்
கதம்படு விருச்சி கப்பேர் கலந்தெழு திங்க டன்னி
லிதம்படு கண்ணபக்கத் தேற்சத் தம்யி லாசான்
பதம்படு நீல லுற்றுப் பரவுபே ரின்ப முற்றார்.

No. 2053. ÑĀṈA VETTIYĀṈ KATAI—[TEXT]

ஞான வெட்டியான் கதை—[மூலம்]

[239]

Size, 14″ × 1¼″. Pages, 60. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This seems to be the biography of one Ñaṇa Vettiyān. The author is said to be Tiru-Valluvar.

Incomplete.

குறிப்பு: இது, ஞானவெட்டியான் என்பவனுடைய கதையைச் செய்யுளாக உடைய நூல். இதில் சில ஞான விஷயங்களும் சாதி வரலாறு முதலியனவும் கூறப்பெற்றுள்ளன. இதனை இயற்றியவர் திருவள்ளுவ நாயனார் என்ப. இப்பிரதி முற்றுமில்லை. 478 செய்யுட்களுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

மகா குருபாதமே துணை

ஞானவெட்டியான் கதை

சத்தி சித்தானந்த குருபாதமே துணை

.........த்தர நாதாக்கள் பாதம் போற்றி
குருவெளி அகண்ட சோதி.........க் களுள்......
விரவிய நனனூல் ஞானவெட்டியான் கதையைப் பாடத்
துருவினிலுமை யாள்ஸ்மந்தன் கணபதி காப்புத்தானே.

* * * *

வட்டமிட்ட சதிர்க்கோணப் பாரின் மேலே
வளர்ந்த இதழீராறு அங்குலத்தில்
திட்டமிட்ட அங் குலத்தில் வீற்றிருந்த
சிறந்தருளும் ருத்திரனுர் ருத்தி...யைப் போற்றி.

வெட்டவெளி வேதமறை நான்கு மோதும்
வீமுன் (?) சாஸ்திரங்கள் பிறந்த வாறும்
அவிட்டதிசை அறிந்துணர்ந்த பெரியோர் பாதம்
அன்பத்தோ ரக்ஷரமும் காப்புத் தானே.

* * * *

End :

உதிக்கின்ற வேளையிலே பூந்தோடி ஞனவன்முன் புகுந்து
கதிக்கின்ற காந்தமலை ரெடுத்தேன் தன் பாவமென்று
விதிக்கின்ற நெஞ்சிலுதித் தரியாக் கல்லாய் யென்னுளே
[கொய்தேன்
துதிக்கின்ற மோக்ஷம் வருமென்று பூசைகள் செய்தேன்காண்.

No. 2054 TAMIL NĀVALAR CARITAI—[TEXT]

தமிழ் நாவலர் சரிதை—[மூலம்]

[258]

Size, $13\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 90. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note : This consists of Short bits of biographical incidents in the lives of some poets.

Incomplete.

குறிப்பு : இதில் முதலிற் காப்பும், அதன்பின் தலை இடை கடைச்சங்க வரலாறுகள், புலவர் வரலாறுகள், அவர்கள் செய்த நூல் வரலாறுகள் முதலியனவும், அதன்பின் பல புலவர்கள் பாடிய பாடல்களும் எழுதப்பட்டுள்ளன. புலவர்கள் பாடிய பல பாடல்களைக்கொண்டு அவ்வப்புலவர்களின் வரலாறுகள் ஊகித் தறியுமாறு எழுதப்பட்டுள்ளது. இப்பிரதி முற்றுமில்லை. 270 பாடல்கள் உள்ளன. இதனை எழுதியவர் முதலிய குறிப்புக்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

சிவமயம்

காப்பு

மதிபாய் சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த் தேனுண்ண
முரு கவிட்டு நின்ற வொளி. 1

தனிமைபெறு சீர்த்தித் தமிழ் நாவலர்சீ
ரினிமைபெறச் சேர்த தெழுத—நனிதுணையா
மிந்துமுகத் தந்தியெனுஞ் செஞ்சடை பெளலி
யைந்து முகத் தந்தி யடி.

காப்பு முற்றிற்று.

* * * *

End:

கள்ளர் தீச்சுடுமுனையர் மடத்திலிட்ட ஊண் மறக்கச் சடைப் பெரிய தேவனுக்கு விண்ணப்பச் சீட்டெழுத வைத்த தெய்வமே தெனக் குடந்தைப் பயணந் தவிர்த்தொருதாதி நிமித்தமாயிருந்த போது பாடியது.

மனந்தான் றளர்ந்தார்க்கு வாயுமுண்டோ கச்சி
யனந்தர் புதனு ளகவவோரு—சினந்து:
வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டுங் கொண்ட
கொடி தடுத்தா லாரே குவார்.

No. 2055. TIRVĀTAVŪRAR PURĀṆAM—[TEXT]

திருவாதவூரர் புராணம்—[மூலம்]

[1023-A]

Size, $8\frac{1}{2}'' \times 1''$. Pages, 19. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is the story of the life of Sri Manicka-Vachakar in verse. The work is incomplete in the Mss.

Incomplete.

குறிப்பு: இது முன் 143 ஆம் பிரதியைப் போன்றது ஆயினும் இரண்டாவது திருப்பெருந்துறைச் சருக்கத்தில் 63-ஆவது செய்யுள் முதல் 74-ஆவது செய்யுள் வரை, 12 செய்யுளும், குதிரையிட்ட சருக்கத்தில் 60-ஆவது செய்யுள் முதல் 67-ஆவது செய்யுள் வரை 7 செய்யுள்களும் ஆக 19 செய்யுள்கள் மட்டுமேயுள்ளன. இப்பிரதி பூர்த்தியாயில்லை. பாடபேதங்கள் சிலவுண்டு.

அபூர்த்தி.

Beginning:

திருப்பெருந்துறைச் சருக்கம்

சிவமயம்

வாதவூ ருறையிறைவர் தம்பெரிய
　　மாய்கைபோ லிருள்மாய்ந்து பின்னவர்பால்
போத மாகிவந் துறுசுடர் விளக்கம்போல்
　　வெய்யவன் புணரியிற் றோன்ற
வேத நாதர்தம் மிருபத மிறைஞ்சி
　　மெய்ம்மை யாளரை வீறுகொண் டிருந்தங்
கோது மாகமத் தறிவரு பொருளை
　　யுரைக்கவே நினைந்தாரண முரைத்தார்.

*　　*　　*　　*

End:

நன்றிகொள் கடவுட் கங்கை நதியினை வைகை யூட்டு
சென்றெழு வாதவூரர் பேரிடர் தீரேன் றேவி
யன்றொரு மடந்தைத் காளா யடியவர்க் கடியார் கொன்றை
துன்றிய முடியில் மேய்மண் சுமந்தமை யுரைத்தல் செய்வாம்.

No. 2056. TIRUVĀTAVŪRAR PURĀṆAM

[TEXT AND ANNOTATIONS]

திருவாதவூரர் புராணம்—[மூலமும் உரையும்]

[580]

Size, 14″ × 1¼″. Pages, 380. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 2055 with annotations for stanzas.

Incomplete.

குறிப்பு: இது முன் 2055-ஆம் சுவடிப் பிரதி போன்றது. உரையுடன் கூடியது. இதில் 7-ஆவது புத்தரை வாதில் வென்ற சருக்கம் 37-ஆம் செய்யுள் வரையுள்ளது. இப்பிரதி முற்றுமில்லை. 104 முதல் 148 வரை 35 ஏடுகளில்லை. அதனால் 3·4 சருக்கங்கள் இதில் இல்லை.

அபூர்த்தி.

Beginning:

ஹரி ஓம்:

வாதவூரர் புராணம்

திருச்சிற்றம்பலம்

பவள மால்வரையினி லவெறிப் பதுபோற்
  பரந்தநீற் றழகும் பச்சுடம் பிற்
றிவளமா தூடனின் றுடிய பரமன்
  சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
  தரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
  கடவுளை நினைந்துகை தொழுவாம்.

(எ - து) டவளமாவரையின் பேரிலே நிலவானது எறித்துப் பிரகாசிக்கிறது போலப் பரந்து நிறைந்து தூளிதமான திருநீறு விளங்கிய திருமேனியழகும் பச்சுடம்பாகித் திவளமாகிய வஞ்சிக்

கெ........போலத் துவளுநிடையினையுடைய மாதாவாகிய உமைய வனுடனேநின்றுடி நடனம் பண்ணிய பரமசிவனுடைய சிறுவனாகிய பிளளையாரய்யன் முன் பாரதப் பெரும் போராகிய மகா பாரதத்தை தவளமா மருப்பென்னுந் தம்முடைய வெள்ளிய ஒரு கொம்பினை பொடித்து, ஒரு கையிற்கொண்டு உயர்கிரியாகிய மகாமேரு பர்வ தத்தை(க்) கைக்கு ஏடாகப் பிடித்து எழுதிய, கவளமாகிய தீனி பொருந்திய களித்தென்னும் யானை முகத்தினை(ப்) படைத்தருளிய கடவுளாகிய விநாயகமூர்த்தியை நினைந்து கைதொழுது போற்று வாமென்றவாறு. திருச்சிற்றம்பலம் 2.

* * * *

End :

அத்தனை மன்று ளாடு(ம)ய்யனை வியந்து கூறித்
தத்தமி லன்பு கூர்ந்து தரித்துளம் வருத்தம் நீங்கி
மெய்த்தவ வாத வூரன் மேவிடத் தணுகு வோமென்
றுத்தம பன்னசாலை யொல்லையிற் குறுகி னார்கள்.

(எ - து) அப்படி கனகண்டு சொன்ன தில்லை மூவாயிரவரும் மய......தனகிய கர்த்தனை மன்றுளாடுமையனை நடேசுவரனை வியந்து கொண்டாடியவரிடை யதிசயத்தை(க்) கூறிச் சொல்லித் தம்மில் தங்கள் மனதிலே யன்புகூர்ந்து தாங்கள் கொண்டிருந்த வருத்தம் நீங்கி மெய்த் தவமுடைய வாதவூரரான மாணிக்கவாசகர் மேவியிருக்கு மிடத்திலே யணுகிப் போவோம் வாருமென்று யுத்த மரிட பன்னசாலையை யொல்லை சீக்கிரமாகக் குறுகினார்கள் தில்லை மூவாயிரவரு மென்றவாறு. 37

No. 2057. TIRUVĀTAVŪRAR PURĀṆAM

[TEXT AND ANNOTATIONS]

திருவாதவூரர் புராணம்—[மூலமும் உரையும்]

[583]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 414. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 2056 but with different portions with annotations.

Incomplete.

குறிப்பு: இது முன் 2056-ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. இப்பிரதி முடிந்திருப்பினும் இடையில் புத்தரை வாதில் வென்ற சருக்கத்தில் 49-ஆம் செய்யுட்குமேல் 86-வது செய்யுள்வரையில்லை. அவற்றையுடைய வேடுகள் 180 முதல் 191 ஏடு வரையுள்ள 12 ஏடுகள் இல்லை. ஆதலால் இப்பிரதி முற்றுமில்லை. இறுதி ஏடுகள் சில ஒடிந்துள்ளன.

அபூர்த்தி.

Colophon:

திருச்சிற்றம்பலம்

…………த்தம், 7
………க்கம்…, 40
தி………றைச் சருக்கம், 1305
குதிரையிட்ட சருக்கம், 60
மண் சுமந்த சருக்கம், 905
திருவம்பலச் சருக்கம், 70
புத்தரை வாதில்வென்ற சருக்கம், 907
திருவடிபெற்ற சருக்கம், 303
ஆகச் சருக்கம் 8-க்கு, 5403.

ராக்ஷஸ-ஹு ஆவணி-மீ 7-உ திருவான்மியூர் முத்தப் பிள்ளை படிக்கின்ற வாதவூரார் புராணம் மேல் மண்மேடு முத்தையா முடிவிலும், தி ரு மெ ழி சை க் கந்தப் பிள்ளை முதலிலு.மாய் எழுதி நிறைந்தது.

முற்றும்.

No. 2058. ETTI ELUPATU—[TEXT]

ஈட்டி எழுபது—[மூலம்]

[658]

Size, 10″×1¼″. Pages, 24. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work in 70 stanzas on the greatness of Cenkuntars by Otta-k-kūttar. Kuntam or Spear is the emblem of the Cenkuntar Caste-people.

Complete.

குறிப்பு: இது, செங்குந்தர் என்னும் மரபினர் தங்கள் மரபினுக்கோர் பிரபந்தம் செய்தருள வேண்டுமென்று தங்கள் மரபினரும் கவிவாணருமான ஒட்டக்கூத்தரைக் கேட்க, அவர் சிரங்களைக் கொய்து சிம்மாதன மிட்டுத் தரின் பாடுவோமென, அவ்வாறே அவர்கள் புரிய அதன் மீது இருந்து ஈட்டி எழுபது, எனனும் இந்தப பிரபந்தத்தைப் பாடியருளினரென்றும், பின்னர் கலைவாணியின் திருவருளால் சிரங்கொய்யப் பெற்றவர் உயிர் பெற்றனரென்றும் கூறுவர். நூல் அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதி முற்றுப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

பூவார் புவனியிற் சோமன் றரும்பகழி போனபின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கெட்ப நலமுடனே
பாவாணர் செங்குந்த ராயிரத் தெட்டுக் குமாரர் குற்றிப்
பாவாடை யிட்ட துலகமெல் லாம்புகழ் பாலிப்பதே. 1

பூதலம் வாழ்கக் குந்தம் பொலிவுடன் விளங்கு நான்கு
வேதமும் நானு மோங்க வேதியர் பசுக்கள் நல்க
மாதவை வளவன் செங்கோல் வளமையே நன்றாய் நிற்க
வோதமே யறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ. 2

* * * *

End:

தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்கவு
மன்னனை வளவனை மதித்துப் பாடவும்
பன்னருஞ் சாதி படைத்த பான்மை போல்
ஒன்னலற் குள்ளுளத் துற்ற குந்தமே. 69

முன்பகை யாவையு முடித்துக் கூரெயிற்
றன்பகை யாவையுந் தடிந்து சந்ததம
பின்பகை யில்லதாய் பெற்ற .....தென.
ஒன்ப தின்மர்காத் தொளிருங் குந்தமே. 70

No 2059. ĒRELUPAṬU—[TEXT]

ஏரெழுபது—[மூலம்]

[939]

Size, $17\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work is on Farmers and their profession of Agriculture, by Kamban.

Complete.

குறிப்பு: இந்நூல் கவிச்சக்கிரவர்த்தி கம்பரால் இயற்றப் பெற்ற தென்பர். இது உழவுச் சிறப்பினை யுணர்த்தும் எழுபது பாடல்களால் ஆனது. அச்சிடப் பெற்றுள்ளது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பல்வேறு பேதங்கள் காணப்படுகின்றன. பாடல்கள் முன்பின்னாகவு முள்ளன. இந்தப் பிரதியில் முழுதுமுள்ளன.

பூர்த்தி.

Beginning:

சீர்மருவு கம்பன் சிறக்கவே ளாளர்க்கு
ஏரெழுபத் தொன்றே யியல்புரைக்கப்—பார்தனிலே
நிற்கப் புகழ்பெறவே நேசத்தோ டெல்லோருங்
கற்கக் கணபதியே காப்பு.

மந்தர மனைய திண்டோள் மணிமுடிச் சேரன் சோழன்
சுந்தர பாண்டி யன்றன் சுடர்மணி மகுடஞ் சூட்டு
மந்தணர் குலங்க ளெல்லா மறங்களும் விளங்க வந்த
இந்திர னுலகம் போல விருந்தது பெரிய நாடே. 1

* * * *

End:

பையா யிரஞ்சுமந்த பாரேழும் விளங்குவதும்
மெய்யான வந்தணர்கள் வேதங்கள் விளங்குவதும்
கையாலே யறம்வளர்க்குங் காராள ரேராளர்
பொய்யாத பெருக்காளர் பொலியூட்டப் புக்காலே. 70

மேழி தரிக்குங்கை வேல்வேந்தர் போற்றுங்கை
ஆழி தரிக்குநின் றுடுங்கை—சூழ்கலியை
நீக்குங்கை நின்று நிலைக்குங்கை நீடுழி
காக்குங்கை காராளர் கை.

No. 2060. CĀTI PĒTAM—[TEXT]

சாதி பேதம் [சாதியிலக்கணம்]—[மூலம்]

[587-A (1)]

Size, $16\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 18. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This small work purports to define the duties of individual Castes. Then arc only 97 stanzas in the Mss.

Incomplete.

குறிப்பு: இது, சாதிகளின் இலக்கணத்தைப் பற்றிக் கூறு கின்றது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இயற்றுவித்தவர் உலகநாதன் என்று தெரிகிறது. 97 பாடல்களுள்ளன. இப் பிரதி முற்றுமில்லை. ஏடுகள் சிதிலம்.

அபூர்த்தி

Beginning:

ஆதி.. மத்த கால யனிடத் துண்டான
சாதிபே தங்களெலாஞ் சாற்றவே—நீதித்
திடவா ரணங்கடினப் பாவு மு......
கடகட......ணமுகத்தில் காப்பு.

நலம்பண்பா லுமைகண் டேத்த
நாகமும் புலியும் போற்ற
நிலம்பயி லந்தகார நீங்கிட நீங்காக் கங்கை
யலம் புஞ்சடைகட...டி வம்பலத் தாடுமையர்
சிலம்பணி கமலம் போற்றிச் செப்புவன் சாதிபேதம

....

புவனியிற் கலியினீட்டம் பொருந்தலிற் சாதிபேதத்
தவரவர லொழுக்கங் குன்று தாகமப் பொருளையெல்லாம்
தவநெறி யுலகநாதன் றமிழினாற் றருகவென்ன
சிவனருள் கருதியவனுஞ் செப்புவன் ....

* * * *

End :

வெட்டிவே லரசன்கீழ் மேவிய சாதித் தன்மை
யட்டியே தனது தன்மை யொழிந்ததி லழுந்திச் செய்கை
தட்டிய வைந்தாருள தல்முறை தள்ளினோரே
செட்டியுமாகி வேளா............யாரவனன்றே.

No. 2061. CĀTI NŪL—[TEXT]

சாதி நூல்—[மூலம்]

[670]

Size, $9\frac{1}{4}'' \times 1''$. Pages, 62. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work on Castes but contains only 82 stanzas only.

Complete.

குறிப்பு : இதுவும் சாதியைப்பற்றியதே. சுவடியின் முத லேட்டின் தொடக்கத்தில் அகத்தியமா முனியார் சொன்ன சாதி பேத நூலிவை நாதா...வேத சாஸ்திரங்களான சாஸ்திரங்களாற் கண்டு அருளிச் செய்தது என்று எழுதப்பட்டுள்ளது. இது சாதிகளின் தருமங்களையும் கடமைகளையும் விவரிக்கின்றது.

பூர்த்தி.

* * * *

End :

அந்தணன்று ளரசன்தன் நங்கை வேட்டாங்
கவன்பயந்த கன்னியை யந்தணர்க்கே நல்க
வந்தவழி முறை யைந்தில் வந்தமைந்தர்
மாசுறு பூசுரரவ ரவரை ....

றந்திடும்பைந் தொடிதனை யந்தணரே வேட்கத்
    தலைமுறையோர் அ...லந் தணரே யாவர்
முந்து...... திரணங்கை மறையோன் வேட்க
    முறையேழு தலைமுறையிம் மறையோ ராவார். 82

முற்றும்.

Colophon:

ஆகப் பாயிரம் உள்பட கவி (82).

குருகடாக்ஷம்.

No. 2062. CĀTI NŪL—[TEXT]

சாதி நூல்—[மூலம்]

[1028]

Size, 11¾″×1″. Pages, 54. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is also another work detailing the characteristics and duties of several Castes in the land. The Mss. though containing 101 stanxas is not complete.

Incomplete.

குறிப்பு: இது, ஒவ்வொரு சாதியாரும் இருக்க வேண்டிய ஒழுக்கங்களையும் வேதத்திலுள்ளபடி கூறுகிறேனென ஆசிரியர் கூறுகிருர். ஆசிரியர் இன்னரென அறியக்கூடவில்லை. நூலும் ஒழுங்குபெற அமைந்திருக்கவில்லை. இந்தப் பிரதியில் 101 செய்யுட்கள்மட்டுமுள்ளன. நூல் பூர்த்தி பெற்றதாகத் தெரியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

ஆதிவே தத்தி லயனிடத்தி லுண்டாய
சாதிபே தங்களெலாஞ் சாற்றவே—நீதி
திடவா ரணமே திலம்பரவ முக்கட்
கடவா ரணமுகனே காப்பு.

*   *   *   *

எயினர்வந் துரைப்பக் கேட்ட விலங்கிலே நெடுவேற் கிள்ளி
பயணமென் றுரைப்பப் போந்து படர்நெடுங் கானத் துற்ற
...பறுமு முழுவை யெண்கு மரைகொடு விலங்கை யெல்லாஞ்
.. முறக் கொன்று கொன்று தனித்தனி வேட்டஞ் செய்தான்.

* * * *

End :

வணிகர்தான் தன்கு லத்தின் மார்க்கத்தை மறந்து தம்மைப்
பணிதரு குலத்தோர் செய்கை பற்றியே நிற்பா ராகில்
அணிபெற வருமஞ்ஞான வருந்தலே முறைபொ ருந்தி
தணிதரு வேளான் சாதி தன்மைய ராவ ரன்றே. 101

No 2063. CEṆKUNTAR MĀLAI—[TEXT]

செங்குந்தர் மாலை—[மூலம்]

[870]

Size, 10″×1″. Page, 44. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on the greatness of Cenkuntar. The name of the another is not known.

Complete.

குறிப்பு: *இது, ஒட்டக்கூத்தர் மரபினரான செங்குந்தரைப் பற்றிப் புகழ்ந்து பாடப் பெற்றது. இந்தப் பிரதியில் நூல் முழுவதும் (103 பாடல்கள்) உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning :

கந்தர் துணைபடைத்த கைக்கொள்வ ராகியசெங்
குந்தமா லைத்தொக கூறவே—சந்ததமும
மையா ளளித்ததவ் வந்நிநிறத் தெந்தைமதங்
கையானைத் தன்னிருதாள் காப்பு.

வீராதி வீரர் நவவீர வங்கிசம் விளங்க வந்த
சீராளர் செங்குந்தர் தன்கீர்த்தி யானுரை செய்வதற்கே
நேரான தெய்வம் வயித்தீசர் தையல் நிதம்மகிழும்
காராணை மாமுகன் வேளூரில் கற்பகங் காத்திடவெ.

எத்திக்குங் கீர்த்தி படைத்தோர்கள் செங்குந்த ரியல்பினைநம்
புத்திக் குளச்செந் தமிழ்ப்பா னூலுரைக்கப் புகழுலகில்
சித்திக்கச் செய்தவர் வேளூரர் மைந்தர் திருவடியே
முத்திக்கும் வித்தெ... முத்தைய னாறு முகன்றுணையே. 1

* * * *

End :

ஜயங்கொண்ட கல்விக் கடலனை யார்தமைத் தோத்திரத்தால்
நயங்கொண்ட பெருநலம்புரி வோர்நம னுரைவென்ற
புயங்கொண்டெதிர்த்தும் மருவாரை வெட்டிய பூதலத்தில்
செயங்கொண்ட வீரக் கழல் கட்டினோர்களுஞ் செங்குந்தரே.

Section XII—MUSIC
பகுதி 12—இசை

No. 2064. KAṈAM KRISHNAIYAR MUTALIYŌR KĪRTAṈAṄKAḶ

கனம் கிருஷ்ணையர் முதலியோர் கீர்த்தனங்கள்

[469]

Size, 13″ × 1⅛″. Pages, 150. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note : This Mss. consists of several kīrtanas by composers like Kaṇam Krishnaiyar. As the Mss. is very much injured very little can be made out of it.

Incomplete.

குறிப்பு : இச்சுவடியில் கனம் கிருஷ்ணையர் முதலியவர்கள் இயற்றின கீர்த்தனைகள் உள்ளன. இது முற்றும் சிதிலமாயிருப்

பதனுல் இதனைப் பற்றிய விவரங்கள் நன்கு அறிந்து கொள்ளக் கூடவில்லை. பிரதி முற்றுமில்லை. எழுத்துக்களும் விளக்கமா யில்லை.

அபூர்த்தி.

Beginning:

....
சலியாமல் தங்கச்சி கலியாண ரெங்கதுரை
சாறவ காலம் ஒலிமு பூங்கத்தியாக
மாரி பெய்ததனுல் இந்த தேசம
உலவாதே கலிகளெல்லா(ம்) குடியோடி மேற்கே வெகுதூர [மங்கே
கனமாயி சேர்ந்து நலிவிலாமல்
உங்களிடம் வந்த மெண்டுலுத்த றுருக்கு நலம்
சொலவாறே............

* * * *

End:

அம்புவனிக்கு கந்த அச்சுதனே
உன்போல தெய்வமும் உலகத்தில் வேறுண்டோ
ஒரொருவான பூவ ராகரே
தாயுந் தந்தையும் நீயலால் வேறுண்டோ

* * * *

பூவராக கலியாணரெங்கனுக்குப் புகழ்மிகக் கொடுத்து

No. 2065. KĪRTANAṄKAḶ

கீர்த்தனங்கள்

[901]

Size, 15″ × 1″. Pages, 56. Lines, 5 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This Mss. consists to of several kīrtanas on Gods. As the Mss. is very much injured, details cannot easily be made not.

Incomplete.

குறிப்பு: இது பல தெய்வங்களின்மீது பாடப்பட்டதாகத் தெரிகிறது. எந்த எந்தத் தெய்வங்கள்மேல் பாடப்பட்டன என்பதும், பாடியவர் இன்னார் என்பதும் அறியக்கூடவில்லை. முதலில் மட்டும் திருமால் தோத்திரமாய் காணப்படுகிறது. இப்பிரதி முற்றுமில்லை. ஏடுகள் எல்லாம் முதற்கண் முறிந்தும் செல்லரிக்கப் பட்டும் சிதிலமாயுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

பன்னக சயனு பத்மநாபா என்றன்
செயி...... மலிலிருப்பதாமா
என்னென்னமோ அறியேன் ராமா
ஏக நாத பூரணகாம......
....
செந்திரு வே...ருகா னுகூல
தழைக்கு திருக்குன்ன......வாழு......லோல

* * * *

End:

....
அனுதின நினைமனமே யென்னுனு னீ
அனுதினம் நினைமனமே.
ஆராவமோதரை (வமுதரை) அரைக்ஷண

No. 2066. CAṄKĪTA VIṬAYAṄKALUM PŪJĀ VIṬAYAṄKAḶUM

சங்கீத விடயங்களும் பூஜை விடயங்களும்

[1274]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 98. Lines, 5 on a page. Condition, Good. Appearance, New.

Note: This small Mss. contains some stray hints on Music and Dance and some rules for doing Pujas. A portion of the Mss. is written in Grantha.

Incomplete.

குறிப்பு: *இது சங்கீத விஷயமானது. வீணை பயில்கின்றவருக்கு மிகவும் பயன்தரக்கூடியதாகும். இது வடமொழிக் கிரந்த வெழுத்துக்களுடன் கலந்து எழுதப்பட்டுள்ளது.*

அபூர்த்தி

Beginning:

காந்தார சுருதி செய்தால், பயிரவி பிறக்கும். பயிரவி நிஷாத சுருதி செய்தால் காம்போதி பிறக்கும்,

* * * *

End:

சங்கராபரணம் தைவத சுருதி செய்தால் பயிரவி பிறக்கும். பயிரவி காந்தார சுருதி செய்தால் சங்கராபரணம் பிறக்கும். சங்கராபரணம் நிஷாத சுருதி செய்தால் ராகம் பிறக்கவில்லை. பயிரவி ரிஷப சுருதி செய்தால் ராகம் பிறக்கவில்லை. பயிரவி காந்தார சுருதி செய்தால் சங்கராபரணம் பிறக்கும்.

No. 2067. CACCAPUṬA VEṆPĀ—[TEXT]

சச்சபுட வெண்பா—[மூலம்]

[874-A]

Size, 9″ × 1¼″. Pages, 24. Lines, 11 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a text on Tālās. The work has been printed.

Complete.

குறிப்பு: *இது, தாளத்தைப் பற்றிய ஒரு சாஸ்திர நூல். அகத்திய முனிவரால் இயற்றப் பெற்றதாக இறுதிச் செய்யுளால் காணக்கிடக்கிறது. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

சச்ச புடமிரண்டு தனுக்கோல் புலிதமுடன்
இச்சைபெறு மாத்திரையே யெட்டாகும்—அச்சமற
ஈசன் முகமொக்கு முகத்தெழுந்து வேதகுலத்
தாசினி யெட்டிலொன்ற தாம். 1

* * * *

End:

சனகதரவ மந்தணந் தாகய கன்மேசசன
மினியதெனு மாத்திரை யீரேழே—வனிய
மறை கும்ப முனிசொற்றுன் மினிரிய
திருநாற் ஜெருப தாம்.

No. 2068. CILA KĪRTANAIKAḶ MUṬALIYAṈA

சில கீர்த்தனைகள் முதலியன

[751]

Size, 13½″ × 1″. Pages, 8. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This Mss. contains some Kīrtanas and Patams by Muttu-T-Tāṇṭavar and others. The leaves are very much damaged.

Incomplete.

குறிப்பு: இது, முத்துத்தாண்டவர் முதலியோர் பாடிய கீர்த்தனைகள் பதங்கள முதலியன கொண்டுள்ளது. ஏடுகள் மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

அம்பலவாண சுவாமி பேரில் முத்துத்தாண்டவன் பதம்.
அப்படி யிப்படிச் செய்தவர்க் கோர்
பிழை தப்பறையோ தில்லைத் தாண்டவராயரே
பொற்படியே கொடுத் தெப்படியாகிலு மெய்ப்புட.....
யொப்புடன் கூடினீர் (அப்படி)

வாலையிலே தந்தச் சேலையிலே முத்து
மாலையிலே பொன்னி ஞேலையிலே செய்த
வேலையிலே அந்தி மாலையிலே நல்ல
நாளையிலே வந்த வேளையிலே நீர் (அப்படி)

* * * *

End:

தாழிசை.

போச ராச துரை சரிதைபாட வரு
காளிதாசகவி போலே நீள்
புவன ராசர்கள் மதிக்கவுங்கன .....ராசதுரை
தெட்சண தேச ராசரே
குணத சேதுபதி மீது நாள்கவிதை பாடிநாற்றிசையும்
வென்றுசெய.........தமிழ்க்கும்பநன் னேசராச
நன்சத்திர சோமனை நிகர்த்தா......
னழகாபுரி நிதியிராசன்......

விலாச நிறைந்தி குலேசனுயர் மல்லையூர்
வரதராச நடராச தேவ......
கனகாபிஷேக மிருவரிசையா லீது
பாடியம சேது காசிபரியந்த மட்டுநீ.........

No. 2069. TĀḶA CAMUTTIRAM

[TEXT AND ANNOTATIONS]

தாள சமுத்திரம்—[மூலமும் உரையும்]

[874]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{3}{8}$. Pages, 22. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a text-book on Tāḷās. The Mss. contains the Text and its Annotations. One Bharata Cūṭamani seems to be the author of this work. Dr. Aiyar mentions this Mss. as having helped him in editing Cilappadikāram.

Complete.

குறிப்பு: இது இசையைப் பற்றியது. தாளத்தின் இயல்புகளைக் கூறுவது. இயற்றியவர் பரத சூடாமணி என்பவர். இப்பிரதி பூர்த்தியாயுள்ளது. முதல் ஏடு முதல் ஓரத்தில் முறிந்துள்ளது.

பூர்த்தி.

Beginning:

தாளசமுத்திரம்

.........வடிவுஞ் சிவனார் திருவடிவு
மன்றல் வடிவு மதன் வடிவுங்—குன்ருத
வெ.,.... வடிவும் வேத வடிவுங் கணிலாய் தாளங் காணலாம்.

திண்மைப் பெரிய திருவடி யே...ன் பொன் மங்கை
வண்மை யிருங் கோல் வளநாடன்—மணமகன் சேர்
தோள் .... பரத சூடாமணி யுரைத்தான்
தாள சமுத்திர நூ ருன்.

*   *   *   *

இந்த மூன்று வெண்பாவின் பொருளேதென்னில் தாளமிரண் டெழுத்தில் விதி........முதலாய் வருகிற காலவடிவின் பேர்கள் அந்த வடிவினளவு மந்த வடிவின் சொரூபங்களும் அ... .... குருபங்கள் கலந்து நிற்குங் குணகுணங்களுமே .....ற்று மங்குலப் பிரமாணமும் அட்டகணமும் பிரம்ம க்ஷத்திரிய சூத்திரனென்கிற நாலு சாதியுஞ் சதுரமேடு பிரதஸ்தாரமாகிய விராகமாதி பிரஸ் தரா மலயகெதி மார்க்கங்கள் யேகமாத்திரை யிலக்கண விசியதிதம் அனுகதம் சமம் விஷம் என்று சொல்லப்பட்ட கிரகங்களொத்த பட்டகஞ்ச தாளம் பிரமாண மணிக்கட்டுக்கும் விரலுக்கும் அதிபதி யாகிய தேவதைகள் தாளவியத்தாகிய அகரவாதிக் கிரியைச் சச்ச புட முதலாகிய நூற்றெட்டுத் தாளவடிவம் பெத்தகிலே பெற்று வருகிற புடப்புட்புட............பிரவந்தத்துக்கு......பிடிப்பு நடிப்பு ஆக இருபதுக்குங் கலையுஞ் சொல்லுவே னென்றவாறு.

*   *   *   *

End :

வாய்ந்த மெதிக் குள்ளபடி வருக்குந் துரிதங்க(?)
ளாய்ந்தகலை விற்புலித மங்கிரியை—யாய்ந்திவற்றி
னித்தினைதா னேற்றங் குறைவிவள் 'வென்றறிதல்
இத்தனையு மார்க்கமெனலாம்.

என்றது முன்பு சொல்லப்பட்ட யெதி பேதங்களிருக்கப்பட்ட துரிதம் லகு குரு புலிதங்களுக்குத் திரைகளில் யேற்றமு மித்தனை குறைத்தா லித்தனை யென்றறிவது மார்க்கமென்றவாறு.

*   *   *   *

தாளசமுத்திரம் முற்றும்.

பருவதவர்த்தினி துணை.

No. 2070. TUṞAICAI-C-CUPRAMAṆIYA CWĀMIKAḶMĪTU ENGLISH NOTE

துறைசைச் சுப்பிரமணிய சுவாமிகள்மீது இங்கிலிஷ் நோட்டு

[839]

Size, $18'' \times 1\frac{1}{8}''$. Pages, 3. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a song on Sri-La-Sri Cupramania Cwamikal of Tiruvavatu-turai, by Maha-Vidwan Minakshisundaram Pillai composed in the English Note—Tune. The song is incomplete. The full song is printed.

Incomplete.

குறிப்பு : *இது ஒருவகை கீர்த்தனை. துறைசைச் சுப்பிரமணிய சுவாமிகள்மீது மகாவித்வான் பிள்ளையவர்களால் பாடப்பெற்றது. இப்பிரதி முற்றுப்பெறவில்லை. ஒரே பாடலுண்டு; அதில் 3 சரணங்களே யுள்ளன. முழுப் பாடலும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் பக்கம் 164—5-இல் அச்சிடப்பட்டுள்ளது.*

அபூர்த்தி.

Beginning :

சிவமயம்

இங்கிலீஷ் நோட்டு

இராகம் : கமாசு *தாளம் : ஆதிதாளம்*

பல்லவி

துங்கஞ் சார்தரு துறைசையின் வளர்
சுப்பிர மணிய தயாநிதியே
துன்றும் பேரரு ணனி சொரிதரு
சுத்த மெய்ஞ்ஞான கலாநிதியே.

அநுபல்லவி

தூயந யசுகுணக் கடலே
நேய வுயிர் மருவற் குடலே
தொண்டென் றுங்கொண் டின்பங் கண்டொன்றும்
பண் பொன் றினர் நிறை (துங்க)

சரணங்கள்

வந்தெங்கும் பசு முகிற வழ்தரு
மாகயி லாயப ரம்பரையாய்
மன் றின்கண் டனிநட நவில்பவ
மாறலி லாகம நூ லுரையாய்
நந்தொன் றுங்குழை மறைதர வகன்
ஞாலம்வி ராயப ரம்பரனே
நங்கஞ் சந்திருவடி வுளேமல
நாளு மிலாமைநி ரம்பரனே
பரவமு தேயெனும் வானவனே
குரவர்சி காமணி யானவனே
பந்தந்தங் கும்பண்பின் றென்றென்றுஞ்
சென்றந் தணர் புகழ். (துங்க)

* * * *

End:

கமழ் சித்தாந்த சைவப் பொருளே
தமிழிற் கான தனிமெய்த்தருளே
கம்பங் கொண்டென பென் றுந் தங்குஞ்
சம்பந்தந் தருள் .... (துங்க) 3

No. 2071. PALAVAKAI-K-KIRTANAṄKAḶ

பலவகைக் கீர்த்தனங்கள்

[840]

Size, $18\frac{5}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 79. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains several Tamil Kīrtanas on Hindu deities sung by various composers.

Incomplete.

குறிப்பு: இதனுள் விநாயகர் முதலிய பல தெய்வங்களின் மேல் பாடப்பெற்ற கீர்த்தனைகள் உள்ளன. பாடியவர் முதலிய விவரங்கள் அறிதற் கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை. சுவடியின் இறுதி ஏடுகள் ஒடிந்தும் சிதிலமாயுமுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

கௌஜனம் பூத கணாதி சேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பட்சிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்நேசுவர பா........

விநாயகர் கீர்த்தனை முதற் பல கீர்த்தனங்கள்

விருத்தம்

ஐங்கரனே கணநாயகா சிவ
அம்பிகை தந்த விநாயகா
அம்பிகை தந்தருள் தும்பி முகவனே
நம்பினேன் உன்பாதம் நல்ல வரந் தருவாய் (ஐங்கரனே)

செல்வ விநாயகரே யென்னுடை வல்வினை
வல்லபை பாகா எனைக் காத்து ரக்ஷிப்பாய் (ஐங்கரனே)

நல்ல கணநாதா நான்மறை யோதிடும்
எல்லையில் வாழ்கின்ற ஈசமகேசனீ (ஐங்கரனே)

* * * *

End:

இராகம்: கல்லி கீர்த்தனம்

.........வேண்டுமையா - சிதம்பரஞ் - சேவிக்கவேண்டுமையா
சேவிக்க வேண்டுஞ் சிதம்பரமூர்த்தியாந்
தேவாதி தேவனைத் திருச்சந்நிதி கண்டு (சேவிக்க வேண்டு)

(2) KUMMI

கும்மி

No. 2072. KATTAPOMMAN KUMMI

கட்டபொம்மன் கும்மி

[979]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains a portion of a work in Kummi style—giving the life story of Katta-Pomman. The author's name is not known.

Incomplete.

குறிப்பு: *இது, வீரபாண்டியக் கட்டபொம்மன் என்பவர் மேல் பாடப்பட்ட கும்மிப் பாட்டு. 101 கண்ணிகளிருக்கின்றன. பாடியவர் முதலிய மற்ற விவரங்களொன்றும் தெரியவில்லை. இப் பிரதி முற்றுமில்லை. இடையிலும் ஈற்றிலும் ஏடுகள் ஒடிந் துள்ளன.*

அபூர்த்தி.

Beginning:

பாஞ்சால ஞடு வளர்ந்தோங்க வீர
பாண்டியன் கட்டபொம் மேந்திரன் மேல்
வாஞ்சையாய்க்கும்மித் தமிழ்பாடத் தெய்வ
யானை முகவனுங் காப்பாமே. 1

கந்தனே செந்தில் வரைக்குகனே
கருணுகரனே வள்ளி நாயகனே
சுந்தரவ...னந் துரைவீர பாண்டியன்
சுவாமியைக் காத்தருள் செய்வோமே. 2

* * * *

End :

அய்யாயிரந் துருப்புக் குதிரையும்
அணி அணியாகவே தாளிறுத்தி
ஒய்யாரமாகவே சோஷா வெள்ளைக்காரன்
ஒன்பதினாயிரந் தானிருத்தி ....

No. 2073. MUTTUKKUMĀRA CWĀMI KUMMI

முத்துக்குமார சுவாமி கும்மி

[293-G]

Size, 16″×1¼″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note : This is a Mss. containing Kummis on Sri Muttu Kumaraswami.

Incomplete.

குறிப்பு : இது, வயித்தீசுவரன் கோயில் முத்துக்குமார சுவாமி கும்மி. 20 கும்மிகள் இந்தப் பிரதியில் உள்ளன. மற்ற விவரம் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

சீராரும் வேளூர்வாழ் செல்வக் குகன்மீதிற்
செந்தமிழ்க் கொம்மித் தமிழ்பாடக்
காராருஞ் சோலைசூழ் கந்த புரிவளர்
கற்பகப் பிள்ளையார் காப்பாமே மிகு
மற்புத மாயெனைக் காப்பானே.

ஐயா னனந்தர் திருமக னைக்கரு
மையாரு மெய்யர் மருமகனைச்
செய்யாரும் வேளூர்ச் செங்கரும்
பைத்தினஞ் சேவித்துக் கும்மி யடியுங்கடி
யுளம்—பாவித்துக் கும்மிய டியுங்கடி. 1

* * * *

End :

பொய்யா மொழியார் தமிழ்க்குவந் தகரு
　　மையா ருஞ்சோலை மலைக்கரசை
மெய்யா ரன்பர்க் கருள்குக னைத்தினம்
　　வேண்டிக் கும்மி யடியுங்கடி
யுளந்—தோண்டிக் கும்மிய டியுங்கடி. 20

(3) PATAM

பதம்

No 2074. CIVA PATAM—[TEXT]

சிவ பதம்—[மூலம்]

[1277-D]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, New.

Note: Patam is a mode of musical composition where love sentiment predominates. This Mss. consists of some Patams on Lord Civa.

Incomplete.

குறிப்பு: இது, சிவபெருமான்மீது பாடப்பட்டதென்று தெரிகிறது. மற்றைய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. பிரதி பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning & End :

சிவபதம்

தெருவிலே வாரவ ளாரடி யாரடி
　　செந் தமிழ்ப் புலவர் வாரார்
திட்டவே க...... வடை வந்துவிட்டார்களோ
　　சிடுக்கு பொடுக் கென் றோதே

குதிரினி னொளிக்கவோ பரணின்மே லேறவோ
　　கொட்டிலைப் பிரிய மெள்ளக்
கொல்லைக்கு ளோடவோ கோ கோ
　　என்ன செய்வோ ....
குருவிசா ரங்கொண்டு அதிரவே வாய் பொத்தியே
　　　　　　　　　　　　ஆங்காரி கௌமாரியே
　　அடித் துடைகளும் நடுங்கவே
அதில்குதில் படும்கசு மால லோபியை
　　அணுகாமல் ரக்ஷி கண்டாய்
அனுதினமும் நின்பாதம் மறவாம லெந்நாளும்
　　அடியேனைக் காக்க வேணும்
செகதலம் புகழுவரும் பணிசெய உனதடிமை
　　செஞ்சடை மகா லிங்கமே.

No. 2075. CUPPIRAMAṆIYAR PATAM—[TEXT]

சுப்பிரமணியர் பதம்—[மூலம்]

[896]

Size, $11\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 60. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains some Patams and Kirtanas on Lord Muruka in general.

Incomplete.

குறிப்பு: இது, சுப்பிரமணிய சுவாமி பேரில் பாடப்பட்டது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. 30 ஏடுகள் இருக்கின்றன. இடையில் 5 ஏடுகளில் செந்தில்மாலை என 15 பாடல்கள் காணப்படுகின்றன, கீர்த்தனங்களும் இருக்கின்றன. இப்பிரதி பூர்த்தியாயில்லை. முதலில் சில ஏடுகள் ஓரங்களில் ஒடிந்துள்ளன.

அபூர்த்தி.

Beginning :

சுப்பிரமணியசுவாமி பேரில் பதம்

இத்தனை நாளுமுன் சித்த மிரங்கா
திருந்தா லினிமே லாருடன் சொல்லுவேன்
சித்திர மயில் நடத்து... முத்துக்கு மாரசாமி
திருமாமலைக் குமார ய்யா (இத்தனை)

மாலுக்கருமை மருமக னேயுனக் கபையம்
வள்ளிக்கபையந் தெய்வ மடந்தைக் கபையமபையம்
வேலுக்கபையஞ் சேவல் விருதுக் கபையமபையம்
விருப்புகளு மதுரத் திருப்புகழுக் கபையம்
கோலாகலாப மயில் குதிரைக் கபையந்............
காலுக் கடைய மபையம் (இத்தனை)

* * * *

End :

என்சொல்வேன் கறிபெறி யென்றி ளந்தல்
கொடி......... மண்டப விலாசமும் சாலை தட்டு வளையம்
......விலி மண்டபம் சாமி யெழுந்தருளித்
தீபாராதனை கூடும் சதுர மண்டபமும்
ஓசைகடல தொலிபோல் பதினெட்டு வாத்தியமும்
உச்சிதம் பெருகித் திருச்செந்தூர்த் தரத்தை......

No. 2076. CUPPIRAMAṆIYAR PERIL PAṬAM
alias
CENTILAṆṬAVAR PATAM—[TEXT]

சுப்பிரமணியர் பேரில் பதம்

அல்லது

செந்திலாண்டவர் பதம்—[*மூலம்*]

[161-II]

Size, $9\frac{7}{8}'' \times 1''$. Pages, 20. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work on Lord Muruka (at Tiruccentur) containing some Patams.

Incomplete.

குறிப்பு: இது, ஒரு பெண் சுப்பிரமணியர் பேரில் காதல் கொண்டு தோழிக்குச் சொல்லுவதாகப் பாடப்பபடுவது. பாடியவர் இன்னாரென்று தெரியவில்லை. இச்சுவடியின் ஏடுகள் சிதிலம். முதல் ஏடு இல்லை. எழுத்துக்களும் விளக்கமாய் இல்லை.

அபூர்த்தி.

Beginning:

மங்கைச் சிகவியெனு............
பொன்னென்று மவள் நீ......ட்டுக்கு 'நெளிப்புகளும்
பாட்டுக்கும், ஆட்டுக் குறித்த......ம, ஆயிரம்பொன்
குத்தகையாகவே, காட்டுக் கெறித்தநிலாப் போலவே
உளத்தங்கக்கட்டி விராகனெல்லாம் தட்டிக் கொட்டி
யவள்கைக் கொடுத்ததுவும், உமக்கவள் கைக்கொடுத்ததுவும்
விலாட சங்கிலிப் பூட்டுக்குள் அகப்பட்டாற்போலே யவள்
சுக்குப் பொடிக்கு ளகப்பட்டது............

* * * *

End:

சுவர் இருந்தா லல்லோ சித்திரம் எழுதலாம் பணயத்தை
வாங்கிக்கோ
பாவி என்னை விட்டான் பதறுதென் உடம பெல்லாம்.

No. 2077. CENTIL VĒLAVAR PATAM

செந்தில் வேலவர் பதம்

[979-A]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 3. Lines, 9 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is another Mss. containing Patams on Lord Muruka at Tiruccentūr.

Incomplete.

அப்போது ஆதி சிவன் ....

* * * *

இந்தப்படியாக ஆதிசிவன் இருக்கின்ற வேளையிலே
பெறப் பொறுத்தேன் கதையைப் பூலோக.........
வருஷம் மொருகாலம் பண்டிதரே உண்டுபண்ணி

No. 2118. VAḶḶIYAMMAI NĀTAKAM—[TEXT]

வள்ளியம்மை நாடகம்—[மூலம்]

[686]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 72. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains songs used in the play depicting the marriage of Sri Valli with Muruka.

Incomplete.

குறிப்பு: இது, குமாரக் கடவுள் வள்ளி நாயகியாரை மணந்ததைக் கூறும் நாடகம்; இயற்றியவர் பெயர் முதலியவை அறியக் கூடவில்லை; இப்பிரதியில் நூல் பூர்த்தியாயில்லை. முதலிலும் இடையிலும் சில ஏடுகள் இல்லை. ஈற்றில் சில பாடல்களில்லை.

அபூர்த்தி.

Beginning:

மதுரரசந் தமிழ் விளைந்து மலிந்தநாடு
வளம்பெருகும் கழுகுமலை தன்னில் வாழுஞ்
சதிபெருகு மந்திர சடாக்ஷர குமாரன்
சண்முகவேள் மணந்த சரிதை தன்னை

விதிமுறை நூற்றெளிந்ததிசை நாடகமாய்ப் பாடி
மேதினியெல் லாந்துதித்து விளங்க வேண்டி
அதிகமத மொழுகுதொந்தி முகத்தே நால்வாய்
ஐங்கரவிநா யகன்பொன் னடிகாப்ப தாமே. 1

* * * *

End :

செங்கைவளை செறிந்துடலம் பசந்த தேது
செவ்விதழில் பதிந்த செய்கை யேது
இங்குவந்து வேறுநினை வாக வாடி
யிருப்பதுதா னேதெனக்கு மியம்பென் றுயே
சங்கையுடன் சகிக்கிளையா.........த் ததுண்டோ
வள்ளித்தாயே, சாதக முடித்தால் சதியோ தாயே
மங்கையே நீர்ச்சுனைய தனில்கூர்தல் தந்து
மருவினதா ரெவருனக்கு வழுத்து வாயே.

Section XIV - TARKKAM [LOGIC]

பகுதி 14 - தர்க்கம்

No. 2119. AKATTIYAR TARKKA CŪTTIRAM

[TEXT]

அகத்தியர் தர்க்க சூத்திரம்—[*மூலம்*]

[730]

Size, $11'' \times 1\frac{3}{8}''$. Pages, 4. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a text-book on Fundamentals of Logic. Matter is divided into 7 categories and the subject is treated in 33 Sūtras. The authorship is attributed to Agastiya.

Complete.

குறிப்பு: *இது, தருக்கத்தைப்பற்றிக் கூறுகின்றது. பொருள்களை ஏழாகப்பகுத்து அவற்றைப்பற்றி விவரித்துக் கூறுவது. 33 சூத்திரங்களையுடையது. இயற்றியவர் அகஸ்தியர். இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. ஏடுகள் சிறிது ஒடிந்துள்ளன.*

பூர்த்தி.

Beginning:

பொ.........ள் குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
இன்மை யுடன்பொரு ளேழென மொழிப 1

* * * *

End:

உயிர்தா னுடனொன்றும் வெவ்வேறாகும்
மனமெனும் பொருளே யணுவடி விற்றாம்.

தருக்க சூத்திரம் முற்றும்.

No. 2120. AḶAVAI NŪL [PIRAMĀṆA NŪL]

[PROSE]

அளவை நூல் [பிரமாண நூல்]—[வசனம்]

[794-A]

Size, $9\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 92. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a Tamil rendering of the Sanskrit work Tarkka Paripāsha by Civa Kēcava Misra.

Complete.

குறிப்பு: *இது பிரமாண நூல். சிவகேசவமிச்சிரனாற் கூறப்பட்ட தருக்க பரிபாஷையைத் தமிழில் கூறுகின்றது. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறிதற் கூடவில்லை. இப்பிரதி முற்றுமுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

சிவமயம்

அளவை நூல்

நியாய நூலின் முயற்சியைச் சுருங்கிய கேள்வியினாலே மடியனும் வாவும் பாலனெவ னவனுக் கென்ற வுத்தியொடு கூடியவை யளவைநூல் சுருக்கி விளக்கப்படா நின்றது. பிரமாணம் பிரமேயம்......சம்சயம், பிரயோசனம், திட்டாந்தம், சித்தாந்தம், அவையவம், தருக்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஹேத்வாபாஸமசலம், சாதி நிக்கிரகத் தானங்களது தத்துவ ஞானத்தா லுயர் சிறப்படைதல். இது ஞாயத்தினது முதற் சூத்திரம். இதன் பொருள் பிரமாண முதலிய பதினாறு பொருளினுண்மை யறிவால் வீடடைத லுளதா மென்க............

* * * *

End:

சொல்ல வேண்டிய பொருளிற் சிறிது குறைந்தால் நூனம்; சொல்லும் பொருளிற் சிறிததிக ....ம் சித்தாந்தத்தின் கேடு;

அபரி சித்தாந்தம். பிரகிருதத்தில் அசம்ந்தமான பொருளுடைய வசனம் அருத்தாந்தம். உத்தரத்தினது தோன்றுமையப்பிதிமை தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்பந்தமான வருத்தத்தைத் தானே யுட்படுதல் அபிமதானுஞ்ஞை. இட்டார்த்த பங்கம் விருத்தம். ஈண்டு மிகவும் வேண்டாமையாகிய ரூப பேதங்களுக் கிலக்கணஞ் சொல்லாமை தோடத்தின் பொருட்டல்ல. இவ்வளவிற் பாலனுக்கு விற்பத்தி சித்திக்கையால். சிவகேசவமிச்சிரனுற் கூறப்பட்ட தருக்க பரிபாஷை தமிழாற் கூறப்பட்டது.

சிவமயம்.

No. 2121. TARUKKA CAṄKARAKA URAI

[PROSE]

தருக்க சங்கிரக வுரை—[வசனம்]

[794-B]

Size, $9\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 60. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is said to be a Tamil prose rendering with annotation of the Sanskrit work Tarkka Tīpika. The translator is Aruṇācala Muni.

Complete.

குறிப்பு: இது, பதார்த்தங்களை ஏழு வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் பற்றி வாதித்து விளக்கும் நூல். தர்க்க தீபிகை என்ற வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு. இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

உமைபா லுலகிறையை வாக்கி னுயர்ந்தானை
யமைநீர் குருவையடி தாழ்ந்தினேர்க் கின்பா
விமையா வொளிர்தருக்க தீபிகை யென்றே
யமையா வுரைப்பா மறி.

செய்யுமிச்சைக்கு விடையமாகிய நூற்கிடை யூறில்லா முடி வெய்தும் பொருட்டுயர்ந்தோ ரொழுக்கத்தினு மி.........மறையாற் றெரித்த செயத்தகுதலையுடைய வீட்டதே யவ்வணக்க வடிவ மங்களத்தை மாணுக்கரா யொழுக்கங் கொளுத்த வேண்டி பாட்டாற் செய்து கருத்துப் பொருளைக் கூறுகின்ற நூலகிறையை யெ...நத்து...மங்கலத்திற்கு முடிவைச் சாதிக் குகையி னின்று மங்களஞ் செய்த விடத்துங் கிரணு வலி முதலியவற்று முடிவுகாணுமையான் மங்கள மில்லாவிடத்துங் காதம்பரி முதலிய வற்றுண் முடிவு காணப்படுகையான் அன்னுவய வெதிரேக வேபி சார்த்தானெனி னற்றன்று.

* * * *

End:

கிரியை யென மருவும்வை யாவு ஞானங் கிடைத்ததற்கு நிமித் தமெனக் கிளக்கு மென்பது முதலியவற்றுற் கன்மத்திற்கு ஞான சாதக மாகை கூறப்படுகையான் ஞானத்தின் வழியா யல்லது கன்மந்தானே மோட்ச சாதனமாகலின் றதனுற் பதார்த்த ஞானத் தின் வீடு மேலாய் பயனென யாவு மழகியன—இங்ஙனம் தருக்க சங்கிரக விருத்தியாகிய தருக்க தீபிகை முற்றும்.

திருச்சிற்றம்பலம்..

Colophon:

நையாயிக வைசேடிக மதனூனெறி ஞாலத்
தெய்யாதுத மிழ்ப்பாலர்க ளெளிதின்பொடு முணர
வுய்யாவகை நூலும்மத னுரையுமுறை செய்தா
ளையாறடை யாமானத னருணசல முனியே.

சிவமயம்

No. 2122. TARUKKA CAṄKIRAKAM—[PROSE]

தருக்க சங்கிரகம்—[வசனம்]

[794]

Size, $9\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 20. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is same as No. 2121 but contains the subject matter in prose.

Complete.

குறிப்பு : இது, முன் எண் **2121** பிரதி போன்றது. உரை நடையில் உள்ளது.

பூர்த்தி.

Beginning :

உலகிறையை நெஞ்சு ளிருத்தியுய ராசான்
மலரடியை வந்தித்து வாழ்த்திச்—சொலுவாமா
னன்.........(ப்)போதமுற நற்றருக்க சங்கிரக
மென்னுமொரு நூற்றமிழா லிங்கு.

திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேஷம் சமவாயம் அபாவம் எனப் பதார்த்தங்களேழு. அவற்றுள் திரவியங்கள் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா மனம் என வொன்பதே.

* * * *

End :

என வினவத் தோற்றமின்றி யீறுடையது முன்னின்மை காரியத்தினது தோற்றத்திற்கு முன் தோன்றி யீறில்லது. அழிவு பாடு காரியத் தோற்றத்திற்குப் பின் முப்பொழுதிற்றுஞ் சஞ்சருக் காவச் சின்னப் பிரிதியோகியை யுடையது அத்தியந்த பாவமாகிய வென்றுமின்மையே வாயுவிற் குருவமின்று என வரும். அவ் வடிவு மறையாது ஒன்றிஞெண்றின்மை கடம்படமன்றென வரும். எல்லாப் பொருள்களு முள்ளபடி சொற்றவற்று ளடங்குகையா லேழ் பொருள்களென்பது பெற்றும்.

தர்க்க சங்கிரக முற்றும்.

சிவமயம்.

No. 2123. NIYĀYA PARIPĀṬAI—[PROSE[

நியாய பரிபாடை—[வசனம்]

[599]

Size, 11½″×1½″. Pages, 80. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is the same as No. 2122 though called by a different name.

Complete.

குறிப்பு: *இது, முன் **2122** எண்ணுள்ள பிரதியை முழுதும் ஒத்துள்ளது. நூற்பெயர் மட்டும் வேறாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏடுகள் எல்லாம் செல்லரிக்கப்பட்டிருக்கின்றன. இடையில் 3 ஏடுகள் ஒடிந்தும் ஒடிந்த பகுதிகள் காணாமலும் இருக்கின்றன மிக்க சிதிலம்.*

பூர்த்தி.

Section XV - MATHEMATICS, ASTRONOMY AND ASTROLOGY

பகுதி 15 - கணிதம், வானநூல், சோதிடம்

No. 2124. KAṆAKKATIKĀRAM

[TEXT AND ANNOTATIONS]

கணக்கதிகாரம்—[மூலமும் உரையும்]

[1238]

Size, 13½″ × 1¼″. Pages, 148. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This seems to be a translation of a portion of a fuller treatise on higher Mathematics in Sanskrit. The translator seems to be one Korukkai Kāritaran.

Incomplete.

குறிப்பு : *இது கணித வகையைச் சார்ந்தது. பண்டைக் காலத்துக் கணக்கு முறைகளை அறிவிப்பது. உரையுடன் கூடியது. மகடூஉ முன்னிலையாக வைத்துப் பாடியது. இயற்றியவர் கொறுக்கை காரிதரன் என்று தெரிகிறது. இப்பிரதியின் நூல் முற்றுமில்லை. இது மதுரையாதீனத்துப் பிரதியாகும்.*

அபூர்த்தி.

Beginning :

ஹரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை.

கணக்கதிகாரம் விநாயகன் திருவுள்ளம்

கற்பகமே மெய்ப்பொருளே கதிரோன் சுடரொளிபோல்
எப்பொழுதில் மெய்யுலகில் இக்கணக்கு—ஒப்பறவே
கு......விலா விண்ணவருத் தாழாதெடுத் துரைக்கப்
பாரின்மேல் கிற்கப் பகர்.

* * * *

End :

இருநாழி நெல்கொண்டு முப்பத்திரண்டை விச்சிக்கும் என்னை யுடையான் ஒரு நாழிகைப் பொழுது உனை மறந்தறியேன் உனக்கு நான் அடிமையானேன். உமைபாதமே. தஞ்சமானேன் அன்றி மற்றொரு......வலு வேறுமுளதோ உன் திருநாமம்........

No. 2125. KAṆITA NŪL—[PROSE]

கணித நூல்—[வசனம்]

[161-A]

Size, 16″ × $1\frac{1}{4}$″. Pages, 46. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note : This work deals about the measurements of lands.

Incomplete.

குறிப்பு : இது கணித வகையைச் சார்ந்தது. இதில் குழி யளவு முதலிய பலவித அளவு வகைகள் கூறப்பட்டுள்ளன. இயற் றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. ஏடுகள் மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

Beginning :

ஹரிஓம் நன்றாக.

அளவு கணக்கு.

12 அடிக்கு......குழி 100ம்......எத்தனை யென்றால் 12 அடியும் வருக்கிக்க 12க்கு நடுக்குழி 100ம் பெருக்க 400ம் பின் 19 அடியை வருக்க............

*   *   *   *

End :

மஞ்சாடி 20 கொண்டது களஞ்சியம் 20.........160. மா.........

No. 2126. KŪVA NŪL

[TEXT AND ANNOTATIONS]

கூவ நூல்—[மூலமும் உரையும்]

[873]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 118. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: The Mss. is so much injured that it is not easy to make out its contents. This seems to be a work on finding suitable sights for digging well.

Incomplete.

குறிப்பு: இது சோதிடத்தைப் பற்றிய நூல். கிணறுகளுக்குரிய இடங்கள் முதலியவற்றைக் கூறுவது போலும். இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இதிலுள்ள எல்லா ஏடுகளும் முதல் ஓரத்தில் ஒடிந்து சிதிலமாயிருப்பதனால் இதிலுள்ள மற்ற விவரங்கள் ஒன்றும் அறிய முடியவில்லை. இதில் பல பிரிவுகள் இருப்பதாகத் தெரிகின்றன. சில பிரிவுகள் மூலமாகவும், சில பிரிவுகள் மூலமும் உரையுமாகவும் காணப்படுகின்றன. நூல் முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

......ருந்திய பிருதிவி யப்புத் தேய்வுடன்
வருந்திய வாய்வு......சமைந்துடன
திருந்திய சரங்களு மாறி நிற்குங்கா
லரி......னன் சந்திர னிடது பக்கமே. 1

* * * *

End:

செலதிரி கோணு திப......சேர்ந்தகண்டத்தா திபருங்
......................கூவிவரும் பாம்புந்
கொலயோக காரகனும் நாடியிசை......வாயாநயந்து.
....

No. 2127. CARA NŪL—[TEXT]

சர நூல்—[மூலம்]

[588-A]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 28. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a work which teaches reading of the future by reading the direction of a person's breath at the time of the reading.

Complete.

குறிப்பு : இது நாசியில் சுவாஸம் ஓடுதலைக் கொண்டு எல்லாப் பயன்களையும் அறியும் வகையினைக் கூறுவது. இது சிவன் உமைக்குக் கூறியதாம். இந்தப் பிரதியில் 57 செய்யுட்கள் உள்ளன.

பூர்த்தி.

Beginning :

உமையாளுக் கீச னுரைத்த சரநூலை
யமையாப் பொருளை யறிவிப்பா—னிமையாப்
புவிமடந்தை பூமடந்தை போர்மடந்தை யான
கவிமடந்தை யிக்கதைக்கோர் காப்பு.

சந்திரபா னுவுடுக்கணமுங் கொழு......... துலங்கிய
பக்கங்கரணம் யோகம் வாரம்
வந்துசொல்லுஞ் சோதிடத்தே யறியாதார்க்கு
மனநினைவாய் வகையுமையாள் வணங்கிக் கேட்ப
இந்தவுட லுயிர்நிலைமை யறிந்தோர்க்கெல்லா
முணரலா முணரும்வகை யாதோ வென்னின்
பைந்தொடியா யாஞ்சொன்ன சரநூல் தன்னைப்
பரிந்து பாரென்று பரமன் சொல்வான். 1

* * * *

End :

புன்பிறப்பிற் பிறக்கினுஞ்சற் குருமுகத்தே
பொருந்தியநற் சரநூலைப் புகலக் கேட்டு
நன்குணத்தின் நெறிகெடப்போர் மனித ரென்றும்
நாமவரி னன்றிரண் டில்லைநல்வாய்ச் சொல்பின்
மின்பிறக்குஞ் செந்தழலை யடுத்த தெல்லா
மிரு......வ் வழலாகி விட்டாற் போலத்
தன் பிறப்பி லினிப்பிறவார் அவமே சாகார்
சடைமேனு மணிந்தருள்சந் திரனுப் பாரே. 50

Colophon :

சற்குரு வேதாந்த வெங்கிடாசலம் பிள்ளை சிஷ்யன் சுப்புரான் கையெழுத்து. சுபானு ௵ சித்திரை ௴ 13௳ குருவாரம் சதுர்த் தசியும் விசாகமுங் கூடிய சுபதினத்தில் எழுதியது.

No. 2128. CARA NŪL—[TEXT AND ANNOTATIONS]

சர நூல்—[மூலமும் உரையும்]

[588-A (1)]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 94. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is thc same as No. 2127 but with annotations.

Complete.

குறிப்பு : *இது, முன் 2127 போன்றது. இந்தப் பிரதி உரை யுடன் உள்ளது.*

பூர்த்தி.

Beginning :

சந்திரபானு............பரமன் சொல்வான்.

எ - து. சந்திராதித்தர் முதலான நவக்கிரகங்களும், திதி, வாரம், ராசி முதலான விலக்கணங்களும் நட்சத்திரம் யோகங் கரண மென்னப்பட்ட பஞ்சாங்கங்களினையும் இது முதலாய்ச் சோதியிலக் கணங்களையு மாராய்ந்து அப்போது மானிடவர்க்கு மனது நினை வினுவிலே நினைத்தாற்போற் லொரு கருமங்கள் செய்து முடிப்பதற்

கான ரகசியமாகிய சரவிசித்திரங்களால் முடிந்த பலனை யறியவேண்டியதற்குப் பிரம்ம ரகசியமாகிய பிரமயோக நிலையாகிய சரசாத்திரங் களுண்டோ வென்று பார்வதா தேவி சுவாமி பரமேசுரனை நமஸ்கரித்து வணங்கிக் கேட்கப் பரமேசுரரும் பரம ரகசியமாகிய சர நூலினை யருளிச் செய்வார்.

* * * *

End :

...........இந்தச் சர நூலி னுண்மையை...........வர்ணாசிரம வேதாகமங்களிலே சொல்லுமென்றவாறு. 51

காலசர மெழுதி முகிந்தது.

முற்றும்.

சற்குரு வேதாந்தமூர்த்தி பாதாரவிந்தமே துணை.

No. 2129. CILA COTIṬA-C-CEITIKAḶ—[PROSE]

சில சோதிடச் செய்திகள்—[வசனம்]

[1260-A]

Size, $14\frac{1}{2}'' \times 1''$. Pages, 12. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, New.

Note : This work gives information on finding Yogini for each day.

Incomplete.

குறிப்பு : இதில் யோகினி அறியும் முறை கூறப்படுகிறது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப் பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning :

அமாவாசையுடன் பிரதமை சதுர்முகர் நேர்கிழக்கு
துதிகை இந்து வடக்கு
திருதிகை உதாசன அக்கினிமூலை அஷ்டமி
....

* * *

End :

உறைத்தபா தகத்தி னெல்லா முயர்ந்தபா தகமியா தென்னில்
கறைத்தபுன் மதுவிரும்பல் கல்வி ஞானங்க டேசும்
நிறைத்தநல் லறிவு பெற்ற நெறிதரு மங்களெல்லாம்
புறைப்பட வகற்றிப் பொல்லா நிரையத்திற் பொருதும்
[பாவாய்.

No. 2130. CŌTIṬA KIRAKA CINTĀMAṆI

[TEXT AND ANNOTATIONS]

சோதிட கிரக சிந்தாமணி—[மூலமும் உரையும்]

[66]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 442. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a text book on Astrology with texts and notes on some of its aspects.

Incomplete.

குறிப்பு: இதில் கணப்பொருத்தம் முதலாகிய பொருத்தங் களும், விவாக சக்கரம், ஆரூடம் முதலியனவும் மற்றும் பல விஷயங்களும் கூறப்படுகின்றன. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் நூல் முற்றுப் பெறவில்லை. சுக்கிரன் சரிதை முடிவுவரை யுள்ளது; உரையுடன் கூடியது. உரையாசிரியரோ அல்லது இவ்வேட்டை எழுதியவரோ ஓர் வீரசைவரா யிருக்கலாமென்று தெரிகிறது.

அபூர்த்தி.

Beginning :

செந்திருவைச் சேரலாம் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ் ......டிருக்கலாம்—மந்திரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவற்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

வேலுமயிலும் துணையுண்டாவதாகவும்.

சோதிரிஷி கிரகசிந்தாமணி

பூவில் மங்கையும் பூதல வஞ்சியும்
பாவில் மின்சவு பாக்கிய மாதரும்
.... முத்தி விரும்பிய மானுமென்
ஞவி லங்கம ருந்துணே யாகுமே.

அல்லமா பிரபுதேவர் ரட்சிக்கக்கடவது
வீமீசுவரர் துணையுண்டாக வேண்டியது

என்றது :—பஞ்சலக்ஷ்மியாளும் பொருந்தியிருக்கும் பெருஞ் செல்வமான தொடுக்காடர வீமீசுவரர் கிருபைக்கடலான திருவருட் கடலைத் தொழுதெழும் நட்சத்திரப்பேர், ராசிப்பேர், கிரகப்பேர், பகல் நாழிகை, நாழிகை பார்க்கும...... சுத்தக் கெணித பஞ்சாங் கம் கிரகம் பனிரெண்டும் பனிரெண்டு ராசியிலு மியங்கு மடைவும் ஞானவாணியான அருட்காட்டு மென்றவாறு.

*　　*　　*　　*

End :

......கெடுமாரி விளைவுண் பரவும...... முன்முன்று சூன்...... பஞ்சமே :

என்றது :—மேஷ முதல் நாலு ராசியிலும் வெள்ளி நிற்கில் வருஷமுண்டாம். சிங்கத்திலுங் கன்னியிலு நிற்கில் வருஷமன்றி விரைத்த விரை தீயும். துலாம் விருச்சிகத்தில் சுக்கிரன் நிற்கில் மிகவும் வெள்ளம். தனுசில் நிற்கில் பேர் வருஷந் தோன்றித் துளியாய்ப்போம். மகரமுதல் மூன்று ராசியிலும் நிற்கும்போது அடைமழை பெய்யுமென்றறிக.

சுக்கிரன் சரிதை முற்றும்.

Colophon :

சுக்கில கார்த்திகைமீ 27வ ஆதிவாரமும் உத்திராட நக்ஷத் திரமுங் கூடிய சுபதினத்தில் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய தொடுக்காடு ஸ்ரீ வீமீசுரரவர்கள் கிருபாகடாக்ஷத்தி ஞலே இந்த நவக்கிரக சிந்தாமணி எழுத ஆரம்பம் பண்ணது.

No. 2131. COTITAM—[TEXT]

சோதிடம்—[மூலம்]

[643]

Size, $6\frac{1}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 190. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work deals with the planets and the results of their positions in some places etc.

Complete.

குறிப்பு: இது சோதிட நூல். இதில் கிரகங்களின் நட்பு ஆட்சிகள் முதலியன 9 செய்யுட்களிலும், அதன்பின் துவாதச பலனும், அஷ்டவர்க்கமும் சொல்லப்படுகின்றன. அஷ்டவர்க்க விவரங்கள் வசனமாகக் கூறப்படுகின்றன. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

நட்பாட்சி

வில்லுமீன் பருதி நட்பு வீறிய சிங்க மாட்சி
சொல்லிய மேட வுச்சஞ் சோர்விலாக் கும்பந்தண்டு
நல்லவெள் விடையும் நண்டும் நாரியு மகரந் தேளும்
வல்லி கேள் பகைய தாகும் வாழ்ந்ததோர் துலையே நீசம்.

* * * *

End:

செவ்வாய்க்குப் பலன்; செயும் கடன் சுமக்கும், ஈனசிந்தை, பயிர் லாபம். புதனுக்குப்பலன் ராசசமானம், சரீர சவுக்கியம், சரியான பேரோடே யுறவு. குருவுக்குப் பலன் அபிஷேகம் அலங்காரம் தனலாபம் தானியச் சேதம் பழைய திரவிய நாசம் சுக்கிரனுக்குப் பலன்..................ஆபரணம் சம்பத்து. சனிக்குப் பலன் தானியம் வரும் பசு வரும் பூமி வரும் பொன் வரும் ஆயுசுண்டு இவர்கள் பலமாயிருந்தாலிப்படிக்குச் சொல்லவும்.

No. 2132. CŌTIṬAM—[PROSE]

சோதிடம்—[வசனம்]

[807]

Size, $9\frac{3}{8}'' \times 1''$. Pages, 172. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This work deals with the way in which a horoscope has to be studied for ascertaining the life-events of the person for whom the horoscope is prepared.

Complete.

குறிப்பு : இது ஜோதிட சாஸ்திரம்; ஜாதகபலனைக் கூறுகின்றது. இயற்றியவர் முதலிய விவரம் தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியாயுள்ளது. இதில் 2 ஏடுகள் இன்னபக்கத்தன என்று தெரியவில்லை. 39 பக்கமுள்ள ஏடு 3-உம் 48, 49, 52, 56 இப்பக்கமுள்ள ஏடுகள் இரண்டிரண்டாகவுமுள்ளன. இவற்றில் ராசி சக்கரங்கள் எழுதப்பட்டுள்ளன.

பூர்த்தி.

Beginning :

தற்கால கிரகநிலை அறியும்படி.

கேட்டை 4-ல் சூரியன்; பரணி 5-ல் சந்திரன்; அஸ்தம் 2-ல் செவ்வாய்; கேட்டை 1-ல் வக்கிரம் புதன்.........

* * * *

End :

ஸ்ரீமுக வருஷம் மாசிமீ 6உ பகல் 21 வரைக்கும் சென்மாதி வருஷம் மாதம் 30 தீர்க்கம். இது கடந்தால் சனி திசையில் சூரியன் புத்தியில் மாரகம் நடக்கும்.

No. 2133. CŌTIṬAM—[PROSE]

சோதிடம்—[வசனம்]

[68-J]

Size, $16\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 34. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : This is a Primier of Astrology.

Incomplete.

குறிப்பு: இது முதலில் சோதிட நூலுக்குரிய வாரம், திதி நட்சத்திரம், மாதம், வருடம் முதலியவற்றை வரிசைப் படுத்திக் கூறுகின்றது. இறுதியில் அவ்வாரம் நாள் முதலியவற்றில் செய்யப்படும் செயல்களைக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலிய மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியா யில்லை. ஏடுகள் சிதிலம். கடைசி ஏடுகள் ஒடிந்துள்ளன. இதில் கூறப்படும் விஷயங்கள் அச்சிடப்பெற்றுள்ள வருஷாதிநூல் என்னும் நூலில் காணப்படுகின்றன.

அபூர்த்தி.

Beginning :

நாயிறு - ஆதித்தவாரம் ; திங்கள் - சோம வாரம் ; செவ்வாய் - மங்கள வாரம் ; புதன் - புந்தி வாரம் ; வியாழன் - குருவாரம் ; வெள்ளி - சுக்கிரவாரம் ; சனி - மந்தவாரம்.

* * * *

End :

எண்ணெயிட லாகாதென் றியம்பியநாள் நாலுக்கும்
எண்ணெயிட லாமென் றியம்பினேன்—எண்ணெயிட
நாயிறு பூச் செவ்வாய் நல்லவியா ழும்அறுகு
தூய வெள்ளிக் கா........... ....

No. 2134. CŌTIṬAM—[TEXT]

சோதிடம்—[மூலம்]

[859]

Size, $6\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 84. Lines, 12 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is another Text-book on Astrology.

Incomplete.

குறிப்பு: இது சோதிட நூல். இச்சுவடியில் எல்லா ஏடுகளும் முதலில் ஒடிந்து சிதிலமாயிருப்பதனால் இதைப்பற்றிய விவரமெதுவும் அறியக்கூடவில்லை. ஏடுகள் சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

......தித்தன் தனக்குச் சிங்கமாட்சியா மேஷமுச்சம்
வேதித்த வில்லு மீனம்......ட்பதுமிக வேயாகும்
போதித்த கோல்தான் நீசம் புகழ்பெரு ராசியேழுந்
சாதித்த பகையதாகச் சாற்றினர் தமிழ் வல்லோரே.

*   *   *   *

End:

சாவாந் தேகமெனுஞ் சுங்கனுக்குந்
திங்களுக்குந் தீக்கோள்......ட்ட
இடமான யேழு முடையோன்
மறைந்து போக
மோகமு......ள வேசைகுலப் பெண்ணுனு
முறைமை யதாய்க் கணவனுடன்
கூடலே சாவாம்போக முடனுகமத்தில்
விதித்தனிலை யுரைத்த வாறே.

No. 2135. CŌTIṬAM—[PROSE]

சோதிடம்—[வசனம்]

[678]

Size, $13\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 20. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work deals about Graha-Putas. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு: *இது சோதிடத்தைச் சார்ந்தது. இதில் சூரியபுட முதல் புதன் புடம் வரை கூறப்பட்டுள்ளன. இயற்றியவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை.*

அபூர்த்தி.

Beginning:

சுத்ததினத்தை வைத்து 17,29,438 கழித்து மிருந்த சேடம் கண்டம். கண்டத்தை 31ஆல் பெருக்கி 1323ல் கழிக்க வந்த ஈவு விருதாப்பியம்.

*   *   *   *

End:

புராசேட கலையைப் பின்பு வாக்கிய அதிக கலையினால் பெருக்கி வந்த கலையை முன் வாக்கிய கலையில் சேர்த்து முழுவதும் ராசிபாகக் கலையாக்கி மற்றொருபடியில் மேடாதியானால் கழிய. துலாதியானால் கூட்ட. இது புதனுக்குப் புடம்.

புதன் துணையாக வேணும்.

No. 2136. CŌTIṬAM—[PROSE]

சோதிடம்—[வசனம்]

[600-B]

Size, $10'' \times 1\frac{1}{4}''$. Pages, 168. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This deals with constellations and planets and of their general characteristics and powers.

Incomplete.

குறிப்பு: *இது, நட்சத்திர பலன் ராசி பலன் முதலியவற்றைக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning:

கணபதி சுந்தர துணை.

சூ. செ. சொ. லா. அசுவதி

செய்வன திருந்தச் செய்யும் செய்கை...ர்க்கு நல்லன்
மையுறு .... பொன்னும் மகிழ்ச்சியாலணிய வல்லன்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புகழ்பெற வாழ வல்லன்
ஐயமிட் டுண்ண வல்லன் அச்வதி நாளினானே.

* * * *

End:

கன்னிராசி பலன்

நடையனுகும் வெளியி......னும் பேசவல்லன், சித்தம
துடையனுகும் சிறிது ....பாரண முதுதாமேனியும்
பொன்னும் முறைமையா லணியவல்ல ஆய்தம
துடையனுகும் அத்தனுன் தோன்றினுனே கடுகவே
....

No. 2137. CŌTIṬAM—[PROSE]

சோதிடம்—[வசனம்]

[770]

Size, $5\frac{7}{8}'' \times 1''$. Pages, 164. Lines, 4 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work details rules for fixing auspicious timings for different undertakings.

Incomplete.

குறிப்பு: இது மக்கள் செய்யும் கர்மாக்களுக்கு நாளும் பலனும் கூறுகின்றது. இயற்றியவர் முதலிய விவரம் தெரியவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை. முதலில் ஒரு ஏட்டில் வைத்தியத்தைப் பற்றி எழுதியுள்ளதென்று தெரிகின்றது. ஏடுகள் பூச்சியரிக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு ஏடுகள் ஒடிந்துபோயுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

இந்த வெள்ளாமை செய்ய நன்றோ தீதோ
இரத......ளளா............இவர் ப.........ள
வெறுப்பு .... இந்தப் ....
.... நன்று.

* * * *

End:

இந்த வீடு இவனுக்கு
நன்மை யுண்டோ இல்லையோ.

இந்த வீடு இவனுக்குக் கட்ட சுகம்
இந்த ....ள்ளை கொண்டு விற்க நன்மை
அந்தச் சந்தைக் கட்டினால் பாழாகும்
குளம் வெட்டினால் விளங்க...... விடும்.

வரகினைப் பயிரிடச் சம்பத்துண்டாம். பாளையங்கோட்டையழியும் இந்தப் பெரிவினைக் கொள்ளப் பொருந்திவாழும்.

No. 2138. CŌTIṬAM—[TEXT]

சோதிடம்—[மூலம்]

[452]

Size, $13\frac{3}{4}'' \times 1''$. Pages, 78. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This work is divided into chapters on Diseases, Food and Evils and deals about these for owners of horoscopes.

Incomplete.

குறிப்பு: இது கிரகங்களின் உச்சம், நீசம், பகை, ஆட்சி, நட்பு முதலியவற்றைக் கூறுகின்றது. பிணிக் காண்டம், உண்டிக் காண்டம், கெடுதிக் காண்டம் எனப் பகுக்கப்பட்டுளது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

பிணிக் காண்டம்

வகுத்த நோய் மரணமாறு மெட்டுமே
மருவலதிய பகை நீச மாற்றெருணு
செகுத்தநோ யுடையோர் பகை நீசமே
சேரினும் பிணி தீரா மரணமே
கவித்தராசி மேனிற்கக் கடியகோள்
கவிழ்ந்தராசி கவிப்பினு நோய் விடா
மிகுந்த சோம னரவுறில் வெம்பிணி மிக்க
வி... சரபிடேகம் வேணுமே.

* * * *

End:

செக்கிருந்த தெருவே தென்கிழ்மனை
செறிவெனும் ரேவதி பூவணமதே
மிக்ககோள் ராசியானுறி லாணதாம்
வீறுகோளுறப் பெண்ணுகு மின்பமும்
தக்கநா ளுதையத்தினி னட்டமுஞ்
சாற்றுவான் பொருட்பெற றகுரமணம்
புக்கவின்பமே துன்பமெலா மறப்
போக்குவீ பீசர்தாளைப் புகழுவே.

No. 2139. TANIPPĀṬAL CŌTIṬAM—[TEXT]

தனிப்பாடல் சோதிடம்—[மூலம்]

[1056-C]

Size, 18½″ × 1½″. Page, 1. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. in 1 page consists of a few stanzas on stray aspects of Astrology as Cūlam etc.

Incomplete.

குறிப்பு: இதில் வாரசூலை, விருந்திடல், எண்ணெய் தேய்த்துக் குளித்தல் முதலியவற்றிற்கு நாட்கள் கூறப்பட்டுள்ளன. இயற்றியவர் முதலிய குறிப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை. இப்பிரதி பூர்த்தியாயில்லை. சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

ஆதித்தன் வெள்ளி யருங்கடிகை யையாறு
சாதிக்குந் திங்கட் சனியெட்டு—பேதிக்குஞ்
செவ்வாய்மால் முன்னான்கு செம்பொனிரு பத்திரண்டு
இவ்வாறு சூலத் தியல்பு.

* * * *

End:

கா......னிய முகந்தாகுங் கதிரவன் பீடை காட்டும்
மாலையில் நணையுந் திங்கள் வன்புதன் கந்தையாகும்
வீரியமில்லை செவ்வாய் வெள்ளியு மடந்தை சேர்வள்
கூறிய வியாழம் பொன்னாங் குவலையத் தாடைசாத்தே.

No. 2140. TĀṆṬAVA MĀLAI

[TEXT AND ANNOTATIONS]

தாண்டவ மாலை—[மூலமும் உரையும்]

[66-A]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 36. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on Astrology by one Appavaiyar.

Incomplete.

குறிப்பு: இது, சோதிட சம்பந்தமான நூல். சுவடியிலுள்ள ஒரு குறிப்பால் இஃது அப்பாவையரால் கணிக்கப்பட்டதெனத் தெரிகிறது.

அபூர்த்தி.

Beginning:

வேதப் பொருளை விளங்கு பரமே......க்
காதரவா மந்தப் புரப்பொருளைத்—தீதகற்று
....
வன்யான் மனத்தாற் கணிந்து

இந்நூல் செய்தவர் யாவரெனில்

செய்யதா மரைமிசை வெய்யதீ வினைகெடப்
பையவந் தவனடி மெய்யதா வாழ்ந்திடு
மையமில் கேள்வியப் பாவையனென் பேரெனக் கொள்க.

* * * *

End:

புத்திரர் தார முதலான பாவத்திற் கிட்ட தானாதிபதியினுடைய தசை, பொசிப்புக்களிலே புத்திர தாராதி சோபஞ் சொல்வாயென்றவாறு. ஒரு கோட்சாரங்கொண்டு குறிப்பறிதலல்லால் மானவர்தன்னுட் பலன்களுன்முகனை யன்றியே வாட் கண்ணு...... வல்லார் கூறு வதற்கு.

No. 2141. PAÑCA PATCI CĀTTIRAM

[TEXT AND ANNOTATIONS]

பஞ்ச பட்சி சாத்திரம்—[மூலமும் உரையும்]

[863]

Size, 8″×1″. Pages, 94. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note : This work deals with five birds which are supposed to attain special importances in several places at certain times.

Incomplete.

குறிப்பு: இது சோதிடத்தைச் சார்ந்ததாகும். ஆந்தை, வல்லூறு, காகம், மயில், கோழி இப்பறவைகள் இன்ன இன்ன நட்சத்திரங்களுக்குரியவை என்றும் அவற்றின் பலன்கள் இன்னவை என்றும் கூறுகின்றது. இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

......ஞ்ச பக்ஷி நூல்

......ஆ......

ஊ, எ, ஏ......ஒ, ஓ...

வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.

வல்லூறு: அ, க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, ழ, ள, ற, ன.

* * * *

End:

பூர்வபக்ஷம் பகலிரவு

படுபக்ஷி விருத்தம்

அருக்கன் வெள்ளிமுனி மரணமணிசேர் செம்பொன் காரியுட
னெருக்கும்வல் லூரே மரணநெடுஞ் சேர்காக மதிமரணஞ்
செருக்குஞ் செவ்வா ...ழியதாஞ் சேர்ந்தபுந்தி மயின்மரணம்
பெருக்க முளைக்கும் பிறைப்பக்கம் பெருங்கடிகை யறுபதுமே.

No. 2142. PAÑCA PATCI CĀTTIRAM—[TEXT]

பஞ்ச பட்சி சாத்திரம்—[மூலம்]

[977-A]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 9 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as No. 2141.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 2141 பிரதி போன்றது.

அபூர்த்தி.

No. 2143. PAÑCA PATCI CĀTTIRAM

பஞ்ச பட்சி சாத்திரம்

[1282]

Size, $5\frac{3}{4}'' \times 1''$. Pages, 18. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 2141.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 2141 பிரதி போன்றது.

அபூர்த்தி.

No. 2144. [IṬAKKĀṬAR] VARUṬA CINTĀMAṆI

[இடைக்காடர்] வருட சிந்தாமணி

[695-A]

Size, $12\frac{1}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 8. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This consists of 60 stanzas—one for each Tamil year—describing the importance of each year in respect of its general features.

Complete.

குறிப்பு: இது, 60 வருடங்கட்கும் பலன் கூறப்படும் 60 வெண்பாக்களை யுடையது. இடைக்காடர் என்பவரால் இயற்றப் பட்டது.

பூர்த்தி.

Beginning:

மண்ணுலகி லேதுதிக்க வந்தது...ப் போற்றி செய்தே
நண்ணி வருஷமதை நாட்டவே—பின்னமின்றிக்
கேளுங்கள் மானிடரே கேட்கின்றூர் சீர்சிறந்து
வாழுங்கள் நித்த மகிழ்ந்து.

* * * *

End:

இது காப்பு.

அட்சயத்தில் மாரிவிளை யற்பமெனச் சொன்னுலுந்
தற்சயங்க மேவிநல முண்டா—மிப்புவி(யி)ல்
மாரியுண்டு வெள்ளாண்மை வாழ்வறவே தான்விளையுஞ்
சீரிணங்கு வோங்குந் திரு.

சிந்தாமணி முற்றும்.

No. 2145. [IṬAIKKĀṬAR] VARUṬA CINTĀMAṆĪ—[TEXT]

[இடைக்காடர்] வருட சிந்தாமணி—[மூலம்]

[885-D]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 8. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 2144.

Complete.

குறிப்பு: இது முன் எண் 2144 பிரதி போன்றது. நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

No. 2146. VEKUTAṈIYA VARUṬA-P-PAÑCAṄKAM

வெகுதானிய வருடப் பஞ்சாங்கம்

[875]

Size, $9\frac{5}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 58. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a calendar in Sanskrit of the Tamil year Vekutaṉiya.

Complete.

குறிப்பு: இது சோதிடத்தைச் சார்ந்தது. முற்றும் வடமொழியிலுள்ளது.

பூர்த்தி.

Section XVI - MEDICINE

பகுதி 16 - வைத்தியம்

No. 2147. AKATTIYAR PŪRAṆA CŪTTIRAM

[TEXT]

அகத்தியர் பூரண சூத்திரம்—[மூலம்]

[607]

Size, 9″×1⅛″. Pages, 90. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains 170 stanzas on methods of preparing some rare medicines.

Incomplete.

குறிப்பு: *இது, வைத்திய முறைகளைப் பற்றிக் கூறுவதாம். மற்றைய விவரங்கள் தெரியவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. 170 செய்யுள்களுள்ளன.*

அபூர்த்தி.

Beginning:

குருநாதன் துணையுண்டாகவும்

அகத்தியர் பூரண சூத்திரம்.

கார்செறி மெய்யன் வெண்மைக் கடவுளுங்காணுப் பாதம்
பேர்பெறு முண்மைதன்னைப் பூரணநூலி லோதத்
தார்செங் கொன்றை சூடித் தாய்சரசு பதியுங் கந்த
ஞர்மத வாணைப்பிள்ளை யார்பதங் காப்புத் தானே. 1

*   *   *   *

End :

சுற்றிய தோர் திரியதனை விளக்கிலிட்டுச்
சுகமான முன் தயிலம் மதன்னிலத்து
பத்தியாங் ....குள்ளே
பத்துகிறை மையதனைப் பறண்டிக் கொண்டு
வெத்தியர்முன் தயிலமதனில் வர்புத்துத்
....
மைத்தேர் படுக்குள்ளே ....
விதமாகச்சரி எடையாய்க் கூட்டிமத்திச்
சித்தயாம் பதினாறு வயது சென்ற
செல்வர் கையிலிட்டிடவே தெரியுந்தூரம்.

No. 2148. AKATTIYA CWĀMIKAḶ PŪRAṆA CŪTTIRAM—[TEXT]

அகத்திய சுவாமிகள் பூரண சூத்திரம்—[மூலம்]

[796]

Size, 9″ × 1¼″. Pages, 168. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as previous No. 2147 but containing 180 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 2147 சுவடிப்பிரதியைப் போன்றது. 180 செய்யுட்களுள்ளன.

அபூர்த்தி.

No. 2149. AKATTIYAR CWAMI KAVIYA NIKANṬU

அகத்தியர் சுவாமி காவிய நிகண்டு

[1281]

Size, $10\frac{5}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 196. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is a dictionary on medicine in 8 chapters.

Complete.

குறிப்பு: இது, வைத்யத்தைப் பற்றிய நிகண்டு. இது எட்டு காண்டங்களை யுடையது. அச்சானதாகத் தெரியவில்லை. நூல் முற்றுமுள்ளது. நடை உயர்ந்த நடையுடையதன்று.

பூர்த்தி.

Beginning:

அகத்தியர் சுவாமி காவிய நிகண்டு 800.

முதல் காண்டம்

சீரான சிவனுமையாள் பாதம் போற்றி
செங்கையில்மான் மழுவேந்தும் தேவா போற்றி
காரான கணபதியுங் கந்தன் போற்றி
கனவீர பயிரவத்தின் கமலம் போற்றி
வாரான நந்திமா மறையோர் போற்றி
மறைநாலு வேதத்தின் கண்டம போற்றி
ஆரான தன்வந்திரி அசுவனியே போற்றி
அண்டசார் சரஞ்சூழ்ந்த அம்மாள் காப்பே. 1

* * * *

End:

பேரென்ற பேரெல்லாம் பொறுக்கி மணி போலே
பேசினேமெழு ணுங்காண்டம் பெருமை மத்த
நூரென்ற பாடல்நூத்தி முப்ப துக்குள்
நுண்மையதாய்ச் சொல்லிவிட்டோம் நீதப்போதன்

ஆறென்ற மாமுனிவன் ஓதுமொளி யெண்ணூறு
அனைவருமே இம்மொழியைக்கண்டு அருள்தான் வாளி
தேறென்ற மூணுங்காண் டம்புலத தியனே
அய்யா செப்பினேன் முழுதும் முற்றும் பூரணமாம்
[முற்றே.

முற்றும்.

No. 2150. AKATTĪCAR VĀKAṬAM—[TEXT]

அகத்தீசர் வாகடம்—[மூலம்]

[1001]

Size, 12″×1½″. Page, 474. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a medicinal work ascribed to Sage Agastya. The whole work consists of 1500 stanzas, while the Mss. has only 1145 stanzas.

Ineomplete.

குறிப்பு: இதில் பலவித வியாதிகளைப் பற்றியும் அவற்றை அறியுமுறை அவற்றிற்கு மருந்துகள் முதலியவற்றைப் பற்றியும் கூறப்படுகின்றன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. இப் பிரதியில் நூல் முற்றுமில்லை. 1145 பாடல்களுள்ளன. இதன் பின்னால் 8 ஏடுகள் காணப்படுகின்றன. அவையும் வைத்திய சம்பந்தமாகவே யிருக்கின்றன.

அபூர்த்தி.

Beginning:

ஸ்ரீ ராமசெயம்

நன்றாக.

அகத்தீசர வாகடம்

பண்டிதர் நிறை.

அடிமுடியு மாகிநின்ற நிர்க்குணத்தைப் போற்றி
அதுகடந்த நின்மலத்தை அடுத்தெந்நாளும்
வடிவுடைய சிவனுமையைப் பூசை பண்ணி
மகத்தான சின்மயத்தின் கருணை யாலே

படிமீதில் வயித்தியந்தான் ரெண்டு லட்சம்
பாடியதோர் பரப்பை யெல்லாஞ் சுருக்கி யானும்
சடியாச் சூத்திரம நாலாயிரத்தஞ் நூறு
சாற்றினேஞ் கணேசனருள் தானே காப்பாம்.

* * *

End:

ஆமப்பா வாகடத்திற் சூத்திரத்தையெல்லா
மறைந்திட்டே னனுவொன்று மடக்கமில்லை
வேமப்பா நோயெல்லாம் படுதீப்பற்றும்
வேறுள்ள நோய்களெல்லாம் விபரமில்லை
சோமப்பா விந்தநூல் தொகையே தென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தஞ் நூறு சொல்லும்
நாமப்பா வுள்ளபடி சொல்லி வைத்தோம்
நாதாக்கள் கடாக்ஷத்தால் சூத்திரந் தான்முற்றே.

Colophon:

திருச்சிற்றம்பலம் 34 பாட்டு குறைவு எழுத வேண்டியது.
1145 மேல்பட.................

No. 2151. IRĀMA TĒVAR CIVAYŌKAM

[TEXT]

இராமதேவர் சிவயோகம்—[மூலம்]

[799]

Size, $8\frac{3}{4}'' \times 1''$. Pages, 114. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work synchronises God's worship with medicinal practices and preparations and the Mss. contains only 185 stanzas.

Incomplete.

குறிப்பு : இது வைத்ய முறையைக் கூறுகின்றது. பலவித தேவதைகட்கு முதலில் பூசை செய்யுமுறைகளைக் கூறிப் பிறகு பல மூலிகைகளைப் பற்றியும் கூறுகின்றது. மற்ற விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. இப்பிரதியில் 185 பாடல்களிருக்கின்றன. முதலில் 2 ஏடுகள் ஆரம்பத்தில் ஒடிந்து சிதிலமாயுள்ளன. இறுதி ஏடும் அவ்வாறே யுள்ளது. முதல் ஏட்டிற்கு முன் 2 ஏடுகள் அதிகமாய் இருக்கின்றன. அவற்றுள் அஞ்சன முறை கூறப் படுகிறது.

அபூர்த்தி.

Beginning :

நன்றாக......தேவ... ..யை......ற......

மூலமெனு முதற்பொருளே மூக்கி னடுவணையில்
முத... மானதொரு ...மது காப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவளியின் நடுவெளியின் கீழே
நீலமெனும் நெருப்பாறு மயிர்ப்பாலத்துக் கூர்ப்பால்
நிறைந்தபரி பூரணமாய் நிர்க்களமதாகி
சீலமெனுந் தவமுடையோர் துரியமே தானாய்
சிறந்து நின்ற பரமகுரு சீர்பாதந் துணையே.

* * * *

End :

பாரப்பா நவகோணமிட்டுக் கொண்டு
பாமரன மேரு...தை நடுவே வைத்து
காப்பா விமி......ரு வடமாலை சாத்திக்
கனிவாக அர்ச்சனைகள் கருத்தால் செய்து
தேரப்பா வயிரவற்கு வடமாலை சாத்தி
சிலசில நற்றிபமொடு தூபங்காட்டி
நேரப்பா நின்றபர மேருதன்னில்
நிலையான அமுர்தரசக் கடுவை வாங்கே.

No. 2152. KULANTAIKALIN PĀLA-K-KIRAKA TŌCAM

குழந்தைகளின் பாலக்கிரஹ தோஷம்

[1283]

Size, $5\frac{5}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. prescribed some Tantric methods for children disceases.

Incomplete.

குறிப்பு : *இது குழந்தைகளின் சில நோய்களுக்குத் தந்திர முறைச் சிகிச்சைகள் கூறுவது.*

அபூர்த்தி

Beginning :

காளியென்னும் பெயரினையும். அதன் குணம் வாயிலெடுக்கும்; வயறுகழியும்; இதுக்கும பெலிமரவாலே எருமைபண்ணிச் சந்தனம் தெறித்து எருக்கம்பூச்சூட்டி மாலைநேரத்தில் மடியிலே பிள்ளையைக் கிழக்கு முகமாக வைத்துக் கொண்டு இதுவே சட்டியில் வைத்துத் தலையைச் சுற்றி ஊருக்கு வடக்கே செலுத்தவும். இந்த எந்திரம் எழுதிக் கட்டவும்.

* * * *

End :

ஆடியென்னும் பெயரினையும், அதின் குணம் குளிரும், கழியும், உடம்பு இளைக்கும் பின்னும் பலவிதம் செய்யும். இதற்குப் பெலி, சோரும் தயிரும் புது அகலில் வைக்கவும். எந்திரம் எழுதிக் கட்டவும். இந்த சக்கரத்துடன் சிறுகீரை வேர் குளிச்சமாடிக் கட்டவும். கோழி காசி 20 தூபதீபம் பாக்கு வெற்றிலை சத்தி.

No. 2153. KUḶANTAI-P-PIṆI MARUNTU

[PROSE]

குழந்தைப் பிணி மருந்து—[வசனம்]

[1239-B]

Size, $8\frac{5}{8}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8. Condition, Injured. Appearance, Old.

Note: This is a single page Mss. on a few medicines for children's ailments.

Incomplete.

குறிப்பு: இது, குழந்தைக்கு வரும் நோய்களுக்குரிய மருந்தைப்பற்றிக் கூறுகின்றது. மற்றை விவரம் தெரியவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning and End:

குழந்தைப்பிணி மருந்து

கோரங்காட்டுக் கொளிஞ்சி வேர் கேர்.....சாண் அப்பி ஒரு புடமுஞ் சுண்ணும்பிலே ஒரு புடமும் செம்மண்ணிலே ஒரு புடமும் மறுபடி சாணியிலே ஒருபுடமுஞ் செய்து... ..ரை...ஞகிப்போட்டு. திப்பிலி, சன்ன லவுங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, குங்குமப் பூ, கோரோசனை, பெருங்காயம் வறுத்துப் பொடிபண்ணி.......... கோவைத்தழையில் அமைத்துக் குண்டுமணிப் பிரமாணம் உண்டை செய்து சகல மாந்தத்துக்கும் ஒருகுளிகை முலைப்பால் வெந்நீரில் கொடுக்கவும்.

No. 2154. CILA NŌYKATKU-P-PARIKĀRAM

சில நோய்கட்குப் பரிகாரம்

[1282-A]

Size, $5\frac{3}{8}'' \times 1''$. Pages, 66. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. deals with cures and medicines for some sicknesses.

Incomplete.

குறிப்பு : இதில் சில நோய்கட்குப் பரிகாரம் கூறுகின்றது. மற்ற விவரங்கள் தெரியவில்லை.

அபூர்த்தி.

Beginning :

சாந்தி பொது

பாரடா பாரிலுள்ள மாந்தர்க்கையா
படரும்ஒரு பிணிஅதுதான் விலகுதற்கு
நேரடா சாந்திசெய்தால் தீரும் பாடு
நேர்மையுள்ள பீடையது திராவிட்டால்
சாரடா பாறைதனில் பாசிபற்றித்
தள்ளியதுபோற் சறுக்கிச் சரீரம் நோகும்
ஓரடா தொடுத்ததிது கனம்பி... மகனே
அறிவாகு ஊனைக் கேளே.

* * * *

End :

பாரடா தாழ்வில்லா வில்லொன்று சதைதனிலே
த............ வைத்துப் போற்றே
போற்றிடவே செந்துறுக்குப் பொருந்த வைத்துப்
பாலகனே தேங்காயை அதன்மேல் வைத்து

...............பச்சரிசியரைத்து இதமான வில்லொன்றி லப்பிப் பலமாக வில் வளைத்து நூல் கட்டி ஆடை சுற்றி வில்மத்தியிலே முட்டை வைத்து மாவளைத்துப் பிலமதாகப், பத்தியாய் வேப் பெண்ணெ யிருபுறமும் பந்தமிட்டுக் கொளுத்திப் பிணியாளர்களை யிருத்தி நூல் போட்டுப் பங்கமில்லாப் படப்பிட்டு ஆடை சாத்தே.

....

No. 2155. CILA MARUNTU MUṞAIKAḶ

[PROSE]

சில மருந்து முறைகள்—[வசனம்]

[1241-A]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a small Mss. with prescriptions for preparations of a few medicines.

Incomplete.

குறிப்பு: *இது சில மருந்து முறைகளைப்பற்றிக் கூறுகின்றது. உரை நடையிலுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி

Beginning:

கிரந்திக்கு மருந்து.

. *நல்லெண்ணெய் நாழி; (எலுமிச்சம்பழம்) சாறு படி 1;........ பத்தும் வி. 4. துத்தம் வி. 4. சாதிக்காய் 4.*

* * * *

End:

......ரணைகடிக்கு மருந்து

மந்திரம்

சாரணை வேரும் வெள்ளை வெங்காயமும் அரைத்துப்பின் வெந்நீரில் கொடுக்கவும்: மெலிமூகித்துவளை .... இதுக்கும்............ ஆதிவிந்து அனுதிவிந்து சூரியவிந்து சுக்கிலவிந்து சந்திரவிந்து சதாசிவவிந்து துடர்ந்து ஆதித்தர் கட்டுக்கட்டு. ரசம் போதறு சுவாகா: ஆயிரம் உருவாராற் பயறு.........ளக்கரி சேவிக்கவும். அதின் பிறகு பச்சை ரசத்தை உள்ளே போட்டுக் கொள்ளவும். ரசம் தின்றால் வெகு பலன் உண்டு...........தெண்டாயுதபாணி துணையாக வேண்டியது.

No. 2156. TAṈVANTIRI VAITTIYAM [YŪKI MUṈI CĀSTIRAM]—[TEXT]

தன்வந்திரி வைத்தியம் [யூகி முனி சாஸ்திரம்]—[மூலம்]

[706-B]

Size, 9½″ × 1″. Pages, 22. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Tanvantari is a great authority on Indian Medicine and this work is supposed to contain his teachings on the subject. The work is also called Yūki Muṉi Cāstram. The Mss. contains only 36 stanzas and is incomplete.

Incomplete.

குறிப்பு: இது வைத்ய வகையில் தன்வந்திரி வைத்யமென்று சொல்லப்படும். யூகிமுனி சாஸ்திரம் என்றும் பெயர் கூறப்படுகிறது, "சிவபெருமான் உமையம்மைக்கு அருளிச் செய்ய, அம்மை நந்திதேவருக்கு அருளிச் செய்ய அவரிடம் தன்வந்திரி அசுவினிதேவர் அகத்தியமுனி முதலிய முனிவர்கள் சொன்ன" என்று குறிப்பிடப்படுகிறது. இப்பிரதியில் 36 பாடல்களுள்ளன. ஏடுகள் சில சிதிலம்.

அபூர்த்தி.

Beginning:

தன்வந்திரி அருளிச்செய்த வயித்தியம்
யூகிமுனி சாஸ்திரம்

அடவான ஆயுள் வேதந் தன்னைத்தான்
அய்யருமே அம்மைக்கு அருளிச்செய்ய
நடவான அம்மையுமே நந்திக்குச் சொல்ல
நந்தியுமே சீவருக்கு அருளிச்செய்ய
தடவான தன்வந்திரி அசுவினிதேவர்
சமரசமா அகஸ்தியமுனி ....
திடவான ரிஷீதேவர் சொன்ன நூலின்
நோயெல்லாம் விபரமா நிகழ்த்தினேனே.

*   *   *   *

End :

தானான கர்மவிந் திரிய மைந்தின்
சார்வேதனைச் சாற்றிடவே வாக்குபாதம்
பானான பாயுருவு பஸ்த்தம்
பகர்ந்தும் விரிவதுதான் வாக்குபாதம்
கானான பாதமது கால்தானாகும்
கனமான பாணியது கையுமாகும்
ஊனான பாயுருத்தன் அபான மாகும்
வுபஸ்தமது லிங்கமென்றே உரைக்க லாமே.
....

No. 2157. POTIKAI MUNNŪṞU—[TEXT]

பொதிகை முந்நூறு—[மூலம்]

[1240]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 120. Lines, 10 on a page. **Condition**, Very much injured. Appearance, Old.

Note : This is a work on medicine by Podikayār which is another name for Sage Akastiya. The work consists of 301 stanzas. The Mss. is very much injured.

Complete.

குறிப்பு : இது வைத்திய சம்பந்தமானது, இதன் இறுதியில் "பொதிகையார் பாடல் முற்றும்" என்று காணப்படுவதனால் பொதிகையார் என்பவர் அகத்தியராயிருக்கலாமென்றும் அவரா லியற்றப்பட்டது என்றும் தெரிகிறது. இப்பிரதி முற்றுமுள்ளது. காப்புச் செய்யுள்களுள்பட 301 பாடல்களிருக்கின்றன. ஏடுகள் செல்லரிக்கப்பட்டிருத்தலால் எழுத்துக்கள் படிக்கமுடியாத அளவி லிருக்கின்றன.

பூர்த்தி.

Beginning:

பொதிகையார் பாடல் முந்நூறு

காலுந் தலையுங் கலந்துள் நடுவாகி நின்ற
மேலுந் துரிய விளக்கமே பாலம் வயித்தியமுந்
நூறுஞ் சூத்திரமதாய் வழங்கப்
பயிற்றியருளுங் கணேசன் பாதம். 1

* * * *

End:

மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
மூட்டினால் வடுகனங்கே நிருத்தஞ் செய்வா
னூலதநின் குண்டலிக்கு ளடுக்கப் பாரு
ஆகையா......ன்னவைக்க......டைமாலை சாற்று
சீலத்தில் நந்தியுட பூசை பண்ணு
செகண்டிநாதம்.................சை
காலத்தின் கருவறிந்து பூசை தீர்ந்தாற்
கைக்குள்ளாம் வயித்தியமுந் நூறு முற்றே.

பொதிகையார் பாடல் முற்றும்.

No. 2158. VAITTIYA KĀVIYAM

வைத்திய காவியம்

[1041]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 508. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a medicinal work in 493 stanzas and is also called Agastiyar Vākaṭam.

Complete.

குறிப்பு: இது, வைத்திய சம்பந்தமானது. அகஸ்தியர் வாகடம் எனும் குறிப்பு காணப்படுகிறது. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை. 493 செய்யுட்களுள்ளன.

பூர்த்தி.

Beginning:

ஆரியமால் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதாய் செந்தமிழாற் செப்பவே—கூரியதாய்
உள்ள நிதானமதை ஓத அறம்பெருகு
வள்ளலே யென்மனத்து வா, 1

வாவெனவே சிலேத்துமத்தில் வந்த கிர...திகளும்
போவெனவே நாவிலிடப் போய்விடும்—பாவனையாய்
வாக்கான பீனிசமும் மற்றுஞ் சளிபோக
வுக்கிருணம் பண்ணு...... தை.

*　　*　　*　　*

End:

தாரமும் ரசமுங் கெந்தி சரியதாய் தூளேசெய்து
பாரமாஞ் சீலைதன்னிற் பரப்பியே திரியுருட்டி
வீரமாம் விளக்கிற் போட்டு வேப்பெண்ணெய் தன்னில்
[வார்த்து
கோரமாங் திரி..... கொடுபுகை முகத்தில் வைத்தே.

ஏத்திடர் சன்னி தீரும் எழும்பிடர் குஷ்டங் தீரும்
பாத்திடர் பறங்கி தீரும்........ ணியமுங் தீரும்
கோத்திடுங் கண்ட மாலை குன்மங்கள் முதலாய் தீரும
ஏத்தியே வியாதிக்கெல்லாம் ஏழுநாள் .....மே.

Colophon:

சித்தாத்திரிஞு வைகாசிமீ 19உ சப்தமி திதி சதய நட்சத்திரம் சிங்க லக்கினமுங் கூடிய சுபதினத்திலே நடராயன் வயித்திய வாகடம்.

No. 2159. VAITTIYAM—CARAKKUKKAḶIṈ PAYAṈ—[TEXT]

வைத்தியம்—சரக்குக்களின் பயன்—[மூலம்]

[1263]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 84. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. purports to give the detailed uses of each of the ingredients used to make medicines. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு: இது வைத்திய மருந்துக்குரிய சரக்குகளின் பலனைப் பற்றிக் கூறுகின்றது. முற்றும் செய்யுளாலாகியது. வேறு விவரம் ஒன்றும் இதன் மூலம் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. முதலில் நான்கு ஏடுகள் இல்லை.

அபூர்த்தி.

Beginning:

கோரைக்கிழங்கு மஞ்சட் கிழங்கு கஸ்தூரி மஞ்சள்
மஞ்சள் இஞ்சி......கிழங்கு.

சீத சுரமற்றுஞ் சேராது ரத்தபித்தம்
வாத சுரந்தணிக்கும் மாமயிலே—வாதனையாய்
வந்தபிணி யத்தனையு மாற்றுமுந் தக்காசு
கொந்துலவு மாதையிதைக் கூறு.

*　　*　　*　　*

End:

கஸ்தூரி, சாம்பிராணி வெள்ளைப்பூண்டு
வால்மிளகு சீனன் கிழங்கு.

மேகமிரு பதும் பேராம் வெட்டை யழல்தணிக்கு
மாகமதிற் சூலையறு மாரிழையீர்—வாகாய
குஷ்டங் கிருமியறுங் கேள்சீனன் தன்கிழங்கு
சட்டமாய் நோய்தணிக்குந் தான்.

No. 2160. VAITTIYAM—[PROSE]

வைத்தியம்—[வசனம்]

[769]

Size, $9\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 172. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This Mss. consists of names of diseases with their appropriate medicines and directions for the preparations.

Incomplete.

குறிப்பு: இதில் பலவித நோய்களுக்குரிய மருந்துகள் செய்யும் முறைகள் கூறப்படுகின்றன. இதனைப் பற்றி மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. ஏடுகள் பல ஒடிந்தும் குறைந்துமுள்ளன. எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன.

அபூர்த்தி.

Beginning:

இரும்லுக்கு

திரிகடுகு திரிபலம் மு............வாய்விளங்கம் திப்பிலி மூலம் சிறுதேக்கு ......சீரகம் தேவதாரம் கொடிவேலி வேர், வெப்பாலை அரிசி வேப்பிலை பேய்தும்மட்டி வேர், மஞ்சள், மரமஞ்சள், வளையலுப்பு, ஆனைதிப்பிலி யிவை சமன்கூட்டிப் பொடிசெய்து இதுக்குச் சமன்.........பொடிசெய்து கூடகால.........தினமொன்றைக்கு ....பிரமாணம் நெய்யிலாகுதல் தேனிலாகுதல் பசுவின் பாலிலாகுதல் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி காசம், சுவாசம், மூலவியாதி, குன்மம், வெப்புப் பார்வை, சகல வாயுவு, வயிறு பொருமல், அதிர் வாயுவு, கிரிப்புழு, சுரம், தலை உஷ்ணம் இதுவெல்லாந் தீரும்.

* * * *

End:

கொடிவேலிச்சாறு படி 1, வேலிச்சாறு படி 1, சாறணைச் சாறு படி 1, ...ச்சாரம் படி 1. இந்த மூன்றுவகைச் சாரமும் பிழிந்து வடித்துக்கொண்டு............

No. 2161. VAITTIYAM—[PROSE]

வைத்தியம்—[வசனம்]

[1002]

Size, $9\frac{1}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 384. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work of the same kind as described in previous no and lists diseases, their medicines and their preparations.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 2160 பிரதிபோன்ற பிறிதொரு நூல். இதில் வியாதிகளின் பெயர்களும் அவற்றிற்குரிய மருந்து முறைகளும் கூறப்படுகின்றன. இயற்றியவர் பெயர் முதலியவை தெரியக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. 5 ஏடுகள் ஒடிந்துபோயுள்ளன. சுவடியில் இடையில் சிலவேடுகள் இல்லை.

பூர்த்தி.

Beginning:

இருமல், சுவாசகாசம் இதுக்குத் தானிக்காய் லேகியம்

தானிக்காய் தோல் பலம் 1, சுக்கு மிளகு திப்பிலி நெல்லிமுளி ஓமம் ஏலம் வால்மிளகு அதிமதுரம் இஞ்சி வகைக்குப் பலம் ½. இளவறுப்பிற் சூரணம் பண்ணி அரித்துச் சர்க்கரை பலம் 3; பசுவின் பால் படி ½ சர்க்கரை போட்டுப் பாகுதிரளக் காய்ச்சிச் சூரணம் போட்டு, நெய் பலம் 5; தேன் பலம் 2½ விட்டு லேகியம் பண்ணி வேளைக்கு பலம் ¼ கொள்ள இருமல் சுவாசகாசம் போம். இதுக்குத் தயிலம் வில்வவேர் பலம் 10; சந்தனத்தூள் பலம் 1 இடித்துப் பானையில்போட்டு, சலம் படி 8 விட்டு ஒரு படியாய் வடித்து அதில் நல்லெண்ணெய் படி 1 விட்டுக் காய்ச்சிப் பதமாய் வடித்து முழுகவும். இருமல் போம், இரைப்புப் போம்.

* * * *

End:

பித்த ரோகங்களுக்கு, கால் எரிவு, கண் எரிவு புகைச்சலுக்கு

சீரகம் படி 2, உமி போக்கிப் பதினாறு படி சலம்விட்டு ஒரு நாள் ஊறவைச்சு சீக்கிரங்கட்டை யெரிவிட்டு ஒருபடி கிசாழத் துக்கு 1⅛ படி நல்லெண்ணெய்விட்டு ....படுத்தி விறகு கொண்டு எரிவிட்டு அரைத்திரம் தயிலமாகிற பக்குவத்தில் காற் போக அரிசி 3 பலம் ஒண்ணுரெண்டுமா அரைச்சு போடவும். 4 துளி துத்திகை மக்கலே விடவும், தயிலம் பதமாய்க் காய்ச்சி எடுக்கவும்.

Colophon :

73, 74, 99, 100-ஆவது ஏடுகள் இல்லை. 113-ஆவது ஏட்டிலிருந்து ஏழு ஏடு வரையிலும் இல்லை. இருப்பு ஏடு 192.

No. 2162. VAITTIYAM—[TEXT]

வைத்தியம்—[மூலம்]

[1040]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 164. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. gives Lēkyam and Centūram for some diseases as Mūlam, Pāṇṭu etc.

Incomplete.

குறிப்பு : *இதனுள் மூலம், பாண்டு முதலாகிய வியாதிகட்கு லேகியம் செந்தூரம் முதலிய மருந்துகள் செய்யும் முறை கூறப்படுகின்றது. செய்யுளாலாகியது; சிலவிடங்களில் வசனத்தாலும் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. முதலில் சில ஏடுகள் இல்லை; இறுதியில் சில ஏடுகள் ஒடிந்துள்ளன.*

அபூர்த்தி.

Beginning :

மூலத்துக்கு லேகியம்

செய்வதென்ன வெ............ சொல்லக் கேளு
திறமான நாகத்தின் செந்தூரத்தை
மெய்யாகச் சொல்லுகிறேன் பணவெல்லத்தில்
மெத்தயே ......ள்ளாதே குன்றிகொள்ளு
சையோகஞ் செய்யாதே புளியாகாது
தாம்பூல மாகாது சடலத்தேற்கைப்
பொய்யல்ல மூலத்தி லெடுத்தரோகம்
போகுமடா புலத்தியனே கஞ்சா வாங்கே.

* * * *

End :

பிரிந்துபோங் கர்ப்பத்தால் வந்ததோஷம்
பிழைபொறுக்கு மோவயிரங் கண்ணுல் பார்த்தால்
முறிந்துபோ மலக்கட்டு கட்டிற் றுஞல்
மோசமடா மலக்கட்டு தீரச் சொல்வேன்
செறிந்ததிரி கடுகுரோகணி யிந்துப்பு
திரிபலேமுத் தக்காசு விடையமோம
மறிந்துவாய் விளங்கமொடு நறுக்கு மூல
மப்பனே வகையொன்று பலந்தா ஞென்றே.

No. 2163. VAITTIYAM—[TEXT]

வைத்தியம்—[மூலம்]

[1039]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 146. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work in stanzas and in prose on diseases and medicines.

Complete.

குறிப்பு: *வைத்திய முறைகள் பற்பல இதில் காணப்படுகின்றன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning :

தாளகம் சுத்தி செய்துகொண்டு பொற்றலேக் கையாந்தகரையை எலுமிச்சங்காயளவு அரைத்துக் கவசங்கட்டி, அதன்மேல் பொடுதலேயை அந்தப்பிரகாரம் கவசங்கட்டி, வெள்ளேக் கூழாங்கல்லே யரைத்து அந்தப்பிரகாரம் கவசங்கட்டி சீலேமண் செய்து முக்கால் முழம் புடம்போடச் சுன்னம் செம்பில் கொடுக்க வயது 100.

* * * *

End:

டாரிலே வங்கமென்ற சுன்னந் தன்னைப்
பரிவாக மஞ்சள்தனில் விட்டுப் பாரு
காரியமாய் குருவிரத்தம் போல்சி வக்கும்
கனகாரச் சுன்னத்தை எடுத்துக் கல்வம்
ஊரிலே யிட்டுநீ சொல்லக் கேளு
உறுதிபெறக் கடையில்விற்கும் ரசச்செந் தூரம்
வாரியே வாங்கிவந்து நிறையை
....

No. 2164. VAITTIYAM

[TEXT AND ANNOTATIONS]

வைத்தியம்—[மூலமும் உரையும்]

[800-B]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 18. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work also deals with medicines and their preparations.

Incomplete.

குறிப்பு: இது, மருந்துகளின் முறையைப்பற்றி விவரித்துக் கூறுகின்றது. பிற குறிப்புகள் ஒன்றும் அறிதற்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. முதலில் 4 பக்கத்தில் செய்யுளாயும், ஏனைய 5 பக்கத்தில் வசனமாயுமுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

பூரண லேகியந்தான் ஒன்று

திடமான பூரண லேகியந்தா னொன்று
செப்புகிறேன் புலத்தியனே தெளிவாய்க் கேளு
நடமான ச......க்கஞ்சா பழுது பார்த்து
நன்றாகப் பதினஞ்சு பலந்தா னப்பா

குடமான பாண்டத்தி லிடித்துப் போட்டுக்
குளிர்ந்த சலம்பதி ளுறுபடி தான்விட்டு
இடமாகக் காய்ச்சியே யெட்டெட் டாக
மேலான கியாழத்தை யிறுத்தி டாயே.

* * * *

End :

............ற் பூரத்துக்கு

ரசம் சேர் 1, கெந்தகம் பலம் 2 சேர்த்து கள்ங்குபண்ணிக் குப்பியிலடைத்துக் காடாக்கினி யெரிக்கவும் சாமம் 3. அப்படி யெரிக்கும்போது குப்பிசரக்கில் தீப்பிடித்து எரியும்போது அரைப்பலம் தாளகம் மிளகுபோலே வெட்டி வைத்துக்கொண்டு அதில் போட்டு சிலாகையினுல் கிண்டவும். சிலாகை நுனி கரகரப்புக் கண்டால் சிலாகை எடுத்துப்போடவும். எடுத்து அரை நாழிகைக்கு எல்லாங் குப்பியில் வாயடைக்கும் அடைத்த பிறகு இறக்கிப்போடவும். இறக்கி அரை நாழிகைக்கு எல்லாம் குப்பி யெடுத்துத் தண்ணியில் நனைச்ச ஊறவச்சு குப்பி உடைக்கவும் ....

No. 2165. VAITTIYAM

[TEXT AND ANNOTATIONS]

வைத்தியம்—[மூலமும் உரையும்]

[906]

Size, $5\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 180. Lines, 8 on a page. Condition, Injured. Appearanee, Old.

Note: This Mss. also deals with names of diseases, their symptoms and medicines for them.

Incomplete.

குறிப்பு: இது, வைத்திய சம்பந்தமானது. இதில் பலவித மான நோய்கட்கு மருந்து முறைகள் கூறப்பட்டுள்ளன. செய்யு

னும் வசனமுமாயுள்ளது. மற்ற விவரங்கள் அறிதற்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

வாதத்துக்கு

கொள்ளு மதுரஞ் செவ்வள்ளிக்
கொடியோடேல மிலவங்கம் கணி
விள்ளு மரமஞ்சள் நாடன்தேவ .... ஒரொன்று
இருகளஞ்சு வேற்க .... களஞ்சு
மெள்ள அரைத்துக் கரைத்து வெந்துவடித்து பத்தத்தில்
மேலும் பூசித் தலையில் சுரக்கத்
துள்ளுபரி தாபசுரம் விச்சுரம் பித்தசுரம் சன்னி
வாதசுரம் மற்றும் போமே.

* * * *

End:

தயிலப்பிரயோகம்

மந்தமாம் பதமேயானால் வருத்தமே வழுத்திக்காணு
மந்தம தற்பமாகில் .... மெழுகுபோலாம்
வெந்திடு மத்தியபாகம் விண்டுதிர்ந் துண்டுதூளா
மந்தநெய் யெண்ணெய் வைக்க யிவைபத மென்னலாமே.

மந்தமாம் பதமே யாகில் வாதத்துக் கதுவோ மேகம்
விந்தமாம் பதங்க ளாகி விளங்கிய பித்தத் துக்காம்
வந்தவா பதங்க ளாகில் மற்றுள்ள புண்ணைத் தீர்க்கும்
முந்திய முன்னோர் பேசு முறைமையை யறிவ தாமே.

No. 2166. VAITTIYAM—[TEXT]

வைத்தியம்—[மூலம்]

[1242]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 174. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: The work deals with methods of preparations of several centūrams or medicinal powders.

Incomplete.

குறிப்பு: இது, பலவித செந்தூரங்கள் முதலியவற்றைச் செய்யும் முறைகளைக்கூறுகின்றது. மற்ற விவரங்கள் அறியக்கூட வில்லை. இப்பிரதி முற்றுமில்லை. ஏடுகள் புரண்டிருக்கின்றன. சில ஏடுகளில் பக்க எண்கள் குறித்தும், சில ஏடுகளில் பக்க எண் குறிக்காமலும் இருத்தலால் அவற்றை முறைப்படுத்தி முதல் இறுதிகள் இவை என்றறிய முடியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

அயச்சத்து

கூட்டுவாய் காரமொடு சாரந் தன்னைக்
குறிப்பாக வகைக்கொரு பலவீதங் கூட்டி
மூட்டுவாய் பூனீறு கழஞ்சி யொன்று
முந்திய ....ராவெண் கருவின்னீ ணலாட்டு
மாட்டுவாய் இருசாமம் அரைத்த பின்பு
வளமாக வில்லைசெய்து ரவியிற் போடு
நாட்டுவா யுலர்ந்தபின்பு மூசைக் குள்ளே
நலமாக வைத்ததனைக் குகைவாய் மூடே.

* * *

End:

தாளகபஸ்பம்

கொள்ளடா தவங் கோரி மூவேழுநாள்
மெள்ளடா சயவீனை யிரைப்புடன்
உள்ளடா இருமலுடன் காசம்போம்
எள்ளடா எண்ணெயெனி ......லிரு கரத்திடே.

Section XVII - MISCELLANEOUS
பகுதி 17 - பலவகை

No. 2167. KOKKŌKAM MUTAL ATTIYĀYAM
[TEXT AND ANNOTATIONS]
கொக்கோகம் முதலத்தியாயம்—[மூலமும் உரையும்]
[135-A]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 9. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains a portion of the work which gives details of sex, sexual contacts and their effects.

Incomplete.

குறிப்பு : *இதில் பெண்களின் இயல்பு முதலியன கூறப்படுகின்றன. இதனைக் காமசாஸ்திரம் என்றும் கூறுவர். இயற்றியவர் பெயர் முதலிய குறிப்புக்கள் ஒன்றும் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning :

சிவசுத கணபதி

நமோஸ்து

வேலுமயிலுந் துணை

பதுமினி சித்தினி பகர்ந்த சங்கினி
யிதமுறு மத்தினி யென்னும் நால்வருள்
முதலவ ளுத்தம மற்ற மூவரு
மதிகமற் றவரவ ரடைவிற் குழ்வரே.

எ - து. பதுமினி சித்தினி சங்கினி அத்தினி என்ற நால் வகைப் பெண்களில் பதுமினி யுத்தம சாதி. மற்ற மூணு சாதியிலும் பதுமினி சாதி முதல் சாதி ; இரண்டாஞ் சாதி சித்தினி ; மூணாஞ் சாதி சங்கினி ; நாலாஞ் சாதி அத்தினி. இந்த நாலு சாதியிலும் பதுமினி சாதி மூன்று வகை, சித்தினி சாதி மூன்று........

*   *   *   *

End :

இடைப் பிரமமுதலா யேறும் வளர்பிறைக் கெண்ணலாகும்
தடப்பரு வலப்பக்கத்தில் தேய்பிறை தன்னில் தாழும்
தடுக்குறு மாதராகத் தமுதென வறைவர் பின்ன
ரெடுத்ததோர் விடந்தான் பாரமுதினுக் கேழாந் தானம்.

எ - து. பெண்களுக்கு அமுதம் ஏற்ற இறக்கம் சொல்லியது. பெண்களுக்கு இடதுபக்கம் பெருவிரலில் இருந்து உச்சந்தலையளவும் வளர்பிறைக் கேறிவரும். தேய்பிறைக்கு வலதுபக்கம் உச்சந்தலையிலிருந்து பெருவிரலளவு மிறங்கி வரும். அமுர்தம் தாடனம். நகக்குறி, பற்குறி, ...சுரதம் செய்யலாகாது ....

No. 2168. KOKKŌKAM ENNUM KĀMA CĀSTIRAM—[TEXT AND ANNOTATIONS]

கொக்கோகம் என்னும் காமசாஸ்திரம்

[மூலமும் உரையும்]

[956]

Size, 8″×1″. Pages, 208. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same work as described in No. 2167 but containing another portion of the work.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 2167 பிரதி போன்றது. 8-ஆம் அத்தியாயம் 69-ஆம் செய்யுள்வரை உரையோடுள்ளது. இப் பிரதியும் பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

End :

இயல்பல விருவிடு தூர்த்த வென்றினை
கயல்புரி கண்ணினார் கையிற் றள்ளியே
அயர்வுறு சிபக்கரா மரும்பச் செய்வடு
மயலுறுங் காமத்தை வளர்க்குந் தெய்வமே.

ஏ - து. நாயகி நாயகனைப் பார்த்து இப்படிச் செய்வது இயல் பல்லவே பெண்கள் கண்டால் நகைப்பார்கள் விடுவிடு விடடா விடடா தூர்த்தா விடடா நோகுது விடடாவென்று சுருக்கு சுருக்கென்று தைக்கும்போதெல்லாம் இச்சுக்கொட்டி இச்சுக் கொட்டி தள்ளி தள்ளிவிடச் சேல்கெண்டைபோல் கண்ணுள்ள நாயகியை அமுர்ததானங்களிலே...............பற்குறி வடுக்கள் விகாரத்தை விளக்குந் தெய்வமா மென்றவாறு. 69

No. 2169. CĀMUTTIRIKĀ LATCAṆAM—[PROSE]

சாமுத்திரிகா லட்சணம்—[வசனம்]

[706-A]

Size, $9\frac{7}{8}'' \times 1''$. Pages, 104. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work details the characteristics and their effects of every part of the human body in man and woman. This is in prose.

Complete.

குறிப்பு: இது, ஆண் பெண்களின் அங்க இலக்கணங்களைப் பற்றிக் கூறுகின்றது. வசனமாகவுள்ளது. இதைப்பற்றி மற்ற விவரங்கள் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. இதிலுள்ளவை எல்லாம் இலக்கணப்பிழை நிறைந்த கொச்சைச் சொற்களாம்.

பூர்த்தி.

Beginning:

ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை
திருச்சிற்றம்பலந் துணை
குருபாத நமஸ்து
சிவகுருவே கடாக்ஷம்
சரஸ்பதியம்மன் துணை

பெணகள் லக்ஷணம் பார்க்கிறது.
புருஷ லக்ஷணம் பார்க்கிறது.

இந்த இரண்டும், மன விப...த்தியால் யுக்தியின்பேரில் பார்க்கப் பட்டன.

குருபாதந் துணை

சிவகுரு கடாக்ஷம

நமசிவாயம்

ஹரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

பூலோகத்திலே பெண்களில் பதிவிரதைகளாக இருக்கிறவர் களே விவாகம் பண்ணவேண்டுமென்று அகஸ்திய முனி சுப்பிர மணியரைக் கேட்க, சுப்பிரமணியர் அகஸ்தியருக்குத் திருவுளம் பற்றினபடி அந்தப் பெண்களை விவாகம் பண்ணத்தானே பதி விருதை யென்கிறதும் விபசாரி யென்கிறதும் அற்பாயிசு யென் கிறதும் தீர்க்காயிசு என்கிறதும் அழகுண்டு யில்லை யென்கிறதும் அன்னிய தேசத்திலே போவாளென்கிறதும் விதரணமுண்டு யென்கிறதும் சமத்தி என்கிறதும் உலுத்த குணமுண்டு என்கிற தும் புத்திரருண்டு என்கிறதும்.........டியாய்ப் போவாளென்கிற தும் அற்பகுண மென்கிறதும் நற்குணமுண் டென்கிறதும் அவள் நினைத்தது முடியுமென்கிறதும் முடியாதென்கிறதும் அகளுடைய பாதாதிகேச முள்ளளுமறிந்த கணவர் பார்த்து நிச்சயிக்கலா மென்று சுப்பிரமணியர் திருவுளம்பத்தி அகஸ்தியருக்கு........... ....த்தினபடி சொன்ன விபரம்...........

*   *   *   *

End :

அளந்து பார்க்கிற லட்சணம்

புருஷர் பெண் யிருவருக்கு மொக்கும். பெண்களுக்கு ஒன்பது வயது தொடுத்து அதுக்குமேல் பதினஞ்சுக்குமேலும் அளந்து பார்ப்பது. மூக்கு அவரவர் கையினாலே மூன்றங்குலமானால் செல்வ மும் ஆயிசு அழகு முண்டு. இதில் நீண்டால் கடின போகமாம்.

Vol. I—Section I

நிகண்டு : பக். 1—44

No. 2170. KALVI OLUKKAM—PROVERBS

கல்வியொழுக்கம்—பழமொழிகள்

[1262-B]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 7. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a dictionary of maxims arranged alphabatically. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு : *இது, கல்வியொழுக்கத்தைப்பற்றிய பழமொழிகள் இதனில் கூறப்பட்டுள்ளன. பழமொழிகள் அகரவரிசையில் எழுதப்பெற்றுள்ளன. இதைப்பற்றி மற்ற விவரங்கள் ஒன்றும் அறியக்கூடவில்லை. முதல் 2 ஏடுகள் ஓரம் ஒடிந்துபோயுள்ளன.*

அபூர்த்தி.

Beginning :

ஹரிஓம்

கல்வி யொழுக்கங் கருத்துடன் படிக்கச்
செல்வமிருத்துச் சிறப்புண் டாமே.

அஞ்சு வயதி லாதியை யோது
ஆதியை யோத வறிவுண் டாமே
இனியது கொடுத்து எழுத்தை யறி
ஈட்டிய பொருளி லெழுத்தே யுடைமை
உடைமை யென்பது கல்வி யுடைமை

*   *   *   *

End :

வரத்தில் லாதான் செலவு மருந்தறியாத மெலிவு
வாரிச மில்லாத தடம் மாதவரில்லாத மடம்
விளைய மில்லாத புத்தி கனதை தறியாத விர்த்தி
வீர மில்லாத புரவி சேரநில்லாத பரிவு
வெற்றி யில்லாத முரசு விர்த்தியில்லாத வரசு
வேதாள மடங்காத மந்திரம் வாதாடமுடியாத தந்திரம்
வையகத் தில்லாத செய்கை மணற்பாங் இல்லாத பொய்கை.

No. 2171. CŪṬĀMAṆI NIKAṆṬU
[11th Chapter]—[TEXT]
சூடாமணி நிகண்டு [11-ஆவது: ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி]—[மூலம்]
[1127]

Size, $15\frac{7}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 19. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note : This is the same as No. 10 described in Vol. I, Page 15 but consists of only one chapter i.e. 11th. (Oru col pala porul peyar tokuti).

Incomplete.

குறிப்பு : *இது, பகுதி 1, பக்கம் 15-இல் விவரித்துள்ள எண் 10 என்ற நூலின் 11-ஆம் பகுதியான* **ஒருசொற் பலபொருட் பெயர்த்தொகுதி** *என்றதை மட்டும் கொண்டது. நூல் அச்சாகி யுள்ளது. சுவடியின் முகப்பில் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்னும் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது.*

அபூர்த்தி.

No. 2172. TOKAI AKARĀTI—[PROSE]

தொகை அகராதி—[உரைநடை]

[1261-A]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 20. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This is a dictionary of some names which are capable of groupings. The group names are not arranged in alphabetical or any other rational order. The work is not complete.

Incomplete.

குறிப்பு: இது, நிகண்டு வகையைச் சார்ந்தது. கூட்டுப் பெயர்களை யுணர்த்தும் தொகைச் சொற்களுக்கு வகை கூறுகின்றது. இஃது அகரவரிசைப்படி அமைந்தில்லை. தொகை அகராதி எனப் பெயர் கொடுக்கப்பட்ட காரணமும் தெரியவில்லை. இயற்றியவர் பெயர் முதலிய குறிப்புக்கள் அறிதற்கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை. இலக்கணப் பிழையுடையதா யிருக்கின்றது. தொகைகளில் வரிசை 3-4 என்று 32 வரை இப்பிரதியி லுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

உருவாவது: ஆண், பெண், அலி.
பதிகளாவது: அசுபதி, கெசபதி, நரபதி.
மனிதராவது: உத்தமர், மத்திமர், அதமர்.
சந்தியாவது: காலை, உச்சி, மாலை.
கந்தமாவது: சந்தனம், சாந்து, அகில்.
சாதகமாவது: ஏலம், இலவங்கம், பட்டை.
பத்திரியாவது: தாளிபத்திரி, சாபத்திரி, லவங்கபத்திரி.
பாலையாவது: கடு, நெல்லி, தான்றி.

*   *   *   *

End :

ஆதுலர்சாலை ; ஓதுவார்க்குணவு ; பசுவுக்கு வாயுறை ; சமையத்தார்க்குண்டி ; சிறைக்குச் சோறு ; ஐயம் ; நடத்தின்பண்டம் ; மகச்சோறு ; மகவளர்த்தல் ; மகப்பால் ; மகப்பெறுவித்தல் ; பிறரறங்......... ; கன்னிகாதானம் ; தண்ணீர்ப்பந்தல் ; மடம் ; தடாகம் ; ஆவுரியம் ; சுதறி ; விலங்கிற் கூணல்கல் ; கொலையுயிர் விடுத்தல். பிணமடக்கல் ; அழிந்தோரை நிறுத்தல் ; வண்ணார் ; நாவிதர் ; வயித்தியர் ; நோய்மருந்து ; கண்மருந்து ; கண்ணாடி ; நாளோலை ; தலைக்கெண்ணெய் ; மட்டுண் ; பெண்போகம்.

No. 2173. NĀMATĪPA NIKAṆṬU [TEIVAVARKKAM]—[TEXT]

நாமதீப நிகண்டு [தெய்வவர்க்கம்]—[மூலம்]

[1043]

Size, $10\frac{7}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 140. Lines, 4 on a page. Condition, Very injured. Appearance, New.

Note : This is a Nikaṇṭu which has been printed and published. Its author is one Civa Subrahmanya Kavirāyar. The Mss. contains only the 1st part of the work.

Incomplete.

குறிப்பு : இது பெயர்சொற்களுக்குள்ள பொருள்களைச் செய்யுள் மூலமாய் விளக்கும் நூல். இதனை இயற்றியவர் சிவசுப்பிரமணிய கவிராயர். இப்பிரதியில் நூல் முற்றுமில்லை. இது பல பாகங்களுடையதாகத் தெரிகிறது ; அவற்றுள் இது முதற்பாகமாகும். ஏடுகள் சிதிலம். இதற்குப் பின்னுல் சத்திக்குரிய வடமொழிப் பெயர்கள் ஒன்பது பாடல்களாற் கூறப்பெற்றுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

கணேசாய நம:

நாமதீப நிகண்டு

ஆனைமுக னைக்குகனை ஆதிபுவ னேசுரியை
ஞானமுதற் கோரக்கர் நாதனை—மேன்மைபெறு
சாமிகவி ராஜனையுந் தான்வணங்கிப் பேருரைப்பேன்
பூமிதனி லுள்ள பொருட்கு.

ஒல்லு முயர்திணைப்பே ரஃறிணையு யிர்பொருட்பேர்
இல்பொருட்பே ரிப்பொருட்க ளின்குணப்பேர்—சொல்படலம்
ஆமொருநான் கிட்டிரண்டைந் தைந்துநால் வர்க்கமிட்டு
நாமதீ பம்பகர்ந்தே னன்.

*　　*　　*　　*

End :

வெயிலின்பேர் நிலாவின் இருட்டின்

வெயிலென்று ......ஆதவம் வெய்யோன் கதிமதிக் கதிரே
பெய்நிலவு சந்திரிகை பின்னிருட்பேர்—மொய்திமிரம்
கச்சளந்து ணங்கறல்து வாந்தம்அந்த காரம்அரி......
மெய்ச்சு தமம் மங்குல் ......நீள். 23

திருச்சிற்றம்பலம்

ஆக வர்க்கம் 1க்கு பாட்டு 107

இட்ட காமிய மேழிதி னுலேவிலா தெய்துங்
கட்ட காலமுந் தீர்ந்திடுங் கங்கையி னுமம்
அட்ட காவொடு மெழுதினோர் வரைந்ததை ......வத்தோர்
தொட்ட காமியப் பலன்பெருஞ் செல்வமுந் துலங்கும்.

Colophon :

ஓம் நாமதீபம்

இஃது மடல் நாமதீப நிகண்டு சங்கரலிங்கம். முதற்பாகம். பாட்டு 1210. தென்காசி சந்நிதி மடத்துக் குருக்கள்............... பிரதி இது.

No. 2174. PALAMOLI-Y-AKARĀTI—[TEXT]

பழமொழி யகராதி—[மூலம்]

[1024]

Size, $18\frac{1}{2}'' \times 1''$. Pages, 106. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a dictionary of about 2196 proverbs arranged in alphabetic order.

Complete.

குறிப்பு: இது, வழக்கச் சொற்களாகிய பழமொழிகளைச் சேர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். அச்சிடப்பெற்றதன்று. இந்தப் பிரதியில் 2196 பழமொழிகள் உள்ளன. அப்பாசாமி கிராமணி எழுதி வைத்துள்ளதெனத் தெரிகிறது.

பூர்த்தி.

Beginning:

1. அகமேறச் சுகமேறும்.
2. அகவிலை யறியாதவன் துக்க மறியான்.
3. அகப்பட்டவனுக்கு அட்டமத்துச் சனி.
4. அகலவிருந்தாற் பகலஉறவு.
5. அகடவிகடமாய்ப் பேசுகிறான்.

* * * *

End:

1. வைதவனுக்குத்தானே வாய்நோகும்.
2. வைக்கல் கட்டுக்காரனாகிலும் ஒதுங்கவேணும், வழியே போகிறவனாவது ஒதுங்கவேணும்.
3. வைத்த உடமையைக் கேட்க வயிறெரிகிறது.

Colophon:

மன்மதஹு சித்திரைமீ 7உ சனிக்கிழமை ராத்திரி பதினொரு நாழிகைக்கு வளவனூர் சின்னதம்பி கிராமணி குமாரன் அப்பாசாமி சொந்தத்துக்கு எழுதிய பழமொழி எழுதி முகிந்தது.

Vol. I—Section II

இலக்கணம் : பக். 45—216

No. 2175. AKAPPORUḶ URAI

[TEXT AND ANNOTATIONS]

அகப்பொருள் உரை—[மூலமும் உரையும்]

[1045]

Size, 15″ × 1¾″. Pages, 128. Lines, 13 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the same as No. 27 described on Page 45, Vol. I.

Complete.

குறிப்பு : *இது சுவடிகளின் விளக்கம், பகுதி 1, பக்கம் 45, எண் 27இல் விவரிக்கப் பெற்ற நூல் போன்றது.*

பூர்த்தி.

No. 2176. AṆI ILAKKAṆA VIṈĀ VIṬAI

[PROSE]

அணி இலக்கண வினாவிடை—[உரைநடை]

[1046]

Size, 7″ × 1¼″. Pages, 98. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work by Vicāka-P-Perumāḷ Aiyar on Alaṅkāram (Rhetoric) in the form of questions and answers. The work has been printed.

Complete.

குறிப்பு: இது ஐந்திலக்கணங்களுள் ஒன்ருகும். செய்யுட்களிலுள்ள அலங்காரங்களை விளங்கக் கூறுவது. வினு விடையாயமைந்தது. இயற்றியவர் விசாகப் பெருமாளையர். இப்பிரதி முற்றுமுள்ளது. அச்சாகியுள்ளது.

பூர்த்தி.

Beginning:

சிவமயம். அணியிலக்கணம்.

அணியென்ப தியாது?
செய்யுட்கழகு செய்து நிற்பதாம்.
அவ்வணி யெத்தனை வகைப்படும்?
பொருளணியுஞ் சொல்லணியுமென விருவகைப்படும்.
இவ்விரண்டிலும் பொருளணியே சிறப்புடைத்தாம்.

* * * *

End:

4-வது ஒருதொடர்ப் பொருட் கலவை—இது ஒரு பாட்டின் சொற்களனைத்து மொருபொருளையே சொல்லாநிற்ப வப்பொருளிலிரண்டணிகளினிலக்கண முண்மையால் அவ்விரண்டுந் தோன்றுதலாம்.

உ-ம். சோலை வாயிற் சுடரு நிலாமணி
யால வாலத் தவிர்மதியாற் புனல்
கால வாய்ந்த கதிர்மணி முல்லையின்
கோல நாண்மலர் கொய்வதற் கெய்தினுள்.

இதனுட் சொல்லப்பட்ட பொருள் செல்வ மிகுதியைச் சொல்லுதலென்னு மிலக்கணத்தால் வீறுகோளுஞ் சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக் கற்பித்தலென்னு மிலக்கணத்தால் உயர்வு நவிற்சியுமாம்.

முற்றும்.

குமர குருபரன் முன்னிற்க.

Colophon :

......௵ *41*-க்கு ஆனிமீ *30*உ எழுதி முடிந்தது. இந்த நூலிற் பொருளணிக ளுட்பிரிவுகளிற் சில சொல்லா தொழிந்தனவும் சுவையணி முதலியனவும், சொல்லணியும் விளங்க இப்போதியாஞ் சூத்திரமும விருத்தியுமாகச் செய்து வருகின்ற அணியிலக்கணத்துள் விரித்துக் கூறுதும்.

அணியிலக்கண முற்றிற்று.

இலக்கணச் சுருக்க வினுவிடை முற்றிற்று.

No. 2177. IRATTIṈA-C-CURUKKAM

இரத்தினச் சுருக்கம்

[1047]

Size, 13″ × 1⅛″. Pages, 38. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is the same as No. 37, Page 57 ; Vol. I of the Descriptive Catalogue.

Complete.

குறிப்பு : இது முன் முதற் பகுதி பக்கம் *59*-இல், எண் *39* ஆம் சுவடிப் பிரதியை முழுதும் ஒத்துள்ளது.

பூர்த்தி.

No. 2178. ILAKKAṆA-K-KAḶAÑCIYAM

[ATTAVAṆAI]

இலக்கணக் களஞ்சியம்—[அட்டவணை]

[1048]

Size, 12½″ × 1¼″. Pages, 2. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is an incomplete index of names of several grammatical works in Tamil.

Incomplete.

குறிப்பு: இது தமிழிலக்கண நூல்களின் பெயர்கள் பலவும் அடங்கியுள்ள ஓர் அட்டவணையாகும். இதைப் பற்றிய ஏனைய விவரங்கள் தெரியவில்லை. ஏடு ஓரமெல்லாம் ஒடிந்துள்ளது.

அபூர்த்தி.

Beginning:

இஃது இலக்கணக் களஞ்சியம் அட்டவணை.

பேரகத்தியம், சிற்றகத்தியம், ...தொல்காப்பியம், தொன்னூல், நன்னூல்...........

* * * *

End:

பொருட்சு...வச் சிந்தாமணி, நியாய சூடாமணி, செய்யுளியல், குயக்கலனி, பிரபந்ததீபம், பலகாய நாயர்.

No. 2179. ILAKKAṆA-C-CŪṬĀMAṆI—[TEXT]

இலக்கணச் சூடாமணி—[மூலம்]

[1048-M]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 17. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an unpublished work on Tamil Prosody. It consists of 39 Veṇpās dealing on the subject. The name of the author etc. are not known.

Complete.

குறிப்பு: இது யாப்பிலக்கணத்தைப் பற்றிக் கூறுகின்றது. இதனை இயற்றியவர் பெயர், காலம் முதலிய குறிப்புக்கள் தெரிந்து

கொள்ளக் கூடவில்லை. பல இலக்கண நூல்களினின்றும் இன்றியமையாத சாரமான கருத்துக்களைக் கொண்டு கூறியதென்று மட்டும் தெரிகிறது. இது 59 வெண்பாக்களோடு முடிவடைகின்றது. இறுதியில், இதனில் வரும் வெண்பாக்களின் முதல் நினைப்புக்கள் 4 வெண்பாக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

பூர்த்தி.

Beginning:

ஹரிஓம், நன்ருக

இஃதிலக்கணச் சூடாமணி

மலைமாது போற்ற மலர்மாது வாழ்த்துங்
கலைமாதை நெஞ்சிற் கருதி—நலமா
ரிலக்கண சாரத்தை யெடுத்தியம்பு கின்றே
னிலக்கணசூ டாமணியீ தென்று. 1

குறில்நெடி லாவி குறித்தமெய் யாய்த
மறுவிலுயிர் மெய்யோடு மற்ற—நெறியுள்ள
நேர்நிரையா மீரசைக்கு நேர்ந்த வுறுப்பாகி
யேர்பெறவே நிற்கு மெழுத்து, 2

* * * *

End:

சீர்முதலா மியற்றளையு மாசிரியப்பா ஐஞ்
சீரடியு மென்றறிகு ......வாய் நடையே யிணைே...
பேர்பெறவே முதலொருசீர் கூனுய் யென்ருரும் பின்னசைச்
சீர்தளை யொட்டித் தொடைவழு வெழுகுற்றம்
பார்மிசையி னிருபத்தொன் பானிரட்டி வெண்பாப்
[பகர்ந்தவன்
பெயர்த்த கலித்துறை யொன்றே—யூ......
முயற்சிபெரு மந்தாதி யாமீரிரண்டு விருத்த
மிணைமுலையா யிலக்கியத்தின் ....கிலக்கணமே. 4

முற்றுப் பெற்றது.

No. 2180. ILAKKAṆA VIḶAKKAM [CEYYUḶIYAL]—[TEXT]

இலக்கணவிளக்கம் (செய்யுளியல்)—[மூலம்]

[1055-B]

Size, 13″ × 1¼″. Pages, 14. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. contains the chapter on Ceyyuḷ, of the book Ilakkaṇa-Viḷakkam described in No. 47, Page 68 of Vol. I.

Incomplete.

குறிப்பு: *இது, முதல் வால்யம் பக்கம் 68-இல் விளக்கப் பெற்ற எண் 47 சுவடிப் பிரதியைப் போன்றது.*

அபூர்த்தி.

No. 2181. [ILAKKAṆA VIḶAKKAM] CEYYUḶ IYAL—[TEXT AND ANNOTATIONS]

[இலக்கணவிளக்கம்] செய்யுளியல்—[மூலமும் உரையும்]

[1048-R]

Size, 10½″ × 1¼″. Page, 18. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 2180 but contains annotations.

Complete.

குறிப்பு: *இது முன் எண் 2180 பிரதி போன்றது; உரையுடன் கூடியது.*

பூர்த்தி.

No. 2182. UVAMĀṈA CAṄKIRAKAM—[TEXT]

உவமான சங்கிரகம்—[மூலம்]

[1049]

Size, 13″ × 1¼″. Page, 9. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note : This is the same as No. 61 (Vol. I, Page 80).

Complete.

குறிப்பு : *முன் முதல் வாலியம், பக்கம் 80, எண் 61 போன்றது.*

பூர்த்தி.

No. 2183. UVAMĀṈA CAṄKIRAKAM—[TEXT]

உவமான சங்கிரகம்—[மூலம்]

[1056-A]

Size, 18¾″ × 1¾″. Pages, 2. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 2182.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 2182 போன்றது.*

அபூர்த்தி.

No. 2184. IṞAIYAṈĀR AKA-P-PORUḶ [KAṞPIYAL]—[TEXT]

இறையனு ரகப்பொருள் [கற்பியல்]—[மூலம்]

[1048-K]

Size, 12½″ × 1¼″. Page, 1. Lines, 5. Condition, Injured, Appearance, Old.

Note: This is the same as No. 56 (Vol. I, Page 75) but containing only a portion Kaṟpiyal part of the work.

Incomplete.

குறிப்பு: இது, முதல் வால்யம் பக்கம் 75இல் விளக்கப்பெற்ற எண் 56ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் கற்பியலில் 8 சூத்திரம் வரையுமே யுள்ளது.

அபூர்த்தி

No. 2185. ELUTTUKKAḶIṈ PIṞAPPU-C-CŪTTIRAM—[TEXT]

எழுத்துக்களின் பிறப்புச் சூத்திரம்—[மூலம்]

[1048-G]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: In this Mss. the ways in which each letter of the Tamil alphabet is born, is given in a Sūtra. It is not known, from which work this Sūtra is taken.

Incomplete.

குறிப்பு: இது எழுத்துக்களின் பிறப்புக்களை ஒரு சூத்திரத்தில் விளக்குகின்றது. இச்சூத்திரம் எந்த நூலிலுள்ளது என்று அறியக்கூடவில்லை. ஒரே சூத்திரத்தில் எல்லா எழுத்துக்களின் பிறப்புக்களும் கூறப்பெறுகின்றன. இதன் ஏனைய குறிப்புக்கள் எதுவும் அறிதிற்கியலவில்லை.

அபூர்த்தி.

Beginning:

அ, ஆ இரண்டும் அங்காப்பிறத்தலும்
இ ஈ எ, ஏ ஐ யெனு மைந்து
அப்பான்மையி ...கத்திசைப்புழி
அண்பல் முதனு விளிம்புறப் பிறத்தலும்

* * *

End :

வல்லினந் தலையொடு நெஞ்சொடு பொருந்தமும்
மெல்லினந் தலையொடு மூக்கொடு பொருந்தமும்
....

No. 2186. KĀRIKAI-K-KAṬĀ VIṬAI—[PROSE]

காரிகைக் கடாவிடை—[வசனம்]

[1058-A]

Size, 9⅛″ × 2″. Pages, 16. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This work summarises the substance of Yāpparuṅkala-K-Kārikai (No. 161, Page 190, Vol. I) into questions and answers. The name of the author of this work is not known.

Complete.

குறிப்பு : இது யாப்பருங்கலக் காரிகையை விளக்கும் பொருட்டுத் தானே வினவெழுப்பிக் கொண்டு தானே அதற்குத் தக்க விடை கூறுகின்றது. இதனை இயற்றியவர் முதலிய விவரங்களொன்றும் தெரியவில்லை. இப்பிரதி முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

காரிகை கடாவிடை

குருவே துணை.

காரிகையிவை சொல்லும் பகுதியெனை வகையோ வெனினெண் வகை யவையாவன எழுத்தசை சீர்தளை யடி தொடை பா வின மென்பன அவைக ளெத்துணை யோவெனின் எழுத்துப் பதின் மூன்று அசையிரண்டு சீர்பஃது தளை யேழ டியைந்து தொடை நாற்பத்து மூன்று.........தினமூன்று என்பனவற்று ளெழுத்துப் பதி(ன்)மூன்றுவன குற்றெழுத்து நெட்டெழுத்து ஆவியெழுத்து குற்றியலுகர வெழுத்து குற்றியலிகர வெழுத்து ஐகாரக் குறுக் கெழுத்து ஆய்த வெழுத்து மெய்யெழுத்து வல்லின வெழுத்து

மெல்லின வெழுத்து இடையெழுத்து உயிர் மெய்யெழுத்து அள பெடை யெழுத்து ஆக எழுத்து 13............

* * * *

End :

வெண்பாமுன்னு மிரண்டடியாசிரியப்பா பின்னுமாய் வியனிலை யாயுஞ் சமனிலையாயும் வருவது மருட்பாப் பொதுவிதியான் வரு மருட்பா சிறப்பு விதியாலானுண்கவையாவன : புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளைப் பொருளான் வருவது கைக்கிளை மருட்பா: வாயுறை வாழ்த்து மருட்பா: செவியறிவுறுஉப்பொருளான் வருவது செவியறிவுறுஉ மருட்பா.

மருட்பா முற்றும்

காரிகை கடாவிடை முற்றும்.

(இதன்பின் ஒரு வடமொழித் தொடர்).

No. 2187. CIṬAMPARA-P-PĀTTIYAL—[TEXT]

சிதம்பரப் பாட்டியல்—[மூலம்]

[1067-C]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 26. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This consists of a portion only of the text of the work described in No. 72 (Page 93 of Vol. I).

Incomplete.

குறிப்பு: இது சுவடிகளின் விளக்கப் பகுதி 1, பக்கம் 93, எண் 72-இல் விவரித்த சுவடி போன்றது. 16 செய்யுட்களே உள்ளன.

அபூர்த்தி.

No. 2188. CIṬAMPARA-P-PĀṬṬIYAL—[TEXT]

சிதம்பரப் பாட்டியல்—[மூலம்]

[1065-C]

Size, 13″ × 1¼″. Pages, 70. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is the same as No. 2187.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2187 போன்றது. இப்பிரதி பொருத்தப் பாட்டியல்வரை யுள்ளது.*

அபூர்த்தி.

No. 2189. [CIṬAMPARA-P-PĀṬṬIYAL] PORUTTA IYAL—[TEXT AND ANNOTATIONS]

[சிதம்பரப் பாட்டியல்] பொருத்த வியல்

[மூலமும் உரையும்]

[1065]

Size, 13″ × 1¼″. Pages, 16. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as No. 2187 but containing Text and Annotations of Porttaviyal only.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2187 போன்றது. ஆனால் பொருத்தவியல் மட்டும் உரையுடன் உள்ளது.*

அபூர்த்தி.

No. 2190. CEYYULIYAL—[TEXT]

செய்யுளியல்—[மூலம்]

[1048-L]

Size, 10½″ × 1¼″. Pages, 3. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a portion of a work on Prosody. It is not known from which original this portion is taken.

Incomplete.

குறிப்பு: இது யாப்பிலக்கணங் கூறுவது. இப்பிரதியினிறுதியில் சங்கையாப்பு என்று குறிக்கப் பெற்றுள்ளது. இதனைப் பற்றி குறிப்புக்கள் ஒன்றும் அறியக்கூடவில்லை. இதில் சில சூத்திரங்களே யுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

செய்யுளியல்

அம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபு புலனே யிழையெனப்
பொருந்திய வெட்டும் வனப்பவை யெட்டினுள்
ளம்மை தானே யடிநிமிர் பின்றிச்
சின்மென் மொழியாற் சீர்புனைந் தி யாத்தலுஞ்
செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னவ்வகை தானே யழகெனப் படுதலும்

* * * *

End:

அரைநொடி யென்ப தியாதெனவினவின்
நொடிதாக(க்) கூடிய......யிருவிர லியல்பே
முக்கா னொடியது விரன் முருக்காமே
கானொடிக்கால மிருவிரல் கலத்தல்.

—இந்து சங்கையாப்பு.

No. 2191. TAṆṬI-Y-ALAṄKĀRAM—[TEXT]

தண்டியலங்காரம்—[மூலம்]

[1048-D]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 26. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same as No. 81 (Page 105, Vol. I of the Catalogue).

Complete.

குறிப்பு: *இது முதல் வால்யம் பக்கம் 105-இல் விளக்கப் பெற்ற எண் 81-ஐ ஒத்தது.*

பூர்த்தி.

No. 2192. TAṆṬI-Y-ALAṄKĀRAM

[TEXT AND ANNOTATIONS]

தண்டியலங்காரம்—[மூலமும் உரையும்]

[1247]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 216. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same as No. 76 described in Page 100, Vol. I of this Catalogue.

Incomplete.

குறிப்பு: *இது, முதல் வால்யம் பக்கம் 100-இல் விளக்கப் பெற்ற எண் 76-ஆம் பிரதியைப் போன்றது. சுப்பிரமணிய தேசிகருரையுடன் கூடியது. இப்பிரதி முற்றுமில்லை. 90-ஆவது சூத்திரம்வரை உரை முடியாமல் உள்ளது.*

அபூர்த்தி.

Colophon:

(சுவடியின் முகப்பில் குறிக்கப்பெறுவது)

சிதலரித்த பொத்தகத்தில் நாற்பதாமேடுமுத லிந்த எட்டுங் கூடவைத்துப் பிழைபார்த்து வருகிறபடியினலே முதலேடு முதலாகவும் பார்க்கவேணும்.

அலங்கார உரை.

No. 2193. TOL-KĀPPIYAM [EḶUTTU AND COL] NACCINĀRKKINIYAR

தொல்காப்பியம் [எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்]

[நச்சினார்க்கினியருரை]

[1044]

Size, $14\frac{7}{8}'' \times 1\frac{1}{2}''$. Pages, 712. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the same as the Mss. described No. 98 of Vol. I, Page 127.

Complete.

குறிப்பு: இது, பகுதி 1, பக்கம் 727, எண் 98-இல் விவரித்த சுவடி போன்றது.

பூர்த்தி.

Colophon:

விரோதிகிருதுஸு துலாமீ 23ல. தெக்ஷிணாயணமும் சுக்கிர வாரமும் பூர்வபக்ஷ சதுர்த்தெசியும் அசுபதி நக்ஷத்திரமும் சித்த யோகமும் கெற......ச......றணமும் துலா லெக்கினமும் ராசத ே......ஸயும் நந்தினி முகூர்த்தமுங் கூடிய சுபதினத்தில் மருதமுத்து உபாத்தியாயருடைய தொல்காப்பிய நூல் எழுதி முகிந்தது. முற்றும். அருணசல கவிராயன் கையெழுத்து. வாலையானந்தி துணையாக வேணும். குருபரன் றுணை.

No. 2194. TOLKĀPPIYAM ELUTTATIKĀRAM AND COLLATIKĀRAM

[TEXT AND ANNOTATIONS BY IḶAMPŪRAṆAR AND CĒṈĀVARAIYAR]

தொல்காப்பியம் [எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும்]

[இளம்பூரணர் சேனுவரையருரைகள்]

[1051]

Size, 16″ × 1½″. Pages, 118. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Tolkāppiyam Mss. have been described in Pages 111—142 of Vol. I of the Catalouge No. 86—111. This Mss. has the text Eḻuttatikāram with Iḷampūraṇar's commentary and Collatikāram with Cēṉāvarayar's commentary. These are not fnll.

Ineomplete.

குறிப்பு: இதில், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்றும் இரண்டு அதிகாரங்களே யுள்ளன. எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணருரையும், சொல்லதிகாரத்திற்குச் சேனுவரையருரையும் உள்ளன. எழுத்ததிகாரத்தில் பிறப்பியலில் 7-ஆவது சூத்திரத்திலிருந்து முடிவு வரை யுள்ளது. சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம் மட்டும் வேற்றுமையியல் 12-ஆம் சூத்திரம்வரையிலுள்ளது. இப்பிரதியில் முதற்கண் 20 ஏடுகளும், இடையில் 4 ஏடுகளும் இல்லை. ஏடுகள் ஓரங்களிலும் சில இடையிலும் முறிந்துள்ளன.

அபூர்த்தி.

No. 2195. TOLKĀPPIYAM ELUTTATIKĀRAM AND COLLATIKĀRAM

[WITH IḶAMPŪRAṆAR'S COMMENTARY]

தொல்காப்பியம் [எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்]

[இளம்பூரணருரை]

[1052]

Size, 12¼″ × 1⅝″. Pages, 256. Lines, 13 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the same work as the one referred in the No. 2194 but with commentary for both the chapters by Iḷampūraṇar.

Complete.

குறிப்பு: இதில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இவ்விரண்டும் உள்ளன. இரண்டும் இளம்பூரணருரையுடன் கூடியவை. இப்பிரதி முற்றுமுள்ளது. எழுத்ததிகாரம் மட்டில் முன் எண் 2194 பிரதி போன்றது. இடையில் ஒரு ஏடு நச்சினார்க்கினிய ருரையாக வுள்ளது. சுவடியின் முதலேட்டிலும் இறுதி ஏட்டிலும் உரை யாசிரியருரை என்று குறிக்கப்பெற்றுள்ளது. உரையாசிரியர் என்பவர் இளம்பூரணராவர்.

பூர்த்தி.

Colophon:

(வடமொழியில் தொடர்) பரம்பரை மெய்கண்ட சந்தியாகிய திருவாவடுதுறை முத்திப்......... (வடமொழியில்) அம்பலவாண சற்குரு தேசிக (வடமொழியில்) உளங்கூருரையா மிளம்பூரண உரையாசிரிய ருரையாகிய தொல்காப்பிய மெழுதியது. நீடூழி வாழ (வடமொழியில்).

திருச்சிற்றம்பலம்.

No. 2196. TOLKĀPPIYAM [EḺUTTU, COL] [TEXT]

தொல்காப்பியம் [எழுத்து, சொல்]—[மூலம்]

[1053]

Size, $9\frac{7}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 176. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains text alone of Eḻuttu and Col chapters; a few stanzas in Col-Atikāram are missing.

Incomplete.

குறிப்பு: இதில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இவையிரண்டும் மூலமட்டும் உள்ளன. சுவடியில் முதல் ஏடு இல்லை. இறுதியில் சிலவேடுகள் இல்லை. இறுதி எச்சவியலுள் 457 முதல் 462 சூத்திரம்வரை யில்லை.

அபூர்த்தி.

No. 2197. TOLKĀPPIYAM PORUḶATIKĀRAM [WITH COMMENTARY]

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் முதலியன—[உரைகளுடன்]

[1054]

Size, $17\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 532. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This contains a portion of Poruḷ-Atikāram of Tolkāppiyar with 2 annotations.

Incomplete.

குறிப்பு: இது, தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் என்னும் பகுப்புடையது. நச்சினார்க்கினியர் பேராசிரியர் இவர்கள்

இயற்றிய உரையுடன் கூடியது. இதில், அகத்திணையியல் முதல் மெய்ப்பாட்டியல்வரையுமே யுள்ளன. ஏனை உவமவியல், செய்யுளியல், மரபியல் இவைகளில்லை; ஆதலால் இப்பிரதி முற்று மில்லை. ஏடுகள் சிலவிடங்களில் சிதைந்துள்ளன.

அபூர்த்தி.

No. 2198. [TOLKĀPPIYAM] PORUḶATIKĀRAM [WITH IḶAMPŪRAṈAR'S COMMENTARY]

தொல்காப்பியம் பொருளதிகாரம்—[இளம்பூரணருரை]

[1066]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 180. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains text and Iḷampūraṇar's commentary on 2 chapters in Poruḷatikāram—Tolkāppiyam.

Incomplete.

குறிப்பு: இது, தொல்காப்பியம் பொருளதிகாரத்திலுள்ள அகத்திணையியல், புறத்திணையியல் இவ்விரண்டும் இளம்பூரணருரையுடன் உள்ளன. இப்பிரதி முற்றும் மூலத்துடன் உள்ளது. நூல் அச்சாகியுள்ளது. முதற்கண் மூன்றேடுகள் ஓரம் ஒடிந்துள்ளன.

அபூர்த்தி.

No. 2199. TOṈṈŪL—[TEXT]

தொன்னூல்—[மூலம்]

[1055]

Size, $13'' \times 1\frac{1}{4}''$. Pages, 110. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This grammatical work by Vīramāmuṉivar contains 5 chapters. This Mss. has the text in complete. An incomplete edition of this work with annotations is noticed in No. 112 (Page 142 of Vol. I).

Complete.

குறிப்பு: இது, இலக்கண நூலாகும். இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்னும் ஐந்து பிரிவுங் கூறப் படுகின்றன. சூத்திரங்களாலாகியது. இயற்றியவர் வீரமா முனிவர். 70 சூத்திரங்கள் உள்ளன. இப்பிரதி முற்றும் உள்ளது. முதற்பகுதி பக்கம் 142, சுவடி எண் 112ஐப் பார்க்க.

பூர்த்தி.

Beginning:

தொன்னூல் சூத்திரம்

நீர்மலி கடறவழ் நிலமுதன் மற்ற ..ரு
சீர்மலி யுலகெலாஞ் செய்தளித் தழிப்ப
வல்லவ னுய்முதன் மட்டி ளுருப்பெதி
ரில்லவ னுயய ரிறைபோ னொருவனைப்

* * * *

End:

பந்திநா லளவடியாம் பத்தெழுத்திச் சிந்தாஞ்
சந்துவார் தனிநிலைக்குத் தானே விதிகேளு
மெண்ணிரண்டாம் பின்னனவுக் கேதசிந்துக்
[கொன்பதுமாமெண்......

வெண்பா வுரைக்கு மீது.

இவ்வெண்பாச் சூத்திர மெழுத்தளபொடு தாரணமுமா மென்றறிக.

முற்றும்.

No. 2200 NAVANĪTA-P-PĀTTIYAL

[TEXT AND ANNOTATIONS]

நவநீதப் பாட்டியல்—[மூலமும் உரையும்]

[1063]

Size, 14½″ × 1¼″. Pages, 60. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 114, Page 146, Vol. I. But the Mss. is complete.

Complete.

குறிப்பு: *இது, பொருத்தங்களும், பிரபந்தங்களின் இலக்கணமும் கூறுவது. நவநீதநடனர் இயற்றியது. கலித்துறை யாப்பால் அமைந்தது. அச்சாகி இந்நூல் நிலையப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. உரையுடன் கூடியது. இப்பிரதி நூல் முற்றுமுள்ளது. நூலினகத்தே இதற்குப்* பருண்பாட்டியல் *என்று பெயர் குறிக்கப் பெற்றது.*

பூர்த்தி.

Colophon:

...ருணப்பாட்டியல் எழுதி முடிந்தது.

சம்பூரணம்.

பசுத்திஞயகன் திருவடிவாழ்க வென்றவாறு.

No. 2201. NAVANĪTA-P-PĀTTIYAL

[TEXT AND ANNOTATIONS]

நவநீதப் பாட்டியல்—[மூலமும் உரையும்]

[1065-D]

Size, 12″ × 1¼″. Pages, 16. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 2200.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2200 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 2202. NAṈṈŪL—[TEXT]

நன்னூல்—[*மூலம்*]

[1058]

Size, $19\frac{1}{8}'' \times 2''$. Pages, 48. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 116 (Page 147 of Vol. I).

Complete.

குறிப்பு: *இது பகுதி 1, பக்கம் 147, எண் 116 போன்றது.*

பூர்த்தி.

No. 2203. NAṈṈŪL, EḶUTTIYAL, PATAVIYAL—[REFUTATION]

நன்னூல் எழுத்தியல் பதவியல்—[*மறுப்பு*]

[1046-A]

Size, $7'' \times 1\frac{1}{4}''$. Pages, 54. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: In this Mss. the findings of commentators of Naṉṉūl are refuted. The work is not complete.

Incomplete.

குறிப்பு: *இது எழுத்தியல் பதவியல் என இரண்டு வகைக்கும் மற்ற உரையாசிரியர் கூறிய உரைகள் மறுத்துக் கூறப்படுகின்றன;*

இங்ஙனம் கூறியவர் இன்னாரென்று தெரியவில்லை. பதவியல் 14-ஆம் சூத்திரத்துடன் முடிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஏனைய ஒன்பது சூத்திரங்கள் இதனுள் கூறப்படாததனால் இப்பிரதி முற்றுமுள்ளதாகத் தெரியவில்லை. இதன்கண் முதல் ஏடு இல்லை. ஏனைய ஏடுகளும் ஓரங்கள் ஒடிந்தும் பூச்சரிக்கப்பட்டுத் துளை விழுந்தும் எழுத்துக்கள் படிக்க முடியாதபடியிருக்கின்றன.

அபூர்த்தி.

Beginning:

சிறப்புப் பாயிரமகன்றி...தந்தை...........க்கரியாக நன்னூற் பாயிரத்தையே கரந்து சிறப்புப்பாயிரங் கூறத்தகாதவவர் குமாரரே கூறி.............. ..த்தியல் மலைமகளொருபான் மணந்துல களித்த வென்று முதற் சூத்திரத்து இடைக்க ....தனித்து நில்லாமையின் முதற்சி றிறுதிகள்......காவெ . ...று வகையுளியா........... ....

* * * *

End:

..................அவ்வாறின்றிப் பவணந்தியாரிலக்கியங் கண்டதற்கிலக்கண மியம்பலினென்ற கருத்தவறியாதுரை செய்தார். கச்சினன் நாட்டினன் என்றற் றொடக்கத்தனவற்றுவரு மின் சாரியை உறங்குகினனென புளிப்......போல விடைநிலை யென்றார். அது புளியேனை மிளகுபோல இனித்திருக்கு மென்றொருவன் கூறினாற் போலும். 14

இரண்டாவது பதவியல் முற்றும்.

No. 2204. NANNŪL

[TEXT AND MAYILAINĀTAR'S COMMENTARY]

நன்னூல்—[மூலமும் மயிலைநாதருரையும்]

[1059]

Size, 1″ × 1½″. Pages, 374. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains the text of Nannūl and the commentary by Mayilainātar on it. The work is not complete. The work has been printed and published by Dr. Swāminātha Aiyar.

Incomplete.

குறிப்பு: இது மயிலைநாதர் இயற்றிய உரையுடன் கூடியது. முதலிலிருந்து உரிச் சொல்லியலில் 11 ஆவது சூத்திரம் வரையி லுள்ளது. ஆதலால் இப்பிரதி முற்றுமில்லை. இதனுள் 21 ஏடு களில் மூலபாடமட்டுமே யுள்ளன. அதற்கு மேல் உரை எழுதப் பட்டுள்ளது. இஃது ஸ்ரீ ஐயரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அபூர்த்தி.

Beginning:

பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிருளகல
....
....பவணந்தி
என்னுநாமத் திருந்துவத் தோனே.
என்பது பாயிரம் இதற்குப்பொருள் மேலே சொல்லுதும். 1

முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

என இ-ள். இவையனைத்தும் பாயிரத்துக்குக் காரணப் பெய ராம் என்றவாறு.

* * * *

End:

அறிவரு ளாசை யச்ச மானம்
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
....

மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம். எ-ன். உயிர்ப் பண்பு உணர்த்துதன் நுதலிற்று.

இ-ள். உடம்பொடு கூடிய உயிர்க்குண மெனவே கூடா வுயிரும் உளவென்பதூஉம் அவை இனைய வல்ல வென்பதூஉம் கொள்க................ ..

No. 2205. NILAVAKAI VEṆPĀVIṈ ILAKKAṆAM—[TEXT]

நிலவகை வெண்பாவின் இலக்கணம்—[மூலம்]

[1048-I]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. in one leaf describes, the places in which Veṇpā etc. are used. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு: இது யாப்பிலக்கண சம்பந்தமானது. இதைப் பற்றிய பிறகுறிப்புக்கள் ஒன்றும் அறியக்கூடவில்லை. பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி

Beginning:

வெள்ளை நிலம்பத் தகவல் பதினேழு
துள்ள விருநான்கு தூங்கல்பத்—தெள்ளா
விருசீ ரடிமுச்சீ ரைந்தா றேழெண்சீ
ரொருவா நிலைமைபத் தொன்று.

இஃது—நிலவகை வெண்பா.

* * * *

End:

மோனை யிரண்டா மெதுகை யோரெட்டாகு
மேனைமுர ணை......... ....—மேனைப்
பொழிப்பாதி யைந்துங் குறிப்பிற் றொடையோ
டிழுக்கா விருபத் திரண்டு.

No. 2206. NĒMINĀTAM—[TEXT]

நேமிநாதம்—[மூலம்]

[1060]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 50. Lines, 4 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 134 (Vol. I. Page 163) but containing text alone.

Complete.

குறிப்பு: *இஃது முன் எண் 134 (பகுதி 1, பக். 163) போன்றது. மூலம் மட்டும் உள்ளது.*

பூர்த்தி.

Colophon:

1842 ஹு-க்குச் செல்லுந்தமிழ் பில ஹு தை மீ 5உ திருமயிலாப்பூரிலிருக்கும் வீராசாமி வாத்தியா ரெழுதி நிரைவேறிய நேமிநாத மூலமென்றறியவும்.

No. 2207. NĒMINĀTAM

[TEXT AND ANNOTATIONS]

நேமிநாதம்—[மூலமும் உரையும்]

[1061]

Size, $13\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 124. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 2206 containing text and the commentary.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 2206-ஆம் பிரதி போன்றது. ஆயினும் உரையுடன் கூடியது. உரையாசிரியர் வயிரமேகன*

என்பார். இப்பிரதி முற்றுமுள்ளது. சுவடியின் மேலேட்டில் 'குருசாமி ஐயர் நேமிநாதவுரை' என்று குறிக்கப் பெற்றுள்ளது.

பூர்த்தி.

Colophon:

குரோதி ஸ்ரீ தை மாசம் 22 திங்கள் சஷ்டி சித்திரை இட்டலக்கினத்தில் திருத்தணிகை கந்தப்ப வாத்தியார் எழுதி முடிந்தது.

No. 2208. NĒMINĀTAM

[TEXT AND ANNOTATIONS]

நேமிநாதம்—[மூலமும் உரையும்]

[1067-A]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 200. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 2206.

Complete.

குறிப்பு: இது, முன் 2205-ஆம் சுவடிப் பிரதியை முற்றும் ஒத்துள்ளது. ஏடுகள் மிகச் சிதிலம்

பூர்த்தி.

Colophon:

விசாலாட்சியே துணை.

......சுவ விநாயகர் துணை.
உமையொரு பாகர் பாதாம்புயமே கதி.
பூவண நாதர் பாதாம்புயமே கதி.
விக்கினேசுரன் சுப்பிரமணியம் துணை.

875ஸ்ரீ மாசி மாதம் 13 சனிவாரமும் துதிகையும் பூரட்டாதி நட்செத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய தினத்திலே பரமசுவாமி அய்யர் கருணை கடாக்ஷத்தினாலே நேமிநாதம் எழுதி முகிந்தது. விசாலலோசனை. சிவசிதம்பரம்.

No. 2209. PIRAPANTA-T-TIRATTU—[TEXT]

பிரபந்தத் திரட்டு—[மூலம்]

[1103]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 94. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. describes the several kinds of Prabandas in Tamil. The name of the author is not known.

Incomplete.

குறிப்பு: *இது இலக்கண வகையைச் சார்ந்தது. தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களின் இலக்கணத்தைப் பற்றிக் கூறுகின்றது. திரட்டியல், புறனடையியல். கருப்பொருளியல், பொருத்தவியல், உவமாரூட வியப்பு சார்வியல், விசேடவணி வியப்புசார்வோரியல், சாதிமரபு சார்வோரியல், குலநில வியப்பு சார்வோரியல், ...தொழிலியல், கொடை இயல், என்னும் பத்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இயற்றியவர் முதலிய குறிப்புக்கள் அறிதற்கு இலவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.*

அபூர்த்தி.

Beginning:

தொண்ணூற்ருருன தொகைசேர் பிரபந்தம்
பண்ணூறப் பாடும்வகை பாடுதற்கு—நண்ணுதுணை
தொந்திவயிற் றன்சிவன்சேய் சுப்பிரமண் யன்துணை
ஐந்துமுகத் தன்பொன் னடி.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திதிவாரம் நாள்யோகஞ் சேர்கரணம் கண்டு
துதியா ரிராசிபிற சூட்டி—விதிகொட்கண்
......தம் வருட மதித்துரைத்தன் மாந்தர்க்குச்
சாதரத்தின் சாதகமாச் சாற்று.

* * * *

End :

....
வெடாவி னோதங் கன்னிகா மயக்கம் ,
விசனசம் பிரதாயங் கதைமொழி மாற்றுக்
கற்பன விலாசங் குலந்திவி செம்வதன
சந்திரோ தையந் திருப்பெயர்ப் பொறியே
தேவாங்க சிலோச்சயம் பட்டாபி ஷேகங்
களவு கண்ணி ஒலியந் தாதி
திருமுகஞ் சமுக......க......தலெதிர்
மொழிவன மாதங்கி இரவிடை யீடே
ஆன்ம நிலையே பலதொகை யதுவே
யிந்திர சாலந் திருவடிச் சுவடெனக்
கூறிய தொண்ணூற் றாறு பிரபந்தமு
முற்றக் கற்றவர் மொழிகுவர் பெரிதுஞ்
சின்னூற் காரர் செப்புதல் சிறிதே. 5

No. 2210. PIRAPANTA TĪPAM—[TEXT]

பிரபந்த தீபம்—[மூலம்]

[1048-A]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 26. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. as the previous one, gives the charateristics of the several kinds of Prabanda literature in Tamil.

Incomplete.

குறிப்பு: இது அகப்பொருள், புறப்பொருள் சம்பந்தமான பிரபந்த விலக்கணமும் ஏனைய பிரபந்தங்களின் இலக்கணமும் கூறுகின்றது. மூலமட்டுமுள்ளது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்களில் ஒன்றும் தெரிந்திலது. இப்பிரதி முற்றுமில்லை. அச்சானதாகவும் தெரியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

பிரபந்த தீபம்.

அகப்பொருட் கோவை யறையுங் காலை
இருவகை முதற்பொரு ளீரேழ் கருப்பொரு
ளோயிரண் டுரிப்பொரு ளகப்பாட் டுறுப்பாங்
களவியல் கற்பியல் வரைவியல் காட்டி
கட்டளைக் கலித்துறைக் கவிநானூ றுரைத்தலே. 1

* * * *

End:

சொன்ன வெழுத்தினுஞ் சொன்ன மொழியினு
மந்நிலை தன்னி லிருவகைப் பொருட்டு
முன்னிய கருத்து முடிவுறப் பாடல்
சமுத்தி யென்று சாற்றுவரதுவே,
கொடுத்த பொருளெல்லாங் குறைபாடின்றித்
தொடுத்த யாப்பிற்றுய்த் துகளற நிற்றலே. 65

No. 2211. PURA-P-PORUḶ VEṆPĀ MĀLAI

[TEXT AND COMMENTARY]

புறப்பொருள் வெண்பா மாலை—[மூலமும் உரையும்]

[1064]

Size, $7\frac{7}{8}'' \times 2''$. Pages, 290. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 153 (Vol. I, Page 181) containing the Text and Commentary on Pura-P-Poruḷ Veṇpā by Aiynār Itnār.

Complete.

குறிப்பு: *இது, பகுதி 1, பக்கம் 181, எண் 153 போன்றது.*

பூர்த்தி.

Colophon:

சீயர் திருவடிகளே சரணம்

வயித்தியநாத குருவே நம:

பெரிய திருவடி குருவே நம:

877 ௵ மார்கழி......... சதுர்த்தெசியும் புதன்கிழமையு முரோகணியும் பெற்ற சுபதினத்திலே ரெற்றின (இரத்தின) கவிராசர் வெண்பா மாலையுரை யெழுதி முற்றினது.

முற்றும்.

தருஞான முத்திரை துணை

இதிற் பெருந்திணைப் படலம் துறை 36க்கு எழுதியிருந்தது. பெண்பாற் பெருந்துணைத்துறை 19 போக ஆண்பாற் பெருந் திணைத்துறை 17 எழுதிவிக்கவேண்டியது.

ஒரா தெழுதினே னயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீரார்ந்த
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருஞானமுத்திரை துணை

சீயர் திருவடிகளே சரணம்

No. 2212. PUṞA-P-PORUḶ VEṆPĀ MĀLAI

[TEXT AND COMMENTARY]

புறப்பொருள் வெண்பா மாலை—[மூலமும் உரையும்]

[1045-A]

Size, 15″ × 1¾″. Pages, 102. Lines, 13 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as previous No. 2211 but incomplete.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 2211 பிரதி போன்றது. இப்பிரதி முற்றுமில்லை. 352 பாடல்வரையுமுள்ளது; இதற்கு உரை முற்றுமில்லை.

அபூர்த்தி.

No. 2213. MĀPURĀṆAM MUṬALIYAṆA—[TEXT]

மாபுராணம் முதலியன—[மூலம்]

[1048-J]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 3. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This small Mss. has a few questions from some forgotten works as Māpurāṇam, Pūṭapurāṇam, Ilakkaṇa-T-Tirattu etc.

Incomplete.

குறிப்பு : இப்பிரதியில் மாபுராணம், பூதபுராணம், இலக்கணத் திரட்டு இவைகளிலுள்ள சூத்திரங்களிற் சிற்சில வந்துள்ளன. இதனைப்பற்றிய மற்ற குறிப்புக்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

அகத்திணை யகவயின் .... வஞ்சி
சிறப்பில வென்னுஞ் சிலவிடத் துளவே.

—இஃது மாபுராணம்

அகப்பா வகவலின் வஞ்சி...... வடியிரண்டும்
புகப்பான்மைய வல்ல வென்பதொல் லோர்கள்
புகரில் வஞ்சி யகப்பாப் பொருளனைய
.... யாவெண்பா நல்லார் கருதிப்
புகப்பான் மையுமொரு சார்புல வாணர் புகன்றனரே.

—இஃது பூதபுராணம்

*   *   *   *

End :

குழூஉப் புறந்தருதல் குருசரத் தியல்பே. 6

பிறந்த வொலியின் ஓர்ந்துணர்தல்
சிறந்தவா ளேற்றின் செய்தி என்ப. 7

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழைப் பிணக்கன் சினத்தன்
றுயில்வோன் ம......... ....

No. 2214. YĀPPARUṆKALA-K-KĀRIKAI

[TEXT]

யாப்பருங்கலக்காரிகை—[*மூலம்*]

[1048-E]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 14. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is the same as No. 161 in Vol. I, Page 190.

Complete.

குறிப்பு : *இது, முன் முதல் வால்யம் பக்கம் 190இல் விளக்கப் பெற்ற எண் 161ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் மூலம் மட்டும் உள்ளது. நூல் முற்றும் உள்ளது.*

பூர்த்தி.

No. 2215. YĀPPARUṆKALA-K-KĀRIKAI

[TEXT]

யாப்பருங்கலக்காரிகை—[*மூலம்*]

[1055-A]

Size, $13'' \times 1\frac{1}{4}''$. Pages, 16. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as previous No. 2214.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 2214 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 2216. YĀPPARUṄKALA-K-KĀRIKAI

[TEXT]

யாப்பருங்கலக்காரிகை—[மூலம்]

[1067]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, ?. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: Same as No. 2214.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 2214 பிரதி போன்றது.*

பூர்த்தி.

Colophon:

குமரன் துணை

ஒழிபியல் முற்றும்

காரிகை. உறுப்பியல் சூத்திரம் 20. செய்யுளியற் சூத்திரம் 15. ஒழிபியல் சூத்திரம் 9. ஆக வியல் 3க்கு சூத்திரம் 44.

குருவே துணை

ஆய்கின்ற வீரசை நேரொன்ற நேர்நிறை யொன்றிநிரை
யேய்கின்ற தாசிரி யத்தளை மாறி லியற்றளையாங்
காயின்பின் னேர்வெள்ளை வெண்டளை மாறிற் கலித்தளையா
மோயுங் கனி........ண வஞ்சிநேர் தோன்று வஞ்சியே.

No. 2217. [YĀPPARUṄKALA-K]-KĀRIKAI [CĀTTIRAM]—[TEXT]

[யாப்பருங்கலக்] காரிகை [சாத்திரம்]—[மூலம்]

[1065-B]

Size, 13″ × $1\frac{1}{4}$″. Pages, 16. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 2214.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 2214 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 2218. YĀPPARUṄKALAM—[TEXT]

யாப்பருங்கலம்—[மூலம்]

[1048-C]

Size, $10\frac{1}{2}$″ × $1\frac{1}{4}$″. Pages, 12. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is the same as No. 178 in Vol. I, Page 204. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு : *இது முன் முதல் வால்யம் பக்கம் 204-இல் விளக்கப் பெற்ற எண் 178-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் அப் பிரதியில் இறுதிக்கண் கூறப்படும் சில வெண்பாச் சூத்திரங்கள் இதில் இல்லை.*

அபூர்த்தி.

No. 2219. YĀPPARUṆKALA VIRUTTI-URAI

[TEXT AND ANNOTATIONS]

யாப்பருங்கல விருத்தியுரை—[மூலமும் உரையும்]

[1068]

Size, 17″ × $1\frac{3}{4}$″. Pages, 344. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Not very old.

Note: Same as previous No. 2219 but with commentary.

Complete.

குறிப்பு: *இது முன் எண் 2216 போன்றது. உரையுடன் கூடியது.*

பூர்த்தி.

Colophon :

யாப்பருங்கல விருத்தி முற்றுப் பெற்றது. ஆழ்வார் திருவடிகளே சரணம். (வடமொழியில்) சுபமஸ்து. 1027-க்கு விரோதி இருது ஹஶ தட்சிணாயனமான மார்கழி மாதம் 6உ சுக்கிர வாரமும் ... .துவாதசியும் சுவாதி நட்சித்திரமுங் கூடிய சுபதினத்தில் தனுலக்கனமும் சந்திரகலையும் இராசத வேளையுங் கூடிய முகூர்த்தத்தில் யாப்பருங்கல விருத்தி முற்றும் எழுதி நிறைவேற்றினேன் புலியூர்க் குறிச்சியிலிருக்கும் முத்தையப் பிள்ளை புத்திரன் ஆழ்வாரப்பன். (வடமொழி வாக்கிய மொன்று). (அதன்பின்)...

No. 2220. YĀPPARUṆKALA VIRUTTI-URAI

[TEXT AND ANNOTATIONS]

யாப்பருங்கல விருத்தியுரை—[மூலமும் உரையும்]

[1104]

Size, $17\frac{1}{2}$″ × $1\frac{3}{8}$″. Pages, 446. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 2219.

Complete.

குறிப்பு: *இது முன் எண் 2219 போன்றது.*

பூர்த்தி.

No. 2221. YĀPPIYAL URAI—[PROSE]

யாப்பியல் உரை—[உரைநடை]

[1065-A]

Size, 13″ × 1¼″. Pages, 40. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is a prose work dealing about Yāppilkkāṇam with examples. The author's name is not known.

Incomplete.

குறிப்பு: *இது செய்யுலிலக்கணத்தைப் பற்றியுங், சில பொருத்தங்களைப் பற்றியும் கூறும் வசன நூலாக உள்ளது. இது விரிவான உதாரணங்களைக் காட்டி விளக்கப் பெற்றுள்ளது. இதுவரை அச்சில் வராததாக உள்ளது. யாப்பினது விதியெழுத்து என்பதிலிருந்து தொடங்கி தாளப் பொருத்தம் வரையில் முடிகின்றது. இதன் ஆசிரியர் பெயர் முதலிய குறிப்புகள் அறியக்கூடவில்லை. இதனுடன் இறுதியில் உபயநாக வெண்பா என்ற தலைப்புள்ள ஏடு ஒன்று காணப் பெறுகிறது.*

அபூர்த்தி.

Beginning:

ஹரிஓம். நன்றாக.

யாப்பியலுரை.

அத்திமுகத் துத்தமனை

நித்தம்நினை சித்தமே.

யாப்பினது விதியெழுத்து

அசை, சீர், தளை, அடி, தொடை, பா இனம் எனத் தொகை யளவு. அவற்றுளெழுத்து, குறில், நெடில்; ஒற்று, உயிர்மெய், ஆய்தம், குற்றுகரம், குற்றிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரளபு ஒற்றளபு. ஆக எழுத்து வகை 14.

* * * *

End:

....

ஊரும் பேருமுவப்புடன் கூறி

மற்றப் பாதியு நற்று யிரங்கல் பாங்கிபுணர்தல், தலைவன் மயக்கம் இந்தப்படிக்கு வண்ணம்பாடுவன்.

திருமலையப்பர் செயம்.

தானப் பொருத்தம்; பாட்டுடைத் தலைவனுடைய தானத்தி லிருந்து தானத்தடைவே யெண்ணி மங்கலச் சொல்லு தான வரைக்கு தானத் தடைவே யெண்ணிப் பாலகுமார ராசப் பொருத்தம்வரப் பாடுவது—தானப் பொருத்த மென்றவாறு.

No. 2222. YĀPPU-C-CĀKARAM [UṞUPPIYAL] [TEXT]

யாப்புச் சாகரம் [உறுப்பியல்]—[மூலம்]

[1048-B]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 12. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This seems to be an unpublished work on prosody. The Mss. contains only Uṟuppiyal of the work in 85 stanzas.

Incomplete.

குறிப்பு: இது யாப்பிலக்கணத்தைப் பற்றிக் கூறுகின்றது. சுவடியின் தலைப்பில் யாப்புச் சாகரம் எனக் குறிப்பிடுவதனால் இந்நூல் கடல் போன்று விரிந்த நூலா யிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இது சூத்திர யாப்பினாலாயது. இதில் 85 சூத்திரங்களிருக்கின்றன; முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

யாப்பருங்கலச் சரகரம்

உறுப்பியல.

ஆன்றவர் போற்று மாதியை வணங்கிச்
சான்றவர் சொற்ற சதுரா மிலக்கணந்
தோன்ற வெல்லாந் தொகையாய்த் திரட்டி
யேன்ற யாப்புச் சாகர மியம்புதும். 1

எழுத்தசை சீர்த்தளை யடிதொடை பாவோ
டினமிவை யெட்டும யாப்பி னுறுப்பே. 2

* * * *

End:

ஈரெழுத்து முதலா வீரைந் தெழுத்து
ளோரடிப் போல வேறடி மூன்று
முதலெழுத்து வேறாய் பொழிவது திருகே.

No. 2223. VARAIYARUTTA PĀTTIYAL—[TEXT]

வரையறுத்த பாட்டியல்—[மூலம்]

[1065-E]

Size, 13″ × 1¼″. Pages, 4. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is the same as No. 180, Vol. I, Page 208.

Complete.

குறிப்பு: இது முன் முதல் வால்யம் பக்கம் 208-இல் விளக்கப் பெற்ற எண் 180-ஆம் பிரதியைப் போன்றது. நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

No. 2224. VARAI-Y-AṞUTTA PĀTTIYAL

[TEXT]

வரையறுத்த பாட்டியல்—[மூலம்]

[1102]

Size, 13″×1″. Pages, 10. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is an incomplete copy of the Mss. described under previous No. 2223.

Incomplete.

குறிப்பு: இது முன் எண் 2223 போன்றது.

அபூர்த்தி.

No. 2225. VĪRĀ CŌḶIYAM

[TEXT AND ANNOTATIONS]

வீர சோழியம்—[மூலமும் உரையும்]

[1069]

Size, 12″×$1\frac{3}{8}$″. Pages, 414. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 182, Vol. I, Page 209.

Complete.

குறிப்பு: *இது மூன் முதல் வால்யூம் பக்கம் 209-இல் விளக்கப் பெற்ற 182-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து, பாயிரப் பாடல்கள் வேறுபடுகின்றன. இப்பிரதி முற்றும் உள்ளது. ஏடுகள் மிகச் சிதிலம்.*

பூர்த்தி.

No. 2226. VEṆPĀ-P-PĀTTIYAL

[TEXT AND ANNOTATIONS]

வெண்பாப் பாட்டியல்—[*மூலமும் உரையும்*]

[1067-B]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 10. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 185, Vol. I, Page 213. The Mss. contains only a small portion of the work.

Incomplete.

குறிப்பு: *இது, பகுதி 1. பக்கம் 213-இல் விவரித்த நூலே இது.*

அபூர்த்தி.

Vol. I—Section III

சங்க இலக்கியம்: பக். 217—319

No. 2227. PATTU-P-PATTU

[TEXT AND ANNOTATIONS]

பத்துப் பாட்டு—[மூலமும் உரையும்]

[1074]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 434. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This Mss. contains all the 10 songs with their commentary by Naccinārkkiniyar.

Incomplete.

குறிப்பு: *இது, பத்துப் பாட்டு மூலமும், நச்சிஞர்க்கினியர் உரையும் முழுமையும் பெற்றது.*

பூர்த்தி.

Colophon:

முரப்பநக். வெயிரவநாத பிள்ளை......லே நல்லமுற்றுலெ மக விளயா(?) ஏடு இருந்த ஏடு வாங்கினது.

No. 2228. CIRU-PĀṆĀ-ARRU-P-PAṬAI

[TEXT AND COMMENTARY]

சிறுபாணுற்றுப்படை—[மூலமும் உரையும்]

[1070]

Size, $14\frac{7}{8}'' \times 1\frac{1}{2}''$. Pages, 34. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is the same as No. 202, Vol. I, Page 227 but with a leaf lost.

Incomplete.

குறிப்பு : இது முன் முதல் வால்யம் பக்கம் 227-இல் விளக்கப் பெற்ற எண் 202-ஆம் சுவடியை முழுதுமொத்துள்ளது. ஆயினும் இப்பிரதியில், இப்பாட்டின் முதல் 11 அடிகள் இல்லை. அதற் குரிய ஏடும் காணவில்லை.

அபூர்த்தி.

No. 2229. TIRU-MURUKARRU-P-PATAI

[TEXT]

திருமுருகாற்றுப்படை—[மூலம்]

[1071]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 20. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 190, Vol. I, Page 216.

Complete.

குறிப்பு : இது முன் முதல் வால்யம், பக்கம் 217-இல் விளக்கப் பட்ட எண் 190 ஆவது பிரதியைப் போன்றது. ஆயினும் அதில் முன்னும் பின்னும் கூறப்படும் தோத்திரப் பாக்கள் இதில் இல்லை.

பூர்த்தி.

No. 2230. TIRU-MURU-KARRU-P-PATAI

[TEXT]

திருமுருகாற்றுப்படை—[மூலம்]

[1073]

Size, $13'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same as No. 2229 but containing a poition of the work.

Incomplete.

குறிப்பு: இது முன் முதல் வால்யம், பக்கம் 217-இல் விளக்கப் பெற்ற எண் 190 ஆவது பிரதியைப் போன்றது. ஆயினும் இது 1 முதல் 70 ஆவது அடி வரையுமே யுள்ளது.

அபூர்த்தி.

No. 2231. TIRU-MURU-KĀṞṞU-P-PAṬAI [WITH PARIMĒLAḶAKAR'S COMMENTARY]

திருமுருகாற்றுப்படை—[பரிமேலழகர் உரையுடன்]

[1072]

Size, $13\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 64. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This Mss. contains the Text of Tiru-Murukāṟṟu-P-Paṭai with its annotation by Parimēlaḷakar.

Complete.

குறிப்பு: இது, திருமுருகாற்றுப்படை நூலின் உரை கொண்ட சுவடியாகும். ஆயினும், அதன்கண் கூறப்பட்ட உரை பரிமேலழகருடையதென்று குறிக்கப் பெற்றுள்ளது. ஆற்றுப் படை மூலம் முழுதும் இல்லை. தொடர்களைக்கொண்டு பொருள் கூறப் பெற்றுள்ளது. இப்பிரதி முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

உ

திருப்பரங்குன்றம்

திருமுருகாற்றுப் படை பரிமேலழகருரை.

ஒருமுரு காவென்றென் னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.

எ - து. திரு - அழகு. முருகு - வாசம்...... . ... முருகனாகிய சுவாமியே யென்றவாறு. ஏகாரம் - தேற்றம்.

உலக முவப்ப..................மலைகிழவோனே.

எ - து. முதலையும் முடிவையுஞ் சொல்ல ஒருமை பெற்ற வுள்ளத்துடனே யொருக்காற் பாடமோதிய தெனக் கொள்க. இதனுடைய திருவுள்ளக் கருத்தை யியன்றதோர் தோத்திரஞ் சொல்லுவான் அதலாது ... ..த்தஞ் சொல்லுவான். உலகமென்ப துயர்ந்தோர் மாட்டாதலானும் உயர்ந்தோராயுள்ள பரமவிருடிகளா யுள்ளோர் விரும்ப. உயர்ந்தோர் விரும்ப வென்று மமையும்..........

*   *   *   *

End:

.... சேணின் ....
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

ஆகாசத் துணின்று குதித்து வண்மலைக் கல்லையுருட்டி...... ....தேமாவின் பழமுற்றின சோலைகளுடைய உரிமைகளுடையோனே.

திருமுருகாற்றுப் படை யுரைபாடம் முற்றும்.

சிவசண்முக மூர்த்தி பாதார விந்தமே கதி.

Colophon:

இது அண்ணுசாமி வாத்தியார் சுவடியென்று தெரிகிறது.

ETTU-T-TOKAI

எட்டுத் தொகை

No. 2232. AKANĀṈŪṞU—[TEXT]

அகநானூறு—[மூலம்]

[1075-B]

Size, 14½″ × 1½″. Pages, 188. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 227, Vol. I, Page 252. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு: *இது, முன் முதல் வால்யம், பக்கம் 252-இல் விளக்கப் பெற்ற எண் 227 ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும், 5 ஆவது பாடலிலிருந்து 400 ஆம் பாடல் 21 ஆம் அடி வரையில் உள்ளது. முதலில் ஒரு ஏடும் இறுதி ஏடும் இல்லை. 2 ஆவது ஏடும் பாதி ஒடிந்துள்ளது. மற்றவை சிதிலம்.*

அபூர்த்தி.

No. 2233. KUṞUNTOKAI—[TEXT]

குறுந்தொகை—[மூலம்]

[1075]

Size, 14½″ × 1½″. Pages, 47. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is one of the 8 Caṅkam Anthologies and is on Aka-P-Poruḷ. A few leaves are broken. This has not been described in Vol. I.

Incomplete.

குறிப்பு : இது, சங்கவிலக்கியமாகிய எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாகச் சொல்லப்படும் நூல். அகப்பொருள் சம்பந்தமானது. இதில் மூலமட்டும் கடவுள் வாழ்த்துள்பட உள்ள பாடல்கள் 402. இப்பிரதியில் கடவுள் வாழ்த்தும், முதல் செய்யுளுமுடைய ஏடு இல்லை. ஏடுகள் மிகவும் சிதிலம். இடையிலும் சில ஏடுகள் ஒடிந்து அரைகுறையாகக் காணப்படுகின்றன. இதில் ஐங்குறுநூறு ஆரம்பிக்கப்பட்டு 2 செய்யுட்களோடு முடிகிறது.

அபூர்த்தி.

Beginning :

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
....
நறியவு முளவோநீ யறியும் பூவே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகனை யியற்கைப் புணர்ச்சியின்கணிடை யீடுபட்டு நின்ற தலைமகனுணி நீக்குதற் பொருட்டு மெ......தொட்டுப் பயிறல் முதலாயின வவள்பாட்டு நிகழ்த்தக் கூடிய தலைமகனதன்பு தோற்ற நலம்பாராட்டியது —இறையனார்......

* * * *

End :

அடும்பி னய்மலர் விரைஇ நெய்த
னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
.. ..
றைதே கம்ம மெய்தோய் நட்பே.

எ - து. வேறுபாடு கண்டிற் செறிக்கப்பட்ட தலைமகடனதுள்ளே சொல்லியது. அம்மூவன். 41

குறுந்தொகை முற்றும்.

இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவு மெட்டடிப் பேரெல்லையாகவுந் தொடுக்கப்பட்டது.

ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை
யாராய்ந் துணர்ந்த வறிவுடையோர்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

சிவமயம்

No. 2234. NARRIṈAI—[TEXT]

நற்றிணை—[மூலம்]

[1076]

Size, $14\frac{3}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 134. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is one of the 8 Caṅkam Antholgies consisting of 400 stanzas by Various poets on Aka-P-Poruḷ. This has not been noticed in Vol. I of the Catalogue.

Complete.

குறிப்பு: இது சங்கவிலக்கியங்களுள் எட்டுத் தொகையுடன் கூறப்படுமொன்று. மூலமட்டும் உள்ளது. 400 ஆசிரியப்பாக்களை யுடையது. அகப்பொருள் சம்பந்தமானது. இதனை இயற்றிய வர்கள் கடைச்சங்கப் புலவர்கள். நூல் அச்சாகியுள்ளது. ஏடுகள் துளைக்கப் பட்டும், கடைசி ஏடும் ஓரங்களும் ஒடிந்தும் உள்ளன. மிகச் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

சிவமயம்

நற்றிணை—அமூர் ?

எட்டுத்தொகை

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கை யாக
....

வேதமுதல்வ னென்பது
தீதற விளங்கிய திகிரி யோனே

வாழ்த்து. பாரதம் பாடிய பெருந்தேவனார்.

* * * *

End :

வாழைமென் ஞேருடு வார்புறு பூக்கு
நெல்விளை கழனி நேர்கட்... .....

....

கேண்மையோ டளைஇ நீயே
கெடுவறி யாயென் னெஞ்சத் தானே.

எ - து. பரத்தை தன்னைப் புகழ்ந்தது. முன்பு நின்று புகழ்ந்தவாறெனினி..........மென்று சொன்னவையாமெ ன்பது.

ஆலங்குடி வங்கனார்.

இத்தொகை யொன்பதடிச் சிறுமையாகப் பன்னிரண்டடிகாறு முயரப்பெற்றது. இத்தொகை தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. நற்றிணைப் பாட்டு நானூறு முற்றுப் பெற்று முடிந்தது. குருவே துணை.

No. 2235. PATIRRU-P-PATTU—[TEXT]
பதிற்றுப் பத்து—[மூலம்]
[1075-A]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 50. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note : This is the same as the work described in No. 222, Vol. I, Page 246 but containing only the Text.

Incomplete.

குறிப்பு : இது முன் வால்யம் 1இல், பக்கம் 246இல் விளக்கப் பட்ட எண் 222ஆம் சுவடிப் பிரதியைப்போன்றது. இரண்டாம்பத்தில் 2ஆவது பாட்டின் 3ஆம் அடி தொடங்கி 9ஆம் பத்தின்

முடிவுவரையுள்ளது. ஏடுகள் மிகவும் சிதிலம். இடையில் சில ஏடுகள் முறிந்தும், சிதறியுமுள்ளன.

அபூர்த்தி.

No. 2236. PARIPĀṬAL—[TEXT AND PARIMĒLAḶAKAR'S ANNOTATION]

பரிபாடல்—[மூலமும் பரிமேலழகர் உரையும்]

[1077]

Size, $17\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 160. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is the same work as the one described in No. 223, Vol. I, Page 247. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு : இது முன் முதல் பகுதியுள் பக்கம் 247இல் விளக்கப்பட்ட எண் 223ஆம் பிரதியைப் போன்றது ஆயினும் முதற்பாட்டு இதில் இல்லை. 22ஆம் பாடலுக்குப்பின் வரும் பரிபாடற்றிரட்டு என்னும் பகுதி இப்பிரதியில் இல்லை. ஏடுகள் சிதிலம். இது எட்டையபுரம் அரண்மனைச் சுவடி என்று இதன் முன்னேட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

அபூர்த்தி.

No. 2237 ĀCĀRA-K-KŌVAI

[TEXT AND ANNOTATIONS]

ஆசாரக் கோவை—[மூலமும் உரையும்]

[1078]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 28. Lines, 14 on a page. Condition, Fair. Appearance, Not very old.

Note: This title has been described in No. 305 (Vol. I, Page 307) of the Catalouge. The Mss. contains the Thxt and Annotations in full.

Complete.

குறிப்பு: *இந்நூல் (பகுதி 1. பக் 307இல்) எண் 305இல் விவரிக்கப்பட்டுள்ளது. இச்சுவடியில் மூலமும் உரையும் முழுமை யும் உள்ளன.*

பூர்த்தி.

No. 2238. ĀCĀRA-K-KŌVAI

[TEXT AND ANNOTATIONS]

ஆசாரக் கோவை—[*மூலமும் உரையும்*]

[1080-A]

Size, $12\frac{5}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 50. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as No. 2237 but in a few places the annotations are differently wored.

Complete.

குறிப்பு: *முன் 2257ஆம் பிரதிபோன்றதாயினும் உரை சிறிது வேருகவுள்ளது.*

பூர்த்தி.

Colophon:

ஆசாரக்கோவையுரை முற்றிற்று.

காந்திமதி நெல்லையப்பர் முன்னிற்க.

48க்கு ஸ்ரீமுகவருஷ சித்திரைமீ 21௳ மகாராசா அவர்களுடைய ஊழியம் .... மு-குமாரெட்டு திருநெல்வேலியிலெழுதியது.

நன்றாக, தேவிதுணை செய்யவேண்டியது. தவசித்தம்பிரான் திருவருளே சரணம்.

No. 2239. IṈṈĀ NĀṞPATU

[TEXT AND ANNOTATIONS]

இன்னா நாற்பது—[மூலமும் உரையும்]

[1078-C]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 16 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 259, Vol. I, Page 276.

Complete.

குறிப்பு : இது, முன் முதல்வால்யம் பக்கம் 276இல் விளக்கப் பெற்ற எண் 259ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது.

பூர்த்தி.

No. 2240 IṈṈA NĀṞPATU—[TEXT]

இன்னா நாற்பது—[மூலம்]

[1048-W]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 2239 but contains only the Text of 7 stanzas.

Incomplete.

குறிப்பு : முன் எண் 2239 போன்றது ; ஆனால் தேர்ந்தெடுக் கப்பெற்ற 7 செய்யுட்களின் மூலம் மட்டும் இப்பிரதியில் உள்ளன.

அபூர்த்தி.

No. 2241. IṈIYATU NĀṞPATU

[TEXT AND ANNOTATIONS]

இனியது நாற்பது—[மூலமும் உரையும்]

[1078-D]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 16 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 264 (Vol. I, Page 279).

Complete.

குறிப்பு: *இது முதல் வால்யம் பக்கம் 279இல் விளக்கப்பெற்ற எண் 264ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளது.*

பூர்த்தி.

No 2242. IṈIYA NĀṞPATU—[TEXT]

இனிய நாற்பது—[மூலம்]

[1048-X]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as previous No. 2241 but contains only the Text of 4 stanzas in the work.

Incomplete.

குறிப்பு: *முன் எண் 2241 போன்றது.*

அபூர்த்தி.

No. 2243. ĒLĀTI—[TEXT AND ANNOTATIONS]

ஏலாதி—[மூலமும் உரையும்]

[1078-G]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 20. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 319 (Vol. I, Page 316).

Complete.

குறிப்பு : இது முன் முதல் வால்யம் பக்கம் 316இல் விளக்கப் பெற்ற எண் 319ஆம் பிரதியைப் போன்றது. பாடல் வரிசை முறை மாறியுள்ளது.

பூர்த்தி.

No. 2244. ĒLĀTI—[TEXT]

ஏலாதி—[மூலம்]

[1048-T]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as previous No. 2243 but contains only 11 selected stanzas—Text alone.

Incomplete.

குறிப்பு : முன் எண் 2243 போன்றது. 11 செய்யுட்களே உள்ளன.

அபூர்த்தி.

No. 2245. AINTIṆAI-Y-AIMPATU [TEXT AND ANNOTATIONS]

ஐந்திணை யைம்பது—[மூலமும் உரையும்]

[1078-K]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 16. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 279 (Vol. I, Page 287).

Complete.

குறிப்பு : இது, முன் முதல் வால்யம் பக்கம் 287இல் விளக்கப் பெற்ற எண் 279ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது.

பூர்த்தி.

No. 2246. KAḶAVAḶI NĀṞPATU

[TEXT AND ANNOTATIONS]

களவழி நாற்பது—[மூலமும் உரையும்]

[1078-J]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 11. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 275 (Vol. I, Page 285).

Complete.

குறிப்பு : இது முன் முதல் வால்யம் பக்கம் 285இல் விளக்கப் பெற்ற எண் 275ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளது. சில விடங்களிற் பாடபேதங்களுண்டு.

பூர்த்தி.

No. 2247. KĀR NĀṞPATU

[TEXT AND ANNOTATIONS]

கார் நாற்பது – [மூலமும் உரையும்]

[1078-I]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 12. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 270 (Vol. I, Page 282). Annotations are found only for a portion of the work.

Complete.

குறிப்பு: *இது, முதல் வால்யம் பக்கம் 282இல் விளக்கப் பெற்ற எண் 270ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளதாயினும் இதில் 23ஆம் பாடல் முதல் 38ஆம் பாடல்வரை உரையில்லை. பாடல்கள் மட்டுமேயுள்ளன.*

பூர்த்தி.

No. 2248. CIṞU PAÑCA MŪLAM

[TEXT AND ANNOTATIONS]

சிறு பஞ்ச மூலம்—[*மூலமும் உரையும்*]

[1080]

Size, $12\frac{5}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 60. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, New.

Note: Same as No. 313 (Vol. I, Page 312).

Complete.

குறிப்பு: *இது முன் முதல் வால்யம் பக்கம் 312இல் விளக்கப் பெற்ற எண் 313ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது.*

பூர்த்தி.

Colophon:

1048ஸு-க்கு ஸ்ரீமுகஸு சித்திரைமீ 18உ திருநெல்வேலியில் எழுதிமுடித்தது. சிவசுயம்பிரகாச முன்னிற்க. தருமாரெட்டு சக்கதேவி முன்னிற்க வேண்டியது.

No. 2249. CIṞU PAÑCA MŪLAM

[TEXT AND ANNOTATIONS]

சிறு பஞ்ச மூலம்—[*மூலமும் உரையும்*]

[1078-F]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Page, 30. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as previous No. 2248 but with Annotations.

Complete.

குறிப்பு: *இது முன் எண் 2248 போன்றது. ஆனால் உரையுடன் உள்ளது.*

பூர்த்தி.

No. 2250. CIṞU PAÑCA MŪLAM—[TEXT]

சிறு பஞ்ச மூலம்—[மூலம்]

[1048-U]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an incomplete copy of the work described in No. 313 (Page 312 of Vol I) containing the text of only 12 stanzas.

Incomplete.

குறிப்பு: *இது, முன் முதல் வால்யூம் பக்கம் 312-இல் விளக்கப் பெற்ற எண் 313-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் மூலம் மட்டும் உள்ளது. 12 செய்யுட்கள் திரட்டி யெழுதப் பெற்றுள்ளன.*

அபூர்த்தி.

No. 2251. TIṆAI MĀLAI NŪṞṞAIMPATU

[TEXT AND ANNOTATIONS]

திணை மாலை நூற்றைம்பது—[மூலமும் உரையும்]

[1078-M]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 23. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. contains Text and Annotations for 127 stanzas of the work described in No. 285 (Page 292 of Vol. I of the catalogue.

Incomplete.

குறிப்பு: *இது, முன் முதல் வால்யம் பக்கம் 293-இல் விளக்கப் பெற்ற எண் 285-ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளதாயினும், இதில் 127-ஆம் பாடல் வரையுமே உரையோடுள்ளது. அப்பிரதியில் 127-ஆம் பாடல் வரை உரையும் அதற்கு மேல் இறுதி வரை மூலமட்டுமே யுள்ளதாகக் குறிக்கப் பெற்றுள்ளது.*

அபூர்த்தி

No. 2252. TIṆAI MOḶI-Y-AIMPATU

[TEXT AND ANNOTATIONS]

திணை மொழி யைம்பது—[*மூலமும் உரையும்*]

[1078-L]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 16. Lines, 15 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 283 (Page 291 of Vol. I). The Mss. does not contain the 1st 2 stanzas and their Annotations.

Incomplete.

குறிப்பு: *இது, முன் முதல் வால்யம் பக்கம் 291-இல் விளக்கப் பெற்ற எண் 283 ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது. முதல் 2 பாடல்களும் அவற்றின் உரையுமில்லை. 3-ஆவது பாடலின் உரையின் இறுதியில் 2 வரிகள் மட்டும் இருக்கின்றன.*

அபூர்த்தி.

No. 2253. TIRI KAṬUKAM

[TEXT AND ANNOTATIONS]

திரிகடுகம்—]மூலமும் உரையும்]

[1078-A]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 30. Lines, 13 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 299 (Vol. I Page 303)'

Complete.

குறிப்பு: இது, முன் முதல் வால்யம் பக்கம் 303-இல் விளக்கப் பெற்ற எண் 299-ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது.

பூர்த்தி.

No. 2254. TIRI KATUKAM—[TEXT]

திரிகடுகம்—[மூலம்]

[1081]

Size, $17'' \times 1\frac{1}{8}''$. Pages, 42. Lines, 4 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as previous No. 2251 but containing the text only for a portion of the work.

Incomplete.

குறிப்பு: முன் எண் 2253 போன்றது. ஆயினும் மூலமட்டுமே யுள்ளது. இப்பிரதியில் 22-ஆவது செய்யுளிலிருந்து 100-ஆவது செய்யுள் வரையுமுள்ளது. முதலில் 8 ஏடுகளில்லை. ஏடுகள் உடைந்தும் மிகவும் புள்ளிகள் விழுந்தும் உள்ளன. மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

Colophon:

......க்கு கார்த்திகை மீ 19௳ சுக்கிரவாரம்.

No. 2255. TIRU-K-KURAL—[TEXT AND COMMENTARY BY PARIMELALAKAR]

திருக்குறள்—[மூலமும் பரிமேலழகருரையும்]

[1083]

Size, 14″×1¼″. Pages, 800. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This is the same as No. 290 (Vol. I Page 296) but incomplete.

Ineomplete.

குறிப்பு: இது, முன் முதல் வால்யம் பக்கம் 296-இல் விளக்கப் பெற்ற எண் 290-ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளது. ஏடுகள் மிகவும் சிதிலம். முதற்கண் 11 ஏடுகள் இல்லை. 3ஆம் அதிகார மாகிய நீத்தார் பெருமை என்பதில் 7ஆம் குறளிலிருந்துதொடர்ச்சி யாக வுள்ளது. இடையிடையே ஏடுகள் ஒடிந்தும் காணப் படாமலும் உள்ளன.

அபூர்த்தி.

Colophon:

ஆக வதிகார மிருபத்தைந்துக்குச் செய்யுள் 250. காமத்துப் பால் முடிந்தது......லுக்கு மதிகார மறப்பாலதிகாரம் 38, பொருட் பாலதிகாரம் 70, காமத்துப்பாலதிகாரம் 25 . ...க்குறள் வெண்பா 1330.

திருச்சிற்றம்பலம்.

ஆறுமுகம் துணை.

சற்குரு நாதன் திருவடி வாழ்க.

.........ரட்சிக்கக் கடவன்......சகாத்தம் 1648-க்குச் செல்லா நின்ற விசுவாச ஹு வைகாசி மீ ......ரரமும் சஷ்டியும் பூச நட்சத் திரமும் சுபயோகமும் சுபகரணமும் பெற்ற தினத்தில் சிங்கல்க...... குப்போரூர்ப் பேரம்பலம் திருவள்ளுவர் குறளுரையுடனே......... தாட்சியு முன்பட............ந்துது. சமரபுரி முருகனருள் வாழ்க. அருட்குருநாதன் றிருவுளப் பிரசாத மடியேனுக் குண்டா...........

No. 2256. TIRU-K-KURAḶ PORUTPĀL PARIMELALAKAR'S COMMENTARY]

திருக்குறள் பொருட்பால்—பரி - உரை]

[1084]

Size, 19¾″ × 1½″. Pages, 178. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same as the one described in previous No. 2255 but contains only the Text and Annotations for a portion of Porutpāl of the work.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 2255-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் பொருட்பால் மட்டுமே நட்பாராய்தல் என்னும் அதிகாரத்தில் 6-ஆவது குறளோடு பரிமேலழகர் உரையுடன் முடிகின்றது. முடிவில் உள்ள குறளுக்கு உரை பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

No. 2257. TIRU-K-KURAḶ

[TEXT AND ANNOTATIONS]

திருக்குறள்—[மூலமும் உரையும்]

[1082]

Size, 13″ × 1⅜″. Pages, 534. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an incomplete copy of Tiru-K-Kuraḷ with an unpublished annotation.

Incomplete.

குறிப்பு : இது, முன் முதல் வால்யம் பக்கம் 296-இல் விளக்கப் பெற்ற பிரதியைப் போன்றதாயினும் இதன் உரை வேறாக

வுள்ளது. உரையாசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. இவ்வுரை இதுவரை அச்சானதாகத் தெரியவில்லை. இப்பிரதியின் முதற்கண் 18 ஏடுகளும், இறுதியில் 261 முதல் 266 வரை 6 ஏடுகளும் இல்லை. முதற்கண் இனியவை கூறல் என்னும் அதிகாரத்தில் 8-ஆவது குறளிலிருந்து இறுதிவரை யுள்ளது.

அபூர்த்தி.

Beginning :

சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

எ - து. திரவிய வலுமையாற் பிறருக்கு வாதை பண்ணாத நல்ல வார்த்தை சொல்லுகிறவனுக்கு இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே வெகுவான சுகத்தையுங் கொடுக்கு மென்றவாறு.

* * *

End :

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்தது நெஞ்சு.

எ-து. என்னெஞ்சு தனியே யிருந்துகாதலரைப் பிரிந்துபோன கொடுமையை நினைத்தாலதுவ...ந்து ....என்னைத் தின்பது போலத் துன்பஞ் செய்யா நின்ற தென்றவாறு.

....

....

வள்ளுவரையாய்ந்து, அறப்பால், 380.

பொருட்பால் — 700.

காமத்துப்பால் — 250.

ஆகக் குறள்..................முற்றும்.

(வடமொழிப்பதம்) நள ஹு ஆடி மீ 20உ திருவேங்கிட முதலியார் குமாரன் அய்யாசாமி—திருவள்ளுவர் குறள்...

அர்த்தத்தோடே எழுதி நிறைந்தது முற்றும். (வடமொழியில் ஒரு வாக்கியம்).

No. 2258. NĀLAṬIYĀR

[TEXT AND ANNOTATIONS]

நாலடியார்—[மூலமும் உரையும்]

[1086]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 216. Lines, 9 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is the same work as the one described in No. 241 (Vol. I, Page 262) but contains a commentary which is different from the one described in No. 245 (Vol. I, Page 265).

Complete.

குறிப்பு: *இது முன் பகுதி 1, பக்கம் 262, எண் 241 சுவடிப் பிரதியைப் போன்றது. ஆயினும் உரையில் வேறுபாடு காணப்படுகின்றது. ஏடுகள் மிகவும் சிதிலம்.*

பூர்த்தி.

Colophon:

ஆகச் செய்யள் 400.

நாலடி விருத்தி முடிந்தது.

ஞாலத் துதிதரு நற்பாட்டே கொண்டடக்கி
நாலடி நானூ றெனப்பெயரால்—வாலி
தீண்டித் தொகுத்தா னிசைசால் பதுமனே
கூட்டமைந்த மூன்றுபாக் கொண்டு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன நாதரே துணை.

ஆத்தும ஞயகரே துணை.

No. 2259. NĀLAṬIYĀR

[TEXT AND ANNOTATIONS]

நாலடியார்—[மூலமும் உரையும்]

[1088]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 362. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note : Same as No. 2258.

Complete.

குறிப்பு : இது, முன் 2258-ஆம் பிரதியை ஒத்துள்ளது. நூல் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Colophon :

.........தே...திகின......துமொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையோர்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

அதிகாரம் 40-க்குக் கவி 400-க்கு........தைமீ 23உ திங்கட் கிழமையுஞ் சதுர்த்தசியும் பூராட நட்செத்திரமும் பெற்ற சுபதினத்தில் ஆழ்வாரப்ப னெழுதி நிறைவேற்றினது.

No. 2260. NĀLAṬIYĀR

[TEXT AND VIRUTTI-Y-URAI]

நாலடியார்—[மூலமும் விருத்தியுரையும்]

[1087]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 816. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This is the same as No. 2258 but the annotation is called Virutti-Y-Urai, though Tarumar's name is also written as the name of the commentator.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2258-ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. இவ்வுரையாசிரியர் பெயரும் தருமர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது; ஆயினும் உரையில் வேறுபாடு இருக்கின்றது. இப்பிரதி 398-ஆவது பாடல் வரையிலுள்ளது. அதன் உரையும் முற்றுப்பெறவில்லை.*

அபூர்த்தி

No. 2261. NĀLAṬIYĀR

[TEXT AND ANNOTATIONS BY TARUMAR]

நாலடியார் [தருமர்]—[*மூலமும் உரையும்*]

[1085]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 406. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: In this Mss. of Nālaṭiyār we find Annotations for 320 stanzas of the Text Tarumar.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2258 பிரதி போன்றது. ஆயினும், அவ்வுரை வேறு. இங்குக் கூறப்பெறும் உரை தருமர் என்பவரால் எழுதப்பெற்றது என்று குறிக்கப்பெற்றிருக்கிறது. இப்பிரதியில் 120 செய்யுட்கள் வரையுமே உரையுள்ளது. பாடபேதமும் உள்ளது. ஏடுகள் மிகவும் புள்ளி விழுந்து எழுத்துக்கள் விளங்காதபடி யுள்ளன.*

அபூர்த்தி.

No 2262. NĀṈMAṆI-K-KAṬIKAI

[TEXT AND ANNOTATIONS]

நான்மணிக்கடிகை—[மூலமும் உரையும்]

[1078-B]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 30. Lines, 14 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 254 (Vol. I, Page 273).

Complete.

குறிப்பு : *இது, முன் முதல் வால்யம் பக்கம் 273-இல் விளக்கப் பெற்ற எண் 254-ஆம் பிரதியை முழுது மொத்துள்ளது. சில பாட பேதங்களுமுண்டு.*

பூர்த்தி.

No. 2263. PALAMOLI NĀṈŪṞU

[TEXT AND ANNOTATIONS]

பழமொழி நானூறு—[மூலமும் உரையும்]

[1078-E]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 114. Lines, 16 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 307 (Page 309 of Vol. I).

Complete.

குறிப்பு : *இது, முன் முதல் வால்யம் பக்கம் 309-இல் விளக்கப் பெற்றுள்ள எண் 307-ஆம் பிரதியை முழுதும் ஒத்துள்ளது.*

பூர்த்தி.

No. 2264. PAḶAMOḶI NĀṈŪṚU

[ANNOTATIONS ONLY]

பழமொழி நானூறு—[உரை மட்டும்]

[1089]

Size, $13\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 140. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This is the same as described in No. 2263 but contains only the Annotations without the Text.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 2263 போன்றது. ஆயினும் மூல பாடம் இல்லை. உரை மட்டுமே யுள்ளது.*

பூர்த்தி.

No. 2265. PAḶAMOḶI—[TEXT]

பழமொழி—[மூலம்]

[1048-V]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This contains only 10 stanzas (Text alone) of the work described in No. 2263.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2263 பிரதி போன்றது. ஆயினும் இதனில் மூலம் மட்டில் 10 செய்யுட்களுக்கே எழுதப்பெற்றுள்ளது.*

அபூர்த்தி.

No. 2266. MUTUMOḺI-K-KĀÑCI

[TEXT AND ANNOTATIONS]

முதுமொழிக் காஞ்சி—[மூலமும் உரையும்]

[1078-H]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 8. Lines, 16 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 317 (Vol. I, Page 315).

Complete.

குறிப்பு: *இது, முன் முதல் வால்யம் பக்கம் 315-இல் விளக்கப் பெற்ற எண் 317-ஆம் பிரதியை முழுதுமொத்துள்ளது.*

பூர்த்தி.

Vol. I—Section IV

காப்பியங்கள்: *பக்.* 320—342

No. 2267. CILAPPATIKĀRAM—[TEXT]

சிலப்பதிகாரம்—[மூலம்]

[1090]

Size, $12\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 176. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is the same as No. 337 (Vol. I, Page 329).

Complete.

குறிப்பு: *இது முன் முதல் வால்யம் பக்கம் 329-இல் விளக்கப் பட்ட எண் 337-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும் இறுதியிலுள்ள பாடல் மட்டும் வேறுபடுகின்றது. அச்சுப் பிரதிக்கு*

இவ்விரு சுவடிப் பிரதிகளும் மாறுபடுகின்றன. முதற்கண் சில தோத்திரப் பாடல்கள் இருக்கின்றன.

பூர்த்தி.

Colophon:

1041-க்கு குரோதன ஹூ தை மீ 6உ. புந்தி வாரத்தன்று ஆறுமுக மங்கலம் முத்துவேலுப் பிள்ளை மகன் குமாரசுவாமியா பிள்ளை யெழுதி நிறைவேற்றியது.

No. 2268. CILAPPATIKĀRAM

[TEXT AND ANNOTATIONS]

சிலப்பதிகாரம்—[*மூலமும் உரையும்*]

[1091]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 354. Lines, 11 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as previous No. 2267 but with notes for a portion of the work.

Incomplete.

குறிப்பு: *இது முன் எண் 2267 போன்றது. ஆயினும், இது உரைப்பாயிரத்தின் இடையிலிருந்து 14-ஆவது வார்சாண் காதை 205-ஆம் அடி வரையில் அடியார்க்கு நல்லாருரையுடன் கூடியுள்ளது. ஏடுகள் மிகவும் சிதிலம்.*

அபூர்த்தி.

No. 2269. CĪVAKA CINTĀMAṆI

[TEXT AND ANNOTATIONS]

சீவக சிந்தாமணி—[*மூலமும் உரையும்*]

[1092]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 752. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 322 (Vol. I, Page 320) but incomplete.

Incomplete.

குறிப்பு : *இது முன் முதல் வால்யம் பக்கம் 320-இல் எண் 322 இல் விளக்கப் பெற்ற பிரதியை ஒத்துள்ளது. ஆயினும் இது முற்றுப்பெறவில்லை. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பாடபேதங்கள் சிலவுண்டு. இதில் 334-ஆவது பக்கத்தில் கேமசரியார் இலம்பகம் வரை முற்றுப் பெற்றுள்ளது. அதற்கு மேல் 386 என்று பக்க எண்ணிட்ட ஏடு ஒன்றில் 139-ஆம் பாட்டின் உரையிற்றொடங்கி 142-ஆம் பாடல் பாதி உரை வரை முடிகிறது.*

அபூர்த்தி.

Colophon :

ஆக விருத்தம் 1557. இவ்வுரை யாசிரியர் கருத்துணரா...... காலத்தார் வேண்டாதன வற்றிற்கு வேண்டுவனவாகக் கருதி யிடை யிடை மடுத்த தப்புரைகளைச் சொல்வேறு பாட்டானும் பொருள் வேறுபாட்டானு மிலக்கண வழுவானும் வாசக பேதத் தானுங் கண்டு தள்ளி எழுதின சிந்தாமணி நச்சினாக்கினிய முதற் பொத்தக முடிந்தது. இன்னு முரை வாசகங்களினு மிலக்கண மிலக்கண வாய்ப்பாடுகளினு மொரோவிடங்களிற் சிறிது மிகை யுண்டு அவற்றைப் பல பிரதிகளும் பார்த்துய்த்துணர்ந்து விலக்கிக் கொள்க. ஞானதேசிகன் துணை. இந்த ஏடு எழுதினது அம்மாஞ்சி வைகுண்ட மய்யங்கார் எழுதி இராமாயண திருவேங் கடத்துக்கு ......கரு ஆவணி 29௳ முடிந்தது. வேங்கடாசலபதி சகாயம். ....ஏடு முதல் எழுதினது யப்பாங் குளத்தி லிரு ...ஸ்ரீநிவாசய்யங்கார் ஆழ்வார் திருவடிகளே சரணம். ஆதிநாதன் ஆதிநாச்சியார் வைகுண்டபதி கள்ளப்பிரான் தெய்வ நாயகன் வானமாமலை யோகி திருவடிகளே சரணம்.

No. 2270. MUTTOḶḶĀYIRAM—[TEXT]

முத்தொள்ளாயிரம்—[மூலம்]

[73-C]

Size, 17″×1¼″. Pages, 14. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This Mss. contains 100 stanzas from the fuller work—which deals on is the Three Crowned kings of the land.

Incomplete.

குறிப்பு: இது, சங்கவிலக்கியம் போன்ற ஓர் நூல். முடியுடை மூன்று மன்னராகிய சேரசோழ பாண்டியர்கள் விஷயமாகப் பாடப்பட்டது. இம்மூவேந்தரையும் தனித்தனித் தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்பட்டமையின் முத்தொள்ளாயிரம் என்றும் பெயர்பெற்றதென்பர். இப்பிரதியில் 100 பாடல்களுள்ளன. இதிலுள்ள பாடல் சில அச்சுப் பிரதியில் இல்லை.

அபூர்த்தி.

Vol. I—Section V

இதிகாசங்கள்: பக். 343—394

No. 2271. KAMPARĀMĀYAṆAM—[TEXT]

கம்பராமாயணம்—[மூலம்]

[1256]

Size, 15″×1¼″. Pages, 574. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: Same as No. 357 (Page 343 of Vol. I) but seems to contains only 2 Kāṇṭās i.e. Bālakāṇṭam and Kitkinta Kāṇṭam. The Mss. is very much injured.

Incomplete,

குறிப்பு : இது முன் முதல் வால்யம் பக்கம் 343-இல் விளக்கப் பெற்ற எண் 357-ஆம் பிரதியைப் போன்றது. ஆயினும், இப் பிரதியில் பாலகாண்டம் கிஷ்கிந்தா காண்டம் இவைமட்டில் இருப்பதாகத் தெரிகிறது. ஏடுகள் பிறழ்ந்துள்ளதனுலும் ஓரங் களில் ஒடிந்திருப்பதனுல் பக்க எண்கள் அறியக்கூடாமையாலும், காண்டங்கட்குரிய படலங்களும் முறை பிறழ்ந்து கோவை செய்யப் பட்டுள்ளதனுலும், படலம், செய்யுட்டொகை இவைகளைத் திட்ட மாய் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி

No. 2272. KAMPARĀMĀYAṆAM—CUNTARAKĀṆṬAM—[TEXT AND PROSE]

கம்பராமாயணம்—சுந்தரகாண்டம்—[மூலமும் வசனமும்]

[1278]

Size, $14\frac{5}{8}'' \times 1\frac{3}{4}''$. Pages, 58. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : In this Mss. there are only 224 selected stanzas from Cuntara Kāṇṭam with prose versions interpersed.

Incomplete.

குறிப்பு : இப்பிரதியில் கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில் 324 செய்யுட்களே இருக்கின்றன. இடையில் பல செய்யுட் களில்லை. மூலமும் இடையிடை வசனமும் காணப்படுகின்றன. இப்பிரதி முற்றுமில்லை. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பாடபேதங் கள் மிகவுண்டு.

அபூர்த்தி.

No. 2273. KAMPARĀMĀYAṆAM—[TEXT]

கம்பராமாயணம்—[மூலம்]

[1257]

Size, $17\frac{5}{8}'' \times 1\frac{1}{2}''$. Pages, 354. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains only 3 Kāṇṭās.

Incomplete.

குறிப்பு: இந்தப் பிரதியில், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், உத்தர காண்டம் இவைகள் மட்டுமுள்ளன. ஏடுகள் பிறழ்ந்தும், இடையில் பல ஏடுகள் இல்லாமலும் இருத்தலால் இங்குக் குறிப்பிட்ட காண்டங்கள் பூர்த்தி பெற்றதும் பெருததும் இன்ன இன்னவென அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

No. 2274. [NALLA-P-PIḶḶAI] PĀRATAM

[TEXT]

[நல்லாப்பிள்ளை] பாரதம்—[மூலம்]

[1265]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 192. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work is described in No. 419 (Vol. I, Page 380) and this Mss. contains a portion of this work.

Incomplete.

குறிப்பு: இது முன் வால்யம் 1 பக்கம் 380 இல் விளக்கப் பெற்ற 419 ஆம் பிரதியைப் போன்றது. இதில் 5-ஆவது உத்யோக பருவமுதல் 10-ஆம் போர்ச் சருக்கம் வரையுள்ளது. 231 முதல் 326 ஏடுகள் வரை 96 ஏடுகள் உள்ளன. அவற்றுள் 234, 245, 262, 282, 286, 293, 295, 314, 315, 320 இந்த எண்களுள்ள ஏடுகள் இல்லை. 42-ஆவது ஏடு ஒடிந்து குறையாயுள்ளது. இதிலுள்ள பாடல்கள் சில அச்சுப் பிரதிகளில்லை; பாடபேதமுண்டு.

அபூர்த்தி.

No. 2275. [NALLA-P-PIḶḶAI] PĀRATAM

[TEXT]

[நல்லாப்பிள்ளை] பாரதம்—[மூலம்]

[1267]

Size, $19\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 274. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same work as referred to in No. 2274. This Mss. contains Krishṇa Tūtu-C-Carukkam from Nalla-P-Pillai's Pāratam.

Incomplete.

குறிப்பு: இதில் நல்லாப்பிள்ளை பாரதத்தில் கிருஷ்ணன் தூதுச்சருக்கம் வரையுள்ளது. ஏடுகள் முறை பிறழ்ந்துள்ளன. பலவேடுகள் ஓரங்களில் ஒடிந்திருப்பதால் பக்க எண் அறிய முடியவில்லை. முதற்கண் ஆறு ஏடுகளில்லை.

அபூர்த்தி.

No. 2276. [NALLĀ-P-PIḶḶAI] PĀRATAM

[TEXT]

[நல்லாப்பிள்ளை] பாரதம்—[மூலம்]

[1268]

Size, $15'' \times 1\frac{1}{4}''$. Pages, 18. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. is the same as previous No. 2275 but it contains different portions.

Incomplete.

குறிப்பு: இது முன் எண் 2275 போன்றது. ஆனால் நூலின் பிறிதொரு பகுதியைக் கொண்டுள்ளது.

அபூர்த்தி.

Colophon:

நச்சுப்பொய்கை சருக்கம் முற்றும். ஆக ஆரணிய பருவம் 24க்குச் செய்யுள் (2746) கிருஷ்ணசகாயம். காரணாசாரியனுடைய சரணே கதி.

No. 2277. [NALLĀ-P-PIḶḶAI] PĀRATAM

[TEXT AND ANNOTATIONS]

[நல்லாப்பிள்ளை] பாரதம்—[மூலமும் உரையும்]

[1272]

Size, $19\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 240. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains portions from Nalla-P-Pillai's Pāratam on the 14th day battle. Many leaves are missing. There are Annotations for some stanzas.

Incomplete.

குறிப்பு: இதில் 14ஆம் போரில் 210ஆவது செய்யுள் முதல் சர்க்கம் முடியவுள்ளது. உரையுடன் கூடியது.

அபூர்த்தி.

Colophon:

கிலகஷு மாசிமீ 6வ குருவாரம் விக்கிரவாண்டியிலிருக்கும் ராசமானிய ராசயம் செட்டியார் சுப்பா ரெட்டியாரவர்களுக்குப் பதினாலாம் போர் எழுதி முடிந்தது.

முற்றும்.

No. 2278. [VILLIPUTTŪRĀR] PĀRATAM
[TEXT]
[வில்லிபுத்தூரார்] பாரதம்—[மூலம்]
[1264]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 632. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Villiputturar's Pāratam has been described in No. 409 (Vol. I, P. 372) and this Mss. contains almost the entire work.

Complete.

குறிப்பு: *பகுதி 1, பக். 372, எண் 409 போன்றது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் சிற்சில வேறுபாடுகள் உள்ளன.*

பூர்த்தி.

Colophon:

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சோபகிருதுஸு மாசிமீ" முதல் தேதி ஆதிபருவம் புந்திவாரத் தினன்றைக்கு ராமசாமி எழுதத்துவக்கியது.

No. 2279. VILLI [PUTTŪRĀR] PĀRATAM
[TEXT]
வில்லி [புத்தூரார்] பாரதம்—[மூலம்]
[1100]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 74. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as referred to in No. 2278. In this Mss. portions of Pāratam by Villiputturar are written.

Incomplete.

குறிப்பு: *முன் எண் 2278 போன்றது.*

அபூர்த்தி.

No. 2280. VILLIPUTTŪRĀR PĀRATAM

[TEXT AND ANNOTATIONS]

வில்லிபுத்தூரார் பாரதம்—[மூலமும் உரையும்]

[1094]

Size, 16¼″ × 1¼″. Pages, 778. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains the portion from Ulūkan Tūtu to Krishnan Tūtu. Several leaves are missing. This Mss. contains Annotations.

Incomplete.

குறிப்பு: உலூகன்தூது முதல் கிருஷ்ணன் தூது வரையுமுள்ளது. உரையுடன் உள்ளது. இதன் ஏடுகளுள் இடையில் 198 முதல் 351ஆவது ஏடு வரை இல்லை. இதற்கு உரையும் இருக்கிறது.

அபூர்த்தி.

No. 2281. [VILLIPUTTŪRĀR] PĀRAṬAM—KRISHṆAN TŪTU CARUKKAM

[TEXT AND MEANNINGS]

[வில்லிபுத்தூரார்] பாரதம்—கிருஷ்ணன் தூது சருக்கம்

[மூலமும் உரையும்]

[1271]

Size, 14½″ × 1¼″. Pages, 238. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains the portion entitled Krishnan's Tūtu and has meanings of stanzas written in prose. Mistakes are many.

Incomplete.

குறிப்பு: இது பாரதத்தில் கிருஷ்ணன் தூதுச் சருக்கம் மட்டும் உரையுடன் கூடியது.

பூர்த்தி.

Colophon:

சுபானு வருஷம் சித்திரை மாசம் 17௳ பாடிப்பந்தலபாக்கம் லக்ஷ்மண கவுண்டன் குமாரன் மல்ல கவுண்டன் கிருஷ்ணன் தூது எழுதி முகிந்தது. முற்றும் எழுதினவன் மூக்கபுடையான் பேரன் குழந்தைகையில் எழுத்து. ராமசெயம். சிவமயம். குருபாதந்துணை. தேவிசகாயம். விபவம் கார்த்திகைமீ 24௳ வியாழக்கிழமை மெய்யூரிலே யிருக்கும் குப்பக்கோனன் மகன் ராமசாமிக்கோனன் படிக்கின்ற கிஷ்ணன் தூது எழுதியது வீரபெருமா நல்லூரிலேயிருக்கும் தட்டார..............

No. 2282. [VILLIPUTTŪRĀR] PĀRATAM

[TEXT AND PROSE]

[வில்லிபுத்தூரார்] பாரதம்—[மூலமும் உரையும்]

[1269]

Size, 17″ × 1¼″. Pages, 104. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains portions of Villiputturar's Pāratam with prose renderings of stanzas.

Incomplete.

குறிப்பு: இதில் படையெழுச்சி முதல் 8ஆம் போர்ச் சருக்கம் வரை உரையுடன் உள்ளது.

அபூர்த்தி.

No. 2283. [VILLIPUTTŪRAR] PĀRATAM

[TEXT AND PROSE]

[வில்லிபுத்தூரார்] பாரதம்—[மூலமும் வசனமும்]

[1269-A]

Size, 17″ × 1¼″. Pages, 376. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is like the Mss. described in No. 2282 and contains stanzas describing wars from the 2nd to the 13th day. Prose versions are also given.

Incomplete.

குறிப்பு : *இது முன் எண் 2282ஆம் பிரதி போன்றது. 2ஆம் நாட் போர் முதல் 13ஆம் நாட் போர் வரையுள்ளது. கடைசி ஏடு இல்லை.*

அபூர்த்தி.

No. 2284. PĀRATAM—ANTIYA PARUVAM

பாரதம்—அந்திய பருவம்

[1097]

Size, 14″ × 1½″. Pages, 532. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is an unpublished work in 1501 stanzas by one Kunṟattūr Attavatāṉam Rankanatha Kavi and contains 6 Parvas.

Complete.

குறிப்பு : *இது, பாரதத்தில் ஸ்ரீ பருவம், சாந்தி பருவம், அனுசாசன பருவம், அசுவமேத பருவம், ஆச்சிரமவாச பருவம், மவுசலப் பருவம் ஆகியவற்றைக் கூறுகின்றது. இயற்றியவர், குன்றத்தூர் அட்டாவதானம் ரங்கநாத கவி யாவர். இதில் 1501*

பாடல்களுள்ளன. இப்பிரதி முழுதுமுள்ளது. ஏடுகள் சில சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

வடக்குமா மலையிற் பண்டைநாள் வரைந்த
மாபெரும் பாரதக் கட்டுரைக்
கடக்குமா றெளியேன் புணையென வுனது
கழலிணைத் தாமரை தருவாய்
நடக்குமால் விடையோ னுமையவ ளளித்த
நம்பனே ஐம்புலாதிகளை
யடக்குமா முனிவர் செய்தவப் பயனே
யருள்பொழி வேழமா முகனே.

பாயிர முற்றும்.

* * * *

End :

தண்டுளபத் திருநெடுமால் திருவடித்தா
மரைவாழி சகமேழ் வா......
கொண்டல்பொழி மழைவாழி கோவேந்தர்
மனுமுறைச்செங் கோலும் வாழி
திண்டிறல்சேர் புகழ்ந்துறையாச் சம......
வாழிதமிழ் சிறந்து வாழி
பண்டுலகம் வாழியனு தினம்வாழி
யுயர்மேழிப் பதாகை தாளே.

Colohon :

சொர்க்காரோகணப் பருவச் சருக்கம் முற்றும். ஆகப்பாயிர முள்படச் சருக்கம் நாற்பத்தாறுக்குந் திருவிருத்தம். ......அந்திய பருவ முற்றும். சிவமயம். ஸ்ரீ கிருஷ்ண சகாயம். வேலுமயிலுந் துணை. நந்தன வருஷம் தை மாதம் 7ம் தேதி சுக்கிரவாரந் திரி யோதெசியும் மூலா நட்செத்திரமுங் கவல்வாகரணமும் அமுர்த சித்தியோகமுங் கூடின சுபதினத்திலே சிதம்பரத்திலிருக்கும் நல்லம்பலவாண சுவாமியார் குமாரர் நல்லய்ய ஞானியாருக்குப் பாரதம் அந்திய பருவம் முதலியார் பாடல் எழுதி நிறைவேறினது. முற்றும். சிவமயம். இந்த அலேக மெழுதினது. பிறகம்பியி

லிருக்கும் சிதம்பரய்யா குமாரர் சொக்கையா கையெழுத்து. சிவமயங் குருவே துணை. சிவசிதம்பரம் சபாநாயகர் கிருபா கடாட்ச முண்டாவதாகவும். சிவமயம்.

No. 2285. ARI-C-CANTIRA PURĀṆAM

[TEXT]

அரிச்சந்திர புராணம்—[மூலம்]

[1093]

Size, 17″×1⅜″. Pages, 214. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 427 (Vol. I, Page 387) but contains only a portion of the work. The story is taken from Pāratam.

Incomplete.

குறிப்பு: இது முன் எண் 427 (பகுதி 1, பக். 387 போன்றது).

அபூர்த்தி.

No. 2286. NAḶAVEṆPĀ

[TEXT AND ANNOTATIONS]

நளவெண்பா—[மூலமும் உரையும்]

[1261]

Size, 14¾″×1¼″. Pages, 18. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is the same as No. 432 (Vol. I, P. 389) but contains only a few stanzas in the beginning with Poḻippurai.

Incomplete.

குறிப்பு: இது பகுதி 1, பக்கம் 389, எண் 432 போன்றது. தொடக்கத்தில் சில பாடல்களே உரையுடன் உள்ளன.

அபூர்த்தி.

No. 2287. NAḶAVEṆPĀ

[TEXT AND ANNOTATIONS]

நளவெண்பா—[மூலமும் உரையும்]

[1273]

Size, 14¼″ × 1½″. Pages, 50. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 2286 but containing another portion of the work with Poḷippurai for the stanzas.

Incomplete.

குறிப்பு: *இது முன் 2286ஆம் சுவடிப் பிரதி போன்றது. ஆயினும் பாடல் முறை வேறுபடுகின்றது. உரையுடன் உள்ளது. இப்பிரதி நூல் முற்றுமில்லை. 39ஆம் பாட்டிலிருந்து கலிநீங்கு காண்டத்தில் 33ஆம் பாட்டு வரையுள்ளது. இடையில் பல பாட்டுக்கள் இல்லையென்று தெரிகிறது.*

அபூர்த்தி.

Vol. II—Section VI

புராணங்கள்: பக். 1—57

No. 2288. KANTA PURĀṆAM

[IN VERSE AND PROSE]

கந்த புராணம்—[மூலமும் வசனமும்]

[1275]

Size, 15¼″ × 1¼″. Pages, 814. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 444—Page 3 of Vol. II but this Mss. which is in verse and prose is specially compled for discourses

before street audiences. Several stanzas are taken from Kacciyappa Civācharya's work and others are newly composed. The work is in two Mss. and this is the first among them.

Incomplete.

குறிப்பு : இதில் கந்தபுராண மூலப்பாடல்களும் அவற்றிற் கேற்ற வசனமும் பிரசங்கங்கள் நிகழ்த்தும் முறையில் அமைந் துள்ளன. கோயில்களில் திருவிழாக் காலங்களில் இது கையாளப் படுவது. இதனை எழுதியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

End :

....
விழுந்த நற்சூரன் மீண்டு வெங்கனற் போலெழுந்து
....
எழுந்தது........ ....
செழுந்தவர் மீதில் வந்து நின்றது தீரன் கண்டான்,

இ - ள். எப்படியென்றால் உதைப்பட்டு அலறி வீழ்ந்த சூரன் மீண்டெழுந்து வந்து.............மூச்செறிந்து மரங்கள் மலைகள். குவடுகள் மராமரங்கள் வேரோடே வேர்ப்பறிப்பது................ அப்போது முன்போலக் கண்டார், கண்டவர் கெஜமுகா சூரனை நோக்கி, வாடா கெஜமுகா.........சூரனை நோக்கி வாடா கெஜமுகா சூரா வென்று சொன்னார் வீரவாகுதேவர்.

No. 2289. KANTA PURĀṆAM

[IN VERSE AND PROSE]

கந்த புராணம்—[மூலமும் வசனமும்]

[1276]

Size, $15\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 958. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the second part of the Mss. described in previous No. 2288 and with this the work is completed.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 2288 பிரதியின் இரண்டாம் பாகமாகும்.*

அபூர்த்தி.

Colophon:

